

செம்பியன் தமிழ்வேள்
(வரலாற்றுப் பாவியம்)
புலவர், பொறிஞர் சி. செந்தமிழ்ச்சேய்

# செம்பியன் தமிழவேள்

புலவர் — பொறிஞர்

சி. செந்தமிழ்ச்சேய்

மின்வாரியத் தமிழார்வலர் தமிழ்ப்பணி அறக்கட்டளை,

“சேயகம்” 25/49, துரைசாமி நகர்,

கடலூர் — 607 001.

# நூலைப் பற்றி

(Bibliographical Data)


| | | |
|---|---|---|
| நூற் பெயர் | : | **செம்பியன் தமிழவேள்** |
| ஆக்கியோன் | : | **சி. செந்தமிழ்ச் சேய்.**<br>“சேயகம்”<br>*25/49, துரைசாமி நகர்,*<br>*கடலூர் — 607 001.*<br>தொ.பே : *04142—221970, 98408 44600.* |
| பொருள் | : | வரலாற்றுப் பாவியம் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு — *10.12.2009* |
| உரிமை | : | ஆசிரியர்க்கு |
| தாள் | : | சேசசாயி — *14.4* கி.கி |
| எழுத்தளவு | : | *11* புள்ளி |
| நூலளவு | : | டெமி *1´18* |
| பக்கங்கள் | : | xxxxiii + *228* = *271* |
| விலை | : | உரூபா : *120/—* |
| வெளியீடு | : | ***மின்வாரியத் தமிழார்வலர் தமிழ்ப்பணி அறக்கட்டளை,***<br>“சேயகம்” *25/49, துரைசாமி நகர்,*<br>*கடலூர் — 607 001.*<br>தொ.பே : *04142—221970, 98408 44600.* |
| ஒளியச்சு | : | ***திரையன் கணினியகம்,***<br>*6, ஏ.எல்.சி. வணிக வளாகம்,*<br>*பாரதி சாலை, கடலூர் — 607 001.*<br>தொ.பே : *94435 77036.* |
| முகப்புப்படம் | : | ***இரா.அவந்தியா, கடலூர்—607001.*** |
| அச்சாக்கம் | : | ***யுனைட்டெட் பைண்ட் கிராபிக்சு,***<br>மைலாப்பூர், சென்னை — *600 004.*<br>தொ.பே : *044—2640 1807, 2640 1531.* |

# கதை பிறந்த கதை

புலவர்—பொறிஞர் **சி. செந்தமிழ்ச்சேய்**

**இ**வ்வரலாற்றுப் பாவியத்திற்கு மூலம் திருநெய்த்தானத்துக் கல்வெட்டொன்றில் காணப்பட்ட ஒரு சிறு செய்தியே. சிறு தீப்பொறி ஒப்ப அச்செய்தி சிந்தனையைப் பெருக்கியதன் விளைவே இப்பாவியம்.

'ஆதித்த சோழனாலும் சேரமான் கோத்தாணு இரவியாலும் பல சிறப்புக்கள் செய்யப்பட்டுச் **செம்பியன் தமிழவேள்** என்ற குலப்பெயர் பெற்றவன் விக்கியண்ணன். விக்கியண்ணனின் தேவி கடம்ப மாதேவி.'— இஃதே அக்கல்வெட்டுச் செய்தி.

செம்பியன் என்பது சோழர் குலச் சிறப்புப் பெயர். இந்தச் சிறப்புப் பெயரை ஆதித்த சோழன் விக்கியண்ணற்குச் சூட்டிப் பெருமைப் படுத்தினான் என்றால், விக்கியண்ணன் ஏதோ மிகப் பெரும் பயனுடைய உதவியைச் சோழர்க்குச் செய்திருக்க வேண்டும்! ஆனால், விக்கியண்ணன் செய்த அந்த வியத்தகு பேருதவி என்ன? தெரிவிக்கப் படவில்லை.

சேரனும் சோழனுடன் சேர்ந்திருந்து இச்சிறப்புக்களைச் செய்திருக்கிறான்; கரணியம் என்னவாக இருந்திருக்கக் கூடும்? விக்கியண்ணன் சேர நாட்டைச் சேர்ந்த வீரனாக இருந்திருப்பானோ?

விக்கியண்ணனின் தேவி கடம்ப மாதேவி. கதம்ப மாதேவி என்ற பெயரே கடம்ப மாதேவியாக மருவி இருக்க வேண்டும். கதம்ப மரபினர்க்கும் பல்லவர்க்கும் மணவுறவு உண்டே! 'கதம்ப மரபிற்கே சிரோமணியாக விளங்கிய அரசனின் மகளான அக்கள நிம்மதி என்பவளைத் தந்திவர்மன் மணந்து கொண்டான்,' என்று பட்டயங்கள் பகர்கின்றன!

பாண்டியர் ஆட்சியும் பல்லவர் ஆட்சியும் சோழ மண்டலத்தில் ஒருங்கே ஒழிதற்கும் ஏறக்குறைய 650 ஆண்டுகளாய் அடங்கி ஒடுங்கிக் கிடந்த சோழர் ஆட்சி மீண்டும் எழுச்சி பெற்று நிலைபெறுதற்கும் கரணியமாய்த் தமிழக வரலாற்றில் குறித்தற்கு உரிய திருப்புமுனை நிகழ்ச்சியாய் நேர்ந்தது திருப்புறம்பயப் பெரும்போர்! அப்பெரும் போரில் மாற்றலரை வெற்றி கொள்வதற்கு ஏதுவாய்த் தன் அரும்பெரும் ஆற்றலை விக்கியண்ணன் வெளிப்படுத்தி இருப்பானோ?

ஏன்? எப்படி? எதற்கு? இப்படி இருந்திருக்கக் கூடுமோ? அப்படி இருந்திருக்கக் கூடுமோ? என்ற வினாக்கட்குக் கிடைத்த விடைகளின் விளைவே இப்பாவியம்!

1971 ஆம் ஆண்டளவில் எண்ணத்தில் எழுந்து, எழுத்தில் புதினமாக உருவான இக்கதை, மேலும் நன்கு சீர் செய்யப் பெற்றுச் **'செம்பியன் தமிழவேள்'** என்ற தலைப்பில் வரலாற்றுப் புதினமாகக் கடலூர் மின்வாரியத் தமிழார்வலர் தமிழ்ப்பணி அறக்கட்டளைப் பதிப்பாக 10.12.1997 அன்று வெளியிடப் பட்டது.

சிறந்த புதினதிற்கான தமிழக அரசின் இரண்டாம் பரிசினை அவ்வாண்டு இந்நூல் பெற்றது.

10.12.1978 அன்று பிறந்த என்னிளைய மகற்குச் செம்பியன் தமிழவேள் எனப் பெயரிட்டு மகிழ்ந்தேன் என்றால், எனக்கு இந்த வரலாற்று நிகழ்வுகளில் கொண்ட ஈடுபாட்டின் மிகுமை புரியவரும். அதே கரணியத்தின் பயன்தான் இப்பா நூல்.

இந்நூல் வெளிவரப் பல்வகையிலும் பேருதவியாக இருந்த நண்பர் அனைவர்க்கும் நன்றி.

வெம்மைக் கொடுவினையின் வேரறுப்பார் வேட்பாளர்
செம்மைத் திறந்திரியாச் செல்வக் கணபதியார்
இம்பர் எனக்கினியர் இந்நூற் கணிசெய்தார்
நம்பர்க் கணைக நலன்.

பாயிரமு மாயுரையும் பாங்காய்ப் படைத்தளித்தார்
நேயர் கவிச்சித்தர் நேர்மை நிலைத்திரியார்
சேயர் இளம்பரிதி சீர்சார் இளந்திரையன்
தூயர் துணையென்றன் தோட்கு.

என்று முடனிருந் தென்றமிழ்க் கேற்றஞ்செய்
வென்றிமிகு வேதாந்தம் வேல்முருகன் சீனு
சிவானந்தம் இந்நூலைச் சேர்ந்துசீர் செய்தார்
உவாமதி நல்லார் உறவு.

அச்சிலெம் நூலை அழகுறவே ஆக்கியளி
நச்சற் குறுநண்பர் நாளுமினி கௌதமனார்
ஆசான் அழகப்பர் அன்புமன்ற வாணர்க்கும்
தூசாமென் னன்றித் துளி.

# அணிந்துரை

செந்தமிழ்வாருதி, சிவஞானக் கலாநிதி,
கலைமாமணி, பேராசிரியர்
**முனைவர் இரா. செல்வக் கணபதி.**

புலவர், பொறிஞர்.திரு. சி.செந்தமிழ்ச்சேய் அவர்கள் என்னினிய நட்பிற்கு உரியவரும் பொறியியல் அறிஞராகத் திகழ்ந்த போதே முறையாகத் தமிழ் மொழியைக் கற்றுப் பட்டம் பெற்றவரும் மரபு மாறாத செந்தமிழ் மணக்கும் கவிதை நூல்கள் பல தந்தவருமாவார்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களின் புதிய படைப்பாகிய மனோன்மணீயம் தமிழ் மொழிக்கமைந்த முதல் கவிதை நாடகமாகத் திகழ்ந்தது. அதனைத் தொடர்ந்து, வரலாற்றுப் பின்புலன்களைக் கொண்டும் நிகழ்கால சமூக அவலங்களைக் கண்டித்தும் தரமான இருபதுக்கும் மேலான கவிதை நாடகங்கள் இருபதாம் நூற்றாண்டில் தோற்றங் கொண்டன. மனோன்மணீயத்தை அவற்றில் ஒன்றும் வென்று மேம்படவில்லை என்றாலும் அவை தம்மளவில் உருவத்தாலும் உள்ளடக்கத்தாலும் சிறந்தே நின்றன. கவிஞர் ஆ.பழநி அவர்களின் “அனிச்ச அடி” போன்றன மனோன்மணீயத்தின் அண்மைவரை சென்று நின்றன. ஏனோ, கடந்த இருபது ஆண்டுகளில் இத்தகைய கவிதை நாடகங்கள் குறிப்பிடத் தக்க அளவில் வெளி வந்த பாடில்லை.

இக்குறை நீக்கி எழு ஞாயிறு போல் கவிஞர் செந்தமிழ்ச் சேயால் 21ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியில் செம்பியன் தமிழவேள், எழிலார்ந்த தமிழ் அழகோடும் மிடுக்கான பீடு நடையோடும் நல்ல மரபுக் கவிதையில் வந்துள்ளது. இது வரவேற்கத் தக்க நல்வரவாகும்.

செம்பியன் தமிழவேள் நடந்த ஒரு வரலாற்றுப் பின்புலத்தை மையமாகக் கொண்டு — உரையாடல் உத்தியோடு — மிக நன்றாகப் படைக்கப் பட்டுள்ளது. இந்நாடகத்திற்கான தரவுகளை நேரில் சென்று திருப்புறம்பயம் பகுதிகளில் கவிஞர் தேடும்போது நானும் உடனிருந்தமை நெஞ்சில் நிழலாடுகிறது.

முற்றிலும் ஒரு கற்பனை மேல் புனையப்படும் படைப்புக்கள் எவையும் கால வெள்ளத்தில் நின்றழிந்து போகும். உண்மை நிகழ்வுகளின் அப்பட்டமான பதிவென்றால் — வரலாற்று ஆவணமாகிக் காப்பியப் பண்பை இழந்து தேயும். அமரர் கல்கியும் செகசிற்பியனும் சாண்டில்யனும் பிறரும் பெற்ற வெற்றிகளுக்குப் பின்புலம் ஒரு வரலாற்று நிகழ்வின் மேல், அவை உரிய கற்பனை புனைந்து எழுதப் பெற்றதே காரணம். செம்பியன் தமிழவேள் வரலாற்று நிகழ்வின் மேல் — கற்பனை கலந்த கவிதை நாடகமாக உருப் பெற்றிருப்பதால், இதன் வாழ்வு பெரிது.

கவிதை பிறந்த கதை என்ற தொடக்கப் பகுதியில் கவிஞர் சேய் அவர்கள் இந்த வரலாற்றுப் பின்புலத்தை வாசகர் முன் வைக்கிறார். ஏராளமான கல்வெட்டுச் செய்திகளையும் செப்பேட்டுச் சான்றுகளையும் இவ்வரலாற்றுப் புனைவிற்குப் பயன் கொண்டிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. எதையும் ஏனோ, தானோ என்று எழுதாது, நீளச் சிந்தித்து, உரிய காலம் எடுத்துக் கொண்டு, துறை வல்லார் பலரோடும் கலந்து ஆய்ந்து படைக்கும் பண்பில் என்றுமே ஆசிரியர் தலை நிற்பவர். நேரிய முயற்சிகள் என்றுமே தோற்பதில்லை என்ற மெய்மையைக் காலம் எடுத்துக் காட்டும்.

செந்தமிழ்ச்சேய் அவர்களின் கவிதை எழிலுக்கும் இலக்கண நெறி மாறா யாப்பியல் செறிவிற்கும் புதிதாக யாரும் சான்றளிக்கத் தேவையில்லை. தமிழ் நாட்டில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் மரபுத் தடம் மாறா மிகச் சிலரில் அவரும் ஒருவர்.

செந்தமிழ்ச்சேய், அற்புதங்களை முன்னிறுத்தும் சமய நூல்களில் தன் நெஞ்சத்தைத் தோய்த்துக் கொள்ளாதவர் என்பதால், அவர் கவிதைகள் மானுடத்தை — உரிய பாதையில் வழி நடத்திச் செல்லும் செம்மாப்பில் தலை நிற்கிறது. கவிதை கவிதைக்காகவே என்றில்லாது கவிதை வாழ்விற்காகவே என்ற சமூக உணர்வு அவர்க்கு உண்டு. ஆங்காங்கே அவற்றை அவர் அடையாளப் படுத்தவும் செய்கிறார்.

கவிஞர்க்கும் சுவைஞர்க்கும் இடையே மாம்பழத் துண்டு அரிந்து வாயில் இடச் சொல்லி, அதன் சுவையை உணர வைக்க நான் என்றுமே விரும்பியதில்லை. ஆண்டவற்கும் பக்தற்கும் இடையிலோ, காதலன் காதலிக்கு நடுவிலோ, கவிதைக்கும் சுவைஞற்கும் இடையிலோ மூன்றாவது நபர் தேவைப் படுவது இல்லை. நல்ல நூல் ஒன்று தமிழ்க்கு இன்று வாய்த்திருக்கிறது. நண்பரை நெஞ்சாரப் பாராட்டுகிறேன். அவர் முயற்சிகள் தொடரட்டும்.

# ஆய்வுரை

**கவிச்சித்தர் க.பொ.இளம்வழுதி**

*75/38, முத்துச் சாலை, அண்ணா நகர்,*

*கடலூர் — 607 001. தொ.பே: 04142—221222.*

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பது நம் முன்னோர்தம் கல்விக் கொள்கை. அவர் வயிற்றுப் பிழைப்பிற்காகக் கல்வியைக் கற்றவரோ, கருதியவரோ அல்லர். அறிவு, ஒழுக்கம், பண்பாடு என்னும் முத்திற நோக்கங் கொண்டது அவரின் கல்வி வேட்கை.

இத்தகு உயரிய நோக்கமும் நோன்புங் கொண்டவராக வாழ்ந்து காட்டியவரை 'மூன்று' என்னும் எண்ணிக்கை பெரிதும் ஈர்த்திருந்தது. இல்லையென்றால், அவர் நம்பிய இறையை அரி, அரன், பிரமன் என்று மூவராகவும் வையத்தைக் கீழ், மேல், வாழுலகம் என்று மூன்றாகவும் கனிகளை வாழை, மா, பலா என்று மூன்றாகவும் நூல் நோக்கை அறம், பொருள், இன்பம் என்று மூன்றாகவும் தம் தாய்மொழியை இயல், இசை, நாடகம் என்று முத்தமிழாகவும் தம் நில மன்னரைச் சேர, சோழ, பாண்டியர் என மூவேந்தராகவுஞ் சிறப்பித்துக் கூறியிருப்பாரா?

“குடிப்பெய ராவன கூறுங் காலைச்
சேரன் சோழன் பாண்டியன் என்றிப்
போல்வன பிறவும் பொருந்தக் கொளலே.”

என்கிறது பன்னிரு பாட்டியல் சூத்திரம்.

**‘செம்பியன் தமிழவேள்’** நாடகக் காப்பியம், மேற்சொன்ன மூவேந்தருடன் பல்லவர், முத்தரையர், வேளிரையும் பாத்திரங்களாகக் கொண்டியன்றாலும் பல்லவர் தமிழரல்லர் என்பதாலும் முத்தரையரும் வேளிரும் பேரரசர் அல்லர் என்பதாலும் அவர்க்கு முதன்மை அளிக்காது, மூவேந்தர் மரபினரை முதன்மைப் பாத்திரங்களாகக் கொண்டதெனக் கருதலாம்.

இக்காப்பியத்தைப் படைக்க அடிப்படை ஆவணங்களாக அமைந்தவற்றைக் குறிப்பிட்டுள்ளதோடு, தன் கற்பனைப் பாத்திரங்களின் பட்டியலையுங் கொடுத்துள்ளார் நூலாசிரியர்.

வரலாற்றுக் காப்பியம் படைப்பவர்க்குச் சில நெருக்கடிகள் உண்டு. அவற்றிலிருந்து அவரை மீட்க உதவுபவை கற்பனைப் பாத்திரங்களே. அவற்றின் வழியாகத்தாம் நூலாசிரியர் தம் நோக்கத்தையும் படிப்பினைகளையும் வெளியிட முடியும்.

வரலாறு என்பது தண்டவாளப் பாதை போன்றது. தம் விருப்பப்படி கதையை நகர்த்திச் செல்ல இயலாது. கற்பனைப் பாத்திரங்கள்தாம் தரைவழிப் பாதை போன்று தம் விருப்பிற்கேற்ப வளைத்தும் கிளைத்துஞ் செல்ல வழி கோல்வது. கற்பனை நிகழ்விற்குக் கரி கூற யார்க்குந் தேவை இல்லை. வரலாற்றின் நிலை அப்படியன்றே.

தமிழ்நாட்டின் வரலாற்றுச் சான்றாவணங்களாக விளங்குபவை செப்பேடுகள், மெய்கீர்த்திக் கல்வெட்டுக்கள், புராண இதிகாசங்கள் மற்றும் தொன்மை இலக்கியங்களில் பொதிந்து கிடக்குஞ் செய்திகள் தாம். மெய்கீர்த்திகளைக் கல்வெட்டுக்களில் பொறித்து வைக்கும் பழக்கத்தை முதலில் தொடக்கி வைத்தவர் முதலாம் இராச இராசனே. அவர்க்கு வரலாற்று ஆர்வலர் நன்றிக்கடன் பட்டவர்.

தமிழிலக்கியக் களத்தில் நெடுங்கதைக்கும் சிறுகதைக்கும் இடமளித்த அளவிற்கு நாடகங்கட்கும் காவியங்கட்கும் இடமளிக்கப் படவில்லை. திங்கள் மற்றும் கிழமை ஏடுகளின் வணிக முயற்சிக்குப் பெருமளவு பயனளிப்பதாகக் கதைகளை நம்புவதே இதற்குக் கரணியம். இலக்கிய வணிகரின் நிலையும் நினைப்பும் எப்படி இருந்த போதும் தமிழ்மொழிப் பற்றாளர் காப்பிய, நாடக ஆக்கங்களில் ஆர்வங் காட்டிக் கொண்டுதாம் இருக்கின்றனர்.

மறைமலையடிகளாரின் சாகுந்தலம், பரிதிமாற் கலைஞரின் ரூபாவதி, பம்மல் சம்பந்த முதலியாரின் மனோகரா, பாவேந்தரின் பிசிராந்தையார், அண்ணாவின் வேலைக்காரி, கலைஞரின் தூக்குமேடை போன்ற நாடகங்கள் திருப்பு முனையை ஏற்படுத்த உதவி இருக்கின்றன. ஆனால், வரலாற்று நாடகக் காப்பியங்களின் ஆக்கம் மிகமிகக் குறைந்த நிலையிலையே இருக்கிறது. அரிய முயற்சிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக அரும்பி வருவது ஆறுதலான செய்தி.

தமிழில் காப்பிய முயற்சி அருகி வந்த கால நிலையில், பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த பெரும்புலவரும் பாவலரும் தத்தம் பங்களிப்பாகக் காப்பியங்களால் தமிழன்னையை அணிசெய்தனர். பாரதியார் (பாஞ்சாலி சபதம்), பாவேந்தர் பாரதிதாசன் (பாண்டியன் பரிசு), கண்ணதாசன் (மாங்கனி), முடியரசன் (பூங்கொடி), வாணிதாசன் (தமிழச்சி), தமிழொளி (கண்ணப்பன் கிளிகள்) போன்றோரின் காப்பியங்கள் தமிழ்க்கு வளஞ் சேர்த்தன. இருந்தபோதும் நாடகக் காப்பியங்களின் படைப்பு வரிசை மட்டில், எண்ணிக்கையில் பத்தாவது விரலைத் தொட்டுப் பார்க்கத் துடித்துக் கொண்டிருக்கிறது.

தமிழ் மொழியில் நாடகக் காப்பியம் படைத்த பெருமை, மனோன்மணீயத்தை இயற்றிய பேராசிரியர் பெ.சுந்தரம் பிள்ளை யவரையே இங்குச் சேரும். அடுத்ததாக, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (கி.பி. 1906) பண்டிதர் சி.எஸ்.முத்துச்சாமி ஐயர் படைத்துக் கொடுத்த ‘விசுவநாதம்’ ஆகும். இராவண காவியம் படைத்த புலவர் குழந்தை 1968 ஆம் ஆண்டில் வெளியிட்ட ‘காமஞ்சரி’யும் காரைக்குடிப் புலவர், பாவலர்மணி ஆ.பழநி இயற்றிய ‘அனிச்ச அடி’ யும் நாடகக் காப்பியங்களாக நாம் பயிலக் கிடைத்துள்ளன.

நாடகக் காப்பியம் இல்லா வறுமை நிலையை மாற்ற வேண்டும், தாய்மொழிக்கு

இலக்கிய வளஞ் சேர்க்க வேண்டும் என்னும் உள்ள உந்துதல், தமிழைத் தம் வளர்ச்சிக்கான ஒரு கருவியாகக் கருதிப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் பெயர் பெற்ற பேரறிவாளர்க்கெல்லாந் தோன்றாத போது, தமிழ்க்காகவே தமிழைக் கற்ற தமிழரான செந்தமிழ்ச்சேய் அவர்க்கே ஏற்பட்டது.

இந்த உணர்வு சட்டம் பயின்ற சிலர்க்கும் ஏற்பட்டதுண்டு. அவர் பாவலராக இல்லாததால், காப்பியம் படைக்கவில்லை. தமிழரல்லாத நொபிலி, வீரமாமுனிவர், போப்பையர் போன்ற அயலவர் சிலரும் தமிழைத் தமிழ்க்காகவே கற்றிருக்கின்றனர். தமிழ் மொழியிலேயே திருக்குறளைப் படிக்க வேண்டும் என்பதற்காகத் தமிழைப் படிக்க விரும்பினார் அண்ணல் காந்தி. இன்று எத்தனை தமிழர் தாய்மொழியை மேம்படுத்த வேண்டும் என்பதற்காகத், தமிழ் நலன் துய்ப்பதற்காகக் கற்கின்றனர்? மின்பொறியாளர் ஒருவர், தமிழ்க்காகவே தமிழைப் படித்தார். படித்தது மட்டுமன்று, தமிழன்னைக்கு இலக்கிய அணிகளையுஞ் செய்து பூட்டினார். அவர்தான் பொறிஞர், புலவர் சி. செந்தமிழ்ச்சேய்.

மொழிப் பற்றாளரான இந்நூலாசிரியர், நாடகக் காப்பியம் இல்லாத வறுமை நிலையை மாற்ற வேண்டுமென்ற மன உந்துதற்கு ஆட்பட்டுத் தானே ஒரு நாடகக் காப்பியத்தைப் படைத்தளித்திடத் துணிந்தார். நல்லதை நினைத்தவுடன் செய் என்னுங் கோட்பாட்டு அடிப்படையில், படைப்பிற்குக் கரு தேடிக் காலங் கடத்த விரும்பாமல், சில ஆண்டுகட்கு முன்னரே நெடுங்கதையாக எழுதி, அந்நூற்காகத் தமிழக அரசின் சிறந்த நூற்கான பரிசையும் பெற்ற செம்பியன் தமிழவேள் என்னுங் காதையையே நாடகக் காப்பியம் ஆக்கத் துணிந்துள்ளார். பிற மொழி நூற்களைத் தழுவித் தமிழில் காப்பியங்கள் செய்யும் போது, தன்னுடைய உரை நூலையே ஏன் கவிதையாக்கக் கூடாது? என்னும் ஆசிரியரின் சிந்தனையில் பழுதேதும் இல்லை.

பேரா.பெ.சுந்தரம் பிள்ளையவரின் மனோன்மணீயம் நாடகக் காப்பியமே என்றாலும் அது வரலாற்றுக் காப்பியமன்று. இலிட்டன் பிரபுவின் மறைவழி (ஜிலீமீ ஷிமீநீக்ஷீமீமீ கீணீஹ்) என்னும் ஆங்கில நூலின் தழுவல். புலவர் குழந்தையின் காமஞ்சரி நாடகக் காப்பியந்தான்; ஆனால், இந்நூல் பாரசீகப் பாவலர் பிர்தோசி (திவீக்ஷீபீணீஷூஉவீ)யின் சோரப் என்னும் கதையை, ஆங்கிலப் பெரும்புலவர் மாத்யு ஆர்நால்டு என்பார் ஆங்கிலத்தில் எழுதியதன் தழுவலாகும். இவ்விரண்டு நூல்களையும் தழுவல் என்னும் தகுதியினால் ஒதுக்கி விட்டுப் பார்ப்போமானால், முத்துச்சாமி ஐயரின் விசுவநாதம், செந்தமிழ்ச்சேயாரின் செம்பியன் தமிழவேள் ஆகிய இரண்டு மட்டுமே வரலாற்றுக் காப்பியங்களாக எஞ்சி நிற்கின்றன.

நூற்குச் செம்பியன் தமிழவேள் என்று வரலாற்றுக் கரணியத்தோடு பெயரிட்டுள்ள ஆசிரியர், இவ்வரலாற்று நிகழ்வின் மீது கொண்ட ஈடுபாட்டின் பயனாய்த் தன் மகற்கு நூலின் பெயரான காவிய வீரனின் பெயரையே சூட்டி மகிழ்ந்துள்ளார். படைப்பாளி தன் கருத்துக்களையும் விழைவுகளையும் தான் படைக்கும் பாத்திரங்களின் வழியாகப் புகுத்திச் செல்வதொன்றும் புதுமையானதன்று. மனோன்மணீயம் ஆசிரியர் சுந்தரனார், தன் நாடகக் காப்பியத்தில் தன் பெயரிலேயே சுந்தர முனிவர் என்றொரு பாத்திரமும் தன் ஒரே மகன் பெயரில் நடராசன் என்றொரு பாத்திரமும் படைத்திருக்க, இந்நூலாசிரியரோ நூற்பெயரைத் தன் மகற்கு இட்டு வழங்கி வருவது மாறுபட்டதாகும்.

காப்பியத் தலைவனான விக்கியண்ணன் வீரத்துடன் போரமைத்து வெற்றிக்கு வித்திட்டதைப் பாராட்டும் முறையில் சோழன் ஆதித்தன் இவற்குப் பட்டமாக வழங்கியதே செம்பியன் தமிழவேள் என்கிறது தமிழக வரலாறு.

செம்பியன் என்பது சோழர் மரபைக் குறிக்கும் சொற்களில் ஒன்று. இளங்கோவடிகளும் கானல்வரியின் ஈற்றில்,

“மாயிரு ஞாலத் தரசு தலைவணக்குஞ்
சூழி யானைச் சுடர்வாட் செம்பியன்
மாலை வெண்குடை கவிப்ப
ஆழி மால்வரை அகவையா வெனவே.”

என்று சோழனைக் குறிக்கச் செம்பியன் என்ற சொல்லை ஆண்டிருக்கிறார். நூலாசிரியர் தன் இளைய மகன் பெயரைத் தலைப்பாகத் தன் நூற்குச் சூட்டி இருப்பதாகக் கருதினாலும் அதில் தவறில்லை.

'உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்' என்னுந் தொல்காப்பியச் சூத்திரப்படி பார்ப்போமானால், சொந்தக் கரணியமும் காப்பியக் கரணியமும் ஒத்துப் போவதை உணரலாம்.

முன் எப்போதும் இல்லாத அளவிற்குத் தமிழ்நாட்டு இளையோர்தம் வாக்கிலும் போக்கிலும் காதல், கவிதை என்னும் இரு சொற்களின் புழக்கம் பெருகி இருப்பதை அறியலாம். இந்நூலில் காதலும் இருக்கிறது; கவிதையும் இருக்கிறது. நூலாசிரியரின் தனித்தமிழ்ப் பற்று, சொல்லாட்சியிலும் பாத்திரங்களின் பெயர்களிலும் மிக்கோங்கி மிளிர்வதைப் படித்து இன்புறலாம்.

கல்வியாளர் போற்றி மகிழும் மனோன்மணீயத்தில் வட சொற்களின் பயன்பாடு மிகுந்திருப்பதையும் பாத்திரங்களின் பெயர்களைக் கூட தனித்தமிழில் அமைக்காமல், ஜீவகவழுதி, புருஷோத்தமன், வாணி, நாராயணன், நடராசன் என்று வட சொற்களில் வழங்கியிருப்பதையும் ஒப்பு நோக்கச் செம்பியன் தமிழவேள் சொல்லாட்சியாலும் கருத்துச் செறிவாலும் உவமை, உருவக ஆளுமையாலும் உயர்ந்து விளங்குவதை நடுநிலையாளர் ஒப்புக் கொள்வர்.

நல்ல கவிதை நடை என்பது வாழைத் தண்டைத் தடவுதலைப் போன்று தட்டுத் தடுமாறாமல் படிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இந்நூலின் நடை, அணை கட்டித் தடுக்காத ஆற்றொழுக்காக அமைந்துள்ளது. சொல்வறுமையின் வாய் பட்டிருக்கும் இக்காலப் படிப்பாளர் படிக்கத் தடுமாறினால், அஃது அவர்தம் பயிற்சி இன்மை, பற்றின்மை விளைவாகவே இருக்கும். இந்நூலின் கவிதை நடையைத் தனிச்சிறப்பு மிக்க நடையெனக் கூறலாம்.

யாமறிந்த அளவில், நாடகக் காப்பியங்களில் மனோன்மணீயம் நடையையே எளிய நடையெனக் கூறத் தோன்றுகிறது. முத்துச்சாமி ஐயரின் விசுவநாதம் இக்காலப் படிப்பாளர்க்குச் சற்றுக் கடின நடையாகத் தோன்றினாலும் நூல் வெளிவந்த காலத்தில்(1906) அந்நூல், தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர் கருத்துப்படி, 'இனிய அகவல் நடையிற் கடினமின்றி அமைந்திருந்தது,' என்பதாம். இந்நூலைப்பற்றிக் குடந்தைக் கல்லூரித் தமிழாசிரியராக இருந்த வை.மு.சடகோப இராமாநுசாரியார், 'மிக்க கடுநடையாகவும் மிக்க எளிய நடையாகவும் இராமல், இக்காலத்துக்கேற்றபடி நடுத்தரமான நடையில் முழுவதும் ஒரேவிதமாக அமைந்திருப்பதை இந்நூல் படிப்பவரெவரும் பாராட்டாதிரார்,' என்று சிறப்பாகக் கூறி இருப்பதையுங் கருத்தில் கொள்ள வேண்டும்.

புலவர் குழந்தையின் காமஞ்சரி, ஐயரின் விசுவநாதம் இரண்டோடும் ஒப்பு நோக்கச் செம்பியன் தமிழவேள் நாடகத்தைக் கடினமெனக் கருதுதற்கில்லை. செவ்விய நடையென்றே செப்பலாம். இந்த நூற்றாண்டிற்கு இம்முதிய நடையே புதிய நடை. இந்நூலையே வழிகாட்டியாகக் கொண்டு இதே நடையில் பாவியங்கள் பல படைக்கப்பட வேண்டும். சிலரேனும் துணிந்து இவ்வரிய நடையைக் கையாளாவிட்டால் நல்ல தமிழ்ச்சொற்கள் வழக்கற்றுக் காலப் போக்கில் மறைந்து போகவுங் கூடும். ஒப்பு நோக்கற்காக, நாடகக் காப்பியங்களின் நடைச் சிறப்பைக் காண்போம்.

மனோன்மணீயத்தில் ஜீவகவழுதி தன் படையினரிடம்,

"இன்றுநீர் சிந்தும் இரத்தமோர் துளியும்
நின்றுயுகம் பலவும் நிகழ்த்துமே; இந்தப்
பாண்டியர் உரிமை பாராட்டும் பண்பினர்;
தீண்டன்மின் திருந்தலீர்! அவர்தஞ் செருக்கு
சுதந்தரம் அவர்க்குயிர்; சுவாச மற்றன்று
நினையுமின் நன்றாய்க் கனவிலும் இதனை."

எனப் பேசுவான். வட சொற்கள் விரவிய காப்பிய நடை இது.

நூறு ஆண்டுகட்கு முன்னர் எளிய நடையாலான நூல் எனப்பட்ட விசுவநாதம் காப்பியத்தில், தளபதி நாகமன் கள வெற்றி குறித்துத் தன் படையணித் தலைவனான அரியநாதனிடம் கேட்டதற்கு, அவன் தந்த விடை:

"நம்முடை அணிகம் நாட்டிய வீரம்

எம்ம னோரால் இயம்பற் பாலதோ!
இடையிற் செலுத்திய இவுளி யாலவர்
படைக்கடல் அலைந்து பட்ட தன்மைதான்
சொல்லவும் பெறுமே! சோரியும் நிணமும்
எல்லைகள் தோறும் இழிந்து படிந்திட
வெருவியே சிலவர் விரைந்தோ டினர்;பலர்
செருக்களத் தேயுடல் சிந்திநின் றனரே!”

அந்தக் கால எளிய நடை இது.

இராவண காவியப் புலவர் குழந்தையின் காமஞ்சரி நாடகக் காப்பியத்திலிருந்து சில அடிகள்:

தெற்காணம்பி, கொங்குவேள் உரையாடல் இது;

“............ ............ பயிர்விளை யாமுன்
அறுக்கத் துணிவரோ குறிக்கொடு வளர்ந்தோர்?
போர்தொடங் கட்டும் ஏர்தடந் தோளா!
முன்னணி வீரரைத் துன்னியே பொருது
வென்று களங்கொண் டொன்றிய அதனால்
இதைவிடப் பெரும்புகழ் அதிலுனக் குண்டாம்.”

இனிச் செந்தமிழ்ச்சேயாரின் காப்பிய நடையைக் காண்போம்.

“கரிகாற் பெருவளத்தர் கண்டிருந்த பெருமையெலாம்
விரிவாய் உரைத்திடலாம்; வீரர்நீர் அறிவீர்முன்!
எரிவாய் விறகாக இகலார்கை இருந்திடுநம்
உரிதாம் திருநாட்டை உயிரீந்தும் பெறல்வேண்டும்.”

மேற்குறித்த பாடலில் எளிமை இழையோடவில்லையா?

பிழையற எழுதும் மொழிநடையைத் தமிழை ஆழ்ந்து கற்காத கரணியத்தால் பலர் ஒதுக்கத் தலைப்படுவதைக் கிறித்துவ கம்பர் கிருட்டினப் பிள்ளை தன் இரட்சணிய யாத்திரிகம் நூல் முன்னுரையில் இடித்துரைத்துள்ளார். அவர் சுட்டிக் காட்டியது என்ன?

“கற்க வேண்டிய காலத்தில் தமிழ் இலக்கியங்களில் ஒன்றையாவது கற்றுக் கொள்ளக் கவலைப்படாமல், மெத்த அசட்டை செய்துவிட்டு, அப்புறம் ஏதோ ஒரு காலத்தில் சமயம் நேரிடும் போது தமிழ்ச் செய்யுட்களில் இரண்டொன்றை மட்டும் படித்துப் பார்த்து, அது தங்களுக்கு விளங்காமையின் நிமித்தம் பயனில்லை என்று எறிந்து விடுகிறார்கள். இது தமிழ்ச் செய்யுளின் குற்றமன்று. ஆங்கில இலக்கியத்தில் தேறுவதற்குச் செல்லும் காலத்திலும் படும்பாட்டிலும் பத்திலொரு பாகமாவது, தமிழ் இலக்கியத்திற்குப் பயன்படுத்தி, அதன் பேரில் குறை சொல்வார்களானால், அது ஒரு வேளை நியாயமாயிருக்கும்.”

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கூறிய இக்கருத்து, இருபத்து ஒன்றாம் நூற்றாண்டிற்கு இன்னும் கூடுதலாகப் பொருந்தி வருகிறதே! உலக்கையாக இருந்த தமிழர்தம் மொழியறிவு, உளிப்பிடியாக அன்றோ தேய்ந்துவிட்டிருக்கிறது! ‘ஆட மாட்டாதவள் கூடம் கோணல்,’ என்ற கதையாக, மொழிநலன் நாடாதாவர் இந்நூல் நடையைக் கடினமெனக் கூறினால், அதைத் தள்ள வேண்டுமேயன்றிக் கொள்ளக் கூடாது.

மாந்தரின் ஐம்புலன்களும் அளவோடு அமைவாக அமையின் அவர்தம் தோற்றப் பொலிவு காண்பாரைக் கவர்தல் போன்று, காப்பியத்தில் பாடல் இலக்கணங்கள் பழுதுபடாமலும் அணியழகு குறையாமலும் பொருளோடு நடையழகும் பொருந்தி வருமாறும் இயலுமானால், அப்படைப்பு கற்பாரைக் களிப்படையச் செய்யும். புணர்ச்சி விதிகளைப் புறந்தள்ளி அசைமிகும்படி சீர் பிரிக்காத இக்காப்பியம், சிலர் இடர்ப்பட இடம் வைத்திருந்தாலும் அவர்க்காக மொழி நலன் காவாது விட்டுத்தர இயலுமா? அதிலும் தமிழ் நலனைத் தன் நலனைவிட உயர்வாக எண்ணிப் பேணிவரும் புலவர் செந்தமிழ்ச்சேயால்? பின்பற்றத் தக்க அவருடைய நல்லியல்புகளை நாமுங் கடைப்பிடிக்கலாமே!

“ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப பாவகை வழியே.”

என்று தொல்காப்பியம் கூறும் பாவகை இனங்களில் இந்நூலைப் படைத்துப் புலமைத் திறத்தை வெளிப்படுத்தியுள்ளார் நூலாசிரியர். உரையாடற்கு ஏற்ற பாவகையை ஆண்டிருப்பது, அவருடைய புலமை நலனுக்கோர் எடுத்துக் காட்டு.

வீர உரை பகர்தற்கும் களக் காட்சியை விளக்கற்கும் ஏற்ற பாவினம் தாழிசை. புரவி துள்ளிச் செல்வதைப் போன்ற ஓசை நயம் உடையது. பரணி பாடத் தாழிசையைத் தேர்ந்து இலக்கணம் ஆக்கியது இதனால் தான். இப்பாடலை வாய்விட்டுப் பாடிப் பார்த்தால் இது புரியும்.

“உடன்றெழு மிகுவலி உருமென
உடற்றிறன் உளத்திறன் சிறக்கவே;
படர்ந்திரு களமுழு தடைத்தனை,
பகையினை ஒருபொழு தழித்தனை!
இடம்பொருள் உளவெலாம் இறையவன்
இருப்பதாய்ப் புரட்டுநர் இயம்புவர்;
தொடர்ந்துருள் கடற்றிரை படர்ந்தபோல்,
சுழன்றமர் இடமுழு துடற்றினை!”

இப்படிக் காட்சிக்கேற்பப் பாடல்களைப் படைத்திருப்பதால், படிப்பார்க்குச் சுவையின்பம் கூடுகிறது.

திருவள்ளுவர்க்குப் பின்னர்ப் படைக்கப்பட்ட நூற்களில் திருக்குறள் முழுமையாகவோ, கருத்துப் பிழிவாகவோ எடுத்தாளாத படைப்பாளி இல்லை என்றே கூறலாம். சிறந்த நூலின் பெருமை, அந்நூலின் கருத்துக்கள் மற்ற நூலாசிரியரால் எடுத்தாளப் படுவதில் தான் உள்ளது.

இந்நூலாசிரியரையுந் திருக்குறள் கருத்துக்கள் ஈர்க்கத் தவறவில்லை. ஒரு நிலத்தில் ஊன்றிய விதை, மழை வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு வேறிடத்தில் முளைப்பதைப் போன்று, தான் கற்ற நூலின் கருத்துக்கள், படைப்பாளி தானே விரும்பி எடுத்தாளாத நிலையிலும் தாமே அவர் படைப்புக்களில் இயல்பாக வெளிப்படுவதுண்டு. ஒரே கருத்து இருவர்க்கு ஏற்படுதலும் இயல்பே.

இந்நூலில் பல குறள்கள் எடுத்தாளப் பட்டுள்ளன. எடுத்துக் காட்டுக்கள் இதோ:

வேல்விழியோடு உரையாடும் விக்கியண்ணனின் தாய்,

“உள்ள திறனை ஒழியா துணரினும்
பிள்ளை பெருமை பிறர்வாய் கேட்பப்
பெற்ற வயிறு பெறும்பே ரின்பம்.”

என்று கூறுகிறார். இப்பாடலடிகளைப் படிக்கும் எவர்க்கும் வள்ளுவரின்,

“ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்,”

என்னுந் திருக்குறள் நினைவிற்கு வராமற் போகாது.

“எண்ணித் துணிந்தெழுக எழுந்ததன்பின் எண்ணற்க
திண்ணம் செயலிருப்பின் தெரிந்துவிடும் பெற்றியெலாம்,”

என்னும் அடிகள் திருக்குறளின் 467 ஆம் குறட் பாவினை நினைவு படுத்தத்தான் செய்கிறது. இப்படிப் பல பாடல்களில் திருக்குறளின் கருத்துக்கள் ஒன்றி உறவாடுதலைக் காணலாம்.

ஒரு காப்பியத்தின் கருவும் உருவும் எலும்புந் தோலும் என்றானால், அதன் அரத்த நாளங்களாக உவமைகளே விளங்குகின்றன. படைப்பாளியின் திறமைக்கும் உவமைகளே

சான்றாகின்றன. தொகை நூல்களில் இடம் பெற்ற பாடல்கள் சிலவற்றின் ஆசிரியர் பெயர் தெரியாத போது, அவர்க்குப் பெயர் தந்து பெருமை பெற்றதும் உவமைதாம். இவ்வளவு சிறப்பு மிக்க உவமையைத் தொல்காப்பியர்,

"வினைபயன் மெய்யுரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமைத் தோற்றம்,"

என்று வகைப்படுத்தி உள்ளார். இந்நான்கு வகை உவமைகளையும் நூலாசிரியர் திறம்பட தன் காப்பியத்தில் பயன்படுத்தி உள்ளார்.

"கரையுறை மரநிரை கனத்துத் தோன்ற
வரையா தொழுகும் மலைதலைக் காவிரி
வனிதையர் கூந்தல் வகிடெனும் அமைவாய்
மணங்கொளத் தவழ்ந்து வளந்தனைப் பெருக்க,"

என்று காவிரி தோன்றுமிடந் தொட்டு, வழி எங்கும் வளம் பெருக்கிவரும் காட்சியை அழகாகப் படம் பிடித்துள்ள அருமையைப் பாராட்டாது இருக்க இயலுமா? அருவி உருவாகும் மலையினின்று வழிந்து ஒழுகுங் காவிரியை வகிடாகவும் பார்க்கும் கவிதைக்கண் எல்லார்க்குமா வாய்க்கிறது? பெருங்காப்பியமெனப் போற்றப்படும் சிலப்பதிகாரத்தில் கூட,

"கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி,"

என்று காவிரியைப் பொறாமை தீண்டாத பெண்ணாகத் தான் இளங்கோவடிகள் கண்டு வாழ்த்தி இருக்கிறார்.

செந்தமிழ்ச் சேயாரின் பாடலடிகளில் ஏராளமான செய்திகள் செறிந்து விளங்குவவற்றைக் கற்றார் அறிவர். இரண்டாம் காட்சியில்,

"அணைவிடு பட்ட புனலென ஆர்த்துத்
திரையினை ஒப்ப நுரையொடு விரையும்
புரவியில் வருவோன் புதியன் போலும்,"

என்னும் அடிகளில் ஆண்டிருக்கும் உவமைக்கு 'அவாள்' மொழியில் கூறுவதானால், 'அட்சர லட்சம் தரலாம்'(எழுத்திற்கு நூறாயிரம் தரலாம்). அணையைத் திறந்தவுடன் பாய்ந்து வெளியேறுந் தண்ணீரைப் பாயும் குதிரையின்ஓட்டத்தோடு ஒப்பிட்டிருப்பதையும் கடலின் அலை, நுரை கொப்பளிக்கக் கரையை நோக்கி விரைந்து துள்ளித் துள்ளி வருவதை, வேகமாக ஓடிவரும் குதிரையின் வாய்நுரை தள்ளுவதையும் அதன் இயல்பான ஓட்டத்தில் துள்ளல் இருப்பதையும் மனக்கண்ணால் பார்ப்பார்க்கு உவமையின் உயர்வும் நுட்பமும் விளங்கும். இதில் அழகை மட்டுமன்றி அறிவியலையுங் காண முடிகிறது.

எடுத்துச் சொல் எனக் கட்டளையிடும் புதுமையும் பொலிவும் மிக்க உவமைகள் காப்பியத்தில் தொட்ட இடங்களில் எல்லாம் தட்டுப்படுகின்றன. எடுத்துக் காட்டுக்களாக இன்னும் சில உவமைகளைக் காண்போம்.

"தயிரென வெளுத்தி ருந்தேன்
தலைவரே நெய்யாய்க் கண்டார்."

"வீரர்க்கு வீரத்தை விளக்கல் இங்கு
வெளிச்சத்தில் விளக்கேற்றல், வீணே; வேண்டா."

"ஒழியாப் பணிச்சுமை உங்கட்கு மட்டோ?
உழுவார் அனையரே ஒவ்வொரு வீரரும்."

"சோழ வளநாட்டுச் சோற்று மிகுதியைத்
தாழ வளர்ந்தலை தையலார் கூந்தல்
சுருளினை ஒத்தசை சொற்பயிர் காட்டும்."

"பராந்தகர் முன்னர்ப் பனியளி பேச்சில்
இராலென யாரும் சுருண்டிடல் ஏற்பே."

இப்படித் தண்ணீர் நிலையில் தலையாட்டுத் தாமரைப் பூக்களை ஒத்த அழகான உவமைகளின் அணிவகுப்பைப் படித்துப் பார்த்துத் துய்த்தல் வேண்டும்.

ஈட்டி கூர்மையாக இருந்தால் மட்டில் அதைப் பற்றி நிற்பவரை நாடி வெற்றி ஓடி வந்து விடாது. ஈட்டியை எறிகின்ற கையிலும் வலுவிருக்க வேண்டும்; குறியும் சரியாக அமைய வேண்டும். பல பாவலர்க்குப் பாடல் புனையும் ஆர்வமும் புலமையும் வாய்த்திருந்தாலும் ஆளும் சொற்களின் பொருளாழத்தைப் புரிந்து கொண்டு இடம் தேர்ந்து உவமைகளாகவும் உருவகங்களாகவும் பொருத்திக் காட்டும் கவிதைக் கலை கைவரப் பெறுவதில்லை. ஆனால் இந்நூலாசிரியர்க்குக் கவிதைக் கலையின் நுட்பங்கள் அத்தனையும் கைகட்டி நின்று கட்டியங் கூறுகின்றன. திருமணக் காப்பியத்தைப் படைத்தளித்த திருத்தக்க தேவராகச் செந்தமிழ்ச் சேய் விளங்குகின்றார்.

காப்பியங்களில் அணியழகும் அகத்தைக் கவ்வி இழுக்க வேண்டும்; கருத்துக் கனிகளையும் கவிதைத் தட்டில் வைத்து ஊட்ட வேண்டும். காப்பிய நோக்கம் கைவிரல் கணையாழியாக விளங்க வேண்டும்; விளக்க வேண்டும். கற்பார்க்குக் கைவிளக்கையுங் கொடுப்பது போன்று, இளங்கோவடிகள் கூறினாரே,

"அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்,"

என்று, அப்படிக் காப்பிய நோக்கக் குறிப்புக் காட்டாததால், இந்நாடகக் காப்பியத்தின் வழியாக நூலாசிரியர் வலியுறுத்துங் கருத்து, மலை மறைத்த கதிராக இருக்கிறது.

காதலும் வீரமும் தமிழரின் இரு கண்கள் என்பதைத் தொடக்கம் முதல் இறுதிவரை வற்புறுத்தி வந்திருப்பதைக் கற்போர் நினைவில் நிறுத்திக் கொள்ளல் வேண்டும். பக்கத்திற்குப் பக்கம் கருத்து முத்துக்கள் குவியல் குவியலாகக் கொட்டிக் கிடப்பதையும் மறைப்பதற்கில்லை. புராண இதிகாசங்களில் கிளைக்கதைகள் கூறப்படுவதைப் போன்று நாடகக் காப்பியத்தில் கூற முடியாது போயினும் சில வரலாற்றுக் குறிப்புக்கள் காணக் கிடைக்கின்றன.

"எண்ணாச் செய்கை மண்ணாய் முடியும்.
பெண்கொலை புரிந்த நன்னன் பெரும்புகழ்
நிலைத்ததா? இல்லை, நிலைத்தது பெரும்பழி,"

என்னும் அடிகளில் ஒரு மன்னனின் வரலாற்று விதையன்றோ புதையுண்டு கிடக்கிறது.

நன்னன் விச்சிக்கோவின் மரபில் வந்தவன். பூழிநாடு இவனுடையது. இவனுடைய தோட்டத்திலிருந்த மரத்தின் காயொன்று, அருகிலோடிய கால்வாயில் விழுந்து மிதந்து வரக் கால்வாயில் குளிக்கச் சென்ற பெண்ணொருத்தி அக்காயை எடுத்துத் தின்றதற்காக அவளைக் கொல்வித்தான். அப்பெண்ணின் தந்தை பல யானைகளும் அவள் எடைக்கு எடை பொன்னும் தர முன்வந்து இறைஞ்சியுங் கேளாமல், இரக்கமின்றி அப்பெண்ணைக் கொன்றதால் ஏற்பட்டதே இன்றளவும் நிலைத்திருக்கும் பெண்கொலைப் பழி. இப்பழி இவனோடு மட்டில் போயிற்றா? இல்லையே!

மன்னன் இளவிச்சிக்கோவும் இளங்கண்டீரக்கோவும் ஒருங்கிருந்த போது, அங்கே வந்த பெருந்தலைச் சாத்தனார், இளங்கண்டீரக்கோவைத் தழுவி இளவிச்சிக்கோவைத் தழுவாது விலகியிருந்ததற்கு, இவன் பெண்கொலை புரிந்த நன்னன் மரபினன் எனக் கரணியம் கூறுகின்றார்.

"கண்டீரக் கோன் ஆகலின் நன்றும்
முயங்கல் அன்றிசின் யானே பொலந்தேர்

*நன்னன் மருகன் .......... ..........”*

*என்று தொடர்கிறது பாடல்.*

*நன்னன் பற்றிய பெண்கொலைச் செய்தியை இரண்டே அடிகளில் இடம் பெற வைத்துப் பெண்கட்கு இடர் விளைத்தால் தீராப் பழியே நிலைக்கும் என்பதை ஆண்கட்கு எச்சரிக்கையாக அன்றோ அறம் கூறியிருக்கின்றார்.*

*“தொண்ணூ றுமாறும் புண்ணூர் மார்ப,*
*எண்ணிய எண்ணியாங் கெய்துவ இனிதே.”*

*என்று மன்னன் விசயாலயனைப் போற்றும் அடிகளில், அவன் மார்பில் தொண்ணூற்றாறு விழுப்புண் வடுக்கள் இருப்பதாக ஒட்டக்கூத்தர் புகழ்ந்ததை நினைவூட்டுகிறாரே!*

*ஆறாவது காட்சியில், கடம்ப மாதேவி அரண்மனைக் காவல் குறித்து ஐயம் தெரிவிக்க, அதற்கு விடையாக மன்னன் விசயாலயன்,*

*“அமைதி மகளே! அமைதி, அமைதி!*
*இமையென நம்மரு இணையிலா வீரர்*
*அரண்மனை தன்னைத் திறனுடன் காப்பர்.”*

*என்று அமைதி கூறுகிறார். இவ்வடிகளைப் படிக்கும் போது, பாரதி தாயின் மணிக்கொடியைப் புகழ்ந்து பாடிய பாடலின்,*

*“நம்பற் குரியர் அவ்வீரர் — தங்கள்*
*நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பர்.”*

*என்னும் அடிகளை நினைவூட்டி, விடுதலைப் போராட்ட நாட்களை நம்முன் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார் நாடக ஆசிரியர்.*

*அருட்பா அருளிய வள்ளலார், பிள்ளைச் சிறு விண்ணப்பத்தில்,*

*“அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்;*
*ஆருயிர்க் கெல்லாம்நா னன்பு செயல்வேண்டும்.”*

*என்று இறைஞ்சியதைப் போன்று, மாதேவி என்பார்,*

*“நல்லதே நாடல் வேண்டும்;*
*நறியதே நவிலல் வேண்டும்;*
*அல்லவை இல்லை யாக,*
*ஆர்க்குநான் அருளல் வேண்டும்.”*

*என்று இறைவனிடம் வேண்டுகிறார். நூலாசிரியர்க்கு இறை நம்பிக்கை அறவே இல்லை என்றாலும் பாத்திரத்தின் பண்பிற்கேற்பக் கடவுள் பற்றாளரை விடவும் தொழுகைப் பாடலை மிகச் சிறப்பாகப் பாடியிருப்பது அவருடைய பாடலியற்றுத் திறமைக்குச் சான்றாகிறது.*

*கீழ்வரும் பாடலைப் படிப்போர் செந்தமிழ்ச்சேயை முருக பக்தர் என்றே எண்ணிடத் துணிவர்.*

*“சீர்கெழு செந்தூர் வேலா,*
*செங்கோட்டுச் செவ்வேள், மூலா!*
*சூர்மருங் கறுத்த ஐயா,*
*சுடரிலை நெடுவேற் கையா,*
*ஆர்வலர்க் கருளே, அன்பே,*
*அணியிழை கணவ, இன்பே,*
*சேர்ந்துனைப் பணிதற் செய்வேன்;*
*சேயெனைக் காத்தற் செய்க.”*

'சேயெனைக் காத்தற் செய்க' என்னும் அடியைக் கொண்டு, நூலாசிரியரை அறியாதார், அவர் தன்னைக் காக்கும்படி பாத்திரத்தின் வழி இறைஞ்சுவதாக எண்ணவும் தலைப்படலாம். 'பிள்ளைக்குத் தந்தை ஒருவன்; நம் எல்லார்க்குந் தந்தை இறைவன்' என்னும் கண்ணதாசன் பாடலைக் கருதுவார்க்குச் சேய் என்றது நூலாசிரியரைக் குறிப்பதன்று; மாதேவி இறைவனைத் தந்தையாகக் கருதிப் பாடியதென்பது விளங்கும்.

செந்தமிழ்ச்சேயார் பகுத்தறி சிந்தனையாளர். அவருடைய படைப்பில் அக்கொள்கையின் சாயல் சிறிதேனும் இல்லாமற் போனால், அதுதான் வியத்தற்குரியதாகும். தனித்தமிழ்ச் சிந்தனையோ, இறை மறுப்புக் கொள்கையோ இல்லாதவரான பேரா.பெ.சுந்தரம் பிள்ளை அவரே, தன் மனோன்மணீயத்தில்,

"ஊக்கமே பாக்கியம் உணர்விலார் வேறு
பாக்கியம் ஊழ்எனப் பகர்வ தெலாம்பாழ்," என்றும்

"அந்தணர் வளர்க்குஞ் செந்தழல் தன்னிலும்
நாட்டபி மானமுள் மூட்டிய சினத்தீ
அன்றோ வானோர்க் கென்றுமே உவப்பு,"

என்றும் பாடியிருக்கும் போது, இந்நூலாசிரியர் தன் பகுத்தறிவுப் பார்வையைக் காப்பியப் பாத்திரத்தின் வழியாகச் செலுத்தாது இருப்பாரா?

"என்னுயிரே, உன்னிதழூ றின்சுவைக்கிவ் வையகத்தில்
என்னபொருள் சற்றேனும் ஈடாகும்? சொல்லிடுக."

என அபராசிதன் கேட்க, அதற்கு மாதேவி, 'தேவர் அமுதம்?' என்று விடை மொழிய, அபராசிதன் 'தெரியாப் பொருளதுவே!' என மறுப்புரைக்கின்றான். தேவர் அமுதம் என்பதை இல்பொருள் உவமை என்று கூறியதன் மூலம் தன்னை வெளிப்படுத்தி விடுகிறார். இவ்வளவு தானா? என்று இளப்பமாக எண்ணுவாரை இடித்து உரைப்பது போன்று,

"இல்லா இறையிங் கிருப்பதாய்க் கட்டுரைப்பார்
சொல்லாட வல்லார்; சுவைபடச் சொல்லிடுவார்."

என்னும் அடிகள் வழியாக ஐயச் சுவட்டையே அழித்து விடுகிறார்.

மக்களை அறியாமைப் பிடியில் வைத்துக் கொண்டு ஆதாயம் தேடும் ஊடகங்களும் அயன்மையை நயக்கப் பழக்கி வணிகத்தைப் பெருக்கிக் கொள்ள முயல்வோரும் புனைகதைகளை நடந்த நிகழ்வுகள் போன்று நாத்திறத்தால் நம்பும்படி பேசி, மூளைச் சலவை செய்து பிழைப்பு நடத்திவருங் கூட்டணியாகச் செயல்பட்டுக் கொண்டிருப்பதால், பகுத்தறிவு பழுது பட்டுப் பருவ மழை பொய்த்த பயிராகிக் கொண்டிருக்கிறது.

காப்பியங்களில் பழமொழிகளைச் சூழற்கு ஏற்பப் பாத்திரங்களின் வழியாகப் பயன்படுத்தல் இயல்பானதே. அதிலும் அறநூல்களில் பழமொழிகளின் ஆளுமை அதிகமாகவே இருக்கும். இந்த நாடகக் காப்பியத்திலும் பழமொழிகள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு இருக்கின்றன. நுண்ணறிவாளர் நூலறிவோடு பட்டறிவையும் பயன் படுத்திப் படிப்போரைச் சிந்திக்கத் தூண்டுவர்.

நூலறிவென்பது மர நிழலை ஒத்தது. அதை நாடிச் சென்று அதன் கீழ் தங்கினால் மட்டுமே நிழலருமையைத் துய்க்க இயலும். பட்டறிவென்பது குடை நிழலைப் போன்றது; நாம் செல்லும் இடமெங்கும் கொண்டு போகக் கூடியது; தேவைக்கேற்பப் பயன்படுத்திக் கொள்ளக் கூடியது. பழமொழிகள் பட்டறிவில் விளைந்த பழச்சுளைகள்!

வழி காட்டவும் நெறிப்படுத்தவும் வல்ல பழமொழிகள் பல இந்நூலில் எடுத்தாளப் பட்டுள்ளன. எவ்வளவுதான் பசி இருந்தாலும் பானைச் சோற்றையும் ஒரே வேளையில் சாப்பிட்டுவிட முடியாதே! எடுத்துக் காட்டுக்களாக ஆளப்பட்டிருக்கும் இரண்டொரு பழமொழிகள் மட்டில் பார்ப்போம்.

"நாளை கிடைத்திடும் நற்பலா வேண்டாவிவ்
வேளை கிடைகளா மேலெனக் கொள்வீர்."

என்னும் அடிகளில் நாளைக்குக் கிடைக்கும் பலாவை விட, இன்று கிடைக்குங் களாவே மேல் என்னும் பழமொழி அடங்கி இருக்கிறது. மற்றொன்று:

“இறந்திடத் துணிந்தார்க் கென்றும்
இமிழ்கடல் முழங்கால் மட்டே.”

என்றதில் ‘சாகத் துணிந்தவர்க்குச் சமுத்திரம் முழங்கால் மட்டே’ என்னும் பழமொழி பயிலப் பட்டுள்ளது. பாரதியும் தன் பாஞ்சாலி சபதத்தில், கல்லில் நாருரிப்பாரோ? என்னும் பழமொழியைச்,

“சொல்லின் நயங்கள் அறிந்திலேன் — உனைச்
சொல்லினில் வெல்ல விரும்பிலேன் — கருங்
கல்லிடை நாருரிப் பாருண்டோ?”
என்று ஆண்டிருக்கிறார்.

மனோன்மணியம் சுந்தரனார்,’ வேலியே பயிரை மேய்வதா?’ என்னும் பழமொழியை, ‘வேலியே தின்னில், தெய்வமே காவல் செம்பயிர்க்கு,’ என்று ஆண்டுள்ளார்.

விசுவநாதம் நாடகக் காப்பிய ஆசிரியர், ‘கரைப்பார் கரைத்தால் கல்லுங் கரையும்’ என்னும் பழமொழியைச் சொற்கலப்போ, கலைப்போ இல்லாமல்.

“............... ............. உயர்மதி உடையான்,
நல்வழி பிறழான், நாதன் ஆயினும்
செல்வழி ஒன்னலர் சேர்ந்தவன் மதியைக்
கலைப்பார் கலைத்தால் கல்லுங் கரையும்,”

என்று ஆண்டுள்ளார். பழமொழி ஆட்சி என்பது படைப்பாளர்க்குப் பச்சடி போன்றது.

காடுகளில் எப்படிக் கனிகட்குப் பஞ்சமிருப்பது இல்லையோ, அப்படிக் காப்பியங்களில் கருத்து முத்துக்களும் ஒளி சிந்தியபடி மிகுந்திருக்கும். ஆலின் பழங்களை எப்படி எண்ணிக் கூறிவிட முடியாதோ, அப்படியே காப்பியங்களில் காணும் கருத்து மணிகளையும் பட்டியலிட்டுக் கூறிவிட முடியாது. நாடகக் காட்சிகளில் கண்களில் பதிவானவற்றில், அழகு மிக்கவற்றை எண்ணிப் பார்த்து இன்பம் துய்ப்பதைப் போன்று, இக்காப்பியக் காட்சிகளில் கண்ட ஒண்மணிகளில் ஒன்றிரண்டையேனும் கைகளில் ஏந்திக் காட்டாவிடில், காப்பியத்தைப் படித்துத் துய்த்ததன் பயன் முழுமை பெறாது.

இந்நாடகத்தின் ஏழாவது காட்சியில் வண்டார்குழலியும் தோழி செந்தாமரையும் உரையாடுகின்றனர். அப்போது வண்டார்குழலி,

“செழுமலர்க் கண்ணாய், சேர்ந்தெனைப் பிணித்ததும்
கருதின் காதலா? காமமா? கலவையா?”

என வினவ, அதற்குச் செந்தாமரை விளக்கம் தருவது சிந்தைக்கு விருந்தாக உள்ளது. நீண்ட விளக்கத்திலும்

“வீட்டுத் தீயென விளங்கில் காதல்,
காட்டுத் தீயே காமம்; காண்க.”

என்பதைச் சுவைக்க இனிக்கிறது. இவ்வடிகளில் ஒளிவிடும் உவமை அழகும் கருத்துச் செறிவும் சொற்சுருக்கமும் ஒன்றை யொன்று விஞ்சி நின்று படிப்பார் நெஞ்சைப் பனிமலையாகக் குளிர்விக்கின்றன.

பதின்மூன்றாம் காட்சியில் விக்கியண்ணன் கூற்றாக,

“திருந்திடக் கற்க; தேர்ந்த
தெள்ளிய அறிவு, கொள்கை
பொருந்திடல் வேண்டும்; இன்றேல்,
பொருளிலாச் செய்யு ளேயாம்.”

என்னும் அடிகள் நெஞ்சுள் நிறுத்த வேண்டிய பஞ்ச உலோகச் சிலையாகவன்றோ விளங்குகின்றன.

பல பொருட்கள் குவித்த கலைக்கண்காட்சியில் காணும் பொருள்களைப் போன்று, காப்பிய உறுப்புக்களும் அணிச் சிறப்புக்களும் ஒருங்கே அமையப் பெற்ற இந்நாடகக் காப்பியத்தைப் படைத்துக் கொடுத்துள்ள பொறிஞர், புலவர் செந்தமிழ்ச்சேயை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

காப்பியத்தின் சிறப்பை முழுமையாக எடுத்துரைக்கும் ஆற்றல் எளியேனுக்கில்லை என்பதால், பெருங்கவிஞன் பாரதியின் துணையை நாடினேன். இதோ, அவனே கூறுவதைக் கேட்டிடுக.

“வல்லவன் ஆக்கிய சித்திரம் போலவும்
  வண்மைக் கவிஞர் கனவினைப் போலவும்
நல்ல தொழிலுணர்ந் தார்செய லென்றே
  நாடு முழுதும் புகழ்ச்சிகள் கூறக்
கல்லையும் மண்ணையும் பொன்னையும் கொண்டு
  காமர் மணிகள் சிலசில சேர்த்துச்
சொல்லை யிசைத்துப் பிறர்செயு மாறே
  சுந்தர மாமொரு காப்பியஞ் செய்தார்.”

(பாஞ்சாலி சபதம் — பாடல் 110)

கல்லையும் மண்ணையும் என்பவற்றைப் பாத்திரங்கள், நிகழ்வுகள் என்பவற்றின் உருவகங்களாகக் காண்பார்க்குப் பாரதியின் இப்பாடல் இந்நூற்கும் ஆசிரியர்க்கும் பாரதியின் பாராட்டாக அமைவது விளங்கும்.

செம்பியன் நாடகக் காப்பியத்தை நடையழகிற்காக முதன் முறையும் உவமை, உருவக நலன்களைத் துய்ப்பதற்காக இரண்டாம் முறையும் கருத்துக் கனிகளைச் சுவைத்து மகிழ மூன்றாம் முறையும் படிக்கலாம். எடுத்தாளத் தக்க அடிகள் ஏராளமாக உள்ளன. ஓடை மீன் புது நீரை உவந்து எதிர்நீச்சலிட்டு மகிழ்வதைப்போன்று, மேடைப் பேச்சாளர் புத்தாக்கங்களை ஊக்குவிக்கும் வகையில் புது வரவுகளைப் படித்து மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும். இப்படிச் செய்வதுதான் உண்மையான தமிழ்வளர்ச்சிப் பணி!

பாராட்டப் படாத திறமை பழுதுற்றுப் போகும். பட்டுத் துணி பெட்டிக்குள்ளேயே பாதுகாக்கப்பட்டு மக்கிப் போகவும் பொலிவு மங்கிப் போகவும் விட்டுவிடக் கூடாது.

இந்த நாடகக் காப்பியம் காஞ்சிப் பட்டு; கட்டி வந்து காட்சிப் படுத்துங்கள்.

இந்நூலில் காண்பதற்குக் குறையே இல்லையா? இப்படியும் சிலர் வினவ விழையலாம். குறை காண முயல்வதைவிட நிறை கண்டு மகிழலாமே. குறை கூறித்தான் ஆக வேண்டுமென்றால், காதலை இன்னும் மென்மையாக, நயமாக வெளிப்படுத்தும் முயற்சியை மேற்கொண்டு இருக்கலாம் எனலாம்.

இயற்கைக் காட்சிகளைப் படம் பிடித்துக் காட்டப் பாத்திரங்களைப் பயன்படுத்தி இருக்கலாம் என்று கூற இடமிருந்தாலும் படைப்பாளியின் உணர்வோட்டத்திற்குத் திசை காட்டுவது, ஆறுகட்குப் பாதை அமைப்பதாகிவிடும்.

இல்லாததற்கு ஏங்குவதைவிட, இருப்பதைத் துய்ப்பதே இனிது.

இருபத்தொன்றாம் நூற்றாண்டிற்குப் பெருமை சேர்க்கும் படைப்பு. பாராட்டுவோம்; பயன் துய்ப்போம்.

# வாழ்த்துரை

**பொறிஞர் இராச. வேதாந்தம்.**
தலைமைப் பொறியாளர் (ஓய்வு), மி.வா.
பி—4, சுமங்கலா குடியிருப்பு,
36, வேணுகோபாலப்புரம், நங்கநல்லூர்,
சென்னை—600061, பேசி :044—22328629.

'தூங்கெயில் எறிந்த தொடிதோட் செம்பியன்'

— மணிமேகலை, விழாவறைகாதை: 1— 4.

'ஓங்கெயிற் கதவம் உருமுச்சுவல் சொறியுந்
தூங்கெயில் எறிந்த தொடிவிளங்கு தடக்கை
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்'

— சிறுபாணாற்றுப்படை — 80—82.

'வீங்குதோள் செம்பியன் சீற்றம் விறல்விசும்பில்
தூங்கும் எயிலும் தொலைத்ததால் — ஆங்கு'

பழமொழி — 155.

செம்பியன் — இதுசோழர்க்கே உரித்தான சிறப்புப் பெயர். அதை நெடுங்கதவுகளைக் கொண்ட கோட்டைகளைத் தகர்த்து அந்நாட்டைக் கைப்பற்றிய விறல் வேந்தர்க்குத் தந்து போற்றிய சோழர், விக்கியண்ணன் என்ற ஒரு வேளிர்குலத் தலைவற்குத் தந்து சிறப்பித்த வரலாற்று நிகழ்ச்சியைக் கூறும் கதை இது.

ஒழுக்கத்தை ஒதுக்கி வைத்தவனாக இருந்தாலும் தான் கொண்ட கடமையை நிறைவேற்ற அவன் இம்மியும் பிறழாதவன் என்பதைத் தொடக்கத்திலேயே ஆசிரியர் சொல்லிவிடுகிறார். அவன் தொடிதோட் தடக்கை கொண்டவனாக இருந்திருக்கலாம். ஆனால் அவன் எந்தக் கோட்டையையும் தகர்க்கவில்லையே! ஆனால் சோழப் பெருவேந்தர்க்கு இணையான அந்த விருதைப் பெற அவன் ஆற்றிய அருஞ்செயல் எது? ஆயிரம் நூற்றாண்டுகட்கு மேலாகச் சிற்றரசர் நிலையில் இருக்க நேர்ந்த சோழர் தலையெடுத்துப் பேரரசாக எழுச்சியுற்றுத் தம் பழம் பெருமையை நிலைநாட்டக் காரணமாய் இருந்ததைவிட வேறு என்ன செயற்கரிய செயல் ஆற்றிடவேண்டும்?

படிப்போர் நெஞ்சில் கலக்கத்தை உருவாக்கும் இரண்டு நிகழ்ச்சிகள். ஒன்று, மறுநாள் போர் நடக்க இருக்கிறது. நடத்த வேண்டிய தலைவன் உறங்கிக் கொண்டிருக்கிறான். எங்காவது கேட்டதுண்டா? அடுத்தது. விக்கியண்ணன் கடம்ப மாதேவியின் அந்தப்புரத்தில்— அவனுக்குப் பிடித்த சிறைதானே? ஆம்— அவள் மடியிலே. ஆனால் விடிந்ததும் அவன் எதுவும் நடவாததுபோல் தன் அடுத்த நடவடிக்கைகளைத் தொடர்வது ஆசிரியரின் சிறந்த கதை உத்தி.

பாயிரம் என்று பார்க்கும்போது அவரது முந்தைய உரைநடைக் கதை இதற்கு உரையாக அமைந்ததுபோன்று அமைந்திருப்பதால் பின்னாளில் படிப்பவர்க்கு எது முதலில் எழுதப்பட்டது என்ற ஐயம் பிறப்பின் வியப்பதற்கில்லை.

சங்க இலக்கியப் பாடல்களைப் படிப்பது போன்ற உணர்வுதான் எனக்கு ஏற்பட்டது. பத்தாம் நூற்றாண்டில் நிகழ்ந்த கதையை முதலாம் நூற்றாண்டுத் தொடக்கத்திலேயே எழுதி விட்டாற்போன்ற நடை, இலக்கணமும் சிறப்பாக யாப்பிலக்கணமும் நல்ல சொல் வன்மையும் உடையோராலேயே எளிதாகப் படிக்கவியலும். மனோன்மணீயத்திற்குப் பின் வைத்து ஏற்றிப் போற்றக்கூடிய சிறப்புக்களை உடையது இந்நாடக நூல் என்பது என்கருத்து.

நீண்ட சொல்லாடல் அலுப்புத் தட்டுவது போலிருப்பினும் கவிதை அழகும் கதை அமைப்பும் அதைக் கரைத்துக் காணாமல் அடித்துவிடுகின்றன.

வெண்பா யாப்பினைக் கொண்டு காதற் களி வெண்பா என்ற காவியத்தைப் படைத்த புலவர்க்குக் கவிதை விடாய் அடங்கவில்லைபோலும். பரிசுதான் கிடைத்து விட்டதே போதும் என்றெண்ணாமல் அதையும் பல பா வகைகளால் எழுதி ஒரு நாடகக் காப்பியமாகப் படைத்து அளித்துள்ளார்.

இலக்கியச் சுவைக்குள் நான் போகவில்லை. போனால் அஃதோர் ஆய்வுரை ஆகிவிடும். அந்த அளவிற்கு ஒவ்வொரு எழுத்தையும் படித்து வியந்து கொண்டிருக்கிறேன். ஆயினும், வண்டார்குழலி யாழிசைத்துப் பாடுவதாக எழுதப்பட்ட இசைப் பாடல்கள் இரண்டும் இனிமையானவை. இசையுடன் கேட்டால் மனத்தை உருக்கும் என்பது உறுதி.

செந்தமிழ்ச்சேய் தொடர்ந்து புதுப்புது காப்பியங்கள் இயற்றிட வேண்டும். அவற்றை நான் தொடர்ந்து படித்திட வேண்டும். அவருடைய செந்தமிழ்ப் பணி தொடர என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

# இன்னுரை

**பொறிஞர் சா. வேல்முருகன்.**
தலைமைப் பொறியாளர் (ஓய்வு), மி.வா.
14, துரைசாமி நகர், கடலூர்—607 001.
பேசி : 04142—230945, 94443 54945.

புலவர் பொறிஞர் செந்தமிழ்ச்சேய் அவர்களின் நட்பு எனக்குக் கிடைத்ததில் பெரும் பயன் எனக்குத்தான். தமிழ் இலக்கியங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள எனக்கு ஒரு நல்வாய்ப்பு. மின்பொறியாளராக இருந்தும் தமிழ் மீதுள்ள பற்றால் பல்வேறு பணிகட்கிடையேயும் படித்துப் புலவர் பட்டம் பெற்றுள்ளார்.

பட்டம் பெற்றது மட்டுமில்லாமல் தொல்காப்பியத்தின் வழிநின்று இலக்கணங்களிலிருந்து வழுவாமல் சுவையான பல கவிதை நூல்களைப் படைத்துள்ளார். ஆட்சிச் சொற்கள் அகர முதலி தொழில்நுட்பக் கலைச் சொற்கள் என்ற இரு நூல்கள் உருவாகப் பெருமுயற்சி மேற்கொண்டு அவற்றை வெளிக்கொணர்ந்து மின்வாரியப் பணியாளர் பயன்பெறக் கரணியமாய் இருந்துள்ளார்.

படைப்பாளியைப் பற்றி எழுதுதலை விடுத்துப் படைப்பைப் பற்றி எழுதுங்கள் என்பதே எப்போதும் இவரது விழைவு. படைப்பாளியையும் படைப்பையும் பிரிக்க முடியாது என்றும் படைப்பாளி வேறு, படைப்புவேறு என்றானால் அது வாழ்வியற்கு வழிகாட்டாது என்றும் நான் நம்புகிறேன்.

இந்தப் பாவியத்தின் பொதுப்பாயிரத்தில் உள்ள மொழி வாழ்த்துப் பாடல் சுந்தரனாரின் “நீராருங் கடலுடுத்த” என்ற பாடலை என் நினைவுக்குக் கொணர்ந்ததுடன் அதைவிடவும் அழகாயிருப்பதாக எனக்குப் பட்டது. திருக்குறளின்பாலும் தொல்காப்பியத்தின்பாலும் ஆசிரியர்க்குள்ள அளவுகடந்த பற்றையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

இயற்கையின் அழகைப் பல இடங்களில் சுவைபடச் சொல்லிச் செல்கிறார். இயற்கை அழகைச் சுவைக்கும் கதை நாயகனின் அறிமுகமாகும் அருமையான முதல் 50 வரிகள் நம்மை மகிழ்விக்கும். படித்துப் படித்துச் சுவைத்தேன்.

"இன்பமே விழைந்திங் கிடருறு நெஞ்சே,
இன்பத்துள் இன்பம் இயற்கையில் தனிமை!
இயற்கையில் தனிமை எய்திய பின்னரும்
மயற்கொண் டலைவது மடமையே, உணருதி".

ஆயினுமென்! கவிஞர்க்கே பொதுவாயுள்ள குணம் (நோய்?) இவரையும் பிடித்தாட்டுகிறது. "மயற்கொண் டலைவது மடமையே" என்று கூறிவிட்டு இயற்கையைப் பெண் நல்லார்க்கு உவமையாக்கி மகிழ்கிறார். விடுங்கள் போகட்டும்!

வண்டார்குழலி இறைவனை வாழ்த்திப் பாடும் 24 வரிகள் அழகிய எளிய இறைவாழ்த்துப் பாடல்கள். அடியவர் பாடி மகிழலாம்.

இக்கவிதை நாடகத்தில் நான் கண்டு சுவைத்தவை இன்னும் பலப்பல. அவற்றைப் படிப்போரே தம்போக்கில் சுவைக்கட்டும் என்று இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

பெருமளவில் எளிய தமிழ்ச் சொற்களைக் கொண்ட பிறமொழிச் சொற்கள் கலப்பில்லாத இனிய மரபுவழிக் கவிதைகள் அடங்கிய இது போன்ற படைப்புகள் நிறைய வெளிவரவேண்டும். அப்போதுதான் கவிதை என்றாலே புரியாத மொழியியல் என்ற எண்ணம் மாறிப் பிறமொழிக் கலப்பற்றக் கவிதைகள் எழுதும் ஆவல் பலர்க்கும் எழும்; மரபுவழிக் கவிதைகள் வாழும்.

நூலாசிரியர் தனது படைப்புக்களோடு கடலூர் மாவட்டத் தமிழறிஞர் நூலனைத்தையும் இணையதளத்தில் உலாவரச் செய்யும் முயற்சியினை மேற்கொண்டுள்ளார். இது பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

விலை கொடுத்து நூல் வாங்கிப் படிக்கும் வழக்கத்தை நாம் வளர்த்துக் கொள்வோம். தமிழில் நல்ல மரபுக் கவிதை நூல்கள் வெளிவரப் பாடுபடுவோம்.

பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தும் வழக்கினை ஒழித்து இனிய எளிய தமிழ்ச் சொற்களைப் பேசி எழுதிப் பழகுவோம்.

இருபத்தொன்றாம் நூற்றாண்டிற்குப் பெருமை சேர்க்கும் இப்படைப்பைப். பாராட்டுவோம்; பயன் துய்ப்போம்.

# .சுவையுரை

**வழக்குரைஞர் சீனி.சிவானந்தம்,**
*40, இண்டாவது முதன்மைச் சாலை,*
*சாயி நகர், சென்னை — 600 092.*
*பேசி : 9444816206.*

*தமிழக அரசின் பரிசு பெற்ற செம்பியன் தமிழவேள் எனும் வரலாற்றுப் புதினமாகிய அரிய படைப்பு, இன்று அதே பெயரில் அதே கருவில் மாற்றம் எதுவும் இல்லாது நாடகக் காப்பியமாகப் புது பரிணாமம் பெற்றுள்ளது.*

*காலந்தோறுங் கவிஞர் தோன்றுவர் என்பது வழக்கு. அவ்வழக்கிற்கு ஏற்பப் புலவர்— பொறிஞர் செந்தமிழ்ச்சேய் பல கவிதை நூற்களைப் படைத்துள்ளார். இளமைத் துள்ளல் நிறைந்த "காதற் களிவெண்பா," கற்கண்டு சுவை தோற்கும் காதற் சுவை நிரம்பிய கவிதை நூலாகும். செம்பியன் தமிழவேள் எனும் இந்நாடகக் காப்பியம் சிறு அகல் விளக்காய்ச் சுடர் விட்டுப் பனிமலை ஒளிரும் பகலவனாய்ப் பெரும் ஒளி காட்டி நிற்கிறது.*

**செம்பியன் தமிழவேள்** *எனும் இக்காப்பிய நாடகம் முற்றிலும் கற்பனைப் படைப்பு அன்று. கல்வெட்டொன்றில் பொறிக்கப்பட்டுள்ள ஒரு சிறு குறிப்பினைக் கருவாகக் கொண்டது. சிறு துளியைப் பெருவெள்ளமாக்கிக் காண்பித்துள்ள ஆசிரியரது நுண்மாண் நுழைபுலம் போற்றத் தகுந்ததாகும்.*

*காப்பியத் தலைவன் ஒரு போர் மறவன். சேர நாட்டைச் சேர்ந்தவன். தன் மன்னரின் ஓலையைத் தாங்கிச் சோழ மன்னர் விசயாலயனைக் காண வருகிறான். வரும் வழியில் அவனை வழிமறித்த நிகழ்வுகள் அவனை ஒரு சரித்திர நாயகனாக அடையாளங் காட்டுகின்றன.*

*சோழ இளவரசி கடம்ப மாதேவி காப்பியத்தின் ஓர் இன்றியமையாப் பாத்திரம். காப்பியத் தலைமைக்கு உகந்த, முற்றிலும் தகுதியான பாத்திரம். கடம்ப மாதேவியைப் பகைவர் இடையிருந்து காப்பாற்றிச் செல்வழியில், இளமைக் கதகதப்பில் காம வயப்பட்டு முத்தமிட்டுக் காதலில் மயங்கும் வீரனாக வெளிச்சத்திற்கு வருகிறான் காப்பியத் தலைவன், செம்பியன் தமிழவேள் எனும் சிறப்பினைப் பின்னர்ப் பெற உள்ள வீரன் விக்கியண்ணன்.*

*காப்பியத்தின் கதைச் சுருக்கமாக, விக்கியண்ணன் என்பவன் யார்? எப்படிப் பட்டவன்? அவன் ஆற்றல் என்ன? அவனால் சோழ நாடு அடைந்த அளப்பரும் சிறப்புக்கள் யாவை? என்பவற்றை எல்லாம் வழிப்போக்கர் வழி முன்னிலைப் படுத்தும் ஆசிரியரின் நாடக உத்தி மிகவும் பாராட்டற்கு உரித்து. அவர் வழி விக்கியண்ணனின் அறிமுகம் சிறப்பானது.*

*"வழிவழி ஆண்ட சோழர்*
*வான்புகழ் போய தென்றே*
*மொழிந்தவர் கூற்றை மாற்றி*
*முடித்தவன் விக்கி யன்றோ!"*

*"செம்பியன் தமிழ வேளாம்!*
*சிறப்புறு பெயரே, பேறே!*
*செம்பியற் மகளாய் உற்ற*
*செல்வியைத் துணையாய்ப் பெற்றார்!"*

*வீரத்தின் வெளிப்பாடு ஒரு புறம்; காதல் விளையாட்டு மறு புறம்! காதற்குக் கடம்ப மாதேவி, அணைப்பிற்கு ஆடலழகி வண்டார்குழலி! தன் அறிவு கூர்மையால் காவிரி வெள்ள நீரைக் கொள்ளிடத்துக் கரை புரள ஓடச்செய்து, போரின் வெற்றிப் பயனை முழுமையாய்ச் சோழர்க்குச் சேர்த்துத் தன் பங்களிப்பை வீரன் விக்கியண்ணன் நிறைவு செய்வதாய்க் காப்பியத்தை இனிதே முடிக்கிறார் ஆசிரியர்.*

ஆற்று நீர்ப் போக்காய் அழகுற அமைந்துள்ள சீரான கதையோட்டம், எளிய இனிய சொற்கட்டு, இலக்கணம் வழுவா மரபு கவிதை நடை, ஆரவாரம் இல்லாக் கதைப்போக்கு, ஆங்காங்கே சிற்சில திருப்பு முனைகள், எளிய உவமை நயங்கள் எல்லாம் படிப்பவர் ஆவலைத் தூண்டுவனவாக அமைந்துள்ளன.

'வீரர்க்கு வீரத்தை விளக்கல் இங்கு
வெளச்சத்தில் விளக்கேற்றல்!'

'எள்ளிருக்கும் நெய்யெனவே இயைந்திடுங் குறிக்கோளே!'

'விண்மீனுங் கண்ணயர்ந்த வேளை.'

'தெரிந்தும் எவர்தான் எரிதழல் வீழ்வார்?'

இப்படி எளிய இனிய உவமைகள் எண்ணற்ற காப்பியம் முழுதும் விரவிக் கிடக்கின்றன.

படித்துச் சுவைத்தேன்; சுவைத்துப் படித்தேன். பாராட்டுக்கள்.

## பயன்படுத்தப்பட்டுள்ள பா வகைகளின் இலக்கணம்

### சிறு குறிப்பு

## வெண்பா

### பொது இலக்கணம் :

ஈரசைச் சீர்களும் காய்ச்சீர்களுமே வரப்பெறும். இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை அன்றி வேற்றுத் தளை வரப் பெறா. அளவடிகளாம் நாற்சீர் அடிகளே வரப் பெற்று, ஈற்றடி மட்டும் சிந்தடியாம் முச்சீரடியாய் வந்து முடிவுறும். செய்யுள் ஈற்றுச் சீர் காசு, நாள், மலர், பிறப்பு என்னும் வாய்ப்பாடு ஒன்றால் முடிவுறும்.

**குறள் வெண்பா :**

மேற்சொன்ன பொது இலக்கணத்தோடு பொருந்தி, ஒரு விகற்பத்தானும் இரு விகற்பத்தானும் இரண்டடிகளாய் வரும்.

**நேரிசை வெண்பா :**

நான்கடிகளாய், இரண்டாம் அடியின் நான்காம் சீர் முதல் தொடைக்கேற்ற தனிச்சொல்லால் அடி நிரம்பப் பெற்று, ஒரு விகற்பத்தானும் இரு விகற்பத்தானும் வரும்.

**இன்னிசை வெண்பா :**

தனிச்சொல் இன்றி, நான்கடிகளாய், ஒரு விகற்பத்தானும் இரு விகற்பத்தானும் நேரிசை வெண்பாவினின்றும் சிறிது வேறுபட்டு வரும்.

**சிந்தியல் வெண்பா :**

நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா என இரு வகைப்படும்.

நேரிசை வெண்பாவைப் போல, இரண்டாமடி தனிச்சொல் பெற்று, ஒரு விகற்பத்தானும் இரு விகற்பத்தானும் மூன்றடியாய் வருவன எல்லாம் நேரிசைச் சிந்தியல் வெண்பா எனப்படும்.

இன்னிசை வெண்பாவைப் போலத் தனிச்சொல் இன்றி, ஒரு விகற்பத்தானும் இரு விகற்பத்தானும் மூன்றடியாய் நேரிசைச் சிந்தியல் வெண்பாவினின்றும் சிறிது வேறுபட்டு வருவன எல்லாம் இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனப்படும்.

**பஃறொடை வெண்பா — கலி வெண்பா :**

வெண்பாவின் பொது இலக்கணம் பொருந்தி நின்று, ஐந்தடி முதலாய்ப் பன்னிரண்டடி முடிய வருவன எல்லாம் பஃறொடை வெண்பா எனப்படும். பன்னிரண்டடியின் மிக்க அடிகளால் வருபவை எல்லாம் கலி வெண்பா எனப்படும்.

## ஆசிரியப்பா

### பொது இலக்கணம்

நாற்சீர் அளவடி உடையதாய், ஈரசைச் சீர்களாகிய இயற்சீர் மிக்கு, நிரை நடுவாகிய வஞ்சி உரிச்சீர் (கூவிளங்கனி, கருவிளங்கனி) அல்லாத அயற்சீர் விரவியும் தன்றளை,தழுவியும் பிற தளைகள் கூடியும் மூன்றடிக் குறுமையும் வரம்பில் பெருமையும் உடையதாய், செய்யுள் ஈற்றுச்சீர் ஏ, ஓ, ஈ, ஆய், என், ஐ என்னும் அசையால் முடியும்.

**நேரிசை ஆசிரியப்பா :**

மேற் பொது இலக்கணத்தோடு பொருந்தி, ஈற்றடியின் அயலடி (முன்னடி) முச்சீரடியாய் வருவது.

**நிலைமண்டில ஆசிரியப்பா :**

செய்யுளின் எல்லா அடிகளும் தம்முள் ஒத்து நாற்சீராம் அளவடியால் வருவது.

**அறுசீர் — எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் :**

ஐஞ்சீரின் மிக்க சீர்களை உடைய அடிகள் நான்கு தம்முள் அளவு ஒத்து வருவது ஆசிரிய விருத்தம். ஐஞ்சீர் அடிகள் நெடிலடி எனவும். ஐஞ்சீரின் மிக்க அடி கழிநெடிலடி எனவும் வழங்கப்படும். அடிக்கு ஆறு சீர் அமையின் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், எட்டுச் சீரிருப்பின் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் என சீர்களின் எண்ணிக்கையைக் கொண்டு செய்யுள் பெயர் வழங்கும்.

## கலிப்பா

### பொது இலக்கணம்

நாற்சீர் அடிகளாய். நேரீற்று இயற்சீரும் (நேர்நேர், நிரைநேர்) நிரை நடுவாகிய வஞ்சி உரிச்சீரும் (விளங்கனி) வராது, நிரை முதலாகிய வெண்பா உரிச்சீர் (காய்ச் சீர்) மிக்கு வந்து, தன்றளையும் அயற்றலையும் பொருந்தி வரும்.

**நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா :**

முதலில் ஒரு தரவு வந்து, அதன் பின் தாழிசை மூன்று, தனிச்சொல், சுரிதகம் என நிரல்பட வரும். தரவிற்கு மூன்றடியே சிறுமை; பெருமைக்கு வரையறை இல்லை. தாழிசைக்குக் கீழெல்லை இரண்டடி, மேலெல்லை நான்கடி. தரவடிகளினும் தாழிசை அடிகள் குறைந்து வர வேண்டும். சுரிதகம் வெண்பா ஆகவோ ஆசிரியமாகவோ வரும். சிறுமை இரண்டடி; பெருமை பொருள் முடிபிற்கு ஏற்ப அமையும்.

**கொச்சகக் கலிப்பா :**

நாற்சீர் அடிகள் நான்காய், ஓரெதுகையாய், கலிப்பாவில் வாரா என்ற நேரீற்று இயற்சீரும் நிரைநடுவாகிய வஞ்சி உரிச்சீரும் வந்து, ஐஞ்சீரடியும் வந்து, ஒத்தாழிசைக் கலிப்பாவினோடு ஒவ்வாது வேறுபட்டும் வரும்.

**கலிவிருத்தம் :**

நாற்சீர் கொண்ட அளவொத்த நேரடிகள் நான்காய் ஓரெதுகையாய் வரும்.

**கட்டளைக் கலித்துறை :**

ஐஞ்சீர் கொண்ட நெடிலடிகள் நான்காய், நான்கடிகளும் ஓரெதுகையாய், அடி முழுதும் வெண்டளை பிறழாது, ஐந்தாம் சீர் விளங்காய்ச் சீராய், அடி முதற்சீர் நேராய்த் தொடங்கின் அடிதொறும் ஒற்று நீங்கலாகப் பதினாறு எழுத்துக்களும் நிரையாய்த் தொடங்கின் பதினேழு எழுத்துக்களும் வந்து நிறையும்.

**கலித்தாழிசை :**

குறளடி முதல் கழிநெடிலடி ஈறாக, அளவு ஒத்த இரண்டு அடிகள் வருவது.

## காவியத்திற்கு அடிப்படையாக அமைந்த வரலாற்று உண்மைகள்

**விசயாலய சோழன் :**

தஞ்சை மாநகரைக் கைப்பற்றி அதனைத் தலைநகராக வைத்துக் கொண்டவன்,

(திருவாலங்காட்டுச் செப்பேடுகள், தெ.இ.க—தொ:வீவீவீ, எண்:205.)

கடைச்சங்க காலத்திற் புகழுடன் விளங்கிய பெருநற்கிள்ளி, கரிகாலன், செங்கணான், நல்லடி என்ற சோழ மன்னர்களின் வழியில் தோன்றியவன்.

(அன்பிற் செப்பேடுகள்— ஆனைமங்கலச் செப்பேடுகள்—
திருவாலங்காட்டுச் செப்பேடுகள்— கன்னியாகுமரிக் கல்வெட்டுக்கள்)

சற்றேறக்குறைய 35 ஆண்டுகள் அரசாண்ட இவன், தன் வாழ்நாள் முழுதும் பகைவர்களோடு போர்க்களங்களிலேயே கழித்துள்ளான்.

"....................................................... மீதெல்லாம்
எண்கொண்ட தொண்ணூற்றின் மேலும் இருமூன்று
புண்கொண்ட வெற்றிப் புரவலனும் ..................."

(விக்கிரம சோழனுலா—15)

'சீறுஞ் செருவிற் றிருமார்பிற் றொண்ணூறும்
ஆறும் படுதழும்பி னாகத்தோன்'

( குலோத்துங்க சோழனுலா—21)

'தொழும்புடைய ஆகத்துத் தொண்ணூறும் ஆறும்
தழும்புடைய சண்டப்ர சண்டன்'

(இராசராச சோழனுலா—19)

**ஆதித்த சோழன் :**

விசயாலயன் இறப்பதற்குப் பத்தாண்டுகட்கு முன்னரே, தன் மகன் ஆதித்தற்கு இளவரசுப் பட்டங்கட்டி அரசியலில் ஈடுபடும்படி செய்திருந்தான்.

(இந்தியக் கல்வெட்டாய்வறிக்கை: ஜ்ஜ்ஸ்வீ —பக்: 233)

**பராந்தகப் பாண்டியன் :**

*சீமாறன் சீவல்லபனுடைய இரண்டாம் மகன்; இவனுடைய தாய் மயிலைப் பொத்தப்பிச்சோழனின் மகள் அக்களநிம்மடி.*

*"........................................ மயிலையர்கோன்*
*பொத்தப்பிக் குலச்சோழன் புகழ்தருசீர் கண்டராசன்*
*மத்தமா மலைவளவன் மதிமகள்அக் களநிம்மடி*
*திருவயிறு கருவுயிர்த்த ஸ்ரீபராந்தக மகராசன்"*

(பராந்தகப் பாண்டியன் செப்பேடுகள்)

**திருப்புறம்பயப் போர் :**

*சோழ மண்டலத்தில் பாண்டியர் ஆட்சியும் பல்லவர் ஆட்சியும் ஒருங்கே ஒழிவதற்கும் சோழரின் ஆட்சி மீண்டும் நிலைபெறுவதற்கும் காரணமாயிருந்த திருப்புறம்பயப் போர் தமிழக வரலாற்றில் குறித்தற்குரிய பெரிய நிகழ்ச்சியாகும்.*

*இப்போரில் இறந்த பிருதிவிபதியின் நடுகற் கோயில் ஒன்றும் உதிரப்பட்டி என்னும் பெயருடைய நிலப்பரப்பும் கச்சியாண்டான் கோவில் என்ற நடுகற் கோயிலும் இன்றும் திருப்புறம்பயத்தில் உள்ளன.*

*("பாண்டியர் வரலாறு" — சதாசிவப் பண்டாரத்தார்.)*

*கும்பகோணத்திற்கு வடமேற்கே ஐந்து கல் தூரத்தில் மண்ணியாற்றின் வடகரையில் உள்ள திருப்புறம்பயத்தில் பெரும் போர் நிகழ்ந்தது.*

*(தெ.இ.க.தொ : வீவீ, எண் :76)*

*இரு பக்கமும் பல்லாயிரவர் உயிர் துறந்தனர். முதலாம் பிருதிவிபதி வீரப்போர் புரிந்து இறந்தான். பாண்டியர் தோற்றனர். அபராசிதன் வென்றான்.*

*(தெ.இ.க.தொ : வீவீ, பக்கம் :387)*

**கடம்ப மாதேவி :**

*விக்கியண்ணன் தேவி.*

*(தெ.இ.க.தொ :வீவீவீ, எண் : 89)*

*தந்திவர்மன் 'கதம்பர் மரபுக்கே சிரோமணியாக விளங்கிய அரசனின் மகளான அக்கள நிம்மதி என்பவளை மணந்து கொண்டான்' என்று பட்டயங்கள் பகர்கின்றன.*

*(பல்லவர் வரலாறு — மா. இராசமாணிக்கனார்)*

**பராந்தகப் பள்ளிவேளான் நக்கம்புள்ளன் :**

*வரகுண வர்மன் இடவை மீது படையெடுத்துச் சென்ற போது படைத்தலைவனாய் இருந்து போரில் வெற்றி கண்டவன்.*

*(கல்வெட்டு எண் : 609/1905)*

**இடவை :**

*வரகுண வர்மன் பெரும் படையுடன் சோணாட்டிற் புகுந்து, காவிரி ஆற்றுக்கு வடக்கே உள்ள மண்ணி நாட்டில் இருந்த இடவை என்ற நகரைக் கைப்பற்றினான்.*

*(கல்வெட்டு எண் :690/1905)*

**பிருதிவிபதி :**

*மண்ணி ஆற்றங்கரையிலுள்ள திருப்புறம்பியத்தில் பெரும் போர் நடைபெற்றது. பல்லவ அரசனுக்கு உதவியாகப் படையுடன் வந்து போர் புரிந்த கங்க மன்னனாகிய பிருதிவிபதி என்பான் இப்போரில் கொல்லப் பட்டான்.*

*(தெ.இ.க.தொ :வீவீ, எண் :76, பாடல் :18)*

**குடமூக்குப் போர் :**

கும்பகோணம் எனும் குடமூக்கில் நடைபெற்ற போரில் பாண்டியன் சீமாறன் சீவல்லபன் பரசக்கர கோலாகலன் என்பான், சோழர், பல்லவர், கங்கர் முதலானவரைப் போரில் வென்று புறங்காட்டச் செய்தான்.

*"கொங்கலரும் பொழிற் குடமூக்கிற் போர்குறித்து*
*வந்தெதிர்த்த கங்கபல்லவ சோழகாலிங்க மாகதாதிகள்*
*குருதிப்பெரும் புனற்குளிப்பக் கூர்வெங்கணை*
*தொடைநெகிழ்த்தும்*
*பருதியாற்றலொடுவிளங்கின பரசக்கர கோலாகலனும்"*

*(சின்னமனூர்ச் செப்பேடுகள்—தெ.இ.க.தொ : வீவீவீ, எண் 206)*

**முத்தரையர் :**

தஞ்சைக்கு வடமேற்கே இந்நாளில் செந்தலை என்று வழங்கும் சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலத்திலிருந்து ஆண்டு வந்த குறுநில மன்னராவர். தஞ்சைக்கு அண்மையிலுள்ள வல்லமும் அவர்கட்குத் தலைநகராக இருந்திருக்க வேண்டும்.

"தஞ்சைக்கோன்," "தஞ்சை நற்புகழாளன்" என்று கல்வெட்டுக்களில் முத்தரையர் குறிக்கப் படுவதால், தஞ்சையும் அவர்க்கு உரிய தலைநகராய் இருந்திருப்பது தெரிகிறது.

பழந்தமிழ்க் குடியினரான முத்தரையர், வரையா வண்மைக்குப் பெயர் பெற்றவர்.

"பெருமுத்தரையர் பெரிதுவந்து ஈயுங் கருணைச்சோறு"

*(நாலடியார்—200)*

**அரிசிலாற்றங்கரைப் போர் :**

பல்லவ மன்னன் நிருபதுங்க வர்மனும் இலங்கை வேந்தன் இரண்டாம் சேனனும் ஒருங்கு சேர்ந்து மாறவர்மன் சீமாற சீவல்லபனைத் தோற்றோடச் செய்தனர்.

(வாகூர்ச் செப்பேடுகள்)

**வேளிர் மகட்கொடை :**

வேளாவிக்கோமான் பதுமன் என்ற வேளிர் குடித் தலைவனின் மகளிர் இருவர், நெடுஞ்சேரலாதன், செல்வக் கடுங்கோ வாழியாதன் என்ற சேர அரசர்கட்கு முறையே வாழ்க்கைப்பட்டனர்.

*(பதிற்றுப்பத்துப் பதிகங்கள்—4,6,8)*

"உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னி அழுந்தூர் வேளிடை மகட்கோடலும் அவன் மகனான கரிகாற் பெருவளத்தான் நாங்கூர் வேளிடை மகட்கோடலும்"

*(நச்சினார்க்கினியர் உரை — தொல், அகத்—சூ.30)*

**மாதேவி :**

அபராசிதனின் மனைவி. தமிழ் நாட்டுப் பெண்ணாதல் வேண்டும். இவர் திருவொற்றியூரில் உள்ள சிவன் கோவிலில் விளக்கு வைக்க 31 கழஞ்சு பொன் கொடுத்தார்.

*(கல்வெட்டு :162/1912. பல்லவர் வரலாறு— மா.இராச மாணிக்கனார்)*

**திருப்புறம்பியம் :**

கும்பகோணத்திற்கு வடமேற்கில் எட்டு கி.மீ. தூரத்தில் மண்ணியாற்றின் வட கரையில் உள்ளது.

**இடவை :**

மண்ணி நாட்டு நகரங்களில் ஒன்று. காவிரிக்கு வடக்கே உள்ளது.

**வல்லம் :**

தஞ்சைக்குத் தென்மேற்கே 11 கி.மீ. தொலைவில் உள்ளது.

**பழையாறை :**

சோழர்களின் தலைநகர்களில் ஒன்று. இந்நகர் இன்று கும்பகோணத்திற்குத் தென்புறத்தில் ஓர் எளிய சிற்றூராகப் பொலிவிழந்து நிற்கிறது.

பழையாறை முற்காலத்தே முடிகொண்டான் ஆற்றுக்கும் அரிசிலாற்றுக்கும் இடையே அமைந்திருந்தது.

**திருவையாறு :**

தஞ்சைக்கு வடக்கே 10 கி.மீ. தொலைவில் உள்ளது. வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி, கொள்ளிடம் இவ்வூரருகே செல்கின்றன.

இவ்வூர் இறைவற்கு ஐயாறப்பன் என்று பெயர்.

**செந்தலை :**

திருக்காட்டுப்பள்ளியிலிருந்து நேர்கிழக்கே 3 கி.மீ. தொலைவில் குடமுருட்டி ஆற்றின் தென்கரையில் உள்ளது.

### திருநெய்த்தானத்துக் கல்வெட்டு

*'தொண்டைநாடு பரவின சோழன் பல்யானைக் கோக்கண்டனாயின இராச கேசரி வதனனாலுந் சேரமான் கோத்தாணு இரவியாலுந் தவிசும் சாமரையும் சிவிகையும் திமிலையும் கோயிலும் போனகமும் காளமும் களிற்று நிரையும்* ***செம்பியன் தமிழவேள்*** *என்னும் குலப் பெயரும் பெற்ற விக்கி யண்ணன் தேவியான கடம்ப மாதேவி திருநெய்த்தானத்து மாதேவர்க்கு ஒரு நந்தா விளக்கினுக்குக் கொடுத்த ஆடு நூறு.'*

*(தெ.இ.கல்வெட்டுக்கள் — தொகுதி , மிமிமி. எண்.89.)*

## È¬Î ÑÈ‰Î˜

### ÕóÔ£ŸP™ Õ£›ÐÕ˜ :

**விக்கியண்ணன்** : சேரநாட்டுப் படை மறவன்
**விசயாலயன்** : சோழ அரசன்
**கடம்ப மாதேவி** : விக்கியண்ணன் துணைவி
**ஆதித்தன்** : சோழ இளவரசன்
**அபராசிதன்** : பல்லவ இளவரசன்
**பராந்தகன்** : பாண்டிய இளவல்
**மாதேவி** : சோழர் குலப்பெண்— அபராசிதன் பட்டத்தரசி
**பிருதுவிபதி** : கங்க அரசன்— அபராசிதனின்பாட்டன்
**முத்தரையன்** : வல்லத்தரசன்
**கச்சியாண்டான்** : பல்லவர் படைத்தலைவன்
**நக்கன்புல்லன்** : பாண்டியர் படைத்தலைவன்

### கற்பனை மாந்தர் :

**வண்டார்குழலி** : ஆடலரசி
**நற்குணப் பேரெழிலார்** : நாங்கூர் வேளிர்— சோழர் தலைமை அமைச்சர்
**செங்கண்ணன்** : தலைமைப் படைத்தலைவன்
**கடிய நெடுவேட்டுவன்** : காவற் படைத்தலைவன்
**பல்லவரையன்** : குதிரைப் படைத்தலைவன்
**சேந்தன் கீரன்** : ஒற்றர் படைத்தலைவன்
**பொலன்மார்பர்** : பழையாற்றுப் படைத்தலைவன்
**செந்தாமரை** : வண்டார்குழலியின் பணிப்பெண்

## சிறப்புப் பாயிரம்

மலைப்பூ உதிர்த்த மகரந் தமெனத்
தலைப்பூ விளைகா தண்மண லாறு
மலைய னாண்ட தலைநகர் தாண்டி
நிலைகொள் ளாது நெடிதே ஓடி
உண்ணீர் ஊற்றை ஊருக் களித்திடு
பெண்ணைக் கரையமை வெண்ணெய் அரசூர்
பெருங்குடிப் பிறந்த பெற்றியர், மாபோல்
தருநிழல் நெஞ்சர், தாழாக் கையர்,
சின்ன சாமி தன்துணை வயிற்றில்
மன்னு புகழுறு மகவாய்ப் பிறந்தவர்,
பந்தி விருந்தெனப் பனுவல் படைக்கும்
செந்தமிழ்ச் சேயார் கந்தக ஆற்றல்
மின்னியற் பொறிஞர்! மேனிலை அலுவலர்!
கன்னற் கனுவிவர், கடமைக் கதிரவன்!
பொறியியற் கல்வி நெறியுறக் கற்கினும்
முறிந்திடா ஆர்வால் முத்தமிழ் கற்றவர்.
சங்க இலக்கியம் சார்ந்த இலக்கணம்
கங்குல் விளக்கெனக் கற்றுத் தெளிய
வரலாற் றறிவும் வழித்துணை யானதால்
தரமாய்ச் செம்பியன் தமிழவேள் காதையைப்
படைத்துக் கொடுத்துப் பரிசும் பெற்றவர்!
எடையுந் தரமும் இழியாப் பொன்னிவர்
தமிழ்ப்பணிக் கென்றே தக்கார் துணையுடன்
அமிழா அமைப்பை ஆக்கிக் கொடுத்துளார்!
தொன்னூல் ஒழுக்கம் துளிபிச காமல்
நன்னூல் இஃதென நானிலம் ஏற்ற
முன்னர்ப் புனைந்த கன்னற் கதையை
இன்பா யாப்பில் இயற்றித் தந்துளார்!
காப்பிய முறைமை கறைபடா வகையில்
தீப்பழ ஞாயிறாய்த் திகழ்ந்திட அணிகலன்
பூட்டிப் பொருளும் புதுமை நலன்களும்
கூட்டிச் செய்த குறுபா வியத்தை
ஏற்றுங் கற்றும் ஏந்தல் திறத்தைப்
போற்றி ஊக்கிப் புனைவுரை நல்கிடக்
கேட்டிங் கமைந்தனம்; கேண்மை
நாட்டம் மிக்கார் நம்மவர் ஆமே!

# பொதுப்பாயிரம்

## மொழி வாழ்த்து

(நேரிசை ஒத்தாழிசைக் கலிவெண்பா)

### தரவு

எத்தனையோ இலக்கணங்கள் இலக்கியங்கள் இருந்தினித்த
அத்தனையு மயலவரா லழிந்தொழிந்து மணுவளவும்
ஒல்கலிலா உயர்தமிழே உலகிலரு ஒருமொழியே
பல்கிட்ட கிளைகளெல்லாம் படருற்ற மொழிக்கலப்பால்
பற்றறியாத் தமிழரிவர் பதைத்தறியார் பழியுறினும்
உற்றதெதால் உயர்வுனதும் உணர்த்திடயாம் வணங்குதுமே.

### தாழிசை

பேசுகின்ற மொழியளவில் பிழைபலவும் பெருகிடினும்
ஆசகன்ற எழுத்துமொழி அமைதற்காம் வரையறைகள்
பேசிடுநல் இலக்கணங்கள் பெருமையளி இயல்பாலோ.

ஈங்குப்பல் சமயத்தார் இயற்றமிழில் இறையருளை
ஓங்கிநிதம் வழிவழியாய் உரைத்ததமிழ் பாடறமால்
தாங்கியுனை வளர்த்தபெரு தகைமைதரு சிறப்பாலோ.

அறம்பொருள்சேர் இன்பத்திற் கமைந்ததிருக் குறளோடுன்
திறமுழுதுந் தெரியவுரை சீர்பெருந்தொல் காப்பியமும்
புறமகலா துறுதுணையாய்ப் பொருந்தியுறை திறத்தாலோ.

### தனிச்சொல்

ஆகையினால்

### சுரிதகம்

கன்னற் சுவையே கனியே கழைத்தேனே
உன்னற் கினிய உணர்வே உறுமூச்சே
பண்ணிற் றமிழே பழகவரு தீங்காற்றே
மண்ணின் மணியே மறுவில் முழுமதியே
என்னையிங் கீன்றளித்த என்றாயின் மிக்கவுயர்
முன்னை முதற்பொருளே மூலமுத லானவளே
உன்னின் உயர்ந்த உலகில்லை உண்மையதால்
என்றும் உயிர்நீ எமக்கு.

## காப்பு

(நேரிசை வெண்பா)

செய்யுட் சுவையின்பம் செந்தமிழின் வைப்பதனால்
பொய்யிற் கவிதை புனைந்திடுவேன் — மெய்மை
மரபு பிறழா மகிழ்வளி செய்யுட்
குரனெந் தமிழே வுறவு.

## அவையடக்கம்

யாப்பறி யெல்லார்க்கு மெண்ணிய வெண்ணியாங்குப்
பாப்புனைய லாகாது பாரறியும் — தீப்பொறியால்
கட்டை யிலாது கறிசமைத்தற் கூடுவதோ?
குட்டையென் பாட்டுக் கொடை.

# நுழைவாயில்

**இடம்** :சேர நாட்டுச் சிற்றூர்.

**காலம்** :முன்னிராப் பொழுது.

**உறுப்பினர்** :விக்கியண்ணனின் அகவை முதிர்ந்த தாய், உறவுப்பெண் வேல்விழி, அல்லி, வழியே செல்வோர்.

**சூழல்** : அரை நிலா மங்கிய ஒளியை எங்கும் வாரி இறைத்துக் கொண்டிருக்கிறது, தன் வீட்டுத் திண்ணையில் விக்கியண்ணனின் தாய் அமர்ந்திருக்கிறார். அவ்வழியே இருவர் நடந்து வருகின்றனர்.

:

**முதல்வன் :**

(நிலைமண்டில ஆசிரியப்பா)

வாழ்க தமிழ்மொழி; வளர்க தமிழ்நெறி!
வீழ்க வஞ்சகம்; வெல்க தமிழகம்!

(உடன் வந்தவன் நிற்கிறான்.)

**இரண்டாமவன் :**

சற்றே நிற்க; சற்றே நிற்க.
பற்றிலன் ஒப்ப வெற்றே வந்தாய்;
உரைத்தனை திடுமென! உற்றதும் என்ன?
விரைந்துநீ மொழிக; வியப்பே மிகுந்திடும்.

**முதல்வன் :**

குரவைக் கூத்தில் குறித்தொரு பொருளை
அரிவையர் அமைவாய்த் தெரிவுறக் காட்டினர்!

**இரண்டாமவன் :**

ஆமஃ தினிதே! அதனால் என்ன?
காமஞ் சான்ற[1] கட்டிளங் குமரிகள்!
தாமரைக் குளத்தில் தவழ்தல் என்ன
வாமப்[2] பூவுடல் வளைய, நெளிய,
ஆடிய கூத்தால் ஆடினேன்; ஆயினும்
பாடிய பொருளில் பதிந்ததென் உள்ளம்.
சேர நாட்டுச் சேயின் தீரம்
வீர உணர்வினை விளைத்தது; உண்மை.

**முதல்வன் :**

நன்றே மொழிந்தனை; நண்ப, வாழ்க.
குன்றேய் குரிசில் விக்கி யண்ணன்
உறையில் இஃதே; உன்னெதிர் காண்க.

*பிறையெனக் குனித்த[3] பெண்ணுரு அவ்வரு*
*வீரனை அளித்த விளைநிலம் ஆகும்!*
*தீரனைப் பெற்ற தீந்தமிழ்த் தாயின்*
*திசையை வணங்கிச் செல்வோம் இனிதே.*

***இரண்டாமவன் :***

*வசையில இசைத்தாய்; வணங்குதல் சால்பே[4].*

*( வணங்கிச் செல்கின்றனர். அப்போது அங்கு இரு பெண்கள் வந்து சேர்கின்றனர். ஒலி கேட்டு விக்கியண்ணனின் தாய் தலை நிமிர்த்திப் பார்க்கிறார்.)*

***தாய் :***

*கூறுக யாரவர் கொண்டதும் நற்றூண்?*

***வேல்விழி :***

*வேறெவர்? நானே.*

***தாய் :***

*வேல்விழி! வா,வா.*
*ஒற்றை மரமாய் உலைவுறும் எனக்கு*
*நற்றுணை யாக, நளிர்புனல் ஆக*
*அமைவ துன்றன் அன்புறு வருகையே.*
*இமையென உடனெழு எழிலாள் எங்கே?*

***வேல்விழி :***

*அருமை மருகி அல்லி தானே?*

***தாய் :***

*ஒருத்தி அவளோ?*

***வேல்விழி:***

*உரைப்பதும் அரிதே!*
*அழகாய் அமைந்த அணியிழை மகளிர்*
*பழக வேட்டிடு பண்பினர் அவர்தான்!*

***தாய் :***

*அவன்குணம் அப்படி; அதற்கென் செய்வது?*
*தவம்செய் தடைந்த தனியொரு பிள்ளை!*
*எங்குளள் அல்லி?*

***அல்லி :*** *(முன்வந்து)*

*இங்கே உள்ளேன்.*
*உங்களைப் பார்க்கவே உடனிங் குற்றேன்.*

***தாய் :***

*விக்கி யண்ணன் வீட்டிரு போது*
*பக்கம் பெயராய்; பணிபல புரிவாய்.*
*நீங்கினன் அவனும்; நின்றனை நீயும்.*
*ஈங்கிவ் வேளை ஏன்வந் தனையோ?*

***அல்லி :***

*பொறுத்தி டன்னாய்; பொல்லார் உன்மகன்*
*வெறுத்திடு செய்கையர்; விளையாட் டியல்பினர்!*
*இங்கவர் பிரிந்தெமை ஏங்கிட வைத்தார்;*
*பொங்கிடுந் துயரம்!*

***தாய் :***

போதும்; அறிவேன்.
பையத் தேய்ந்தன பத்திரு திங்கள்!
ஐயனும் மன்பன் அலைந்தெங் கமையினும்
சித்திரைத் திங்கள் செழுமதி நாளில்
வருகுவன், உறுதி; வருந்துதல் ஒழிநீ.

***வேல்விழி :***

பெற்ற ஒருமகன் பிரிந்தும் பேதுறா
நற்றிறம், அடடா! நளிர்வுறும் மெய்யே.

***தாய் :***

கொல்புலி தங்கிக் குதித்து வளர்ந்த
கல்லளை[5] இதுவே; கவலுமோ? இல்லை.
பிறந்த மண்ணும் பேசுந் தமிழும்
சிறுமை உறுவதைச் சிறிதுந் தாங்கான்!
சீற்றங் கொண்டால் கூற்றுஞ் சிதையும்!
நூற்றுவர் நூறினுந் தூற்றிடு மாற்றலன்!

***வேல்விழி :***

இப்போ தெங்குளர்? எமக்குரை அன்னாய்.

***தாய் :***

இப்போ தென்றிலை; என்றும் அறியேன்.
தவறிலை அவன்மேல்; தன்னைப் பெற்ற
அவரின் குணங்கள் அப்படி; வியப்பென்?
ஒப்புக் கவரோ ஓரிரு முறைகள்
செப்பிய துண்டு; செய்யான் இவனோ!
எங்கவன் இருப்பினென்? எழுந்தது போரா?
அங்கவன் இருப்பான்; அவனென் மகனே!

*(அப்போது சிலர் அங்குப் பேசியபடி வந்து நிற்கின்றனர். அவர்கள் பேசுவதைத் திண்ணையில் இருந்த பெண்கள் கவனித்துக் கேட்கின்றனர்.)*

***ஒருவர் :***

*(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)*

கிழப்புலி வீழ்ந்த தின்று;
  கிளர்ந்தெழல் இல்லை என்றும்!
ஒழிந்தது சோழ ராட்சி;
  உறுதியாய் இல்லை மீட்சி!
வழிவழி ஆண்ட சோழர்
  வான்புகழ் போய தென்றே,
மொழிந்தவர் கூற்றை மாற்றி
  முடித்தவன் விக்கி யன்றோ?

சிற்றர சாக மேனாள்
  சிறுமையுற் றிருந்த சோழர்
பெற்றனர் பெருமை சாலப்
  பேரர செனவே இந்நாள்!
உற்றதும் எவரால்? நம்மூர்
  உயர்தனிப் பிறப்பால் அன்றோ?
ஒற்றையாய்த் தனித்து நின்றார்;
  உட்பகை முடித்தார், வென்றார்!

***மற்றவர் :***

*பாண்டியர் போரில் தோற்றார்;*
*பல்லவர் வெற்றி பெற்றார்!*
*வேண்டிய வெற்றி பெற்றும்*
*வேதனை மிச்சம் தானே?*
*மாண்டவர் பாட்டன் மட்டோ?*
*மாபெரும் வீரர் பல்லோர்!*
*மூண்டவெம் போரில் சோழர்*
*முழுமையாய்ப் பயனைத் துய்த்தார்!*

***முதல்வர் :***

***செம்பியன் தமிழ வேளாம்!***
*சிறப்புறு பெயரே; பேறே!*
*நம்மவர் விக்கி யண்ணன்*
*நலம்பல அடைந்த தோடா?*
*செம்பியர் மகளாய் உற்ற*
*செல்வியைத் துணையாய்ப் பெற்றார்!*
*இம்பரில் இவர்க்கு நேராய்*
*இணையிலை எனவே நின்றார்.*

*(இருவரும் பேசியபடியே அகல்கின்றனர். சிறிது நேரம் அங்கு அமைதி நிலவுகிறது. மெல்ல வேல்விழி பேச்சைத் தொடர்கிறாள்.)*

***வேல்விழி :***

*(நேரிசை ஆசிரியப்பா)*

*வேழமாம் உன்னரு வெற்றித் திருமகன்*
*சோழ நாட்டிடை சூழ்ந்த சொல்லரு*
*வீரச் செயல்களை விளங்க விரித்துச்*
*சீரிளம் பெண்கள் செக்கச் சிவந்தோர்*
*எழுவர் கூடி இழுமென் இசையில்*
*இயைந்தவர் யாரும் பெயரா வாறு*
*குறையற நடத்திய குரவைக் கூத்தை*
*நிறைவுறச் சுவைத்த நினைவில் மீள்வோர்*
*உரைத்த சிலவே உற்றவுன் செவியே!*

***தாய் :***

*விரைமலர் அன்னாய், வெல்லமே உன்சொல்!*
*நீரற வற்றிய நீண்ணெறி மரத்தின்*
*வேரடி ஊற்றிய விழுநீர்; வேறென்?*
*உள்ள திறனை ஒழியா துணரினும்*
*பிள்ளை பெருமை பிறர்வாய் பேசப்*
*பெற்ற வயிறு பெரிதுங் குளிரும்!*
*முற்ற அனைத்தும் மொழியின் நன்றே.*

***வேல்விழி :***

*வீரருன் மகனார் தீரச் செயற்றமை*
*யாரிவண் நிறைவாய்க் கூறற் கியலும்?*
*கண்டவர், கேட்டவர் கழறிய அனைத்தும்*
*விண்டுநான் மீண்டு விளக்குவன் நிரலாய்;*
*ஆன்றவிந் தடங்கிய சான்றோய்,*
*ஈன்ற பொழுதின் இயைக உவகையே!*

# காட்சி : 1

**இடம்** :சோழ நாட்டுக் காவிரி சார்ந்த காட்டுப் பகுதி.
**காலம்** :நண்பகல் கழிந்து நாழிகை நான்கு.
**உறுப்பினர்** :விக்கியண்ணன், முத்தரையரின் ஒற்றர் படையைச் சார்ந்த வீரர்.
**சூழல்** : காவிரிக் கரை ஓரமாகத் தஞ்சைத் தலைநகரை நோக்கிக் குதிரையில் விக்கியண்ணன் வந்து கொண்டு இருக்கிறான்.

**விக்கியண்ணன்** : *(தனக்குள்)*

(நிலைமண்டில ஆசிரியப்பா)

வாழியென் நெஞ்சே, வாழி! சோழர்
வயல்வளம் ஒக்கநீ இயல்பொடும் வாழி!
வஞ்சிப் புறநகர் அஞ்சன விழியாள்
மஞ்சம் அவாவிக் கெஞ்சுதல் ஒழிமதி!
இன்பமே விழைந்திங் கிடருறு நெஞ்சே,
இன்பத்துள் இன்பம் இயற்கையில் தனிமை!
இயற்கையில் தனிமை எய்திய பின்னரும்
மயற்கொண் டலைவது மடமையே; உணருதி.
மருட்டூர்[1] புலவர் உருத்திரங் கண்ணனார்
பாட்டில் வடித்துக் காட்டிய இயற்கையை
அலமரு வினையுடை புலனொருங் கியைந்திட
அண்மையில் எங்கும் கண்முன் காணுதி.
வானம் பொய்ப்பினும் தானகம் பொய்யா
வற்றாப் பொன்னி நற்றாய் அன்றோ?
கரையுறை மரநிரை கனத்துத் தோன்ற
வரையா தொழுகு மலைதலைக் காவிரி
வனிதையர் கூந்தல் வகிடெனும் அமைவாய்
மனங்கொளத் தவழ்ந்து வளந்தனைப் பெருக்கச்
சோழ நாடு சோறுடைத் தென்று
யாழியல் மாந்தர் வாழ்த்துதல் இசைப்பர்.
பெண்ணே பெரிதாய் எண்ணு மனனே,
பெண்ணினும் பேரெழில் கண்ணெதிர் காணுதி.
பொருமுலை அன்ன இருமுகை உடைந்து
முகமெனத் தாமரை அகவிதழ் மலர்ந்தன.
வான்தோய் வாழை தேனேய் பெண்டிர்
குறங்கின்[2] அமைப்பைக் குறையுள் ஆழ்த்தும்.
கொஞ்சிக் குழறும் வஞ்சியர் வாய்ச்சுவை
மஞ்சுசூழ் கரும்பிற் கஞ்சுவ தாகும்.
எங்கு நோக்கினும் இங்குள யாவும்
மங்கையர்க் குவமையாம் மாண்பமை பொருட்களே
குழலுக் குவமை கொண்டலும் தோகையும்!
குழவித் திங்கள் குழல்தவழ் நுதலே!
கண்கள் மாவடு; கருவிழி குவளை;
தண்ணிதழ் தளிரே; தயங்கு[3] வெண்ணகை

*முல்லை முகையே! மூக்கோ எட்பூ!*
*நல்லிளம் தோளோ, வேயே; நாறும்*
*உடல்நிறம் ஒக்கும் ஒண்செங் காந்தள்?*
*படங்கொள் அரவம் படர்கெழு அல்குல்!*
*நுடங்கிடை கொடியே; நுண்ணிழை சிலம்பொலி*
*அடிகள் அனிச்சம்; அறிக ஆய்ந்தே.*
*உயர்ந்தோர் மேற்றே உவமை என்பதால்*
*இயற்கை பெண்களின் இனியவாம் என்பதை*
*மீண்டும் உரைக்க வேண்டுவ தென்கொல்?*
*காண்டற் கரிய கண்டோம் இந்நாள்!*
*நன்று, நன்று; இப்பொழில் சூழல்!*
*உண்டகள் ஆற்றால் வண்டுகண் படுப்ப*
*மலர்நனி சிறந்த நலனளி பூம்பொழில்!*
*புள்ளும் மாவும் கொள்ளற் கின்பம்*
*உகந்த விடமென மிகுந்தது தண்ணிழல்!*
*அகநிறை வமைந்திட ஆனதிச் சூழல்!*
*வெஞ்சுடர் ஞாயிறும் அஞ்சிட விளங்கும்;*
*கொஞ்சம் ஓய்விவண் கொள்ளுவம்; அதற்குள்*
*குதிரையும் பசும்புல் கொண்டயர் வொழித்திடும்.*
*எதிரெவ் விடரும் எழுதல் இலையேல்*
*கொற்றவர் சோழர் நற்றிரு தலைநகர்*
*எற்படு[4] முன்னர் எய்தலாம் இனிதே.*

*(குதிரையைப் பசும்புல் மேய விட்டுவிட்டு, ஒரு பெரும் ஆலடியில் படுத்து விக்கியண்ணன் ஓய்வு கொள்கிறான். சற்று நேரத்தில் அம்மரத்தடியின் மறு பக்கத்தே இரு குதிரைகள் வந்தடைகின்றன. குதிரைகளில் வந்திறங்கிய வீரர் இருவரும் மர நிழலின் மறு பக்கத்தே ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த விக்கியண்ணனைப் பாராதவராய் அமர்ந்து உரையாடுகின்றனர்.)*

**முதல் வீரன் :**

*(நேரிசை ஆசிரியப்பா)*

*அன்புறு நண்ப, இன்மொழி ஆள,*
*வழியில் ஏதும் மொழிகுதல் இன்றி,*
*வந்தனை நெஞ்சில் சிந்தனை தேக்கி.*
*என்னுன் சூழ்ச்சி?[5] என்னிடம் உரைக்க.*

**இரண்டாம் வீரன் :**

*பெரிதென் றுரைக்க அரிதும் இல்லை.*
*உரைப்பின் சிரிப்பாய்.*

**முதல் வீரன் :**

*உரைத்திடு; கேட்போம்.*

**இரண்டாம் வீரன் :**

*மலரின் மென்மை மாதர்க் குண்டெனப்*
*புலவர் உரைத்த பொய்யே போலும்?*

**முதல் வீரன் :**

*உனக்கோ ஐயம்? உடலால் எழிலார்*
*அனிச்சம் அன்றோ?*

**இரண்டாம் வீரன் :**

*ஆம்!ஆம்! அறிகுவன்;*
*அமைப்பில் பெண்தான்; ஆயின் இவரெதிர்*

*நமைப்போல் வீரர் நால்வர் அமையினும்*
*நிற்றல் அரிது; நின்றிடின் இறுதி*
*உற்றிடல் உறுதி! உனக்கே தெரியும்.*

**முதல் வீரன் :**

*யாரைச் சொல்கிறாய்? யானறி யளவில்*
*தேரை பாம்பைத் தின்ற தாகக்*
*கண்டதும் இல்லை; கண்டவர் யாரும்*
*விண்டிடக் கேட்டு வியந்ததும் இல்லை.*

**இரண்டாம் வீரன் :**

*கண்ட துண்டோ காட்டுத் தீயை?*

**முதல் வீரன் :**

*கண்ட துண்டு; கழறுக மேலே.*

**இரண்டாம் வீரன் :**

*காட்டுத் தீயும் கடுவலிக் காற்றும்*
*கூட்டுச் சேர்ந்தால் கொல்புலி களிறும்*
*எதிரங் கிருத்தலும் புதிராம் அன்றோ?*
*மதுமலர் அன்ன மாதவர் கையில்*
*வெல்வாள் கொண்டு வீரர் பலரையும்*
*வெல்வார் நொடியில்! விளைத்த பயிற்சியே*
*கண்முன் காட்டுமேல் காட்டுத் தீயை,*
*உண்மைப் போரெனில் உணர்த்துவ தியாதோ?*

**முதல் வீரன் :**

*விடுகதை போதும்; விளக்கிடு நடந்ததை.*

**இரண்டாம் வீரன் :**

*அடுகளி றொப்பார் ஐவர் இடையே*
*சோழ நாட்டுப் பெண்புலி சுழலாய்*
*வாட்போர் பயிற்றும் தோட்டிறன் தன்னை*
*வழியிடைக் கண்டு விழிகள் விரிய*
*வந்தேன் இங்குச் சிந்தை இழந்தே!*

**முதல் வீரன் :**

*அறிவிலி! அறிவிலி!*

**இரண்டாம் வீரன் :**

*அறிவிலி நானோ?*

**முதல் வீரன் :**

*அறிவிலி நீதான்; அதிலென் ஐயம்?*
*வந்ததும் உரைக்க வாயா இல்லை?*
*அந்தப் பெண்ணை அழித்திட நம்மால்*
*முடிந்ததா முன்னாள்? முன்னால் வாய்ப்பை*
*அடைந்தும் அமைதி; அழகோ? அறிவோ?*

**இரண்டாம் வீரன் :**

*அமைதி; நண்ப, அமைதி! அமைதி!*
*எண்ணாச் செய்கை மண்ணாய் முடியும்.*
*பெண்கொலை புரிந்த நன்னன் பெரும்புகழ்*
*நிலைத்ததா? இல்லை; நிலைத்தது பெரும்பழி!*

*அஃதொரு பக்கம் அமையினும் என்னால்*
*அறுவரை எதிர்த்தல் உறுவதோ தனித்தும்?*
*பிறர்வலி, தன்வலி, பேணுநர் தம்வலி*
*அறிந்து தெரிந்தபின் ஆமெனில் போர்கொளல்*
*அறமெனும் தமிழ்மறை; அதனால் மீண்டேன்.*

**முதல் வீரன் :**

*திறம்பட மொழிந்தனை தீதறு நண்ப!*
*கற்றவை விட்டிடா நிற்றிறம் வாழ்க.*
*உற்றதென் மற்றினி? உரைத்தி டுன்னுவ.*

**இரண்டாம் வீரன் :**

*கொற்றவர்க் கொவ்வாக் கொடும்பகை போக்கக்*
*கடிதின் நீங்கி அடுவாள் வல்லார்*
*எண்மர் உடன்வரத் தண்புனல் பொன்னித்*
*தென்கரை அமைந்த மன்பெறு சோலை*
*மறைவெளி நாடி விரைந்துடன் சேரின்*
*நிறைவுறும் நீண்டிரு நினைப்பும் இன்னே.*

**முதல் வீரன் :**

*சொற்படி செல்க; துணையுடன் மீள்க.*
*எற்படு முன்னர் எதிர்பார்த் தங்கோர்*
*புதரொடு புதராய்ப் புதைந்திருந் திடுவேன்;*
*விரைந்துநீ மீண்டிடின் வெற்றி நமதே.*

**இரண்டாம் வீரன் :**

*நன்று, நண்ப; நன்று!*
*சென்று மீள்குவன்; செல்கநீ விரைந்தே.*

*(இருவரும் குதிரை ஏறிச் செல்கின்றனர். அவர் சென்று மறைந்ததும் விக்கியண்ணன் எழுந்து தன் குதிரையை நாடுகிறான்.)*

**விக்கியண்ணன் :** *(தனக்குள்)*

*(நேரிசை ஆசிரியப்பா)*

*யாரே இவர்தாம்? ஊறே எண்ணினர்.*
*பெண்கொலை செய்ய எண்ணங் கொண்டு*
*பிரிந்த தீயோர் விரித்த வலையில்*
*பேதை ஆட்படின் வேதனை கொள்வாள்;*
*தளிர்மென் னடிகள் பளிங்கில் படியினும்*
*தாங்குறா என்மனம் ஏங்கிடு மன்றோ?*
*பெண்புலி என்றனர்; பெண்ணவள் யாரோ?*
*புண்ணூ ராகப் புகழ்மிகு சோழ*
*மன்னரின் மகளோ? மற்றிவள் வேறோ?*
*என்னிவண் செய்குவன்? யானோ புதியவன்!*
*பொன்னித் தென்கரைத் தண்புனற் சோலையை*
*அடைந்திடக் கூடுமேல் தடையெதும் இல்லை.*
*வழியது கேட்பின் மொழிகுவர் பலரும்;*
*அழிவைத் தடுத்தல் அறமே எனினும்*
*சேரலர் பணித்த செயல்மேல் செல்வோன்*
*மற்றொரு பணிகொளல் குற்றம் ஆகும்;*
*இருப்பினென்? இடையில் இயன்றதை*
*விருப்புடன் செய்தல் வீரர்க் கியல்பே!*

*(விக்கியண்ணன் குதிரையை விரட்டிச் செல்கிறான்.)*

# காட்சி : 2

**இடம்** : பொன்னித் தென்கரை அமைந்த நன்மலர்ச் சோலை.

**காலம்** : பிற்பகல்.

**உறுப்பினர்** : விக்கியண்ணன், கடம்ப மாதேவி, பல்லவரையன், சோழ வீரர் ஐவர்.

**சூழல்** : சோழ இளவரசி கடம்ப மாதேவி நடுவில் இருக்கப், பல்லவரையனும் வீரரும் சுற்றிச் சூழ வாட்பயிற்சி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. அப்பொழுது அங்குக் குதிரை ஒன்று விரைந்து வரும் குளம்பொலி கேட்கிறது.

**கடம்ப மாதேவி :**

*(நிலைமண்டில ஆசிரியப்பா)*

*விரைபரிக் குளம்பின் வெருவொலி அஃதே!*
*அரையரே, இவ்விடம் அணுக யார்க்கும்*
*இசைவிலை என்பதை?*

**பல்லவரையன்:**

*யாரும் அறிவர்.*

**கடம்ப மாதேவி :**

*அறிந்தும் வருவார்?*

**பல்லவரையன் :**

*இறந்தார் என்ப.*
*அணைவிடு பட்ட புனலென ஆர்த்துத்*
*திரையினை ஒப்ப நுரையொடு விரையும்*
*புரவியில் வருவோன் புதியன் போலும்?*

**கடம்ப மாதேவி :**

*இருக்கும், இருக்கும்; எதற்கும் நீவீர்*
*உருவிய வாட்களை உறையுள் இடாது*
*வருவோன் தன்னை நிறுத்துக தடுத்தே.*

*(விக்கியண்ணன் அவர்களை நெருங்கியதும் விரைந்து வந்த தன் குதிரையை இழுத்து நிறுத்துகிறான்.)*

**விக்கியண்ணன் :** *(தனக்குள்)*

*(நேரிசை ஆசிரியப்பா)*

*அடுகளி றொத்த ஐவர் இவர்தாம்!*
*இடையில் நிற்பவள் எழுச்சி ஒன்றே*
*பெண்புலி இவளெனும்! பிறழ்ந்தும் பிறரெதிர்*
*நிற்றல் என்பது முற்றிலும் இல்லை.*

*இங்கொரு புதரிடை இருப்பவன் தன்னை*
*எங்கிவர் அறிகுவர்? யானெடுத் துரைப்பினும்*
*கொள்ளார் என்பதைக் குறிப்பில் காண்குவன்.*
*அஃதென் தோற்றம்? எஃகம்[1] அன்றோ?*
*ஆம்,ஆம்; அவன்தான்! தீம்புனல் ஊற்றை*
*வேம்பென மாற்றும் வேட்கை ஏற்றவன்!*
*கணைவிடு பட்டிடின் கழிபெருந் துன்பமே.*
*எழிலெலாம் இணைந்தநற் பொழிலாட் குற்ற[2]*
*இடுக்கண் போக்கிட முடியின் பின்னாள்*
*பெறலுங் கூடும் பெறற்கரு துணையாய்!*
*சிந்தனை என்னே? சீச்சீ! அஃதென்?*
*குதிரைகள் பலவரு அதிரொலி அன்றோ!*
*பூட்டிய அம்பொடு புதருள் இருப்போன்*
*நாட்டம் நிறைவுற நாடுநர் போலும்?*
*இடையில் நேரமோ இங்கிலை;*
*விடையும் அறிந்திலன்; வேறென் செய்வதே?*

*(கடம்ப மாதேவி விக்கியண்ணனைக் கூர்ந்து ஆய்ந்து, பின்னர்ப் பேசுகிறாள்.)*

**கடம்ப மாதேவி :**

*(நேரிசை ஆசிரியப்பா)*

*யாரே தாங்கள்? என்னிவண் இயைந்ததும்?*

**விக்கியண்ணன் :**

*ஊரோ வஞ்சி; பேரோ விக்கி.*
*பாரோர் ஏற்றும் ஏரார் பொன்னித்*
*தண்புனல் வளமிகு மண்மகள் இயல்பைச்*
*சுற்றிக் காணும் பற்றுடன்*
*உற்ற தன்றி மற்றெதும் இலையே.*

**கடம்ப மாதேவி :**

*(நேரிசை ஆசிரியப்பா)*

*உமதுரை ஒப்பின் எமையே இகழ்வர்!*
*அமர்பல கண்ட இமையா நாட்டம்;*
*மெய்யில் உடைவாள், மேலும் குறுவாள்;*
*கையில் ஈட்டி, கடும்பரி ஓட்டம்!*
*ஒற்றர் ஒப்ப உளதும் தோற்றம்.*
*வெற்றுரை வேண்டா; வீரர் உன்றன்*
*உடையிடை தெரிவதென்? ஓலை போலும்;*
*எடுமதைப் பார்ப்போம்.*

**விக்கியண்ணன் :**

*ஏ!ஏ! இஃதென்?*
*வழிப்பறி அன்றோ? வழியை விடுவீர்.*
*(தனக்குள்)*
*நல்ல வாய்ப்பினை மெல்லியள் தந்தனள்!*
*ஓலையைத் தொடுவபோ லுடையுறை குறுவாள்*
*இமைப்பில் பற்றிடின் இவளுயிர் காக்கலாம்;*
*குறுவாள் எறிந்து கொடியனைத் தடுக்கப்*
*பிறந்திடும் குழப்பம்; பெண்ணிவள் கொண்டுடன்*
*இவ்விடம் அகல இங்கணை[3]*
*தெவ்வரும் தொடரார்; தேற்றமிஃ தினிதே!*

*(விக்கியண்ணன் ஓலையை எடுப்பது போல் கையை இடைக்காகக் கொண்டு சென்றவன், குறுவாளை விரைந்து எடுத்துக் கடம்ப மாதேவியின் பின்புறம் இருந்த புதரை நோக்கி விரைந்து எறிகிறான். அவன் செயலால் முதலில் திடுக்கிட்ட அனைவரும், புதரினின்றும் எழுந்த "ஆஅஅ" என்ற அலறலால் வியப்படைந்து தங்கள் கவனத்தைப் புதர்க்காகத் திருப்புகின்றனர். இதுதான் அங்கு ஏற்ற வாய்ப்பெனக் கருதிய விக்கியண்ணன், குதிரையைக் கடம்ப மாதேவியை நோக்கிச் செலுத்துகிறான். அடுத்த வினாடி, கடம்பமாதேவியை உடன் சுமந்து கொண்டு குதிரை காற்றாய் விரைகிறது.)*

**பல்லவரையன் :**

*(நேரிசை ஆசிரியப்பா)*

*ஐயோ! என்னே அஞ்சும் செய்கை!*
*பெண்ணின் மணியைப் பேயன் கொண்டுநம்*
*கண்முன் ஏகினன்; கல்லோ நாமும்?*
*விரைக; வீரரே, விரைக!*
*உரையென ஒல்லை விரைக ஒருங்கே.*

*(சோழ வீரர் பல்லவரையனோடு சேர்ந்து விரைந்து தொடர்கின்றனர்.)*

## காட்சி : 3.

**இடம்** : *தஞ்சை நகரை நோக்கிச் செல்லும் காட்டுப் பாதை.*

**காலம்** : *பிற்பகல்.*

**உறுப்பினர் :** *விக்கியண்ணன், கடம்ப மாதேவி, பல்லவரையன், வண்டார்குழலி, சோழ வீரர், மற்றும் பலர்.*

**சூழல்** : *குதிரையில் கடம்ப மாதேவியைத் தாங்கியவாறு விரைந்து கொண்டிருக்கிறான் விக்கியண்ணன்.*

**விக்கியண்ணன் :**

*(நேரிசை ஆசிரியப்பா)*

*அமைதி, பெண்ணே! அமைதி, அமைதி!*
*உனைக்கொண் டேகல் உன்னலங் குறித்தே!*
*தினையள வேனுந் தீதிவண் கொண்டிலன்.*
*வஞ்ச மனத்தர் வலையின் காக்கவே*
*அஞ்சுவ புரிந்தேன் அணங்கெனைப் பொறுக்க.*

*(கடம்ப மாதேவி அமைதி காக்கிறாள். பயணம் தொடர்கிறது.)*

**விக்கியண்ணன் :**

*அருமை! அருமை! அறிந்தேன் உண்மைப்*
*பொருளெலாம் இனிதே! புலவர் வாழ்க!*

**கடம்ப மாதேவி :**

*என்னும் கூற்றும்? யாரப் புலவர்?*

**விக்கியண்ணன் :**

*கன்னற் சுவையே, தென்னன் தமிழே,*
*கொங்கு[1]தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பியைக்*
*கூவி அழைத்தோர் காவியம் வடித்த*
*புலவனின் மனநிலை புரிந்தது; மகிழ்ந்தேன்.*
*நலனெலாம் சிறந்த நங்கை உன்றன்*
*கூந்தலுக் கிணையோ தேன்தரு பூமணம்?*
*இல்லை, இல்லை; இல்லை என்றும்.*

**கடம்ப மாதேவி :**

*எல்லாம் உணர்ந்த செல்வரோ தாங்கள்?*

**விக்கியண்ணன் :**

*கற்றவை கொஞ்சம்; மற்றவை கணக்கில!*

**கடம்ப மாதேவி :**

*பொருளில் குற்றம் பொதிந்த பாடலின்*
*கருத்தைத் தழுவிக் கழறிய தென்னை?*
*இயற்கையில் கூந்தற் கேது மணமே?*
*உயர்தனிக் கடவுளர் உரைத்ததும் கதையே!*

**விக்கியண்ணன் :**

*கட்டுக் கதைதான்; முட்டற அறிவேன்.*
*இறையனார் எனும்பெயர் இன்றமிழ்ப் புலவரை*
*முறையிலாச் சமய மூடர்தம் முழுமுதற்*
*கடவுளே எனப்பல கட்டி[2] உரைத்தனர்.*
*கடவுள் பெயரைக் காதலில் மக்கட்*
*கிட்டு மகிழ்த லின்றும் வழக்கே.*
*கட்டுக் குலையாக் கன்னி உடலோய்,*
*உரைத்ததி லேதுங் குறையெனி னுரைக்க.*

**கடம்ப மாதேவி :**

*உரைத்தவை உங்கட் குகந்தவை ஆகலாம்;*
*எப்படி இருப்பினும் அப்பழம் பாடல்*
*தப்புடைத் தென்பதை ஒப்புவீர் அன்றோ?*

**விக்கியண்ணன் :**

*ஒப்பேன்; ஒப்பேன்! உயர்தமிழ்ப் பாடல்*
*வழுவெனில் இதுவரை வழங்கி வாரா.*
*அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கில்*
*காமக் கூட்டம் கழிந்த பின்றைத்*
*தலைவன் தலைவி நலம்புனைந் துரைத்து*
*மகிழ்வதாய் அமைந்த இகலிலாச்[3] செய்யுள்!*

*(வியப்போடு ஏறிட்டு நோக்கிய கடம்ப மாதேவியின் இதழ்களில், அவள் எதிர்பாரா நிலையில், விக்கியண்ணன் தன் இதழ்களைப் பதித்துப் பிரிக்கிறான்.)*

**கடம்ப மாதேவி :**

*கற்றுளீர் தமிழைக் கற்றலில் பண்பை!*
*கண்ணிமைப் போதில் பெண்ணெனைக் கவர்ந்து*
*கடுகி விரைவதில் கரணியம் இருக்கலாம்;*
*இறுக என்னுடல் பொருந்தத் தழுவி*
*எச்சில் வாயை இதழில் சேர்த்த*

*நச்சுச் செய்கையை நன்றென இங்குக்*
*காண்பவர் எவரே கருதுவர்? இல்லை!*
*ஆண்மகன் நீரோ? ஐயமே! ஐயமே!*

**விக்கியண்ணன் :** *(மெல்லச் சிரித்தவாறு)*
*என்றன் செய்கையே எடுத்துக் காட்டாம்!*

**கடம்ப மாதேவி :**

*ஒன்றாச் செய்கை நன்றாம் என்பீர்;*
*வீரர்க் கழகு வெல்போர்க் களத்தில்*
*கூரயில்[4] கொண்டு கொடும்பகை போக்கல்!*
*பெண்சிறை எடுத்த மண்ணகு செய்கையர்*
*உம்மரு வீரம் எம்போல் பெண்டிர்*
*தம்மிடம் வெளிப்படும் தகைமை[5] நன்று!*

**விக்கியண்ணன் :**

*என்றன் வீரம் என்றுமே உன்போல்*
*மெல்லியர் தம்முன் செல்லுதல் இல்லை.*
*காமக் கூட்டம் காணுதற் கினிய*
*வாமப் பூவுடல் வஞ்சியர் தாளாக்*
*காதலால் அமைக்கும் கட்டிற் களமே*
*புறம்நான் காணும் போர்க்களம் ஆகும்!*
*மற்றவை என்னெதிர் இற்றென இயையும்.*
*பெண்ணின் எழிலே, பேசுஞ் சிலையே,*
*கண்ணின் ஒளியே, கரும்பே, தேனே,*
*கண்ட ஞான்றே[6] கொண்டனை உயிரை!*
*உண்டோ இரக்கம் உன்னகத் தென்பால்?*

**கடம்ப மாதேவி :**

*எந்தப் பெண்ணுமே ஏற்காள் கோழையை.*

**விக்கியண்ணன் :**

*உண்மை; உண்மை! பெண்மைக் கணியே,*
*காதலும் வீரமும் கண்கள் இரண்டென*
*வழிவழி வந்த பழியிலா நற்றமிழ்*
*வேளிர் குலத்துத் தோளினன் நெஞ்சுரம்*
*மலையே அசையினும் நிலையில் திரிதலில்.*
*வானவர்[7] நாட்டிடை வாளொா டென்னெதிர்*
*நின்றவர் இல்லெனில் வென்றவர் யாரே?*

**கடம்ப மாதேவி :**

*நகுதற் குரித்தும் தகவில் பேச்சும்!*
*இகலிலை உமக்கெனில் எந்நீர் என்னரு*
*வீரர்க் கஞ்சி விரைவதும்? சரியோ?*
*வீரர் என்றும் வெறுமொழி கூறார்.*

**விக்கியண்ணன் :**

*தேனேய் மொழியாய், தேவையோ விளக்கம்?*
*மானேர் நில்லா மாதுனைக் கண்முன்*
*கண்ட போதே கொண்டேன் உயிராய்!*
*அப்படி இருக்க ஒப்பிலா உன்றன்*
*மனத்திற் குகந்த இனத்தர்க் கெதிராய்*
*வாளைச் செலுத்தின் நாளை என்கை*
*பொன்னெனப் பொலியும் கன்னியுன் பூவுடல்*
*முன்னம் தழுவி முயங்கிடப் பெறுமோ?*
*கையில் வாளொடு களம்நான் புகுந்தால்*
*வையமே நடுங்கும்!*

**கடம்ப மாதேவி :**

*ஐய, போதும்;*
*பேச்சில் உமைவெலல் பிறரால் ஆகா!*
*வீரரே, உம்மரு சூரத் தனமிவண்*
*ஓர்விற் குட்படின்?*

**விக்கியண்ணன் :**

*சோர்வெதும் இல்லை.*

**கடம்ப மாதேவி :**

*பார்ப்போம் அதையும்; பார்ப்பீர் ஆங்கே.*

**விக்கியண்ணன் :**

*எங்கே? எங்கே?*

**கடம்ப மாதேவி :**

*எதிரில் கீழே!*
*அங்கே காண்க.*

**விக்கியண்ணன் :**

*ஆம்,ஆம்; கண்டேன்,*
*என்னது கூச்சல்? ஏனப் பெண்ணை*
*வன்மனச் செய்கையர் வருத்து கின்றனர்?*
*யாரவள்? யாரவர்? ஏனிக் குழப்பம்?*
*தேறெனத் திரட்சி; தெரிவதோ மிரட்சி!*
*முற்றுந் துறந்த முனிவர் காணினும்*
*பற்றினைக் கொளச்செயும் பருவப் பூங்கா!*
*பெறற்கரு பேறவள்! பெறற்கும் உரியளோ?*

**கடம்ப மாதேவி :**

*கறங்கென[8] உம்மனம் கண்களில் எந்தப்*
*பெண்ணைக் காணினும் பிறழ்வது விந்தை!*
*எண்ணரும் துயர்தனில் எளியோள் ஆழ்வதை*
*எதிர்நீர் கண்டும் இயல்பொடு பேசல்*
*புதுமையே! மேலும், புரிந்ததும் வீரம்!*

**விக்கியண்ணன் :**

*கருவொடு கலந்த தெங்குல வீரம்!*
*கருத்தொடு காணுக கைத்திறன் தன்னை.*
*இவ்விடம் இருந்தே எறிவேல் எறிந்து*
*கொவ்வை இதழாள் கொடியிடை பிடித்துள*
*முரடன் கையினை முறிப்பன்; கண்டிடின்,*
*உரனுடை வேளிர் உயர்வினை உணருவை.*

*(எறிவேல் பறக்கிறது; அடுத்த வினாடி, பெண்ணின் இடையைப் பற்றியிருந்தவன் மேற்கையில் படிகிறது. "ஆஅஅ" என்ற அலறல் எங்கும் ஒலிக்கிறது.)*

**விக்கியண்ணன் :**

*எப்படி என்குறி? இப்போ தேனும்*
*ஒப்புவை அன்றோ?*

**கடம்ப மாதேவி :** *(வியப்புடன்)*

*ஒப்பினேன்; ஒப்பினேன்.*
*நடைபரி அசைவும் தடைசெய நானும்*
*இடையில் முழுநா ழிருந்தும் சொற்படி*
*இலக்கினை அடைந்த தெறிவேல் என்றால்*
*இலையிலை மேலெதும் ஏற்றிப் போற்ற!*

**விக்கியண்ணன் :**
பொறு,பொறு; இனிவாட் போர்த்திறம் காண்க.

*(கூட்டத்தை அடைந்ததும் விக்கியண்ணன் உருவிய வாளொடு முரடர் மேல் பாய்கிறான். கடம்பமாதேவி குதிரையினின்றும் கீழிறங்கி மெய் மறந்து பார்த்தபடி நிற்கிறாள். முரடர் இருவர் விக்கியண்ணனின் வாள்பட்டுச் செயலற்றுச் சாய்கின்றனர். சற்றுத் தொலைவில் சோழ வீரர் விரைந்து வரும் ஒலி எழுகிறது. அதைக் கவனித்த விக்கியண்ணன், போரிட்டவாறே தன் குதிரையை நெருங்கித் தாவி அமர்ந்து அங்கிருந்து விரைந்து அகல்கிறான். கடம்ப மாதேவியின் வீரர் அங்கு வந்து சேர்கின்றனர்.)*

**பல்லவரையன் :**
பொறுக்க வேண்டும்; புதியனோ செல்பவன்?
விரைக இருவர்!

**கடம்ப மாதேவி :**
வேண்டிய தில்லை;
அரையரே, இங்குள முரடரைக் கொண்டுபோய்ச்
சிறையுள் அடைத்துச் செய்திகள் தெளிக;
முறையிலாச் செய்கையின் மூலவர் எத்துணை
உயர்ந்தவர் எனினும் ஒறுபடல்[9] வேண்டும்!
கயமலர்க் கண்ணாய், வண்டார் குழலி,
பண்டுசெய் நல்வினைப் பயனே இன்றெமைக்
கொண்டிவண் சேர்த்துன் குறைதனைக் களைந்தது!
மருட்சி ஒழித்து மனம்போல்
விரும்பி இனிதே மேவுக வீடே.

## காட்சி : 4.

**இடம்** : தஞ்சை அரண்மனை வாயில்.
**காலம்** : மாலைப் பொழுது.
**உறுப்பினர்** : விக்கியண்ணன், பல்லவரையன், காவலர்.
**சூழல்** : விக்கியண்ணன் குதிரையில் அமர்ந்தவாறு வாயில் காப்போரிடம் உரையாடுகிறான்.

**விக்கியண்ணன் :**

*(நேரிசை ஆசிரியப்பா)*

கொல்புலி ஒப்ப வெல்லரு திறனுடை
குற்றமில் வீரக் கொற்றவர் சோழர்
கோயில் முன்றில் வாயில் காக்கும்
நல்லோய்! காவல! ஒல்லை[1] சென்றுநீ
சேரலர், தண்பூந் தாரணி வானவர்
ஓலை கொண்டொரு காளை ஈண்டு
வந்துளன் என்ற சந்தினை[2] மன்னர்
முன்னம் உரைத்துப் பின்னவர் உளப்படி
எனையழைத் தேகுக.

**காவலன் :**

நினைத்தேன்; நினைத்தேன்!
புதியர் நீரெனப் புரிந்தது சார்ந்ததும்!
புதியர் அன்றிப் புகழுடை சோழர்
அரண்மனை வாயிலை அடுபரி ஊர்ந்து
நெருங்கார் பகைவரும்; நீவிர் வந்தீர்!
அரசரைக் காணல் அத்துணை எளிதிலை;
உரனுடை தூதரே, ஓலையை முறைப்படி
பேதமில் அமைச்சரே பெறுதற் குரியர்;
ஏதம்[3] இலையேல் எம்மிறை தம்மிடம்
தலைமை அமைச்சரே தருவர் உன்னெதிர்.
நிலைமை இதுவே! நீவீர் வாழ்க!
ஓலையை எடுப்பீர்; உள்ளிருந் தணுகுவர்
காலாட் படைக்குக் காவலர் ஆவார்.
அவரால் உடன்நீர் அரசரை அடையலாம்.

**விக்கியண்ணன் :**

உவப்பக் கூறினை; ஓலை ஈதோ!

( ஓலையை எடுக்க மடியில் கையைக் கொண்டு சென்றவன், ஓலையைக் காணாது திகைக்கிறான்.)

**விக்கியண்ணன் :** (தனக்குள்)

என்னிது விந்தை? இடையில் இருந்த
மன்னவன் ஓலை மறைந்ததும் எங்ஙனம்?

(காலாட்படைத் தலைவனாகிய பல்லவரையன் அப்போது அங்கு வந்தடைகிறான்.)

**காவலன் :**

வணக்கம் தலைவ.

**பல்லவரையன் :**

வணக்கம் காவல.

(குரல் கேட்டு ஏறிட்டுப் பார்த்த விக்கியண்ணன் பல்லவரையனை அறிந்து கொள்கிறான்.)

**விக்கியண்ணன் :** (தனக்குள்)

சுணக்கம்[4] உற்றது சூழ்ந்த செய்கை!
இனமெனைக் காணுமுன் இவ்விடம் நீங்கிடின்
மனநிறை வடைந்திடும்; மற்று வழியிடை
இழந்த ஓலையை எய்திடின் அன்றி
வழியெதும் இல்லை; வானவர் அறியின்
எல்லாம் பாழே! எனினும்
நல்லதை நாட நடக்கும் நன்றே.

(விக்கியண்ணன் அங்கிருந்து மெல்ல நகர்ந்து ஓசையின்றி அகல்கின்றான்.)

## காட்சி : 5

**இடம்** : தஞ்சை அரண்மனையைச் சார்ந்த காவற் காடு.
**காலம்** : முன்னிரவு.
**உறுப்பினர்** : விக்கியண்ணன், வண்டார்குழலி.
**சூழல்** : சோர்ந்த மனத்தினனாய்த் தாழ்ந்த மரக் கிளை ஒன்றில் விக்கியண்ணன் அமர்ந்து இருக்கிறான்.

**விக்கியண்ணன்** : (தனக்குள்)

(நேரிசை ஆசிரியப்பா)

பன்முறைத் தேடிக் கன்றின அடிகள்;
இறைவன் ஓலை மறைந்தது மறைந்ததே!
பெண்ணே பெரிதாய்ப் பேதுறும் என்மனப்
பேதமை சேர்த்திடு வேதனை கொடிது!
வல்லிருட் காட்டில் செல்லிடம் தேரேன்;
அரணுட் சேரின் உரனுடை சோழர்
காவற் சிறையே மேவற் குரித்தாம்.
எதிரென் அங்கொரு புதர்மிக அசைவதும்?
விந்தை! விந்தை! இந்த மாந்தன்
இங்கென் எழுந்தான்? எங்கே விரைவான்?
மறைந்தனன் அதற்குள் நிறையிருட் காட்டுள்!
புதியவன் தோன்றிய புதரினை ஊன்றி
ஆய்ந்திடின் அன்றி ஓய்ந்திடா துள்ளம்.

(விக்கியண்ணன் சென்று ஆய்ந்து பார்க்கிறான்.)

நன்று, நன்று; என்றும் என்மன
நினைப்பும் பொய்த்ததாய் நினைப்பும் இல்லை.
உரனுடை சோழர் அரணை அடைய
அரிதாய் அமைந்த தரைவழி போலும்?
இரவைப் போக்கக் கரவுடை இவ்வழி
தேரின் நல்லிடம் சேரலுங் கூடும்.

(விக்கியண்ணன் தரைவழி மூலம் விரைந்து நடந்து ஒரு பெரிய அறையை வந்தடைகிறான்.அப்போது பெண்ணொருத்தி பாடும் பாடல் யாழிசையோடு விக்கியண்ணன் செவியை அடைகிறது.)

இனிது, இனிது; யாழின் இசையே;
யாழினும் இனிதிங் கெழுகுரல் இசையே!
வசையறு இன்குரல் வாய்த்தாள்;
இசையினும் இனியளோ? எழில்நலம் உடையளோ?

(நெருங்க நெருங்கப் பாடல் தெளிவாகக் காதில் விழுகிறது. அறையுள் நுழைந்த விக்கியண்ணன், அங்கே வண்டார்குழலி பாடியபடி இருப்பதைக் கண்டு வியந்து நிற்கிறான்.)

**வண்டார்குழலி** :

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

இமையிலா நோக்கோய், வாழி;
இளமதி சுடரோய், வாழி;
உமையவள் இடத்தோய், வாழி;
உட்புறம் ஆனோய், வாழி;

*நமனுதை காலோய், வாழி;*
*நஞ்சுறை மிடற்றோய், வாழி;*
*எமதுளம் நிறைந்தோய், வாழி;*
*எம்மிறை, வாழி; வாழி!*

*நான்மறைப் பொருளே, வாழி;*
*நல்லவர்க் கருளே, வாழி;*
*தேன்மிகு கொன்றை மாலை*
*திகழ்ந்தொளிர் மார்போய், வாழி;*
*மான்மழுக்[1] கையோய், வாழி;*
*மன்றினில் நின்றோய், வாழி;*
*நான்தொழு நல்லோய், வாழி;*
*நாதனே, வாழி! வாழி!*

*நீறணி உடலோய், வாழி;*
*நீண்முடிச் சடையோய், வாழி;*
*சீறரா அணியோய், வாழி;*
*செஞ்சுடர்க் கனலோய், வாழி;*
*ஏறெழு[2] உரவோய், வாழி;*
*எல்லையில் பொருளே, வாழி;*
*ஈறிலி, ஈசா, வாழி;*
*எந்தையே, வாழி; வாழி!*

(வேறு)

*போற்றிப் போற்றி உன்னடியைப்*
*புகழ்ந்து மகிழ்ந்தேன் உன்னடியாள்!*
*ஏற்றி ஏற்றி உன்னருளை*
*எங்கும் உரைத்தேன் எந்நாளும்!*
*கூற்றே வரினும் நிலைதிரியாக்*
*கொள்கை இன்றேன் கலங்கியதோ?*
*சீற்றங் கொண்டோ என்னுணர்வைச்*
*சிதைத்தாய்? இறைவா, இஃதருளோ?*

*என்றும் நீயே எனவிருந்த*
*எண்ணங் கலங்க என்செய்தாய்?*
*நன்றே உன்றன் அடியென்று*
*நாளும் நினைத்தேன்; அதுபோக்கி,*
*இன்றோ விதைத்தாய் என்னெஞ்சில்*
*ஏங்கித் துடிக்கக் காதலினை!*
*வென்றார்; சென்றார்; நன்றாமோ?*
*வேகும் நெஞ்சம் என்னாமோ?*

*கொடியர் என்னைச் சூழ்ந்திடவும்*
*குமுறி இரந்தேன் உன்னருளை;*
*விடுத்தாய் அவரை நீயென்றே,*
*வியந்தேன், மகிழ்ந்தேன், எனையிழந்தேன்;*
*தடுத்தாட் கொண்டாய் சுந்தரனைத்*
*தாளாக் காமத் தணலிடையே,*
*விடுத்தாய் எனைநீ; வேகின்றேன்!*
*வேந்தே, இஃதோ உன்னருட்டான்?*

(வேறு)

*குறைமதி தலையிற் சூடிக்*
*குவலயம் காக்கும் கோவே,*
*நிறைமதி இன்றிங் கென்மேல்*
*நெருப்பினைப் பொழியும்; நன்றோ?*
*உறைபனி இமயோன் பெற்ற*
*உமையவள் கொழுந, இந்நாள்*
*நறை[3]மிகு தண்ணீர் கூட*
*நடுக்கலில்; வெம்மை சேர்க்கும்!*

*ஆரவர்? அறிதற் கில்லேன்;*
*ஆயினும் இழந்தேன் உள்ளம்!*
*ஊரெவண்? உற்றோர் மற்றோர்*
*உண்டுகொல்? தனியர் தானா?*
*யாரிவர் துணையோ? ஐயோ!*
*எனதுளம் தேடும், வாடும்;*
*காரெனுங் கடலே, என்றும்*
*காப்பதுன் கடனே! வாழி!*

*(பாடி முடித்துக் கண்களில் கண்ணீர் தளும்பச் சிற்பமென வண்டார்குழலி வாட்டமுடன் அமர்ந்து இருந்ததைக் காண விக்கியண்ணன் தானும் வாடினான்.)*

**விக்கியண்ணன் :**

*(நேரிசை ஆசிரியப்பா)*

*குழலின் யாழின் கொஞ்சும் மழலையின்*
*விழுமின் இசையோய், வெல்க நிற்றிறம்!*
*யாழும் தோற்றதுன் இன்குரல் முன்னர்;*
*வாழிய மலரே, வாழி!*

**வண்டார்குழலி :** *(திடுக்கிட்டு)*

*நீங்கள்?*

**விக்கியண்ணன் :**

*மறந்ததோ அதற்குள்? மாதே, நன்று!*

*(வண்டார்குழலி விரைந்து எழுந்து அவன் அருகே வருகிறாள்.)*

**வண்டார்குழலி :**

*மறப்பதா? நானா? இறப்பினும் இல்லை.*
*பெரிதாம் உயிரின் பெண்மை காத்த*
*அருட்பெருங் கடலும் அருளே அருளாம்!*

**விக்கியண்ணன் :**

*போதும் பெண்ணே, போதும் புகழ்ச்சி;*
*ஏதுபின் வியந்ததும் எனையிவண் கண்டதும்?*

**வண்டார்குழலி :**

*இவ்விடம் சேர்ந்ததும் எவ்விதம் என்றுதான்.*

**விக்கியண்ணன் :**

*வண்டறி யாதோ தண்பூஞ் சூழல்?*
*பூத்துக் குலுங்கும் பொழிலே எழிலாய்*
*வாய்த்தாய் இங்கு! வடிவே, பெயரென்?*

**வண்டார்குழலி :**

*வண்டார் குழலி.*

**விக்கியண்ணன் :**

*கண்டேன் பொருத்தம்!*
*உருவைப் போலவே கரும்புன் பெயரும்.*
*வண்டார் குழலி, மண்டமர்[4] கண்ணாய்,*
*அழகெலாம் ஒருங்கே எழுந்த அமைவே,*
*என்னுளம் மயங்க என்நீ செய்ததும்?*
*கொடியேய் உடலோய், கொடியோய், முறையோ?*
*அருகு வந்தெனைப் பொருந்த அணையின்*
*பிறந்த பேறினை அறிந்து தேறுவன்;*
*வருந்துதல் ஏனோ? வா,வா; அணைநீ.*

*(விக்கியண்ணன் வண்டார்குழலியைத் தொட்டுத் தழுவுகிறான்.)*

**வண்டார்குழலி :**

*ஐய, இஃதென்? பைய! பைய!*
*பெண்மையும் மென்மையும் உண்மையில் ஒன்றே.*
*ஒருவரை ஒருவர் மருளற[5] உணருமுன்*
*மருவல்[6] என்கொல்? மயக்கம் தெளிக.*
*அருளே உருவாய் அமைந்த திருவே,*
*கடன்பட் டதனால் உடன்பட் டாளென்(று)*
*உணரார் உரைப்பர்; தணலாய் எரிப்பர்!*
*தனியளா? தழுவ இனியளா? தகுமா?*
*என்றெலாம் ஆய்ந்து நன்றெனில் நாடல்*
*முறையெனும் தமிழ்மறை.*

**விக்கியண்ணன் :**

*குறையில மொழிந்தாய்!*
*பிறனில் நாடும் பேதைமை என்றும்*
*நறவின் மருளில் நானிரு நிலையிலும்*
*கொண்டதும் இல்லினிக் கொள்வதும் இல்லை.*
*கண்ட கணமே கொண்டனை நினைவை!*
*கொழுகொம் பறியாக் கொடியென உன்னெழில்*
*விழிகளைக் கண்ட வினாடி தெளிந்தேன்.*
*பொங்கித் தளும்பும் அங்கப் பொலிவே*
*பூவையுன் நெஞ்ச ஆவலைக் காட்டும்;*
*தழுவலைத் தவிர்கென மொழிகுவை ஆயினும்*
*அகமகிழ் வினையுன் முகமெடுத் தோதும்!*
*பஞ்சணைக் குகந்த மிஞ்சிடு அழகாய்,*
*அஞ்சுதல் என்னினி? கொஞ்சுக எனைநனி.*

*(அறைக்கதவு அப்பொழுது திறக்கப்படுகிறது. ஒலிகேட்டு இருவரும் பிரிந்து நிற்கின்றனர். பணிப்பெண் செந்தாமரை முன்வரக், காவலர் பலர் ஒருங்கே உள்ளே நுழைகின்றனர். செந்தாமரை விக்கியண்ணனை அங்குக் கண்டு வியப்பெய்துகிறாள்.)*

**வண்டார்குழலி :**

*காவல் வீரர்! மேவிய காரணம்?*

**செந்தாமரை :**

*அறியேன் அம்மா; அறைகுவர் இவரே.*

**வீரர் தலைவன் :**

*வேழமாம் நம்மரு சோழ மன்னரை*
*மறைந்து புகுந்து குறுவாள் எறிந்து*
*கொல்ல முயன்ற பொல்லார் இவரைச்*
*சிறைச்செய வந்துளோம்; இறையின் ஆணை!*

**வண்டார்குழலி :** *(திகைப்புடன்)*

*இவரா? இல்லை; தவறாய்ச் சொல்வீர்!*

**வீரர் தலைவன் :**

*தவறிலை தாயே; தகுந்த சான்றுகள்*
*இருக்கவே வந்தோம்; இவரை*
*அழைத்துச் செல்வதில் பிழையெதும் இலையே!*

*(வண்டார்குழலி சோர்ந்து சாயப் பணிப்பெண் செந்தாமரை தாங்கிப் பிடித்துக் கொள்கிறாள்.)*

## காட்சி : 6

**இடம்** : சோழ மன்னர் விசயாலயரின் அறை.

**காலம்** : முன்னிராப் பொழுது.

**உறுப்பினர்** : விசயாலய சோழர், தலைமை அமைச்சர் நாங்கூர் வேளிர் நற்குணப் பேரெழிலார், தலைமைப் படைத் தலைவர் செங்கண்ணன்; பிற படைத் தலைவர் பல்லவரையன், கடிய நெடுவேட்டுவன், சேந்தன் கீரன், அரசியார், கடம்ப மாதேவி, விக்கியண்ணன், காவலர், வீரர் பலர்

**சூழல்** : விசயாலயர் பஞ்சணையில் அமர்ந்திருக்க, அருகே அரசியார் பின்புறத்தில் நிற்கிறார். அமைச்சர் எதிரே அமர்ந்திருக்க, மற்றவர் பணிவோடு சற்றுத் தள்ளி நிற்கின்றனர். கடம்ப மாதேவிஅப்போது சினத்துடன் உள்ளே நுழைகிறார்.

**விசயாலயன் :** (புன்னகையுடன்)

(நேரிசை ஆசிரியப்பா)

வருக; மகளே, அருகே வருக.

**கடம்ப மாதேவி :** (சினத்துடன்)
போதும் புன்னகை! ஏதிவண் நிகழ்ந்ததும்?

**விசயாலயன் :**

அதற்குள் உன்செவி அடைந்ததோ அனைத்தும்?
விதியின் வழிதான் வினைகள் நடைவுறும்.

**கடம்ப மாதேவி :**

கட்டுக் காவல் மட்டின் றிருக்க
அரசரை அழிக்க அரணுள் முயற்சி!

**நாங்கூர் வேளிர் :**

செந்தமிழ்ச் செல்வி, சிந்தனை அதுவே!
வழியில் ஒருசிலர் அழிக்க உனையும்
முயன்றனர் என்ற துயர்மிகு செய்தியை
அறிந்தோம்; அதனால், உறைந்தோம் திகைத்து!

**கடம்ப மாதேவி :**

திகைத்தல் எதற்கு? நகைத்தற் குரித்தாம்!
ஒன்னார்[1] தாங்கள் எண்ணிய வண்ணம்
நுழைந்திவ் வரணுள் விழைந்த எதையும்
முடிக்கக் கூடுமேல் அடுபோர்[2] வல்லோர்
காவல் இருந்திங் காவதும் என்ன?

**விசயாலயர் :**

*அமைதி; மகளே, அமைதி; அமைதி!*
*இமையென நம்மரு இணையிலா வீரர்*
*அரண்மனை தன்னைத் திறன்மிகக் காப்பர்;*
*குற்றமில் அவர்மேல்; குற்றம் நமதே.*
*வஞ்சின நெஞ்சினர் தஞ்சையை முன்னர்*
*ஆண்டவர் என்பதை ஈண்டுநாம் மறந்தோம்?*
*எத்தனை மறைவழி இத்தனி எயிலுள்*[3]
*இயற்றினர் கொல்லோ? எண்ணிடு; மற்றும்*
*பகைவன் கிடைத்தனன்; தகவுடை*[4] *நம்மரு*
*காவற் றலைவரே மேவுவர் கொண்டிவண்.*

*(கதவு திறந்து காவலர்கள் விலகி நிற்க, வீரர் பலர் உடன் பின்தொடரக், கடிய நெடுவேட்டுவன் விக்கியண்ணனோடு உள்ளே நுழைகிறார்.)*

**கடிய நெடுவேட்டுவன் :**

*எம்முயிர் மன்னா, உம்முயிர் போக்க*
*உன்னிய தீயனை முன்னர்க் காண்க.*

*(விக்கியண்ணனைக் காவல் வீரர் முன்னிறுத்தக், கடம்ப மாதேவியும் பல்லவரையனும் அவனை அந்நிலையில் அங்குக் கண்டு திகைப்படைகின்றனர்.)*

**விசயாலயன் :**

*வீர, யார்நீ? விளம்புக நாடும்.*

*(விக்கியண்ணன் விடை அளிக்காது அமைதி காக்கவே, மன்னர் கடிய நெடுவேட்டுவனைக் குறிப்பாகப் பார்க்கிறார்.)*

**கடிய நெடுவேட்டுவன் :**

*ஈர நெஞ்சிலா வீரனிக் கொடியன்*
*இன்று மாலை எயிலுள் நுழைந்துளன்;*
*மன்னரைப் பார்க்கும் வழியும் என்னென*
*வாயில் காவலர் வாய்மொழி நோக்கிக்*
*கோயில் நிலைமை குறித்தங் கிருக்கையில்*
*அரையர் அவ்விடம் அணுகவும் அஞ்சி*
*விரைந்து மறைந்தனன்; மறைந்தவன் சற்றுமுன்*
*ஐயுறு வகையில் மையிருள் மறைவில்*
*ஒதுங்கிப் பதுங்கி மெதுவே நகர்ந்து*
*நடன வல்லி மடமகள் குழலிதன்*
*நெடுமனை புகுந்துள் சடுதியில் ஒளிந்தனன்;*
*செய்தி தெளிந்துடன் எய்திக் கொடியனைக்*
*கொணர்ந்தனம் நேரே; உணர்க, பெரும.*

**கடம்ப மாதேவி :**

*வண்டார் குழலி மனையகம் இருந்தா*
*கொண்டு வந்தீர்?*

**கடிய நெடுவேட்டுவன் :**

*கூறிய தஃதே.*
*வண்டார் குழலி வல்லம் சென்றவர்*
*கண்டுளர் வழியில் காளை இவனை!*
*பார்த்ததும் எப்படிப் பழக்கமுன் இலையேல்?*
*சேர்ந்ததும் எப்படிச் சேல்விழி உள்ளறை?*

**விசயாலயன் :**

*காவற் றலைவ, ஆவதும் அழிவதும்*

*நல்லதும் கெட்டதும் இல்லதும் உள்ளதும்*
*வல்லான் வகுவழி செல்வது இயல்பே;*
*அவன்தன் குறிப்பே புவனம் இயங்கும்!*
*நோவதால் ஒருவரை ஆவ திங்கென்?*
*இவ்விள வீரரைச் செவ்விதின் கொண்டுபோய்ச்*
*சிறையுள் அடைத்து முறையுடன் நடத்துக.*
*ஒய்வாய் யாவையும் ஆய்ந்தறிந் திடலாம்.*

**கடம்ப மாதேவி :**

*கூர்வாள் எறிந்த கொடியர் இவரா?*
*யார்நேர் உரைப்பினும் ஏற்றிடா தென்னுளம்.*

**நாங்கூர் வேளிர் :**

*அறையுள் அப்போ தரசரே இருந்தார்;*
*கறையுடை யாளனைக் கண்டவர் இல்லை.*

*(வீரர் அனைவரும் விக்கியண்ணனை அங்கிருந்து அழைத்துச் செல்கின்றனர்.)*

**விசயாலயன் :**

*நினைத்து நினைத்து நீத்தேன் அமைதி;*
*இனைத்தென[5] உணரா இன்னலால் என்னுளம்*
*சோர்ந்திடும்; அதனால் சூழ்ச்சியின் வல்லார்*
*தேர்ந்திடு வழியைத் தேடுவன் தொடர்ந்து!*
*முடவன் ஆனேன்; முதுமையின் கோலம்!*
*நடத்தல் என்வரை நடவா ஒன்றாம்.*
*என்னிலை இஃதெனின் இன்னார் நிலையோ,*
*துன்னினும்[6] அச்சம் தொடரற் குரித்து.*
*பகைவர் படைநிலை மிகையெனின் நம்திறன்*
*நகைப்பிற் கிடமாம்; நானென் வாழ்வெலாம்*
*போரே தொழிலாய்ப் போக்கி ஒழித்தனன்;*
*யாரே என்போல் தேரா தொழிந்தவர்?*
*வாழ்வின் இறுதி வந்திடும் இந்நாள்,*
*சூழ்வேன் நன்னெறி தொன்னூல் ஆய்ந்து!*
*கொண்டேன் இளமையில் குறிக்கோள் ஒன்றை;*
*கண்டதில் இன்றும்! கனவாய்க் கலைந்தது.*
*உறக்கம் காணா துலைவுறும்[7] உடலம்;*
*இறக்குமுன் இயலுமேல் இன்புறும் என்னுயிர்.*
*(வெளியே கூச்சல் எழுகிறது.)*
*என்னங் கிரைச்சல்? சேந்த,*
*சென்றுநீர் தீர்த்துச் சேர்க மீண்டே.*

*( சேந்தன் கீரன் வெளியே செல்ல அசைகிறார். அப்போது அறைக் கதவு விரைந்து திறந்து கொள்ள, விக்கியண்ணன் விரைந்து உள்ளே நுழைகிறான். அங்கிருந்த படைத்தலைவர் அனைவரும் பதைபதைத்தவராய்த் தம் வாட்களை வெளியே உருவுகின்றனர். கையில் குறுவாள் மின்ன, விக்கியண்ணன் அனைவரையும் ஒருங்கே கவனித்தவாறு பேசுகிறான்.)*

**விக்கியண்ணன் :**

*(நேரிசை ஆசிரியப்பா)*

*அசையீர் யாரும்; அசையின் அக்கணம்*
*வசையில் பெரும்புகழ் வளவர் கோமகன்*
*உரனுடை மார்பை ஊடுறுங் குறுவாள்!*
*அரசிளங் குமரி அறிவர் என்குறி.*
*முன்னோர் சொன்ன நன்னெறி அன்ன*
*என்குறி என்றும் பிறழ்ந்ததும் இல்லை.*

*( எல்லாரும் அதிர்ந்து அசையாது நிற்கக் கடம்ப மாதேவி பேசுகிறாள்.)*

**கடம்ப மாதேவி :**

*உரைத்தது கேட்டீர்; உறையுள் வாள்களை*
*விரைந்து சேர்க்க.*

**நாங்கூர் வேளிர் :**

*வேதனை அதனால்?*

**கடம்ப மாதேவி :**

*ஒன்றும் நேரா; உணருவன் அனைத்தும்.*
*குன்றென அமைந்த கொள்கையீர், இவர்கூர்*
*எறிவாள் அடையும் இலக்கை; உறுதி.*
*பிறழா திவர்குறி!*

**நாங்கூர் வேளிர் :**

*பெண்ணிற் கரசி,*
*முன்னம் அறிவையோ முன்னில் வீரரை?*

**கடம்ப மாதேவி :**

*நன்கு அறிவன் நாவல அமைச்சரே.*
*கொடியன் அன்றிவர்; கோதறு சேரலர்*
*விடுத்த மறவர்; வியந்திட வேண்டா.*
*வேண்டார் எனின்நம் வீரரைத் தப்பி,*
*மீண்டவர் நம்படை மேலவர் குழுமிய*
*இவ்வறை நாடுதல் இயல்போ? கூறுக.*
*செவ்வரைத் தோளுடை செம்பியர் தமைக்கொல,*
*முயன்றவர் இவரெனல் இயல்பில்; முரணாம்!*
*வயப்பரி மீது வஞ்சி ஒருத்தியை*
*வவ்வி விரையும் வாட்டமில் பொழுதே*
*கொவ்வைக் கனியிதழ் கொஞ்சும் வண்டார்*
*குழலிதன் கொடியிடை கொண்ட கொடியனின்*
*முழங்கை முறிய மொய்வேல் தன்னை*
*எறிவேன் காண்கென இயம்பிய வாறே*
*பிறழா தெறிந்த பெற்றியர் இவராம்!*
*அத்தகு ஆற்றல் அமைந்திடப் பெற்றவர்*
*இத்தனி அறையில் இருந்தவா றிருந்து*
*குறித்த இலக்குக் கொண்டது விலக்கெனில்*
*நகைத்தற் குரித்து; நம்பலில் கற்பனை!*
*துகளறு[8] மொய்ம்புத்[9] தோளமை யாள,*
*வருக இறைமுன்; வருக அருகே.*

*(விக்கியண்ணன் மெல்ல முன்வந்து அரசரைப் பணிந்து வணங்குகின்றான்.)*

**விக்கியண்ணன் :**

*அருவலி அரசே, அரசருள் அணியே,*
*பரந்தோங் கிசையின் பாவலர் பொருளே,*
*மரபிற் கமைந்த மன்னிய புகழோய்,*
*பொன்னிப் பொருபுனல் புரவல, வாழி!*
*கன்னற் றமிழின் காவல, வாழி!*
*வஞ்சியார், சேரலர், வானவர், வில்லவர்*
*தஞ்சை அடைந்து தங்கள் துணையாய்*
*ஆற்றுக கடனென அனுப்பினர் என்னை;*
*மாற்றெதும் ஆற்றலேன் மாசறு மன்னவ.*

**விசயாலயன் :**

*வாழ்க வீர, வளர்க நின்றிறம்!*
*தாழ்விலா நட்பினர், தகைசால் சேரலர்*
*நலமென நம்புவன்?*

**விக்கியண்ணன் :**

*நலமே முற்றும்;*
*பலர்புகழ் சோழர் பார்வைக் கென்றவர்*
*எழுதிய ஓலையை இழந்தேன் வழியில்!*
*பழுதுடைத் தென்செயல்; பரவுவன், பொறுத்தருள்.*

**கடம்ப மாதேவி :**

*தந்தையே, இதோவத் தவறிய ஓலை;*
*வந்ததும் அளிக்க வாய்த்திட இல்லை.*

*(ஓலையைப் பெற்ற விசயாலயன் ஓலையைப் பிரித்துப் பார்த்து விட்டுப் பின்னர் உரக்கப் படிக்கிறார்.)*

**விசயாலயன் :**

*அதிராச் சிறப்பின் ஆர்த்தெழு சோழ,*
*முதிரா எண்ண மூத்தோய், வாழ்க.*
*ஓலை ஏந்தி உடன்வந் துள்ளோன்*
*பாலை ஆற்றிடை[10] பருகுநீர் அன்னோன்!*
*விக்கி யண்ணன் வேளிர் தோன்றல்;*
*தக்கோன், முற்றத் தமிழ்மறை கற்றோன்;*
*கற்றோர் போற்றும் கவிவலன்; கனன்றால்,*
*நிற்போர் நிலனில்; நிற்பின், நீந்தார்[11]!*
*அரசியல், சூழ்ச்சி, அறமுறை ஆய்ந்தோன்;*
*உரனுடை வளவர் உள்ளுவ முடிக்கும்*
*திண்ணிய நெஞ்சினன்; தெளிந்த சிந்தையன்;*
*எண்ணரு பண்பினன்; எளியன்; இனியன்;*
*எடுத்ததை முடிக்கும் இயல்பினன்; வலியன்;*
*புடம்போட் டெடுத்த பொன்னின் நல்லோன்;*
*கொண்டவன் திறனனி கொள்கையை முடிக்க!*
*பண்டைச் சோழர் பல்புகழ் நிலைக்க,*
*அயரா துழைக்கும் அண்ணலே,*
*இயலும் இவனால் எண்ணிய இனிதே!*

## காட்சி : 7

**இடம்** : வண்டார்குழலியின் படுக்கை அறை.
**காலம்** : நள்ளிரவு.
**உறுப்பினர்** : வண்டார்குழலி, விக்கியண்ணன், பணிப்பெண் செந்தாமரை.
**சூழல்** : வண்டார்குழலி யாழ் இசைத்தபடி மனம் உருகப் பாடிக் கொண்டு இருக்கிறாள்.

**வண்டார்குழலி :**

*(எடுப்பு)*

ஆவதும் அழிவதும் உன்னருள் ஆகும் — நான்
நோவதும் மகிழ்வதும் என்பொருள் ஆகும்?

(ஆவதும்)

*(தொடுப்பு)*

சேவடி பொருளாய் நான்தினம் துதிப்பேன் — உன்
சீற்றமும் அருளாய் நான்நனி மதிப்பேன்;
யாவுநீ எனக்கே; ஏனெனை வெறுத்தாய்? — என்
இன்னுயிர் அளித்தே ஏனுடன் பறித்தாய்?

(ஆவதும்)

*(கண்ணிகள்)*

நாண்மலர் கொண்டுனை நாளெலாம் ஏற்றிட
நாடகம் ஆடுவை; நாதனே, வேதனை!
பூண்மலர் ஆடைகள் போற்றிடு பாவொடு
போற்றுவன், ஏற்றலில்; போதுமே வேதனை!

(ஆவதும்)

அம்மையும் அப்பனும் ஆனவன் நீயென,
உம்மையே எப்பவும் ஓம்பினேன் சேயென;
மும்மையும் காத்திடு மூலவ, மேலவ,
இம்மையே வாட்டுவை! எம்மிறை, எம்முறை?

(ஆவதும்)

வேண்டிய உடனருள் வேழவ, காவல,
வெண்மதி அணிந்தளி வென்றிடு காலவ,
வேண்டின மனங்கொள வேலனைச் சேர்த்தனை;
வேதனை உணக்கிட[1] மீண்டுடன் நீக்கினை!

(ஆவதும்)

போற்றும் அடியார் பாட்டும் பணியும்
ஏற்றே அருள்செய் காட்டே, இனியும்
ஆற்றல் அரிதே; ஆகா துணவே;
நோற்றே மடிவேன்; நூலோய், அறிவாய்.

(ஆவதும்)

*(யாழ் மார்பிலே அணைந்திருக்கக் கண்களை மூடி அமர்ந்திருந்த வண்டார்குழலியின் கண்கள் நீரைச் சொரிந்தன. அப்போதுதான் உள்ளே நுழைந்த பணிப்பெண் செந்தாமரை, அவள் நிலை கண்டு பதறுகிறாள்.)*

**செந்தாமரை :**

(நேரிசை ஆசிரியப்பா)

*அம்ம, இங்கென் அடைந்த துயரம்?*
*உம்மருள் விழிகள் உதிர்ப்பதென் நீரை?*
*நிறைமதி முகத்தில் நிழலா? முறையா?*
*குறையெதும் விளைந்ததோ? கூறுக; கூறுக.*

**வண்டார்குழலி :** *(கண்களைத் துடைத்துக் கொண்டு)*

*கூறுவன், கூறுவன்; கூறிட என்னுயிர்க்*
*கூறிடும் கொடுந்துயர் குறையக் கூடும்.*
*எத்தனை ஆண்கள் என்றுணை வேண்டிப்*
*பித்தரே என்னப் பேதுற் றலைந்தனர்!*
*செல்வர், வணிகர், செழுங்குடிப் பிறந்தார்,*
*வல்வில் வீரர், வாட்படைத் தலைவர்,*
*கல்விச் சிறந்தார், கவினழ குடையார்;*
*சொல்லின் நீளும் சூழ்ந்தவர் திறத்தை!*
*அனைத்தும் அறிவாய்; ஆயினும் உரைப்பேன்.*
*நினைத்தும் அறிந்ததில் நேற்று முன்வரை;*
*இன்றோ என்மனம் ஒன்றா துடற்றும்!*
*நன்றோ? தீதோ? நானெதுங் காணேன்;*
*விளக்கை நச்சிடு விட்டில் பூச்சென*
*இளக்குறு எண்ணம் இழைத்திடும் துளக்கம்[2].*
*யாரவர்? என்பெயர்? எக்குடிப் பிறப்பும்?*
*ஊரெது? நாடெது? உறுவினை நறிதோ?*
*நல்லரா? வல்லரா? நற்றுணை யாவரா?*
*சொல்லற் கினியரா? சொந்தமா? பகையா?*
*கோதில் நெஞ்சம் சூதென் கொண்டதும்?*
*யாதுங் காணேன்; ஏதங் கொள்வேன்.*
*அனைத்தும் அவரென அலமரல்[3] உறுவேன்!*
*எனைத்தினி செய்குவன்? எல்லாம் எனக்கவர்!*

**செந்தாமரை :**

*கவலுதல் கழிக; கண்ணீர் ஒழிக!*
*தவலறு[4] உள்ளம் தவிர்த்திடுங் கள்ளம்!*
*நேரிய வேட்கை நிறைவுறல் நிச்சயம்!*

**வண்டார்குழலி :**

*வேரிடத் தூற்றிய விழுநீர் உன்மொழி!*
*யாழினும் இனியநீ இயற்றிய இன்மொழி!*
*வாழிநீ! எனினும் வருந்தித் துடிப்பன்.*
*பகுத்தறி யுணர்வு பதிந்த நாள்முதல்*
*மிகுத்த தறியா மெய்யுணர் வின்றோ,*
*மெழுகென இளகி, மெலியும்; நீளும்!*
*விழுமிய என்னிறை[5] பழுதென் றானது!*
*அலைவுற் றகலா ஐம்புல உணர்வுகள்*
*அலையிடை துரும்பென அவரெதிர் அலைந்திடும்;*
*பொறுத்தற் கில்லை புலன்களின் தொல்லை!*
*சிறப்பிலா செய்து சிறுமைப் படுத்தும்.*

**செந்தாமரை :**

*கவலை எதற்கு? காதல் கொண்டோர்*
*எவரும் இந்நிலை எய்தல் இயல்பே!*

**வண்டார்குழலி :**

*இயல்போ? அயல்போ? இன்றெனைக் கொல்வதும்*
*உயர்தனிக் காதலா? உடன்றெரி காமமா?*

**செந்தாமரை :**

*காதலும் காமமும் கணிப்பின் ஒன்றே.*
*காதலே காமம்; காமமே காதல்!*

**வண்டார்குழலி :**

*நன்றிலை உன்னுரை; நாடின், காதல்*
*இன்றியும் காமம் ஒன்றிடும்; வென்றிடும்.*
*எழுத்திலா மொழிகள் இயங்கக் காண்கிறோம்;*
*மொழியிலா எழுத்தோ? முயலின் கொம்பே!*
*செழுமலர்க் கண்ணாய், சேர்ந்தெனைப் பிணித்ததும்*
*கருதின், காதலா? காமமா? கலவையா?*

**செந்தாமரை :**

*ஒருவன் ஒருத்தி உள்ளத் தொடர்பால்*
*தோன்றிய அன்பில் தோய்ந்த உறவில்*
*ஐம்புல நுகர்வைச்சற் றப்புறம் வைத்துப்*
*பைம்புனல் வாடு பயிரிடை பாய்வதாம்*
*நெஞ்சங் களொன்று நிலையே காதல்!*
*அஞ்சு புலன்கள் ஆசை தலையாய்*
*முன்னே நிற்கப் பின்னே உள்ளத்*
*தொடர்பு நிற்பதாய்த் தோற்றங் காட்டும்*
*கழிபெரு இன்பமே காமம் ஆகும்.*

**வண்டார்குழலி :**

*எழிலுற மொழிந்தனை! இனிமை! இனிமை!*

**செந்தாமரை :**

*வீட்டுத் தீயென விளங்கில் காதல்,*
*காட்டுத் தீயே காமம்; காண்க.*

**வண்டார்குழலி :**

*கோடை வெம்மைக் கொடுமை தணிக்கும்*
*ஓடை நீராய் உளதுன் பேச்சும்!*
*எண்ணிப் பல்வழி இடருறும் என்னுளம்*
*பண்ணாம் உன்மொழி பருகி மகிழும்.*

**செந்தாமரை :**

*கணிகையர் குலத்தில் கண்ணகி அனையாய்,*
*மணிகளில் நீயொரு மாமணி இணையாய்!*
*ஒருத்திக் கொருவன் உன்றன் பெற்றி!*
*வருத்திக் கொளலென்? வாய்க்கும் வெற்றி.*

**வண்டார்குழலி :**

*நன்றி; தாமரை, நன்றி; நன்றி.*
*என்றவர் நெஞ்சில் எய்துவன் யானும்?*
*இல்லக் கிழத்தியாய் இன்பங் கூடுமோ?*

**செந்தாமரை :**

*நல்லவை கொண்டிடின் அல்லவை அண்டிடா!*
*வந்த வழியிடை வந்துனைக் காத்தவர்*
*சொந்தம் உனக்கே; துணையாய்க் கொள்வார்.*

**வண்டார்குழலி :**

*புதியர் அவரெனைப் புரிந்து கொள்வரோ?*
*எதிரே என்குலம் இடையே தடையாய்*
*இருப்பின் என்னுயிர்? எண்ணவே துன்பம்!*
*நெருப்பில் சிறுதுளி நீராய் நீங்கும்.*

*(வெளிக்கதவு தட்டப்படும் ஓசை எழுகிறது.)*

**செந்தாமரை :**

*இந்த வேளை வந்துளர் யாவர்?*
*செந்தளிர் அனையோய், சேர்க உறக்கம்.*

*(செந்தாமரை அறைக் கதவை மூடிக் கொண்டு வெளியே செல்கிறாள். வண்டார்குழலி யாழினைப் பக்கம் வைத்துவிட்டு எழுகிறாள். நடந்து, எரிவிளக்கைத் சிறிதாகத் தணித்துவிட்டுப் படுக்கையை நாடுகிறாள். சற்றைக்கெலாம் கதவைத் திறந்து கொண்டு செந்தாமரை உள்ளே விரைந்து வருகிறாள்.)*

**செந்தாமரை :**

*அம்ம, வாழி! அவரே வந்துளார்!*
*உம்முயிர் உள்ளுறை உயர்தனி வீரரை*
*முன்னறை இருத்தினேன்; மொழிந்திடின் அனுப்புவன்.*

**வண்டார்குழலி :**

*என்னடி தாமரை? இன்னா இழைத்தனை!*
*உயிரை நீங்கியும் உடலம் உறைவதோ?*

**செந்தாமரை :**

*செயிரிலா[6] உளத்தீர், செய்கை பொறுக்க.*
*நிறைய குடித்துள நிலைமை கருதியே*
*அறைவெளி அமர்த்தி அடைந்தேன் விரைந்து.*

*(விக்கியண்ணன் அப்போது அங்கே உள்ளே வருகிறான்.)*

**வண்டார்குழலி :**

*வருக, வருக; வந்திங் கமர்க.*

*(செந்தாமரை கதவை மூடிக்கொண்டு வெளியேறுகிறாள்.)*

**விக்கியண்ணன் :**

*உருகல் வேண்டா; உன்திறம் அறிகுவன்!*
*உள்ளொன் றெண்ணிப் புறமொன் றாற்றும்*
*கள்ள மனத்தினள்.*

*(வண்டார்குழலி வாட்டங் கொள்கிறாள்; தன் காதுகளைக் கைகளால் மூடிக் கொள்கிறாள்.)*

**வண்டார்குழலி :**

*கடிந்தது போதும்!*
*ஏதும் அறியாப் பேதை நானாம்;*
*சூதும் நெஞ்சைச் சூழ்வதோ? நாணாம்.*

**விக்கியண்ணன் :**

*உருவைப் போன்றே உளதுன் பேச்சு!*
*திருவுடை சோழ தேவரைக்[7] கொல்ல*
*வாளை எறிந்தவன் வந்ததேன் இம்மனை?*
*ஆளை மயக்கும் அழகுடன் நாடக*
*ஆற்றலும் வாய்ந்தோய், அறிவேன் அனைத்தும்.*

**வண்டார்குழலி :**

*வேற்றுவர் ஒப்பச் சாற்றலென் பழியை?*
*தீங்கினைக் கனவிலும் தேரேன், தெளிக.*

**விக்கியண்ணன் :**

*ஈங்குநான் முன்னர் எய்திய தெங்ஙனம்?*
*அறிவை அன்றோ?*

**வண்டார்குழலி :**

*அறியேன்; ஆமாம்,*
*வெறிகமழ்[8] உள்ளறை மேவிய தெப்படி?*
*காவலர், பணியினர் கணக்கின் றிருக்க*
*யாவரும் அறியா தெய்திய தெவ்விதம்?*

**விக்கியண்ணன் :**

*மறைவழி அறையிடை உறைவதை மறைப்பதென்?*
*குறையுள குலத்துக் குணமிலி, கூறுதி.*

**வண்டார்குழலி :**

*குலத்தின் அளவே குணமாம் என்றெனை*
*நலம்பட இழித்து நகைப்பீர்; நன்றோ?*
*பொருவில்[9] இறையுயிர் போக்கிட முயன்றோன்*
*இருளிடை இவ்வகம் பொருந்திய செய்கையோ,*
*உரனுடை நீங்கள் உள்ளறை சேர்ந்ததோ,*
*கரவமை வழிமனை இருந்திடு உண்மையோ,*
*ஏதும் நானிவண் இம்மியும் அறியேன்.*
*போதும் பழித்ததும்; புரிந்தெனைப் போற்றுக.*
*அருளே உருவாய் அமைந்த அன்பர்*
*திருவாய், உயிராய்ச் சிறந்தீர் எனக்கு.*
*மருளிலை மனத்தில்; மாற்றமில் குணத்தில்!*
*இருளில் ஒளியீர், ஏற்பீர் என்னுரை.*

*(வண்டார்குழலியின் கண்கள் நீரைக் கொட்டுகின்றன. விக்கியண்ணன் பல வினாடிகள் அவள் முகத்தைப் பார்த்தவாறு திகைத்து நிற்கிறான். பின்னர், அவளருகே நெருங்கிக் கைகளை மெல்லப் பற்றுகிறான். வண்டார்குழலி விக்கியண்ணனை ஓரக் கண்ணால் ஏறிட்டுப் பார்க்கிறாள்.)*

**விக்கியண்ணன் :**

*வண்டார் குழலி, வார்த்தெடு வடிவே,*
*உண்டகள் மயக்கால் உனைநான் சினந்தேன்.*
*மாசறு பொன்நீ; மறுவிலா மணிநீ;*
*வீசிளந் தென்றல்நீ; விளங்கிடு நிலவுநீ;*
*கோதிலாக் கனியுநீ; கொற்கை முத்துநீ;*
*சூதிலா உளமுநீ; சுவையளி தமிழுநீ;*
*தள்ளா அமுதுநீ; தண்டமிழ்ப் பாட்டுநீ;*
*உள்ளார் உணர்வுநீ; உயிரின் உயிருநீ;*
*இல்லார்க் களியை[10]நீ; இருப்போர்க் கரணுநீ;*
*எல்லார்க் கினியைநீ; என்னுயிர் அனையைநீ;*
*முறையிலா திங்குநான் மொழிந்த அனைத்தும்*
*குறையுடைத் தென்பதைக் கொண்டேன் தெளிவாய்.*
*அனிச்சம் அன்ன அழகு முகத்தில்*
*இனியெந் நாளும் இன்னகை யன்றி*
*மற்றெக் குறிப்பும் உற்றிட விட்டிடேன்;*
*பற்றென உனையே பற்றினேன் முற்றாய்!*
*நன்றென உன்மடி நச்சினேன்[11];*
*என்றுமுன் துணையென ஏற்றிடு இணைந்தே.*

*(வெள்ளி நிலா அங்கு அரங்கேறிய விளையாட்டைக் கண்டு வெட்கம் கொண்டது. ஒன்றிய உடல்கள் ஊடே செல்ல வழி இன்றித் தென்றல் காற்றோ, திகைத்துத் திசை மாறிச் சென்றது.)*

## காட்சி : 8

**இடம்** : *இளவரசி கடம்ப மாதேவியின் மாளிகைக் கூடம்.*

**காலம்** : *பிற்பகல்.*

**உறுப்பினர்** : *கடம்பமாதேவி, நாங்கூர் வேள், செங்கண்ணன், பல்லவரையன்,கடிய நெடுவேட்டுவன்.சேசந்தன் கீரன்.*

**சூழல்** : *அனைவரும் ஒன்றுகூடி அரசியல் குறித்து ஆய்ந்துகொண்டு இருக்கின்றனர்.*

**நாங்கூர் வேள் :**

*(நேரிசை ஆசிரியப்பா)*

*ஒற்றர் தலைவர் முற்றும் ஓர்ந்து*
*கற்றதைச் சற்றும் கசடற நம்மிடை*
*உரைத்துளர்; அதனால், உலைவுறும் நம்முளம்.*
*நரைத்துத் திரைத்து நாடி தளர்ந்தும்*
*தலைமைப் பொறுப்பைத் தாங்கும் என்றன்*
*நிலைமையோ இங்கு நேரிய தில்லை.*

**செங்கண்ணன் :**

*உங்களை நம்பியே உள்ளோம் நாங்கள்.*
*எங்கும் குழப்பம் எழுந்திடு நிலைமை!*
*சேந்தன் கீரன் சேர்த்த செய்தி*
*அமையின் தவறாய்ச் சுமைபல குறையும்;*

**சேந்தன் கீரன் :**

*பாண்டியர் படைகள் ஆண்டுகள் பலவாய்ப்*
*போரெதும் இன்றிச் சீரொடு சிறந்து*
*படர்ந்த ஆலெனப் பல்கிளைப் புடைத்து!*
*தொடர்ந்து போரே தொழிலாய்க் கொண்ட*
*நம்படை? எண்ணின் நாணம் மிகுக்கும்!*
*அம்மையார், அறிவமை அரசிளங் குமரியார்*
*சேர்த்திடு ஊக்கமே சோர்ந்திடு சோழ*
*வீரரை உயர்த்தி மேரென நிறுத்தும்.*

**கடம்ப மாதேவி :**

*புகழ்சொற் போதும்; போற்றல் தவிர்க.*
*மகிழ்தற் கில்லை மன்னர் நடத்தை!*
*தஞ்சையைக் கொள்ளத் தம்மால் இயன்ற*
*வஞ்சனை புரிந்தும் வாய்க்கா நிலையில்*
*வல்லத் தரையர் மெல்ல நகரில்*
*குழப்பம் விளைத்திடு பழிதமை விதைப்பார்;*
*அரையரின் படையையே அடக்கா நம்படை*
*பாண்டியர் தம்மொடு மூண்டிடு போரில்*
*முற்றும் அழிய இற்றென் றாகும்;*
*ஓரிரு நாட்களும் நேரெதிர் நில்லா!*

**சேந்தன் கீரன் :**

*பல்லவர் நோக்கமும் நல்லதற் கில்லை!*
*மண்பகை மறந்து மணவுற வவாவிப்*
*பாண்டிய ரோடு பழக முயல்வர்;*
*வேண்டினும் துணைக்கு மேவிடார்; உறுதி!*
*நிலைமை ஓர்ந்திடின் நெஞ்சம் வலிக்கும்!*
*இலைமறை காயிலை; யாரும் அறிவர்;*
*இப்படி இருக்க எப்படி அரசர்*
*தப்பாய்ப் புதியனைத் தலைவர் ஆக்கினார்?*

**செங்கண்ணன் :**

*எல்லார் குறையும் இஃதே யாகும்!*
*கொல்லே றனைய நல்லோர், வல்லோர்*
*உடல்பொருள் உயிரோ டொருங்கே அனைத்தும்*
*கடனென அரசர் காலடி நிறுத்திப்*
*பன்னெடுங் காலமாய்ப் பட்டிடு பாட்டை*
*மன்னர் மறப்பதா? மாற்றமென் உற்றதும்?*
*ஆட்சி சார்ந்த அனைத்துப் பொறுப்பையும்*
*நேற்று வந்தவன் ஏற்றிடப் பொறுப்பதா?*
*புதியன் ஆணையை விதியென் றெம்மனோர்*
*பொறுத்திடல் எங்ஙனம்? வெறுத்தெழும் சீற்றம்!*

**நாங்கூர் வேள் :**

முறையிலை செங்கணா; முரண்படல் தீது!
நிறைவிலை எனினும் நேரில் அரசர்
ஆணைக் குட்படல் அலுவலர்க் கறமாம்.
வீணை எழுவிசை வெற்றாள் உணரார்!
உரனுடை சோழர் உள்ளமை சூழ்ச்சித்
திறமுழு தறிவார் தேவியர் மட்டே!

**கடம்ப மாதேவி :**

என்னைக் கலக்கா தெந்த முடிவும்
முன்னம் எடுக்கா மன்னர் இன்றோ,
தனித்தே எடுப்பார்; தனிமை வேட்பார்.
குனித்த புருவம் கொண்ட துயரைக்
குறிப்பாய் உரைக்கும்; கூறார் திறந்து!
வெறுப்பார் நிலையில் வேந்தர் உள்ளார்.
எனக்குள கவலை எந்தையைப் பற்றியே!
மனக்குறை எத்துணை மலையென இருப்பின்
சூழ்ச்சித் திறனுடை சோழ மன்னர்
வீழ்ச்சி உறத்தகு வினையினைக் கொள்வார்!
மதுவும் மாதும் மயக்கிட மயங்கும்
புதியரோ தலைமைப் பொறுப்பிற் குரியர்?
தெளிவிலா தென்னுளம் திகைக்கும்; திணரும்;
அளிதே[1] சோழர் ஆட்சி முறைமை!

**நாங்கூர் வேள் :**

தேவியார் நினைப்பின் யாவும் தேனாம்.

**கடம்ப மாதேவி :**

ஆவலாய் உள்ளேன், அறைக; கேட்பேன்.

**நாங்கூர் வேள் :**

தோள்வலி அன்றித் துணைவலி இன்றிலை;
வாள்வலி மட்டுமே வழங்கா வெற்றியை!
பதினெட் டாண்டுமுன் பாண்டியர்க் கெதிராய்
அரிசில் ஆற்றங் கரையமை அமரில்
பல்லவ இலங்கைப் படைகள் தம்முடன்
சிற்றர சுகள்பல சேர்ந்து முயன்று
வெற்றி பெற்றதும் வியத்தகு செயலே!
திரமிகு தென்னர் வரகுண பாண்டியர்
உரனுடை படைமுன் ஒருநாள் போதுள்
சோழச் சிறுபடை தோற்பது தேற்றம்[2]!
ஊழிப் பெருவளி ஒப்பும் அவர்படை!

**கடம்ப மாதேவி :**

அரைத்ததை மீண்டும் அரைத்தல் வேண்டா;
திரையிங் கெதற்கு? தெரிய உரைக்க.

**நாங்கூர் வேள் :**

பாண்டிய இளவல் பராந்தகர், பார்ப்போர்
காண்டற் கினிய கவினழ குடையர்;
தேவியர் உறவை மேவினர் முன்னரே!
தா[3]வின் றேற்பின்; தனிநீர் அறிவீர்.

**கடம்ப மாதேவி :**

*நகுதற் குரித்தும் நலனில் பேச்சு!*
*தகுமெனில் யானும் தடுப்பனோ? இல்லை.*
*போதும் அமைச்சரே, புலம்பல் போதும்;*
*ஏதமில் பொருளுளின் இயம்புக மேலே.*

**செங்கண்ணன் :**

*இகலுடை வேந்தரை எதிர்கொள இயலேல்*
*மகளிரை மணந்தரல் மரபே; வழியே!*
*எள்ளற் கிதிலெதும் எள்ளள வில்லை;*
*தள்ளற் றவறு; தக்கதே, சரியே!*

**நாங்கூர் வேள் :**

*பல்லவ இளவலும் நல்லரே; வல்லரே!*
*மணப்பினும் அவரைப் புணர்ந்திடும்[4] நினைப்பும்.*

**கடம்ப மாதேவி :**

*அடுத்தென் செய்கென முடிவொன் றெடுத்திட*
*மடுத்தனம் இங்கே; விடுத்தெதும் இல்லை.*
*மாற்றலர்[5] தம்முடன் மணவுற வேற்பதைக்*
*கூற்றே கூடினும் ஆற்றேன் என்றும்!*
*அனைத்தும் உணர்ந்த அறிவுடை அமைச்சரே,*
*எனைத்திவண் உளறல்? ஏற்றமில் கூற்றில்!*

**நாங்கூர் வேள் :**

*மனத்தில் பட்டதை மறைக்கா துரைத்தேன்;*
*சினத்தல் வேண்டா; சீற்றம் தணிக.*
*ஆட்சி நலனில் அக்கறை உள்ளார்*
*காட்சி யளவினும் காணேன் உங்களின்!*
*தேவியர் ஆசையைத் தீர்த்திடக் கொண்ட*
*ஆவலில் அன்றோ அமர்பல உடற்றி*
*விசயா லயரும் வேல்வாள் தழுவித்*
*தொண்ணூ றாறும் புண்ணெனக் கொண்டார்!*
*உங்கள் நினைப்பே உயிர்வாழ் நோக்கென*
*இங்குளர் யாவரும் தங்கடன் இறுப்பர்[6].*

**கடம்ப மாதேவி :**

*நன்குநான் அறிவேன்; நன்றி; நன்றி!*
*பொன்றினும்[7] உங்கள் போற்றலை மறவேன்.*
*என்றுமிச் சோழர் எழுச்சியே மூச்சாய்*
*என்றிரு என்றன் எண்ணத்திற் கெதிராய்*
*எப்படி நீங்கள் தப்பாய் உரைக்கலாம்?*

**நாங்கூர் வேள் :**

*எப்படித் தாயே, செப்புக தெரிய.*

**கடம்ப மாதேவி :**

*தெரிந்து தேர்ந்தும் தெரியார் ஒப்பப்*
*புரிந்து நேர்ந்தும் புரியார் போல*
*வறிதே[8] கேட்பீர், வருத்தம் சேர்ப்பீர்;*
*அறியார் இவர்க்கென் அகந்திறந் துரைப்பேன்.*
*'வண்புகழ் மூவர் தண்பொழில் வைப்பு!'*
*'முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரித்து!'*

*நினைக்க நினைக்க நெஞ்சம் உறுத்தும்!*
*இனைத்தென அளவரு இன்னல் வருத்தும்!*
*சோழர் தொல்புகழ் ஊழதோ தொலைந்ததும்?*
*சிற்றர சாக உற்றேன் இளைத்ததும்?*
*அடங்கி ஒடுங்கி ஆட்சி நடத்தவோ?*
*நடுங்கிச் சோர்வதோ? நாணமே! நாணமே!*

*(பல வினாடிகள் அங்கு யாரும் பேச்சைத் தொடரவில்லை; முழு அமைதி தவழ்கிறது. மீண்டும் கடம்ப மாதேவியே பேச்சைத் தொடர்கிறார்.)*

**கடம்ப மாதேவி :**

*சோழ நாடு சோழர்க் குரித்தாய்*
*மாண்ட பெருமைகள் மீண்டிட வேண்டும்!*
*அண்டை நாட்டுடை அடிமண் ணளவும்*
*கொண்டிட ஆசை கொண்டிலன் நெஞ்சில்!*
*நமக்குரி நாட்டை நாமடை யாது*
*வாழ்தலோ? சீச்சீ! வீழ்வதே மீட்சி!*
*திறையென யார்க்கும் தினையள வுடையவும்*
*தருதல் இல்லா அருநிலை வேண்டும்!*
*அடுத்தவர் ஆணைக் கடங்காத் தனிநிலை*
*அடுத்தல் கூடுமேல் அளிப்பேன் என்னையே.*
*பிணக்குடை வேந்தர் பிறப்புள் ஒருவரை*
*மணக்கத் தடையிலை; மணப்பின் சோழர்*
*தனிப்பெரும் ஆட்சி தளிர்க்குமா? நிலைக்குமா?*
*அணியம்[9] யானே; அமைச்சரே, சரியா?*
*சிந்தனை எதற்கு? செய்வ துரைக்க.*
*அந்தி நெருங்கும்; அறைக முடிபே.*

**நாங்கூர் வேள் :**

*சிந்தனை செய்யவும் திறமிலா எமக்குக்*
*கானிருள் தனிலொரு வானிலா ஒப்ப*
*வாய்த்தீர் நீங்கள் வழிகாட் டியாக!*
*ஓய்ந்து போயின உள்ளமும் உடலும்!*
*இரவில் உறக்கமோ இம்மியும் இல்லை.*
*அரசர் நிலைமையும் அஃதே; அளிதே!*

**கடிய நெடுவேட்டுவன்:**

*உண்மை, உண்மை; உரைத்தவை உண்மையே.*
*கண்ணிமை ஒப்பக் கட்டிக் காத்த*
*சோழர் ஆட்சி தொடர்ந்து நிலைத்தல்*
*சூழுமோ? அன்றி வீழுமோ? என்ற*
*கவலையே மன்னரைக் கரைக்கும்; குறைக்கும்!*
*ஆட்சிப் பொறுப்பில் ஆதித்தர் சற்றும்*
*காட்டார் அக்கறை; காவலர் கவல்வார்.*

**கடம்ப மாதேவி:**

*வாணாள் முழுதும் வாளே துணையாய்ப்*
*பேணார் இடையே பேணிய ஆட்சி,*
*அவருள பொழுதே அழியும் என்றால்*
*கவலை, கலக்கம் கௌவுதல் வியப்போ?*
*நொந்துளர் நோயால், நுவலார்;*
*நந்துணை இலையெனில் நைந்திடல் இயல்பே!*

# காட்சி : 9

**இடம்** : கடம்ப மாதேவி அரண்மனை சார்ந்த தோட்டம்.

**காலம்** : முன்மாலைப் பொழுது.

**உறுப்பினர்** : விக்கியண்ணன், ஆதித்தன், கடம்ப மாதேவி, நாங்கூர் வேள், மாதேவி, செங்கண்ணர், பல்லவரையர், கடிய நெடுவேட்டுவன்.

**சூழல்** : இளவரசன் ஆதித்தன் அமைச்சர் மகள் மாதேவிக்கு வாட்பயிற்சி அளித்துக் கொண்டிருக்க, அங்கு வந்த விக்கியண்ணன் அப்பயிற்சி கண்டு கைதட்டிச் சிரிக்க, ஆதித்தனும் மாதேவியும் வியந்து அவனைப் பார்க்கின்றனர்.

**விக்கியண்ணன்** : *(சிரித்தபடி)*

*(நேரிசை ஆசிரியப்பா)*

*எத்துணைச் சிறப்புடை எழில்மிகு காட்சி!*
*கத்திகள் கொண்டிவண் கவினுறு பயிற்சி!*
*வாட்கள் இம்மியும் வடுவுறா வகையில்*
*பயிற்சி கொள்ளும் முயற்சி வாழ்க!*

**ஆதித்தன்** :

*யாரே நீவீர்? என்னிவண் நேர்ந்ததும்?*

**விக்கியண்ணன்:**

*நானோ புதியன்.*

**ஆதித்தன்:**

*நன்கு புரிந்தது.*
*ஏளனச் சிரிப்பும் இகழ்ந்த பேச்சும்*
*ஆளன் என்னை அறிந்தார் புரியார்.*

**விக்கியண்ணன்:**

*உண்மை வீரன் புன்மை புரியான்.*

**ஆதித்தன்:**

*இடையில் வாளொன் றுடையார் என்பதால்*
*வீரரென் றொருவரைத் தேரிடல் இல்லை.*

**விக்கியண்ணன்:**

*உரைமொழி யுண்மையே; ஒவ்வா தென்வரை!*
*வரையிலாப் பயிற்சி குறையற உடையன்.*

**ஆதித்தன்:**

*நன்று, நன்று; மிகமிக நன்று!*
*குன்றனை தோளீர், கொள்க வாளை.*

*(விக்கியண்ணன் வாய்விட்டுச் சிரிக்கிறான்.)*

**ஆதித்தன் :**

*சிறுநகை எதற்காம்? உருவுக வாளே!*

*(ஆதித்தன் பேச்சில் சினம் சிதறுகிறது.)*

**விக்கியண்ணன் :**

*சிறுவரை எதிர்த்துச் செய்கேன் வாட்போர்.*

**ஆதித்தன் :**

*யானோ சிறுவன்? ஏளனம் இன்னுமோ?*

**விக்கியண்ணன் :**

*பேணார் சினத்தைப் பிள்ளைகள் அன்றோ!*
*வளர்ச்சி என்பது வடிவில் மட்டுமில்;*
*உளத்தின் உயர்வும் ஒருங்குடன் வேண்டும்.*

**ஆதித்தன் :**

*வீரராம் நீரெனில் வெற்றுரை வேண்டா;*
*கூருடை என்வாள் கூறிடும் நெஞ்சை!*

**விக்கியண்ணன்:**

*வேண்டா, வேண்டா; விளையாட் டாகவும்*
*பயிற்சி கொள்ளும் முயற்சி வேண்டா.*

*(ஆதித்தன் வாளை ஓங்கி வீசுகிறான். வேறு வழியின்றி விக்கியண்ணன் தற்காப்பிற்காக வாளை உருவித் தடுக்கிறான். சினத்தின் உச்சியில் இருந்த ஆதித்தன் வாட்போரிடையே தடுமாறி விழ, விக்கியண்ணனின் வாளால் கையில் வெட்டப் பெறுகிறான். குருதி சிந்த, ஆதித்தன் மலைத்து நிற்க, மாதேவி ஆதித்தனை மார்பில் தாங்கியவாறு அலறுகிறாள்; உள்ளே உள்ளவர்களை உதவிக்கு அழைக்கிறாள்.)*

**மாதேவி :**

*அக்கா! அக்கா! அரத்தம்! அரத்தம்!*
*தக்க தாற்றச் சடிதி வருக!*

*(மாளிகையினின்றும் குழுமியிருந்த அனைவரும் விரைந்து அங்கு வந்து சேர்கின்றனர். குருதி வழிய ஆதித்தன் குழம்பிக் கிடப்பதையும் அரத்தக் கறை படிந்த வாளொடு விக்கியண்ணன் பக்கம் நிற்பதையும் கண்ட கடம்ப மாதேவி சினம் கொள்கிறாள். இளவரசன் ஆதித்தற்கு ஏற்பட்ட இன்னலைக் கண்ட படைத் தலைவர் நால்வரும் உருவிய வாட்களோடு விக்கியண்ணனைத் தாக்கப் பாய்கின்றனர். அப்போதும் மெல்லச் சிரித்தபடி நின்று கொண்டிருந்த விக்கியண்ணனை, ஆதித்தன் மட்டுமன்றி அங்கிருந்த அனைவருமே வியந்து பார்க்கின்றனர்.)*

**விக்கியண்ணன் :**

*இளவல் தாங்கள்; இதற்கு முன்னர்க்*
*களமெதும் கண்டதில்; காண்க கண்ணெதிர்!*

*(விக்கியண்ணன் வாளொடு படைத் தலைவர்களை எதிர் கொள்கிறான். தனியொருவனாய் ஆற்றல் மிக்க நால்வரொடு வாட்போரிடும் அவன் வல்லமையைக் கண்டு மற்றனைவரும் வியந்து நிற்கின்றனர்.)*

**விக்கியண்ணன்:**

*எத்தனை பேருடன் றெதிர்த்த நிலையிலும்*
*சித்தம் சிறிதும் திரிதல் இன்றி*
*ஐந்தல புலன்கள்; அனைத்தும் ஒன்றெனத்*
*தந்திறன் முற்றும் தகுவழி தகுவழிக்*
*கால்களும் கண்களும் கறங்கென வாளொடு*
*கால்கொளச் சுழன்று கருதிய வாறெலாம்*

எந்திர இயக்கம் என்றிட இயங்க,
வந்திழி மின்னலாய் முந்துற மின்னி
வாணுனி இடியென வல்லிதின் தாக்கிடக்
காணலாம் வெற்றி; காட்டுவன், காண்க.

(விக்கியண்ணனின் வாளின் விரைவுக்கு ஈடு கொடுக்க இயலாப் பல்லவரையனின் வாள், அவன் கையினின்றும் விடுபட்டுப் பறக்கிறது. அதைக் கண்ட மற்ற மூவரும் ஒரு கணம் திகைத்து நிற்க, அக்கணமும் நிற்காத விக்கியண்ணனின் வாள் செங்கண்ணனின் வாளை மோதிச் சிதைக்கிறது. மற்ற அனைவரும் மேலும் செய்வதறியாது திகைத்து நிற்க, விக்கியண்ணன் தன் வாளை உறையுள் சேர்த்தவனாய் இளவரசன் ஆதித்தனை நோக்கிப் பேசுகிறான்.)

**விக்கியண்ணன்:**

வேழமாம் எம்மரு விசயா லயர்தம்
சோழர் குலத்துத் தோன்றலே, எழுக.
கற்றிடப் போர்முறை கணக்கில; யானுரை
சொற்படி பயிற்சி சூழ்ந்திடில் இன்னும்
திங்கள் இரண்டுள் உங்கள் திறமை
இங்குளோர் யாரும் ஏற்றிட இயைந்திடும்.
இந்த நாடும் இளவல் நீங்களும்
ஈடிணை இல்லாப் பீடுறல் இயல்பே!
அரசர் ஆசையு மஃதே; ஆதலால்,
இரண்டொரு திங்களுள் இடையறாப் பயிற்சி
கொள்க; குறியாய்க் கொண்டிடின்,
உள்ளுவ உள்ளியாங் குறுவ துறுதியே.

## காட்சி :10

**இடம்** : அவை கூடு தனி நீளறை.

**காலம்** : முன் மாலைப் பொழுது.

**உறுப்பினர்** : விசயாலய சோழர், கடம்ப மாதேவி, நாங்கூர் வேள், விக்கியண்ணன், செங்கண்ணன், பல்லவரையன், சேந்தன் கீரன், அமைச்சர் இளநாகனார், அருளாளர் மற்றும் அரசு அலுவலர் பலர்.

**சூழல்** : விசயாலயர் நடு நாயகமாய் வீற்றிருக்க, மற்றவர் அவரவர் இருக்கைகளில் அமர்ந்து இருக்கின்றனர்.

**விசயாலயர் :**

(பஃறொடைவெண்பா)

ஆட்சி நிலைக்குழு அத்தனை பேருடை
வேட்பிற் கிணங்க விரைந்து நிறைந்துளோம்.
தள்ளா டகவை, தளர்ந்த உடனிலை!
கொள்ளார் திறனனி; குற்றமே கோவிற்கு!
தென்னன் படைநும் திகைப்பை மிகுத்ததும்
தன்னந் தனித்துத் தவிக்கநாம் நேர்ந்ததும்

உந்தி உறுத்த ஒருமித் தனைவரும்
வந்துளீர்; சொல்க வகுத்து.

**அருளாளர் :**

புகரில்[1] அரசே! பொறுத்திடல் வேண்டும்.
நிகருமக் கீடாய் நிலமிதில் உண்டோ?
அரசர்தம் ஆற்றலை ஆரே அறியார்!
உரனுடை மார்பில் ஒளிரும் வடுக்களாம்
புண்களை எண்ணிப் புலவர் புகழ்மொழி,
எண்ணில் இறும்பூ தெமக்கு.

**விசயாலயர் :**

(கலி வெண்பா)

அங்ஙனம் ஆயின் அவையிவண் கூடலென்?

**நன்னிலத்தார் :**

எங்கிவண் நோக்கினும் எல்லாம் குழப்பமே!
மக்கள் மனத்து மயக்கமும் அச்சமும்
ஒக்க நிலைத்துள் உறுத்துவ; வாட்டுவ.
சண்டைக் கெவரும் சளைத்தவர் இன்றுமில்!
அண்டிடு பின்விளைவுக் கஞ்சி அரற்றுவர்!
உற்றுழி வந்துதவற் குற்றவர் ஓர்ந்திடின்,
சிற்றர சென்னும் திறனரும் இல்லை.
இருப்பினும் என்ன? உறுபயன் உண்டா?
வரகுண வர்மரோ, வஞ்ச மனத்தர்!
படையைப் பெருக்கி மிடுக்குடன் நிற்பார்;
இடையில் நடுவாய் இயைந்தவர் பல்லவர்!
இத்தனித் தஞ்சையை எப்படி யாயினும்
முத்தரையர் கொள்ளும் முயற்சியைக் கைவிடார்!
ஆயின், அலையிடை ஆமொரு வேயென[2]
ஆயினம் நாமே; அறியார் உளரோ?
வெள்ளமாம் பாண்டிய வீரப் படையெதிர்
உள்ளின் உதறும் உடம்பு.

**அருளாளர் :**

(இன்னிசை வெண்பா)

ஆட்சிப் பொறுப்பில் அரசர் அமர்ந்தபின்றை
வீட்சியன்றி மீட்சியில்லை; வேந்தர் அறிந்ததே.
மக்கள் நலன்களில் அக்கறை இல்லாட்சி
தக்கதோ? மிக்க தவறு!

(எல்லாரும் அருளாளர் பேச்சால் திடுக்கிட, விசயாலயர் எந்த முக மாற்றமும் இன்றி அமர்ந்திருக்கிறார். அங்கு அப்போது நிலவிய அமைதியைக் கலைப்பவராய் நன்மறையாளர் எழுந்து பேசுகிறார்.)

**நன்மறையாளர் :**

அவையறிந்து பேசா அருளாளர் கூற்றில்
நவை[3]யுண் டெனினுநம் நம்பிக்கைக் குற்றவரே!
கன்னல் கசப்பதில்லை; காவலர்க்குக் காலமெலாம்
என்றும் இனியரே யாம்.

(விசயாலயர் குறுக்கிட்டுப் பேசுகிறார்.)

**விசயாலயர் :**

( பஃறொடை வெண்பா)

நன்று, மறையாள; நானறிவேன் நம்மவரை.
ஒன்றுநீர் மேலே உரைத்திடற்க; இங்குச்
சரியெனப் பட்டதைச் சாற்றுதற் கியார்க்கும்

*உரிமையுண் டானதனால் ஒன்றுந் தவறில்லை.*
*நாட்டு நலனாடும் நல்லோர்நும் நன்மொழிகள்*
*கூட்டும் பெருநிறைவைக் கொள்ளேன் குறைசிறிதும்.*
*அன்ப, அருளாள, அஞ்சற் கெதுவுமில்லை;*
*உள்ளுவ எல்லாம் உரை.*

*(அருளாளர் முதலில் சிறிது தயங்கினாலும் பின்னெழுந்து பேசுகிறார்.)*

**அருளாளர் :**

(கலி வெண்பா)

*போரொன்றே ஆயிடினும் போம்நம் பொருள்வளங்கள்;*
*சீரெல்லாம் நீங்கும், சிதைவுறும்நல் வாழ்க்கை!*
*ஒருபோர்க்கே இந்நிலை! ஓய்வொழி வின்றி*
*இருபதினைந் தாண்டுகள் எண்ணிலாப் போரெனில்?*
*சோழ வளநாடு சோறுடைத்து; முன்னரது!*
*வாழ வழியில்லை; வாட்டும் வறுமைநிலை!*
*பொன்னோ, மணியோ பொருட்கிடங்கில் முற்றுமில்லை.*
*இன்னும் இளைஞர்க் கிருதிங்கள் ஊதியத்தை*
*நாமளிக்க வாய்ப்பின்றி நாளும் நலிகின்றோம்!*
*ஆமஃதே உண்மைநிலை; ஐயோ! அறியார்யார்?*
*மேலும் படைபெருக்க வேண்டுவதோ முன்முயற்சி?*
*வேலன்று வேந்தற்கு வெற்றி தருவதுவும்;*
*தள்ளா வளமும் தளர்தலிலா மக்களுந்தாம்!*
*உள்ளீர் உரைத்தவற்றை; உண்டாமோ இந்நாட்டில்?*
*என்செய்தோம் மக்களுக்காய்? ஏரிகுளம் வெட்டினோமா?*
*கன்னலும் செந்நெல்லும் காய்ந்தழிந்த காலின்றி[4]!*
*நாட்டுநலத் திட்டங்கள் நாமெதையும் செய்ததில்லை;*
*நாட்டம் படைப்பெருக்கம்! நம்பக்கம் மக்களில்லை;*
*கூட்டமாய்க் கூடிக் குழப்பமெங்கும் கூட்டிடுவர்;*
*காட்டுவ கண்கள் கசப்பு.*

*(அருளாளர் அமர்கிறார். அமைதி அங்கு ஆட்கொள்கிறது. விசயாலயரே இறுதியில் மெல்லப் பேசுகிறார்.)*

**விசயாலயர் :**

(கொச்சகக் கலிப்பா)

*உண்மை உரைத்திட்ட; ஓராநாள் ஒன்றுமில்லை.*
*கண்ணனைய மக்கட் கலக்கம் அகற்றுதற்(கு)*
*எண்ணியிங் கெல்லாரும் ஏற்ற முடிபதனைக்*
*கொண்ணீர்[5] எனக்கூறின் கொள்வேன் குறித்துடனே.*

**இளநாகர் :**

*மன்னர்க் கறிவுரையா? மாற்றுக் கருத்தாமா?*
*உன்னர்க்கு முள்ளம் உறுந்துயரம்; உள்ளோமே.*
*முன்னம் பகுத்தாய்ந்து முற்ற முடிவெடுக்கும்*
*நன்னரெம் மன்னர்; நடுவிகவா[6] வல்லோரே!*

**விசயாலயர் :**

*அத்துணை ஆற்றல் அரசர்க் கமையுமேல்*
*இத்தனை ஆன்றவர்[7] இங்கேன் அமைச்சராய்?*
*வித்தகர் உம்சொலின் வேறெதும் மேலதோ?*
*ஒத்திரு நும்முடி போதின்[8] உயர்வே.*

**இளநாகர் :**

(பஃறொடை வெண்பா)

*இன்றைய சூழலில் ஏற்படும் போரெனில்*
*நன்றெனச் சொல்லவும் நம்படை மிக்கிலை.*
*ஒன்னார் படையள வெண்ணற் கிலாதது!*

*தொன்றூர் பகைதரு தூண்டலால் தென்னர்*
*படையைப் பெருக்கிப் பயிற்சியும் ஈவார்!*
*இடையிரு பல்லவர் இங்கெயில்மேற் பூனையாம்.*
*சுற்றி அருகுள மற்றோர் எனிலோநம்*
*அற்றம்[9] கருதி அனைத்தும் புரிவர்!*
*நினைத்திட அச்சம் நெருக்கிடும்; தேரின்*
*எனைத்தும் வழிகண்டோம் இல்.*

**விசயாலயன் :**

*(கலி வெண்பா)*

*அஞ்சுவ தஞ்சல் அரசர்க் கணியெனில்*
*மிஞ்சிடல் மேன்மையில்; மேவும் படுதோல்வி!*
*நம்பிக்கை ஒன்றே நலிவெதையும் போக்கற்கு!*
*நம்புக; நம்பி நடைமேல் இடுக!*
*இளமை முதலாய் இருந்திடும் ஆசை*
*களம்பல காணக் கரணியம் ஆகும்!*
*எதிர்வரா ஏதும் இலமென் றிருப்பின்;*
*விதைத்தல் இலையேல் விளைச்சல் இயல்போ?*
*களம்பல கண்டென்ன? கண்டேனில் ஆசை!*
*உளவழியேல் சொல்க உடன்.*

*(இளநாகர் அவையினர் அனைவரையும் சுற்றி ஒருமுறை பார்த்து விட்டுப் பின்னர் மெல்லப் பேசுகிறார்.)*

**இளநாகர் :**

*(கலி விருத்தம்)*

*அடுத்திடு போர்நமக் காகா ததனால்*
*தடுத்து நிறுத்தல் தகுமென எம்மோர்*
*எடுத்த முடிபாம்; எதிர்த்திடார் யாரும்.*
*அடுத்த நடத்தல் அரசர்க் கழகே.*

**விசயாலயன் :**

*நாகரே, நன்று; நலமே நவின்றிட்ட!*
*ஆகுமோ போருக் கணையிடலும்? நாளும்*
*வேகும் பழியுறை வெஞ்சினம் தென்னரின்*
*ஏகுமோ? இல்லையில்லை; ஏற்படும் போரே.*

**இளநாகர் :**

*அரசர் நினைத்திடில் ஆகுமிங் கெல்லாம்;*
*அருவினை என்பதெம் ஆளுநர்க் கில்லை!*
*உரனுடை தென்னர் உறவினை ஒப்பின்*
*அரணனி உண்டாம்; அகல்வ திகலே!*

**விசயாலயர் :**

*வேண்டா நினைப்பால் விளைவ தெதுவுமில்!*
*பாண்டிய மன்னர் படைவலி மிக்கவர்;*
*வேண்டினும் பெண்தரார்; வேதனை தான்மிகும்!*
*ஆண்டவர் எண்ணம் அறிகுவன் முன்னரே.*

**இளநாகர் :**

*பேரர சுண்மைதான்; பெண்கொடார், ஆயினென்?*
*ஏரிள சோழ இளமக ளார்தமைச்*
*சேரின் மணக்கச் செழியரும் ஓர்ந்திடார்.*
*தேரின் இதனின் சிறந்ததொன் றில்லையே!*

**விசயாலயர் :**

*நன்று நவின்றவையே; நாடா நடைமுறையில்.*

குன்றுங் குலைதலுண்டு; கோடா இளவரசி
என்றும் மனத்தளவில் ஏற்ற முடிபுகளே.
பொன்ற இயைந்திடினும் பூணார் அவருறவே!

**இளநாகர் :**

(குறள் கலிவெண்பா)

மன்னர் எடுத்துரைப்பின் மன்னும் மணவுற(வு)
அன்பிற் கடிபணியார் ஆர்?

**விசயாலயர் :**

மன்னனே ஆயினுநான் மண்ணிலொரு பெண்மகளார்
நன்னலனே நாடு நலன்.

**விக்கியண்ணன் :**

(கலி வெண்பா)

வேந்தர் மணவுறவை வேண்டா எனமறுக்க
ஏந்து புகழார்க் கியைந்த கரணியம்
என்னென்று முன்னர் எடுத்துரைத் துள்ளனரோ?

**அருளாளர் :**

சொன்னதில்லை.

**விக்கியண்ணன் :**

இன்றேனும் சொல்வாரா நாமறிய?

(கடம்பமாதேவி கடுகடுத்த முகத்தோடு பேசுகிறார்.)

**கடம்ப மாதேவி :**

பெண்களிங்குப் பேதையர் அல்லர்; அவரவர்
எண்ணப் படிதாம் இயலும் மணங்களாம்.

**விக்கியண்ணன் :**

மற்றவர்க் குண்மைதான்; மண்ணாள் திருவுடை
கொற்றவர் பெற்ற குலக்கொடிக் கில்லை!
அவர்நினை வாழ்க்கை அரசோ டிணைந்த(து)
உவப்ப மணக்கும் உரிமை அவர்க்கிலை!

**கடம்ப மாதேவி :**

வீண்பேச் செதற்கிவண்? வீர, அமர்கநீர்!
காண்பீர் மகளிரைக் காமப் பொருளாய்!
அடிமையர் அல்லர்யாம்; ஆளப் பிறந்தோர்!
விடுமதை; பேசுக வேறு.

**விசயாலயர்:**

(கலி விருத்தம்)

ஏற்பார் உளமா றியைவதே இல்லறம்;
வேற்றார் விருப்பம் விழுப்பம் விளைத்திடா.
மாற்றார் பகைக்கெதிர் மாற்றெதும் உண்டுகொல்?
சாற்றீர்; தகுமெனின் சாய்ப்போம் பகையையே.

**நன்னிலத்தார்:**

(குறள் வெண்பா)

சொல்வதற்கு மேதுண்டு? சோழர் தனியரசே,
இல்லையினி அல்லலல்லால் இங்கு.

**விசயாலயர்:**

(பஃறொடை வெண்பா)

வருபோர் தவிர்க்கும் வழியிலை என்று

தெரியார் இலரிவர்; தேறியும் இவ்வவை
கூடிய நோக்கினைக் கூறத் தயங்குவீர்.
வாடிட வேண்டா; வருவது நின்றிடா.
குற்றம் இழைத்தது கொற்றமே ஆயினும்
உற்ற துரைப்பரே நற்றுணை ஆவர்!
'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்.'

**அருளாளர்:**

(கலி வெண்பா)

பொறுத்திட வேண்டும் புகழ்மிகு வேந்தே!
உறுத்திடும் எம்மை உயர்விலும் ஆணை:
இளமை முதலாய் இணையாய் இதுநாள்
களம்பல கண்டு களைத்த நிலையில்
அமைச்சராய் இன்றும் அரும்பணி ஆற்றி
இருப்பார் எவரே? இவரினும் மேலாய்,
அகவை அடைந்தும் அகவாழ் வொதுக்கி
இகலிலாச் சோழர் எழுச்சியே மூச்சென
நாளும் உழைத்துழல் நம்மன் மகளலோ!
மூளும் இகலெனில் முன்னே முனையில்
உயிரைக் கொடுத்தும் உறுபகை போக்க
இயைந்தோர் தமக்கோ இணையில், அறிவீர்.
இவணித் தனைபேர் இருந்தும் அருகே,
எவரோ ஒருவற்கிங் கெம்மினும் மேலாய்த்
தலைமைப் பொறுப்பினைத் தந்ததும் ஏனோ?
உலையும் உளமிங் குலர்ந்து.

(அருளாளரின் கூற்றுச் சரியானதே என்பதை ஏற்பதொப்பப் பலரும் தலையை அசைக்கின்றனர்.)

**விசயாலயர் :**

(பஃறொடை வெண்பா)

நன்றியரு ளாளரே, நன்றாம் உரைத்தவை!
என்றன் இடத்தும் இருப்ப தவறுகள்!
காட்சிக் கெளியனாய்க் காழ்மொழி அல்லனாய்
ஆட்சி புரிதல் அரசர்க் கறமாம்!
பிழைத்தனன் போலும்; பிறிதென்? இலையேல்,
விழைத்த பொழுதில் விரைந்தெனைக் கண்டுதாம்
கொண்ட கருத்தினைக் கூறற் கெதுதடை?
உண்டுகொல் ஏதுமங் கூறு?

(எல்லாரும் அமைதி காக்கின்றனர். இளவரசி கடம்ப மாதேவி மெல்லப் பேசுகிறார்.)

**கடம்ப மாதேவி :**

(பஃறொடை வெண்பா)

தந்தையே, இந்தத் தவற்றினை உங்கள்மேல்
உந்திடும் அன்பினால் ஓம்பினேன் நானேதான்.
கள்ளமில் என்செயலில்; காதலில் செய்ததே!
உள்ளும் புறமும் உழைத்துழைத் தோய்ந்த;
நரைதிரை மூப்பால் நமரெ[10]னச் சூழ்ந்த;
உரைசொல் பிறழும்; உணர்வும் மழுங்கும்;
உடனடி ஓய்விவண் உங்கட்குத் தேவை;
இடனறிந்து நின்றேன் இடை.

(விசயாலயர் முகமலர்ந்து இனிது நோக்கிப் பேசுகிறார்.)

**விசயாலயர் :**

*(கலி வெண்பா)*

என்னரு பெண்ணே, இனியோய், இளவரசி!
உன்றன் உளத்தை உணர்வேன், கவலேல்!
இமையென நீயிங் கியற்றுவ யாவும்
நமதரசு மேம்படு நன்மைக் கலவோ!

(அவையினரைச் சுற்றி நோக்கித் தொடர்கிறார்.)

மறைத்தல் இலாது மனத்தில் உளதை
இறைத்திடக் கேட்டியான் எல்லாம் தெளிந்தேன்.
இடிப்பார் இருப்பதில் ஏற்றம் எனக்கே!
விடுப்பேன் மனத்துள் விதையாய்ப் புதைந்துள!
யார்க்கும் இவணுளர்க் கெட்டுணை யேனுமுன்
ஈர்ப்பிலை என்பால், இயல்பே; தகவே!
வினைத்திறன் ஆளுமை வெல்போர் வலிமை
அனைத்தும் அமைந்தோர் அருகே இருந்தும்
புதியனை, முன்னர்ப் பொறுப்பறி யானை
எதுகுறித் திந்நாட் டிறைமைப் பொறுப்பில்
இருத்தினன்? கேட்பீர்; இறை"யென ஏதுமில்!
உள்ளுணர் வுந்தலால் உற்ற முடிவதே!
வெள்ளப் புதுநீர் விழைகயல் பாய்ந்திடும்!
வல்லார் இவரிவண் வாய்த்தார் எனக்கென
எல்லாப் பொறுப்பையும் ஈந்தேன்; பிறிதிலை.
உச்சிருந்து வீழ்வார்க் கொருபிடி கிட்டியதாய்
மிச்சமிரு நம்பிக்கை மேலோங்க வைத்திட்டார்!
வீழ்ந்துவரு சோழர் வெகுண்டார்த்து வெற்றிகண்டு
வாழ்ந்து வளர்ந்திடுவார்; வைய வரலாறாம்!
உள்ளுணர்வென் மட்டில் ஒருநாளும் பொய்த்ததில்லை!
எள்ளற்க, என்னினைப் பீடேறும்; என்றாலும்
உற்ற உயிர்த்துணைவர் உங்களையான் உட்கொண்டு
முற்றமுன் சேர்ந்தாயாக் குற்றம் பொறுத்தருள்க!
விக்கியண்ணன் வீரம் வினைவலி சூழ்ச்சியுடன்
மிக்க படைத்திறன் மேலவர்; ஆனதால்,
என்னை அவராயிங் கியாவரும் ஏற்றிடுக!
மன்னுநம் சோழர் மரபு.

## காட்சி : 11

**இடம்** : இளவரசி கடம்ப மாதேவியின் தனியறை.
**காலம்** : பின் மாலைப் பொழுது.
**உறுப்பினர்** : கடம்ப மாதேவி, ஆதித்தன், செங்கண்ணன்.
**சூழல்** : கடம்ப மாதேவி நடுவே அமர்ந்திருக்க, எதிர் ஆதித்தனும் செங்கண்ணனும் நின்று பேசிக் கொண்டு இருக்கின்றனர்.

**ஆதித்தன் :**

*(நேரிசை ஆசிரியப்பா)*

மறப்பதா? நானா? இறப்ப தினிதே!
அன்னை தன்னின் என்னை அன்பொடு

அறிவு கொளுத்தி நெறிப்படி வளர்த்த
உன்றனின் மேலோர் இன்றெவர் உளரே!

**கடம்ப மாதேவி :**

இதுநாள் வந்தெனை ஏன்முன் காண்கிலை?
எதுவாய் இருப்பினும் என்னைப் பார்க்கா(து)
இருந்த தில்லையே! இன்றோ,
விருந்தென வருகை; வியப்பைத் தருமே.

**ஆதித்தன் :**

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

பொறுத்திடல் வேண்டும்; அக்கா,
　புரிந்திடேன் என்றும் குற்றம்.
வெறுத்திடல் வேண்டா; உன்றன்
　விருப்பமே எனக்கு முற்றும்;
திறத்தினைப் பெருக்கிக் கொள்ளத்
　தேவையாம் பயிற்சி பெற்றும்
சிறப்புறத் தலைமை தாங்கும்
　செய்வினை கற்றுத் தேர்ந்தேன்.

வெல்லரு வீர னாக
　விளங்குவன்; இதுநாள் வேட்கை
ஒல்லை[1]யிங் கமையக் காண்பாய்;
　உண்மன[2] நோக்குங் கூடும்!
எல்லையில் சோழர் ஆட்சி
　ஏற்றிடும் என்கீழ் மாட்சி!
நல்லவர் உன்றன் எண்ணம்
　நடையுறும்; ஐயம் வேண்டா.

இடையறாப் பயிற்சி யாலே
　இயைந்தன திறமை யாவும்;
தடையெவை வரினும் தாங்கத்
　தலைவரின் பயிற்சி நிற்கும்;
தொடையிலா பாட்டும் ஆமா?
　சூழ்ச்சியும் திறனும் ஒன்றி,
நடைபெறும் நல்ல ஆட்சி;
　நலிவுறும் பகைவர் மீட்சி!

வெயிலிடை புட்கள்[3] தேடி
　விழைந்துறும் ஆலே போல,
உயிரெலாம் உறையத் தக்க
　ஒருடல் மன்னன் என்ற
செயிரிலாப்[4] பாடங் கற்றேன்;
　சேர்ந்திடா ஏற்றத் தாழ்வு.
தயிரென வெளுத்தி ருந்தேன்;
　தலைவரே நெய்யாய்க் கண்டார்!

ஊட்டிய சோற்றின் ஊடே
　ஊட்டிநீ வளர்த்த ஆசை,
கூட்டிட ஏற்ற நேரம்
　கூடிய தென்றே கொள்க;
தேட்டமுள்[5] சோழர் ஆட்சி,
　திகழ்ந்திடும் உலகம் எங்கும்!
கோட்டமில் தலைவர் கூட்டால்
　குறைவரா; நிறைவே என்றும்!

முறையறிந் துலகைக் காக்கும்
  முறைகளை, அறநூல் சொன்ன
துறைகளை, அரச வாழ்வைத்
  தொன்னெறி மரபு தம்மைக்
கறையிலாச் சான்றோர் காட்டக்
  கல்லகத் தெழுத்தாய்க் கொள்வேன்.
நிறைவென துளத்தை ஆளும்;
  நிச்சயம் மாட்சி மீளும்!

**கடம்ப மாதேவி :**

(கலிவெண்பா)

கேட்டசிறு கேள்விக்குக் கேளாத செய்தியெலாம்
நீட்டி முழக்கி நெடிதுரைத்தாய்! ஆதித்தா,
பேசற்கு முன்னர்ப் பெரிதும் தயங்கிடுவாய்;
ஆசற்[6] றிவண்நீ அறைந்த மொழிகேட்(டு)
இனியான் கவலேன்; இனித்திடுமென் உள்ளம்!
உனையான் உடன்பிறப்பாய் உற்றதற் குள்மகிழ்வேன்;
வாழ்நாள் முடிவிற்குள் வாய்த்துவிடும் நோக்கென்று
சூழ்ந்தாய்; பெருமகிழ்ச்சி! சோழர் குலவிளக்கே,
தத்துகிளி ஒப்பத் தலைவரெனப் பற்றடைவ[7]
மெத்த உரைத்திட்டாய்; மேலவராம் யாரவரே?
திங்கள் சிலவற்றில் தீரனென உன்றனையே
எங்ஙனம் மாற்ற இயன்றதுவும் அன்னவர்க்கே?
ஆற்றல் உடையாளர் ஆரவரே? ஆர்த்தெழுந்து
போற்றத் துடிப்ப புலன்.

**செங்கண்ணன் :**

(இன்னிசை வெண்பா)

நாட்டை நடாத்த நமதரசர் ஏவலிட்டார்,
ஆட்டுவிப்பார் விக்கியண்ணன்; ஆடுகின்றார் ஆதித்தர்!
காலைமுதல் போர்ப்பயிற்சி, கல்விநெறி மாலையெலாம்;
வேலையிலை மற்றிவர்க்கு வேறு.

**கடம்ப மாதவி :**

(சிந்தியல் வெண்பா)

தலைவரென விக்கியையா தம்பியழைத் திட்டார்?
நிலையிழக்கும் மாந்தரவர்; நேராவென் நோக்கு!
கலைந்திடலோ என்றன் கனவு?

**ஆதித்தன்**

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

தலைவ ரெனவுரைப்பேன், தனியனில்லை;
  தவறா தெல்லாரும் தளைப்படுவர்!
இலையிங் கீடவர்க்குச் சொல்வதுண்மை!
  எதிர்ப்பார் என்றுரைக்க யாருமில்லை!
நிலையில் திரிதலிலா நேர்மையினர்;
  நிலனாய்ச் சேர்ந்தார்க்கு நீடளிப்பார்![8]
குலைவில் திறனுடையார், குற்றமில்லார்;
  குலுங்கச் சிரித்திடுவார், கூற்றுமன்னார்.

எண்ணி இருதிங்கள்; இருந்துமென்ன?
  ஈரா யிரம்வீரர், இளைஞரவர்
திண்மை உளத்தினராய்த் தெரிவுற்றுச்
  சேர்ந்து படைப்பிரிவில் சிறப்புறுவர்!

*கண்ணுங் கருத்துடனே படைத்தலைவர்*
*கற்ற திறனனைத்தும் கற்பிப்பர்;*
*எண்ணில் யார்க்குமென்றும் ஒய்வில்லை,*
*எங்கும் போர்ப்பயிற்சி; எழுமெழுச்சி!*

**கடம்ப மாதேவி :**

(இன்னிசை வெண்பா)

*என்ன நடக்குதிங்கே? என்னிளவல் ஆர்வமுடன்*
*சொன்னமொழி மெய்தானா? சொல்க, படைத்தலைவ!*
*என்னுளம் வேட்கும் இதற்கு.*

**செங்கண்ணன் :**

(கலிப்பா)

*ஆதித்தர் எடுத்துரைத்த அனைத்துமிவண் பொருளுடைய!*
*கோதற்ற[9] களப்பயிற்சி; குழுமிப்பின் முறைசூழ்ச்சி!*
*தீதற்ற சுவையுணவு; தெளிந்தார்வாய் அறிவுரைகள்!*
*ஓதற்குத் தனிநூல்கள்; ஒழிவில்லை ஒருவர்க்கும்!*

*தலைவரவர் உளக்குறிப்பைத் தருவிழிகள் பொருளுணர்ந்து*
*விலையளித்தும் நிறைவேற்ற விழைபவர்தாம் அனைவருமே!*
*இலையிதுபோல்அரசெனவே நிலைபெறுதல் உறுதியின்று;.*
*சிலை[10]யகத்துப் பொறித்ததெனச் செம்பியர்தம் எழுச்சியினி!*

## காட்சி : 12

**இடம்** : இளவரசி கடம்ப மாதேவியின் தனியறை.
**காலம்** : முன் இராப் பொழுது.
**உறுப்பினர்** : கடம்ப மாதேவி, விக்கியண்ணன், பணிப்பெண்.
**சூழல்** : வானில் பால் வட்ட நிலா— திறந்திருந்த சாளரத்தின் வழித் தென்றல்— கடம்பமாதேவி வெண்ணிலவை வைத்த விழி வாங்காது ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி இருக்கிறாள்.

**பணிப்பெண் :**

(நிலைமண்டில ஆசிரியப்பா)

*தேவி?*

**கடம்ப மாதேவி :** (திரும்பாமல்)
*என்ன?*

**பணிப்பெண் :**
*தேடியவர் வந்துள்ளார்.*

**கடம்ப மாதேவி :**
*யாவர் அவரே? என்னிவண் வந்ததும்?*

**பணிப்பெண் :**

*மீண்டு மீண்டும் நாளும் வந்து*
*காண்டற் கின்றிக் கசந்து செல்வார்*
*ஈண்டு நாடி இன்றும் எழுந்துளார்!*
*வேண்டி வாயில் வெளியே உள்ளார்.*

**கடம்ப மாதேவி :**

*இல்லை, இல்லை; இன்றும் காணேன்.*

**பணிப்பெண் :**

*சொல்லற் கஞ்சுவன்; சொல்வன் எனினும்.*
*நாடி உங்களை நாளும் இங்குத்*
*தேடி வந்ததால் தேய்ந்த கால்களாம்!*
*உங்களைக் காணா தோயா துள்ளமாம்;*
*கங்குல் கழியினுங் கவலை இலையாம்!*

**கடம்ப மாதேவி :**

*என்சொலி என்பயன்? எண்ணம் மாறேன்.*
*மன்னர் மகள்நான், மறுமொழி வேண்டா.*

**பணிப்பெண்**

*இன்று மட்டும் இரக்கங் கொள்க.*

**கடம்ப மாதேவி :**

*இன்றிலை; என்றும் ஏற்கேன் காண.*

**விக்கியண்ணன் :** *(உள் நுழைந்தபடியே)*

*இளவரசிக் கென்னிடத் தித்துணைச் சினமா?*
*உளமறிந் தூறெதும் உடையேன் அன்றே!*

*(கடம்ப மாதேவி வெகுண்டு நோக்கப் பணிப்பெண் அஞ்சி நடுங்குகிறாள்.)*

**கடம்ப மாதேவி :**

*(பஃறொடை வெண்பா)*

*அரச மகளிர் அறையிஃ தறிக!*
*உரிமை இலையிங் குமைப்போன் றவர்க்கே!*

**விக்கியண்ணன் :**

*எனக்குந் தடையா? எழிலிழை நீங்கள்*
*நினைக்குமுன் வந்தெதிர் நிற்பவன் நானிவண்!*
*(கடம்ப மாதேவி பணிப்பெண் பக்கம் திரும்பிப் பேசுகிறாள்)*

**கடம்ப மாதேவி :**

*வெற்றே எதற்கு? வெளியே இருந்திடு.*
*(பணிப்பெண் விரைந்து வெளியேறுகிறாள்.)*

**விக்கியண்ணன் :**

*நற்றேன் சுவையின் நலந்தரு நாவினை!*
*பித்தனான்; அன்றிப் பிழைபிற செய்திலன்!*
*இத்துணைச் சீற்றம் எதற்கிவண்? ஏலுமா?*

*(கடம்ப மாதேவி மெல்லத் திறந்திருந்த சாளரத்திற்காக நடந்தபடி பேசுகிறாள்.)*

**கடம்ப மாதேவி :**

*சீற்றமா? இல்லை; சிறிதும் உளத்திலை!*
*போற்றுவன் வீரரே, போம்.*

**விக்கியண்ணன் :**

*(இன்னிசை வெண்பா)*

கொண்டவும் சீற்றம் குறைந்திடக் கண்டிலேன்;
வண்டு விழிகள் மனத்துள காட்டுவ;
ஆவ தறையின் அனைத்துமிங் காற்றுவன்!
தேவி! உரைக்க, தெளிந்து.

**கடம்ப மாதேவி :**

*(குறள் வெண்பா)*

பெயரிட் டழைத்துப் பிழைநீர் புரிவீர்;
நயனில்! அகல்க நகர்ந்து.

**விக்கியண்ணன் :**

*(பஃறொடை வெண்பா)*

இரவா விடத்தும் கரவா தியார்க்கும்
வரையா தளித்திடு வண்மை சிறந்துயர்
தொன்மைப் பழங்குடித் தோன்றல் இவனறி!
இன்மை இரிய[1] இரவலர்க் கென்றும்
விரைந்தளி கையினர் வேளாவி பின்னோன்!
புரையிலோன்! மன்ற[2] புகழினோன்! ஆதலின்,
தாழிருங் கூந்தல் தளிர்கொடி, நீங்களிச்
சோழர் குலத்துச் சுடர்மணி! ஆயினும்
பேரிட் டழைக்கவும் பேதுற் றணைக்கவும்
நேரிட்ட தாயினும் நேர்.

(பேசிக்கொண்டே விக்கியண்ணன் நெருங்கக், கடம்ப மாதேவி ஏளனச் சிரிப்போடு பின்புறமாக மெல்ல நகர்கிறாள்.)

**விக்கியண்ணன்:**

*(கலி வெண்பா)*

பிழையெதும் உண்டுகொல் பேச்சில்? பிசிறில்![3]
கழலணி வெற்றிக் கரிகால் பெருவளத்தர்
ஈங்கெம் குலத்தினர் நாங்கூர்வேள் தன்மகளைத்
தாங்கினர் அன்றன்றோ தந்துணை யாக!
மகட்கொடை தந்திடு மாண்குடி வந்தோன்
தகுமுமைக் கொண்டணைதல் தான்.

**கடம்ப மாதேவி :**

வாளாய்[4] உரைத்தீர்; வரலா றறிந்திலீர்!
கேளாய், உமதுயர் கேளிர் முனைநாள்
இருங்கோவேள் தன்னோ டினப்பற் றதனால்
ஒருங்கிணைந் தார்த்துக் கரிகாலர் தன்னை
ஒழித்திட முன்னி உடன்றணை ஞான்று
பழித்தவர் செய்கை படிறுள தாக
இறுதிவரை சோழர்க் கிணையாய் இருந்த
உறுதிக் குரியர் உரனுடை வேளிரெம்
நாங்கூரார் மட்டுமே! நன்றி மறப்பமோ?
ஆங்கவர் பெண்ணை அரசியாய்த் தேர்ந்து
தெரிந்து மணந்து திளைத்திடச் செய்தார்!
புரிந்ததா உண்மைப் புலம்?

**விக்கியண்ணன் :**

*(இன்னிசைச் சிந்தியல் வெண்பா)*

அருந்திறல் தம்பிக் கமைச்சர் மகளைத்
திருமணம் செய்திடத் தேவி நினைப்பதும்

*நன்றி குறித்ததோ? நன்று!*

**கடம்ப மாதேவி :**

*(பஃறொடை வெண்பா)*

*இதிலென் குழப்பம்? இளமை முதலாய்*
*எதுவந் தடையினும் ஏற்றதைத் தாங்கி*
*இதுநாள் வரைக்கும் இடையறாத் தொண்டால்*
*உதவி இருந்தி டொருதனி மாந்தர்*
*நவையிலா நற்குணர்! நல்லர்! அவர்பெண்*
*அவையில் அரசியாய் ஆதித்த னோடமர்ந்(து)*
*ஆளுமை வேண்டும்; அதுவே நினைத்தனன்!*
*கோளதே; கூடும் குறி.*

**விக்கியண்ணன்:**

*(இன்னிசை வெண்பா)*

*எப்படிக் கூடும்? இளவர சேற்பரா?*

**கடம்ப மாதேவி :**

*தப்புநீர் சொல்வதும்; தம்பியென்சொல் தாண்டான்.*

**விக்கியண்ணன் :**

*அவரென்ன? தேவி, அடியனும் தாண்டேன்.*
*கவரில்லை என்மனத்துங் காண்.*

*.(விக்கியண்ணன் பேச்சில், உடல் அசைவில் தடுமாற்றம் தெரிகிறது.)*

**கடம்ப மாதேவி :**

*(கலி வெண்பா)*

*அருந்திய கள்ளின் அளவும் மிகையோ?*

**விக்கியண்ணன் :**

*திருந்திழை பெண்ணார் திருவருள் தேடி*
*விழைந்து வருவோன் பிழையெதும் எண்ணான்.*

**கடம்ப மாதேவி :**

*குழைந்து நெளிந்து குறுகிக் குளறல்*
*குடித்த மதுவின் குறும்பால்! பிறவென்?*

**விக்கியண்ணன் :**

*வடித்தெடுத்த வண்ண மயிலாய், வளர்கொடியாய்த்*
*தீதில் அருவுருவாய்த் தேவி உமைக்காணப்*
*பேதித்த துள்ளம்! பிசகிய தென்பேச்சும்!*
*கண்டுகேட் டுண்டுற்றுக் காணற் கருவெழிலால்*
*மண்டும் மருட்கை; மலரே, மறுப்பில்லை!*
*கட்டுக் குலையாக் கனிதேர் காட்டுக்கள்*
*மட்டில் உணர்வை மனதில் கூட்ட*
*மதுவின் மிகையாய் மயங்கி மகிழ்வேன்!*
*இதனிற் பிறிதேதும் இல்.*

**கடம்ப மாதேவி :**

*தள்ளாற் குரிய; தகவில நீருரைத்த!*
*கள்ளமனங் கொண்டீர்; கடுகி விரைந்தகல்க.*

**விக்கியண்ணன் :**

*என்ன? அதற்குள்ளா? இல்லையில்லை;.எண்ணியதை*
*முன்னர் எடுத்துரைப்பேன்; மொய்குழலே, கேட்டமைக.*

*வேந்தர் பெருவளத்தர் வேளிர்தன் இன்மகளைத்*
*தீந்துணை யாகவன்று தேர்ந்தணைந்து சேர்ந்ததுவும்*
*நாங்கூரார் பெற்ற நறுங்கொடியை ஆதித்தர்க்(கு)*
*ஈங்கு மணமுடிக்க எண்ணம்நீர் கொண்டதுவும்*
*கைம்மாறு மட்டே கரணியம் என்பதுண்மை*
*ஆமாகில் உம்மை அடைதற்கும் ஏற்றன்யான்!*
*அன்றிருந் தின்றெவரும் ஆற்றியிரு நன்மையெலாம்*
*ஒன்றுமிலை என்றாக உள்ளற் கருபயனைச்*
*சோழ குலத்தினர்க்குச் சூழ்வேன்; சுடர்க்கொடி!*
*சூழினெனைச் சூழ்வாயா? சொல்.*

*(கடம்ப மாதேவி விடை அளிக்காமல், அமைதியாய் நிற்க, விக்கியண்ணன் தொடர்கிறான்.)*

**விக்கியண்ணன் :**

*தயக்கம் எதற்கு? தகவில என்றா?*
*வியக்க எவரும்நீர் வேட்பன செய்தபின்னர்க்*
*கொள்க எனையும் கொழுநனாய்ச் சொல்லிடுக!*
*கள்ளமில்லென் சொல்லில்; காண்க செயல்முடிவில்!*

**கடம்ப மாதேவி :**

*எல்லாம் சரிதாம்; எனினும் இருவரிடை*
*ஒல்லா மணவுறவு! உங்குலம் வேறன்றோ?*

**விக்கியண்ணன் :**

*பொல்லாத சொல்லிடுவீர்; பொன்றிடுமோ என்னினைப்பும்?*
*வல்லார் வகுத்தவழி வையகம் தான்செல்லும்!*
*என்ன நடந்திடினும் எப்படி இற்றிடினும்*
*பொன்னனையீர், உம்மைப் பொருந்தல்நான் முற்றாகும்.*
*நாங்கூர்வேள் பெண்மணந்தார் நற்சோழ மாமன்னர்!*
*ஆங்கவர் தந்தை அழுந்தூர்வேள் பெண்கொண்டார்!*
*சேரர் குலத்துதித்த செல்வக் கடுங்கோவும்*
*தீரர்நீட் சேரலும் தேடிமணங் கொண்டதுவோ,*
*வாளொடு முன்பிறந்த வள்ளன்மை தாட்சிறந்த*
*வேளிர் குடித்தலைவர் வேளாவிக் கோமான்*
*பதுமனார் பெற்றளித்த பாவையரைத் தாமே?*
*இதுபோல் பலவிருக்கும்; யானறிந்த இவ்வளவே!*
*வேந்தர் குடிக்கெங்கள் வேல்விழியர் பெண்டாக,*
*ஏந்திணையர் நீங்கள் எனைமணந்தால் என்னாகும்?*

*(விக்கியண்ணனின் பேச்சு கடம்ப மாதேவியிடம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. அவள் முகத்தை அவன் அப்போது ஏறிட்டுப் பார்த்து இருந்திருப்பானேயாகில், அவள் அகத்தை அவன் அறிந்திருக்க முடியும். அவன் நாட்டமோ அவள் அங்கங்களில் நிலைத்திருக்கிறது.)*

**கடம்ப மாதேவி :**

*வேளிர் குலத்துதித்த வீரரே, நீருரைத்த*
*கோளனைத்தும் இங்குக் கொளற்குரிய; உண்மை!*
*இருந்தும் இடையூ றிடையுண் டறிக.*
*பொருந்தும் உருவம், பொருந்தா திருவோ!*
*உருவும் திருவும் உடனமைந் தொத்த*
*இருவர் இணைதலையே ஏற்கும் இலக்கணம்!*
*அன்னதே வாழ்க்கை, அகனைந் திணைகூறும்.*
*மன்னர் மகள்நான்! மறவரே, நீங்களோ*

வாளன்றி வேறு வளமேதும் இல்லாதார்!
தாளுநண் டெனினும் தகுமோ மணமுடிக்க?
கல்வி குலமகவை காதலித்த அண்ணலுக்(கு)
ஒல்லும் மிகுத்திருக்க, ஒவ்வா தலைவிக்காம்!
எந்த நிலையினினும் ஏற்றம் குறைந்தவரைத்
தந்துணையாய்க் கொள்ளாள் தமிழச்சி! காணீரோ.

**விக்கியண்ணன் :**

நில்லாப் பொருளும் நிறைநீள் வளங்களும்
பொல்லா உலகில் பொருந்தரு செல்வமாய்
எண்ணுகிறீர், ஏற்கேன்; எனினும் மறுப்பேனில்.
கண்ணின் மணியே, கரும்பின் நறுஞ்சுவையே,
என்னைநீர் நம்பற்க; என்வாளை நம்பிடுக.
இன்றிருந் தீராண்டின் எல்லைக்குள் இச்சோழ
நாட்டிற்கும் மேலான நன்னாட்டை என்றிறனால்
ஈட்டியும் முன்னர் இருத்திடுவேன்; அன்றுவரை,
காத்திருக்க வேண்டிடுவேன்; கன்னல் கனியிதழீர்,
வாய்த்திடுமே நல்ல வழி.

*(அருகில் நெருங்கிட்ட விக்கியண்ணன் ஆசை மிகுதியால் வேறெதையும் எண்ணாது கடம்ப மாதேவியின் தோள்களைத் தொட்டசைத்த போது, அவள் உள்ளமும் உடலும் ஒருங்கே குளிர்கின்றன. எனினும் அவன் கைகளைத் தன் கைகளால் தொட்டு அகற்ற முயல்கிறாள். அவள் பேச்சிலும் செயலிலும் அமைதி வெளிப்படுகிறது.)*

**கடம்ப மாதேவி :**

(பஃறொடை வெண்பா)

தொழுவேன் பணிந்து: தொடுதல் தவிர்க.

**விக்கியண்ணன் :**

தொழுநோய் உடையனோ? தொட்டதற் கஞ்ச!

**கடம்ப மாதேவி :**

தொழுநோய் எனினும் தழுவத் தயங்கேன்
இழுக்கா ஒழுக்கம் இருப்பரே யானால்!
அழுக்கு மனத்துமை ஆரே அறியார்?
கழிபெருங் காமக் குழிவிழு மாந்தர்நீர்;
நில்லா உலகத்து நீடு புகழ்வேட்ட
நல்லார் நலங்கிள்ளி வல்லார் வழிவந்தோள்
நாளைக் கொருத்தியை நாடும் இயல்புடை
காளையை ஏற்றல் கடிது.

*(விக்கியண்ணன் ஏதும் விடையளிக்காது அமைதியோடு நிற்கிறான். கடம்ப மாதேவி பேச்சைத் தொடர்கிறார்.)*

**கடம்ப மாதேவி :**

ஆண்டாண்டாய் என்னை அறிந்த இளைஞரும்
ஈண்டெனை நாடி எதிர்வர அஞ்சுவர்!
மூவிரு திங்கள் முழுதாய் முடிந்ததில்
காவலர் உங்களைக் காட்டகம் கண்டுநான்!
ஆனால் அதற்குள் அரசிளம் பெண்ணிடம்
தேனாய் உரைப்பீர் தெவிட்டிடக் காதலை!
தொட்டெனை அத்துடன் தொல்லை தருமுமை
விட்டிடல் நன்றிலை; வெட்டிடல் ஆறே!
இருந்தும் பொறுப்பேன்; எதற்கிது? காணேன்;
திருந்த அறிக தெளிந்து.

**விக்கியண்ணன் :**

*சாவென்ப திங்கெவர்க்கும் சாரும் இயற்கையதாம்!*
*ஆவ தறிவர் அறிவார்; அமைவார்.*
*எறிந்தகல் வீழல் இயற்கை; அதுபோல்*
*பிறந்தார் இறப்பர்; பிறழ்தல் இலையென்றும்!.*
*என்றன் இறப்பிங் கெவர்கை இடத்துமில்லை;*
*என்றென்கை வாளின் இயக்கம் இடறுதோ,*
*அன்றிலை யானே; அறிவேன் இறுதியை!*
*பொன்றிட அஞ்சேன்; புலம்பேன் ஒருநாளும்!*
*கன்னியுனைக் கானகத்துக் கண்டிட்ட காலமுதல்*
*உன்னினைவாய் வாழ்வேன் உயிர்.*

**கடம்ப மாதேவி :**

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

*வீரரே, பேச்சில் நீவீர்*
*வீரரே; ஐயம் இல்லை.*
*வீரமே தமிழப் பெண்கள்*
*விழிகளை, உளத்தை வெல்லும்!*
*யாரெவர் எதுசொன் னாலும்*
*யானுமை ஏற்கேன்; ஏனா?*
*தீரரே எனினும் உம்மில்*
*தெளிந்தநல் ஒழுக்கம் இல்லை!*

*கட்டுடல் இருந்தும் என்னே?*
*கட்டுப்பா டற்ற உள்ளம்!*
*விட்டிடின் ஒழுக்கம் யாரும்*
*வீணரே; விலக்கும் இல்லை.*
*மட்டிரு மலர்கள் நாடும்*
*வண்டென மகளிர் தேடும்*
*கெட்டவர் நீரே; யாரே,*
*கேள்வனாய்க் கொள்ளு வாரே?*

*வாளினை வீசும் போது*
*வாய்த்திடும் உறுதி தன்னை*
*வாளிணை விழிகள் காணின்*
*வழுக்கிடு வீரர் நீவீர்!*
*கோளிலர்[5]; கொள்வ தெல்லாம்*
*கூசிலார் மயக்கம்[6] மட்டே!*
*வேளிரே, ஒழுக்கக் கேட்டை*
*விழைவரோ தமிழப் பெண்கள்?*

*(விக்கியண்ணன் தயங்கித் தயங்கி விடை அளிக்கிறான்.)*

**விக்கியண்ணன் ;**

*பரத்தையர் உறவு பற்றிப்*
*பைந்தமிழ் இலக்கி யங்கள்*
*விரித்துரைத் திட்ட யாவும்*
*விளங்கியும் வியப்பாய்க் கேட்பீர்!*
*எரித்திடு காமத் தீயை*
*எதிர்த்தெவர் மீளல் கூடும்?*
*துரத்திடும், விலக்கல் கூடா;*
*தொடர்ந்திடும் இயற்கை என்றும்!*

**கடம்ப மாதேவி :**

ஆளுமை ஆண்கட் கென்றே
  அன்றிருந் தென்றும் சொல்வீர்!
தேளினர், பொல்லார் பெண்ணைத்
  தேடுவீர் தினவு கொண்டால்!
தோளணி துண்டாய் எண்ணித்
  துறக்கவும் தயங்கீர் பின்னாள்!
நாளெலாம் இரந்து வேட்டும்
  நானுமை ஏற்றல் இல்லை.

ஒருவனுக் கொருத்தி என்ற
  உயரிய கொள்கை கொண்ட
அரசரெம் கிள்ளி நல்லோன்
  அறவழி மரபில் வந்தோள்
கரவுடை மனத்தர், நாளும்
  கழிகாமக் குழிவீழ் உம்மைத்
தெரிந்திவண் மணத்தல் ஆமோ?
  தேவையோ தெரிந்தும் துன்பம்?

எண்ணிய முடிக்கல் ஏலேல்
  இயல்பிலாப் பிறழ்ந்த நெஞ்சப்
பெண்ணினார் பொல்லாக் காமப்
  பிணைப்பினில் தாழ்க என்றே,
திண்ணமாய்ச் சூளு ரைத்த
  திறமிகு கிள்ளி பின்னோள்
கண்ணிலாள் அன்றே, உன்றன்
  காதலை ஏற்ப தற்கே!

அரசிளம் பெண்ணே; மேலாம்
  ஆவலுள் இருந்தும் என்ன?
இரவினுக் கொருத்தி தேடும்
  இழிபுடை வேளிர் உம்மைக்
குரிசிலாய்க் கொள்வ தற்குக்
  கூசிடும்; குமுறும் உள்ளம்!
வெருவுறு செய்கை செய்வீர்;
  வெந்துளம் நீறாய் மாறும்.

*(விக்கியண்ணன் செய்வதறியாது திகைத்து நிற்கிறான். பின்னர்த் திடீரென்று கடம்ப மாதேவி முன்னர் மண்டியிட்டு அமர்ந்து அவள் கைகளைப் பற்றுகிறான். அவள் எந்த உணர்ச்சி வெளிப்பாடும் காட்டாது அமைதி காக்கவே, மெல்ல எழுந்து கட்டியணைத்து அவள் முகத்தைத் தன் முகத்திற்காகத் திருப்பிப் பார்க்கிறான். அவள் கண்களில் முத்து முத்துக்களாகக் கண்ணீர்!)*

**விக்கியண்ணன் :**

*(நேரிசை ஆசிரியப்பா)*

இஃதென், தேவி? ஏனிக் கண்ணீர்?
அஃகிய[7] அறிவினன் அறமில இழைத்தனோ?
இத்துணை வெறுப்பா? ஏதிலன் யானோ?
எத்தன் செய்பிழை இனியை, பொறுக்க.
உண்மை முன்னர் உணர்ந்திலன்!
பெண்மைப் பேறே, பேயன் யானே!

*(விக்கியண்ணன் அவளை நீங்கி வெளியேற அடி எடுத்து வைக்கிறான். அடுத்த வினாடி,*

*அவன் அவள் அணைப்பில்! காலம் மெல்லக் கடந்து கொண்டிருக்கிறது.)*

**கடம்ப மாதேவி :**

*வீரரே! பெருகு விழிநீர் ஆடையை*
*ஈரப் படுத்திய என்செயற் குட்குவன்.*

**விக்கியண்ணன் :**

*ஆடை நனைந்ததின் அகமிக நனைந்தது!*
*வாடை இடையுறா வாய்த்தவுன் னணைப்பில்,*
*உள்ளும் புறமும் ஒருங்கு மகிழ்ந்தன!*
*கொள்ளற் கரிய குலமணி, உன்னுளம்*
*வேட்ப எவையும் விளம்பிடு;*
*வாட்டிறன் கொண்டவை வைப்பேன் அடியே!*

**கடம்ப மாதேவி :**

*(பஃறொடை வெண்பா)*

*வெற்று மொழியெதற்கு? வேண்டா சூளுரைகள்.*
*பற்றற் றிருந்திட்டேன்; பற்றிற்றின் காதல்!*
*குறித்த இலக்கைக் குதிரை இருந்தே,*
*எறிந்த நெடுவேல் இயைந்த பொழுதே*
*இழந்தேன் மனத்தை; உழந்தேன் இதுநாள்!*
*விழுந்தேன் அமுத விளைவு.*

**விக்கியண்ணன் :**

*(இன்னிசை வெண்பா)*

*வாணாள் முயன்றாலும் வாய்த்தற் கருமருந்தே!*
*காணா திருந்திட்டாய் காதல் உளங்கொண்டும்.*
*தேனே, திரட்பாலே, தெள்ளமுதே நீயெனக்*
*கானாய் உயிராய் அமைந்து.*

*(கடம்ப மாதேவி அவன் அணைப்பினின்றும் பிரிந்து நீங்கிப் பேசுகிறாள்.)*

**கடம்ப மாதேவி :**

*(கலிவெண்பா)*

*பாண்டியர் பல்லவர் பாரில் படைவலியர்.*
*ஈண்டிவரில் யானெவரை என்றுணையாய் ஏற்றாலும்*
*சோர்ந்து தடுமாறும் சோழர் குலமரபு*
*தூர்ந்து மறையாது தோளுயர்த்தி நிற்குமென*
*எல்லாரும் ஒப்பிடுவர்; யானுமதை ஒப்பிடுவேன்.*
*பல்லவரும் நல்லவரே; பாண்டியரும் வல்லவரே!*
*ஒல்லும் மணவுறவால் உண்டாகும் நாட்டமைதி.*
*பாண்டியர் தம்பி பராந்தகரை நானறிவேன்;*
*காண்டற் கினியவரே காஞ்சி இளவரசும்;*
*ஆற்றல் அழகோ டறிவுமிகக் கொண்டவவர்*
*போற்றி எனையின்றும் ஏற்றிப் புகழ்ந்திருப்பர்!*
*வேண்டிப் பலரிடித்தும் வேண்டா எனமறுப்பேன் !*
*ஈண்டக் கரணியத்தை என்னவரே, நீர்கேட்பீர்.*
*எல்லாரை யும்போன்றே யானும்; எனக்குமட்டும்*
*இல்லாமற் போயிடுமோ இன்பம் உணர்வேட்கை?*
*பற்றும் எனைப்பற்றும்; பார்த்தீரே சற்றுமுன்னர்ப்*
*பற்றி உமைப்படர்ந்த பாங்கு!*

*(விக்கியண்ணன் அவளை மெல்லத் தொட்டணைத்துத் தழுவுகிறான்.)*

**விக்கியண்ணன் :**

*(குறள் வெண்பா)*

*அரவிணை அன்ன அணைப்பினில் நெஞ்சக்*
*கரவிலை; கண்டேன் களித்து.*

**கடம்ப மாதேவி :**

*(பஃறொடை வெண்பா)*

*இருபத்தைந் தாண்டென் னகவை; எனினும்*
*பருவத் தெழுகின்ற பாலுணர்வு மிக்கிருந்தும்*
*ஈண்டவற்றைத் தள்ளி இருத்திட்டேன்; ஏனெதற்காம்?*
*பூண்டுள கொள்கைப் பொறுப்பின் பயனாய்!*
*உலகில் உயர்ந்த ஒருதனி நாடாய்*
*இலையொன் றிதற்கெதிர், யாரும் இசைத்திடச்*
*செம்பியர் ஆட்சி சிறப்புற் றமைவதல்லால்*
*தம்பியின் கீழித் தரணி பணிந்திட,*
*ஈழம் தொடங்கி இமயமும் தாண்டியெம்*
*சோழப் புலிக்கொடி தோன்றிப் பறந்திடும்*
*அந்நாள் வருமோ? அதுவரை ஆற்றுவனோ?*
*இந்நாள் செயற்குரிய தென்?*

**விக்கியண்ணன் :**

*(இன்னிசைச் சிந்தியல் வெண்பா)*

*தெள்ளத் தெளிவாகத் தேவையினைத் தேர்ந்துரைப்பின்*
*கள்ளவிழ் முல்லைக் கவின்மலரே, காதலிநீ*
*உள்ளுவ கொள்வேன் உவந்து.*

**கடம்ப மாதேவி :**

*(பஃறொடை வெண்பா)*

*எனைப்பெற்ற இந்நாட் டிழிநிலை நீங்கத்*
*தினையளவுங் கூடுமெனில் தீவினைக்கும் நானஞ்சேன்.*
*மீண்டு மெழுச்சியுறப் பாண்டியரோ, பல்லவரோ*
*ஈண்டுதவார்; ஏனா? இடரானார் அன்னவரே!*
*சோழ வளநாட்டுச் சொந்தப் பகுதியெலாம்*
*தாழுமவர் கோற்கீழ்! தகுமோ மணவுறவும்?*
*அன்னாரை நான்மணப்பின் ஆதித்தன் வென்றழிக்க*
*உன்னானே! உட்கொண்ட கோட்பாட்டிற் கொவ்வாதே!*
*என்வரையில் இவ்வரசு எல்லாரும் ஏற்றுமொரு*
*தன்னரசாய், நேரில் தனியரசாய் வாணாளில்*
*ஆதித்தன் ஆள அமைந்திடு நோக்கன்றி,*
*ஏதுமிலை வாழ்வில் எனக்கு.*

*(வெகு நேரம் விக்கியண்ணனிடமிருந்து விடை வரவில்லை. அவன் கொண்டிருந்த ஆழ்ந்த ஆய்வைத் தன்னை அணைத்து மகிழ்ந்திருந்த அவன் கைகளின் அமைதியினின்று கடம்ப மாதேவி புரிந்து கொள்கிறாள். அவன் பேசிய போது, அவன் கொண்ட முடிவின் உறுதி நன்கு தெரிகிறது.)*

**விக்கியண்ணன் :**

*(கொச்சகக் கலிப்பா)*

*உள்ள உறுத்தலினை ஒளிவின்றி உரைத்திட்டீர்;*
*கள்ளஞ் சிறிதுமிலை; கழறியவை நறியவையே!*

*கொள்ளற் குரியவற்றைக் குறித்தறிந்துன் குறிக்கோளை*
*உள்ளி முடித்திடுவேன்; உயிர்த்துணையே, உவந்திடுக.*

*(விக்கியண்ணன் விரைந்து வெளியேறுகிறான். கடம்ப மாதேவிக்கு எதுவும் புரிந்திருக்கவில்லை. அவள் புரிந்துகொண்டு இருந்தவை எல்லாம், சற்று முன்னர்வரை அவள் அடைந்து அறிந்திருந்த இன்ப உணர்வுகளைத்தாம்.)*

## காட்சி : 12

**இடம்** : *இளவரசி கடம்ப மாதேவியின் தனியறை.*

**காலம்** : *முன் இராப் பொழுது.*

**உறுப்பினர்** : *கடம்ப மாதேவி, விக்கியண்ணன், பணிப்பெண்.*

**சூழல்** : *வானில் பால் வட்ட நிலா— திறந்திருந்த சாளரத்தின் வழித் தென்றல்— கடம்ப மாதேவி வெண்ணிலவை வைத்த விழி வாங்காது ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி இருக்கிறாள்.*

**பணிப்பெண் :**

*(நிலைமண்டில ஆசிரியப்பா)*

*தேவி?*

**கடம்ப மாதேவி :** *(திரும்பாமல்)*
*என்ன?*

**பணிப்பெண் :**
*தேடியவர் வந்துள்ளார்.*

**கடம்ப மாதேவி :**
*யாவர் அவரே? என்னிவண் வந்ததும்?*

**பணிப்பெண் :**
*மீண்டு மீண்டும் நாளும் வந்து*
*காண்டற் கின்றிக் கசந்து செல்வார்*
*ஈண்டு நாடி இன்றும் எழுந்துளார்!*
*வேண்டி வாயில் வெளியே உள்ளார்.*

**கடம்ப மாதேவி :**
*இல்லை, இல்லை; இன்றும் காணேன்.*

**பணிப்பெண் :**
*சொல்லற் கஞ்சுவன்; சொல்வன் எனினும்.*

*நாடி உங்களை நாளும் இங்குத்*
*தேடி வந்ததால் தேய்ந்த கால்களாம்!*
*உங்களைக் காணா தோயா துள்ளமாம்;*
*கங்குல் கழியினுங் கவலை இலையாம்!*

**கடம்ப மாதேவி :**
*என்சொலி என்பயன்? எண்ணம் மாறேன்.*
*மன்னர் மகள்நான், மறுமொழி வேண்டா.*

**பணிப்பெண்**
*இன்று மட்டும் இரக்கங் கொள்க.*

**கடம்ப மாதேவி :**
*இன்றிலை; என்றும் ஏற்கேன் காண.*

**விக்கியண்ணன் :** *(உள் நுழைந்தபடியே)*
*இளவரசிக் கென்னிடத் தித்துணைச் சினமா?*
*உளமறிந் தூறெதும் உடையேன் அன்றே!*

*(கடம்ப மாதேவி வெகுண்டு நோக்கப் பணிப்பெண் அஞ்சி நடுங்குகிறாள்.)*

**கடம்ப மாதேவி :**

*(பஃறொடை வெண்பா)*

*அரச மகளிர் அறையிஃ தறிக!*
*உரிமை இலையிங் குமைப்போன் றவர்க்கே!*

**விக்கியண்ணன் :**
*எனக்குந் தடையா? எழிலிழை நீங்கள்*
*நினைக்குமுன் வந்தெதிர் நிற்பவன் நானிவண்!*
*(கடம்ப மாதேவி பணிப்பெண் பக்கம் திரும்பிப் பேசுகிறாள்)*

**கடம்ப மாதேவி :**
*வெற்றே எதற்கு? வெளியே இருந்திடு.*
*(பணிப்பெண் விரைந்து வெளியேறுகிறாள்.)*

**விக்கியண்ணன் :**
*நற்றேன் சுவையின் நலந்தரு நாவினை!*
*பித்தனான்; அன்றிப் பிழைபிற செய்திலன்!*
*இத்துணைச் சீற்றம் எதற்கிவண்? ஏலுமா?*

*(கடம்ப மாதேவி மெல்லத் திறந்திருந்த சாளரத்திற்காக நடந்தபடி பேசுகிறாள்.)*

**கடம்ப மாதேவி :**
*சீற்றமா? இல்லை; சிறிதும் உளத்திலை!*
*போற்றுவன் வீரரே, போம்.*

**விக்கியண்ணன் :**

*(இன்னிசை வெண்பா)*

*கொண்டவும் சீற்றம் குறைந்திடக் கண்டிலேன்;*
*வண்டு விழிகள் மனத்துள காட்டுவ;*
*ஆவ தறையின் அனைத்துமிங் காற்றுவன்!*
*தேவி! உரைக்க, தெளிந்து.*

**கடம்ப மாதேவி :**

*(குறள் வெண்பா)*

*பெயரிட் டழைத்துப் பிழைநீர் புரிவீர்;*
*நயனில்! அகல்க நகர்ந்து.*

**விக்கியண்ணன் :**

*(பஃறொடை வெண்பா)*

இரவா விடத்தும் கரவா தியார்க்கும்
வரையா தளித்திடு வண்மை சிறந்துயர்
தொன்மைப் பழங்குடித் தோன்றல் இவனறி!
இன்மை இரிய[1] இரவலர்க் கென்றும்
விரைந்தளி கையினர் வேளாவி பின்னோன்!
புரையிலோன்! மன்ற[2] புகழினோன்! ஆதலின்,
தாழிருங் கூந்தல் தளிர்கொடி, நீங்களிச்
சோழர் குலத்துச் சுடர்மணி! ஆயினும்
பேரிட் டழைக்கவும் பேதுற் றணைக்கவும்
நேரிட்ட தாயினும் நேர்.

*(பேசிக்கொண்டே விக்கியண்ணன் நெருங்கக், கடம்ப மாதேவி ஏளனச் சிரிப்போடு பின்புறமாக மெல்ல நகர்கிறாள்.)*

**விக்கியண்ணன்:**

*(கலி வெண்பா)*

பிழையெதும் உண்டுகொல் பேச்சில்? பிசிறில்![3]
கழலணி வெற்றிக் கரிகால் பெருவளத்தர்
ஈங்கெம் குலத்தினர் நாங்கூர்வேள் தன்மகளைத்
தாங்கினர் அன்றன்றோ தந்துணை யாக!
மகட்கொடை தந்திடு மாண்குடி வந்தோன்
தகுமுமைக் கொண்டணைதல் தான்.

**கடம்ப மாதேவி :**

வாளாய்[4] உரைத்தீர்; வரலா றறிந்திலீர்!
கேளாய், உமதுயர் கேளிர் முனைநாள்
இருங்கோவேள் தன்னோ டினப்பற் றதனால்
ஒருங்கிணைந் தார்த்துக் கரிகாலர் தன்னை
ஒழித்திட முன்னி உடன்றணை ஞான்று
பழித்தவர் செய்கை படிறுள தாக
இறுதிவரை சோழர்க் கிணையாய் இருந்த
உறுதிக் குரியர் உரனுடை வேளிரெம்
நாங்கூரார் மட்டுமே! நன்றி மறப்பமோ?
ஆங்கவர் பெண்ணை அரசியாய்த் தேர்ந்து
தெரிந்து மணந்து திளைத்திடச் செய்தார்!
புரிந்ததா உண்மைப் புலம்?

**விக்கியண்ணன் :**

*(இன்னிசைச் சிந்தியல் வெண்பா)*

அருந்திறல் தம்பிக் கமைச்சர் மகளைத்
திருமணம் செய்திடத் தேவி நினைப்பதும்
நன்றி குறித்ததோ? நன்று!

**கடம்ப மாதேவி :**

*(பஃறொடை வெண்பா)*

இதிலென் குழப்பம்? இளமை முதலாய்
எதுவந் தடையினும் ஏற்றதைத் தாங்கி
இதுநாள் வரைக்கும் இடையறாத் தொண்டால்
உதவி இருந்தி டொருதனி மாந்தர்
நவையிலா நற்குணர்! நல்லர்! அவர்பெண்
அவையில் அரசியாய் ஆதித்த னோடமர்ந்(து)
ஆளுமை வேண்டும்; அதுவே நினைத்தனன்!

கோளதே; கூடும் குறி.

**விக்கியண்ணன்:**

(இன்னிசை வெண்பா)

எப்படிக் கூடும்? இளவர சேற்பரா?

**கடம்ப மாதேவி :**

தப்புநீர் சொல்வதும்; தம்பியென்சொல் தாண்டான்.

**விக்கியண்ணன் :**

அவரென்ன? தேவி, அடியனும் தாண்டேன்.
கவரில்லை என்மனத்துங் காண்.

.(விக்கியண்ணன் பேச்சில், உடல் அசைவில் தடுமாற்றம் தெரிகிறது.)

**கடம்ப மாதேவி :**

(கலி வெண்பா)

அருந்திய கள்ளின் அளவும் மிகையோ?

**விக்கியண்ணன் :**

திருந்திழை பெண்ணார் திருவருள் தேடி
விழைந்து வருவோன் பிழையெதும் எண்ணான்.

**கடம்ப மாதேவி :**

குழைந்து நெளிந்து குறுகிக் குளறல்
குடித்த மதுவின் குறும்பால்! பிறவென்?

**விக்கியண்ணன் :**

வடித்தெடுத்த வண்ண மயிலாய், வளர்கொடியாய்த்
தீதில் அருவுருவாய்த் தேவி உமைக்காணப்
பேதித்த துள்ளம்! பிசகிய தென்பேச்சும்!
கண்டுகேட் டுண்டுற்றுக் காணற் கருவெழிலால்
மண்டும் மருட்கை; மலரே, மறுப்பில்லை!
கட்டுக் குலையாக் கனிதேர் காட்டுக்கள்
மட்டில் உணர்வை மனதில் கூட்ட
மதுவின் மிகையாய் மயங்கி மகிழ்வேன்!
இதனிற் பிறிதேதும் இல்.

**கடம்ப மாதேவி :**

தள்ளற் குரிய; தகவில நீருரைத்த!
கள்ளமனங் கொண்டீர்; கடுகி விரைந்தகல்க.

**விக்கியண்ணன் :**

என்ன? அதற்குள்ளா? இல்லையில்லை;.எண்ணியதை
முன்னர் எடுத்துரைப்பேன்; மொய்குழலே, கேட்டமைக.
வேந்தர் பெருவளத்தர் வேளிர்தன் இன்மகளைத்
தீந்துணை யாகவன்று தேர்ந்தணைந்து சேர்ந்ததுவும்
நாங்கூரார் பெற்ற நறுங்கொடியை ஆதித்தர்க்(கு)
ஈங்கு மணமுடிக்க எண்ணம்நீர் கொண்டதுவும்
கைம்மாறு மட்டே கரணியம் என்பதுண்மை
ஆமாகில் உம்மை அடைதற்கும் ஏற்றன்யான்!
அன்றிருந் தின்றெவரும் ஆற்றியிரு நன்மையெலாம்
ஒன்றுமிலை என்றாக உள்ளற் கருபயனைச்
சோழ குலத்தினர்க்குச் சூழ்வேன்; சுடர்க்கொடி!
சூழினெனைச் சூழ்வாயா? சொல்.

(கடம்ப மாதேவி விடை அளிக்காமல், அமைதியாய் நிற்க, விக்கியண்ணன் தொடர்கிறான்.)

**விக்கியண்ணன் :**

*தயக்கம் எதற்கு? தகவில என்றா?*
*வியக்க எவரும்நீர் வேட்பன செய்தபின்னர்க்*
*கொள்க எனையும் கொழுநனாய்ச் சொல்லிடுக!*
*கள்ளமில்லென் சொல்லில்; காண்க செயல்முடிவில்!*

**கடம்ப மாதேவி :**

*எல்லாம் சரிதாம்; எனினும் இருவரிடை*
*ஒல்லா மணவுறவு! உங்குலம் வேறன்றோ?*

**விக்கியண்ணன் :**

*பொல்லாத சொல்லிடுவீர்; பொன்றிடுமோ என்னினைப்பும்?*
*வல்லார் வகுத்தவழி வையகம் தான்செல்லும்!*
*என்ன நடந்திடினும் எப்படி இற்றிடினும்*
*பொன்னனையீர், உம்மைப் பொருந்தல்நான் முற்றாகும்.*
*நாங்கூர்வேள் பெண்மணந்தார் நற்சோழ மாமன்னர்!*
*ஆங்கவர் தந்தை அழுந்தூர்வேள் பெண்கொண்டார்!*
*சேரர் குலத்துதித்த செல்வக் கடுங்கோவும்*
*தீரர்நீட் சேரலும் தேடிமணங் கொண்டதுவோ,*
*வாளொடு முன்பிறந்த வள்ளன்மை தாட்சிறந்த*
*வேளிர் குடித்தலைவர் வேளாவிக் கோமான்*
*பதுமனார் பெற்றளித்த பாவையரைத் தாமே?*
*இதுபோல் பலவிருக்கும்; யானறிந்த இவ்வளவே!*
*வேந்தர் குடிக்கெங்கள் வேல்விழியர் பெண்டாக,*
*ஏந்திணையர் நீங்கள் எனைமணந்தால் என்னாகும்?*

*(விக்கியண்ணனின் பேச்சு கடம்ப மாதேவியிடம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. அவள் முகத்தை அவன் அப்போது ஏறிட்டுப் பார்த்து இருந்திருப்பானேயாகில், அவள் அகத்தை அவன் அறிந்திருக்க முடியும். அவன் நாட்டமோ அவள் அங்கங்களில் நிலைத்திருக்கிறது.)*

**கடம்ப மாதேவி :**

*வேளிர் குலத்துதித்த வீரரே, நீருரைத்த*
*கோளனைத்தும் இங்குக் கொளற்குரிய; உண்மை!*
*இருந்தும் இடையூ றிடையுண் டறிக.*
*பொருந்தும் உருவம், பொருந்தா திருவோ!*
*உருவும் திருவும் உடனமைந் தொத்த*
*இருவர் இணைதலையே ஏற்கும் இலக்கணம்!*
*அன்னதே வாழ்க்கை, அகனைந் திணைகூறும்.*
*மன்னர் மகள்நான்! மறவரே, நீங்களோ*
*வாளன்றி வேறு வளமேதும் இல்லாதார்!*
*தாளுண் டெனினும் தகுமோ மணமுடிக்க?*
*கல்வி குலமகவை காதலித்த அண்ணலுக்(கு)*
*ஒல்லும் மிகுத்திருக்க, ஒவ்வா தலைவிக்காம்!*
*எந்த நிலையினினும் ஏற்றம் குறைந்தவரைத்*
*தந்துணையாய்க் கொள்ளாள் தமிழச்சி! காணீரோ.*

**விக்கியண்ணன் :**

*நில்லாப் பொருளும் நிறைநீள் வளங்களும்*
*பொல்லா உலகில் பொருந்தரு செல்வமாய்*

*எண்ணுகிறீர், ஏற்கேன்; எனினும் மறுப்பேனில்.*
*கண்ணின் மணியே, கரும்பின் நறுஞ்சுவையே,*
*என்னைநீர் நம்பற்க; என்வாளை நம்பிடுக.*
*இன்றிருந் தீராண்டின் எல்லைக்குள் இச்சோழ*
*நாட்டிற்கும் மேலான நன்னாட்டை என்றிறனால்*
*ஈட்டியும் முன்னர் இருத்திடுவேன்; அன்றுவரை,*
*காத்திருக்க வேண்டிடுவேன்; கன்னல் கனியிதழீர்,*
*வாய்த்திடுமே நல்ல வழி.*

*(அருகில் நெருங்கிட்ட விக்கியண்ணன் ஆசை மிகுதியால் வேறெதையும் எண்ணாது கடம்ப மாதேவியின் தோள்களைத் தொட்டசைத்த போது, அவள் உள்ளமும் உடலும் ஒருங்கே குளிர்கின்றன. எனினும் அவன் கைகளைத் தன் கைகளால் தொட்டு அகற்ற முயல்கிறாள். அவள் பேச்சிலும் செயலிலும் அமைதி வெளிப்படுகிறது.)*

**கடம்ப மாதேவி :**

*(பஃறொடை வெண்பா)*

*தொழுவேன் பணிந்து: தொடுதல் தவிர்க.*

**விக்கியண்ணன் :**

*தொழுநோய் உடையனோ? தொட்டதற் கஞ்ச!*

**கடம்ப மாதேவி :**

*தொழுநோய் எனினும் தழுவத் தயங்கேன்*
*இழுக்கா ஒழுக்கம் இருப்பரே யானால்!*
*அழுக்கு மனத்துமை ஆரே அறியார்?*
*கழிபெருங் காமக் குழிவிழு மாந்தர்நீர்;*
*நில்லா உலகத்து நீடு புகழ்வேட்ட*
*நல்லார் நலங்கிள்ளி வல்லார் வழிவந்தோள்*
*நாளைக் கொருத்தியை நாடும் இயல்புடை*
*காளையை ஏற்றல் கடிது.*

*(விக்கியண்ணன் ஏதும் விடையளிக்காது அமைதியோடு நிற்கிறான். கடம்ப மாதேவி பேச்சைத் தொடர்கிறார்.)*

**கடம்ப மாதேவி :**

*ஆண்டாண்டாய் என்னை அறிந்த இளைஞரும்*
*ஈண்டெனை நாடி எதிர்வர அஞ்சுவர்!*
*மூவிரு திங்கள் முழுதாய் முடிந்ததில்*
*காவலர் உங்களைக் காட்டகம் கண்டுநான்!*
*ஆனால் அதற்குள் அரசிளம் பெண்ணிடம்*
*தேனாய் உரைப்பீர் தெவிட்டிடக் காதலை!*
*தொட்டெனை அத்துடன் தொல்லை தருமுமை*
*விட்டிடல் நன்றிலை; வெட்டிடல் ஆறே!*
*இருந்தும் பொறுப்பேன்; எதற்கிது? காணேன்;*
*திருந்த அறிக தெளிந்து.*

**விக்கியண்ணன் :**

*சாவென்ப திங்கெவர்க்கும் சாரும் இயற்கையதாம்!*
*ஆவ தறிவர் அறிவார்; அமைவார்.*
*எறிந்தகல் வீழல் இயற்கை; அதுபோல்*
*பிறந்தார் இறப்பர்; பிறழ்தல் இலையென்றும்!.*
*என்றன் இறப்பிங் கெவர்கை இடத்துமில்லை;*

என்றென்கை வாளின் இயக்கம் இடறுதோ,
அன்றிலை யானே; அறிவேன் இறுதியை!
பொன்றிட அஞ்சேன்; புலம்பேன் ஒருநாளும்!
கன்னியுனைக் கானகத்துக் கண்டிட்ட காலமுதல்
உன்னினைவாய் வாழ்வேன் உயிர்.

**கடம்ப மாதேவி :**

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

வீரரே, பேச்சில் நீவீர்
வீரரே; ஐயம் இல்லை.
வீரமே தமிழப் பெண்கள்
விழிகளை, உளத்தை வெல்லும்!
யாரெவர் எதுசொன் னாலும்
யானுமை ஏற்கேன்; ஏனா?
தீரரே எனினும் உம்மில்
தெளிந்தநல் ஒழுக்கம் இல்லை!

கட்டுடல் இருந்தும் என்னே?
கட்டுப்பா டற்ற உள்ளம்!
விட்டிடின் ஒழுக்கம் யாரும்
வீணரே; விலக்கும் இல்லை.
மட்டிரு மலர்கள் நாடும்
வண்டென மகளிர் தேடும்
கெட்டவர் நீரே; யாரே,
கேள்வனாய்க் கொள்ளு வாரே?

வாளினை வீசும் போது
வாய்த்திடும் உறுதி தன்னை
வாளிணை விழிகள் காணின்
வழுக்கிடு வீரர் நீவீர்!
கோளிலர்[5]; கொள்வ தெல்லாம்
கூசிலார் மயக்கம்[6] மட்டே!
வேளிரே, ஒழுக்கக் கேட்டை
விழைவரோ தமிழப் பெண்கள்?

(விக்கியண்ணன் தயங்கித் தயங்கி விடை அளிக்கிறான்.)

**விக்கியண்ணன் ;**

பரத்தையர் உறவு பற்றிப்
பைந்தமிழ் இலக்கி யங்கள்
விரித்துரைத் திட்ட யாவும்
விளங்கியும் வியப்பாய்க் கேட்பீர்!
எரித்திடு காமத் தீயை
எதிர்த்தெவர் மீளல் கூடும்?
துரத்திடும், விலக்கல் கூடா;
தொடர்ந்திடும் இயற்கை என்றும்!

**கடம்ப மாதேவி :**

ஆளுமை ஆண்கட் கென்றே
அன்றிருந் தென்றும் சொல்வீர்!
தேளினர், பொல்லார் பெண்ணைத்
தேடுவீர் தினவு கொண்டால்!
தோளணி துண்டாய் எண்ணித்
துறக்கவும் தயங்கீர் பின்னாள்!

நாளெலாம் இரந்து வேட்டும்
    நானுமை ஏற்றல் இல்லை.

ஒருவனுக் கொருத்தி என்ற
    உயரிய கொள்கை கொண்ட
அரசரெம் கிள்ளி நல்லோன்
    அறவழி மரபில் வந்தோள்
கரவுடை மனத்தர், நாளும்
    கழிகாமக் குழிவீழ் உம்மைத்
தெரிந்திவண் மணத்தல் ஆமோ?
    தேவையோ தெரிந்தும் துன்பம்?

எண்ணிய முடிக்கல் ஏலேல்
    இயல்பிலாப் பிறழ்ந்த நெஞ்சப்
பெண்ணினார் பொல்லாக் காமப்
    பிணைப்பினில் தாழ்க என்றே,
திண்ணமாய்ச் சூளு ரைத்த
    திறமிகு கிள்ளி பின்னோள்
கண்ணிலாள் அன்றே, உன்றன்
    காதலை ஏற்ப தற்கே!

அரசிளம் பெண்ணே; மேலாம்
    ஆவலுள் இருந்தும் என்ன?
இரவினுக் கொருத்தி தேடும்
    இழிபுடை வேளிர் உம்மைக்
குரிசிலாய்க் கொள்வ தற்குக்
    கூசிடும்; குமுறும் உள்ளம்!
வெருவுறு செய்கை செய்வீர்;
    வெந்துளம் நீறாய் மாறும்.

*(விக்கியண்ணன் செய்வதறியாது திகைத்து நிற்கிறான். பின்னர்த் திடீரென்று கடம்ப மாதேவி முன்னர் மண்டியிட்டு அமர்ந்து அவள் கைகளைப் பற்றுகிறான். அவள் எந்த உணர்ச்சி வெளிப்பாடும் காட்டாது அமைதி காக்கவே, மெல்ல எழுந்து கட்டியணைத்து அவள் முகத்தைத் தன் முகத்திற்காகத் திருப்பிப் பார்க்கிறான். அவள் கண்களில் முத்து முத்துக்களாகக் கண்ணீர்!)*

**விக்கியண்ணன் :**

(நேரிசை ஆசிரியப்பா)

இஃதென், தேவி? ஏனிக் கண்ணீர்?
அஃகிய[7] அறிவினன் அறமில இழைத்தனோ?
இத்துணை வெறுப்பா? ஏதிலன் யானோ?
எத்தன் செய்பிழை இனியை, பொறுக்க.
உண்மை முன்னர் உணர்ந்திலன்!
பெண்மைப் பேறே, பேயன் யானே!

*(விக்கியண்ணன் அவளை நீங்கி வெளியேற அடி எடுத்து வைக்கிறான். அடுத்த வினாடி, அவன் அவள் அணைப்பில்! காலம் மெல்லக் கடந்து கொண்டிருக்கிறது.)*

**கடம்ப மாதேவி :**

வீரரே! பெருகு விழிநீர் ஆடையை
ஈரப் படுத்திய என்செயற் குட்குவன்.

**விக்கியண்ணன் :**

ஆடை நனைந்ததின் அகமிக நனைந்தது!
வாடை இடையுறா வாய்த்தவுன் னணைப்பில்,
உள்ளும் புறமும் ஒருங்கு மகிழ்ந்தன!
கொள்ளற் கரிய குலமணி, உன்னுளம்
வேட்ப எவையும் விளம்பிடு;
வாட்டிறன் கொண்டவை வைப்பேன் அடியே!

**கடம்ப மாதேவி :**

*(பஃறொடை வெண்பா)*

வெற்று மொழியெதற்கு? வேண்டா சூளுரைகள்.
பற்றற் றிருந்திட்டேன்; பற்றிற்றின் காதல்!
குறித்த இலக்கைக் குதிரை இருந்தே,
எறிந்த நெடுவேல் இயைந்த பொழுதே
இழந்தேன் மனத்தை; உழந்தேன் இதுநாள்!
விழுந்தேன் அமுத விளைவு.

**விக்கியண்ணன் :**

*(இன்னிசை வெண்பா)*

வாணாள் முயன்றாலும் வாய்த்தற் கருமருந்தே!
காணா திருந்திட்டாய் காதல் உளங்கொண்டும்.
தேனே, திரட்பாலே, தெள்ளமுதே நீயெனக்
கானாய் உயிராய் அமைந்து.

*(கடம்ப மாதேவி அவன் அணைப்பினின்றும் பிரிந்து நீங்கிப் பேசுகிறாள்.)*

**கடம்ப மாதேவி :**

*(கலிவெண்பா)*

பாண்டியர் பல்லவர் பாரில் படைவலியர்.
ஈண்டிவரில் யானெவரை என்றுணையாய் ஏற்றாலும்
சோர்ந்து தடுமாறும் சோழர் குலமரபு
தூர்ந்து மறையாது தோளுயர்த்தி நிற்குமென
எல்லாரும் ஒப்பிடுவர்; யானுமதை ஒப்பிடுவேன்.
பல்லவரும் நல்லவரே; பாண்டியரும் வல்லவரே!
ஒல்லும் மணவுறவால் உண்டாகும் நாட்டமைதி.
பாண்டியர் தம்பி பராந்தகரை நானறிவேன்;
காண்டற் கினியவரே காஞ்சி இளவரசும்;
ஆற்றல் அழகோ டறிவுமிகக் கொண்டவவர்
போற்றி எனையின்றும் ஏற்றிப் புகழ்ந்திருப்பர்!
வேண்டிப் பலரிடித்தும் வேண்டா எனமறுப்பேன் !
ஈண்டக் கரணியத்தை என்னவரே, நீர்கேட்பீர்.
எல்லாரை யும்போன்றே யானும்; எனக்குமட்டும்
இல்லாமற் போயிடுமோ இன்பம் உணர்வேட்கை?
பற்றும் எனைப்பற்றும்; பார்த்தீரே சற்றுமுன்னர்ப்
பற்றி உமைப்படர்ந்த பாங்கு!

*(விக்கியண்ணன் அவளை மெல்லத் தொட்டணைத்துத் தழுவுகிறான்.)*

**விக்கியண்ணன் :**

*(குறள் வெண்பா)*

*அரவிணை அன்ன அணைப்பினில் நெஞ்சக்*
*கரவிலை; கண்டேன் களித்து.*

**கடம்ப மாதேவி :**

*(பஃறொடை வெண்பா)*

*இருபத்தைந் தாண்டென் னகவை; எனினும்*
*பருவத் தெழுகின்ற பாலுணர்வு மிக்கிருந்தும்*
*ஈண்டவற்றைத் தள்ளி இருத்திட்டேன்; ஏனெதற்காம்?*
*பூண்டுள கொள்கைப் பொறுப்பின் பயனாய்!*
*உலகில் உயர்ந்த ஒருதனி நாடாய்*
*இலையொன் றிதற்கெதிர், யாரும் இசைத்திடச்*
*செம்பியர் ஆட்சி சிறப்புற் றமைவதல்லால்*
*தம்பியின் கீழித் தரணி பணிந்திட,*
*ஈழம் தொடங்கி இமயமும் தாண்டியெம்*
*சோழப் புலிக்கொடி தோன்றிப் பறந்திடும்*
*அந்நாள் வருமோ? அதுவரை ஆற்றுவனோ?*
*இந்நாள் செயற்குரிய தென்?*

**விக்கியண்ணன் :**

*(இன்னிசைச் சிந்தியல் வெண்பா)*

*தெள்ளத் தெளிவாகத் தேவையினைத் தேர்ந்துரைப்பின்*
*கள்ளவிழ் முல்லைக் கவின்மலரே, காதலிநீ*
*உள்ளுவ கொள்வேன் உவந்து.*

**கடம்ப மாதேவி :**

*(பஃறொடை வெண்பா)*

*எனைப்பெற்ற இந்நாட் டிழிநிலை நீங்கத்*
*தினையளவுங் கூடுமெனில் தீவினைக்கும் நானஞ்சேன்.*
*மீண்டு மெழுச்சியுறப் பாண்டியரோ, பல்லவரோ*
*ஈண்டுதவார்; ஏனா? இடரானார் அன்னவரே!*
*சோழ வளநாட்டுச் சொந்தப் பகுதியெலாம்*
*தாழுமவர் கோற்கீழ்! தகுமோ மணவுறவும்?*
*அன்னாரை நான்மணப்பின் ஆதித்தன் வென்றழிக்க*
*உன்னானே! உட்கொண்ட கோட்பாட்டிற் கொவ்வாதே!*
*என்வரையில் இவ்வரசு எல்லாரும் ஏற்றுமொரு*
*தன்னரசாய், நேரில் தனியரசாய் வாணாளில்*
*ஆதித்தன் ஆள அமைந்திடு நோக்கன்றி,*
*ஏதுமிலை வாழ்வில் எனக்கு.*

*(வெகு நேரம் விக்கியண்ணனிடமிருந்து விடை வரவில்லை. அவன் கொண்டிருந்த ஆழ்ந்த ஆய்வைத் தன்னை அணைத்து மகிழ்ந்திருந்த அவன் கைகளின் அமைதியினின்று கடம்ப மாதேவி புரிந்து கொள்கிறாள். அவன் பேசிய போது, அவன் கொண்ட முடிவின் உறுதி நன்கு தெரிகிறது.)*

**விக்கியண்ணன் :**

*(கொச்சகக் கலிப்பா)*

*உள்ள உறுத்தலினை ஒளிவின்றி உரைத்திட்டீர்;*

*கள்ளஞ் சிறிதுமிலை; கழறியவை நறியவையே!*
*கொள்ளற் குரியவற்றைக் குறித்தறிந்துன் குறிக்கோளை*
*உள்ளி முடித்திடுவேன்; உயிர்த்துணையே, உவந்திடுக.*

*(விக்கியண்ணன் விரைந்து வெளியேறுகிறான். கடம்ப மாதேவிக்கு எதுவும் புரிந்திருக்கவில்லை. அவள் புரிந்துகொண்டு இருந்தவை எல்லாம், சற்று முன்னர்வரை அவள் அடைந்து அறிந்திருந்த இன்ப உணர்வுகளைத்தாம்.)*

## காட்சி : 13

**இடம்** : *பழையாற்றுப் பாசறைப் பகுதி.*

**காலம்** : *முன் மாலைப் பொழுது.*

**உறுப்பினர்** : *ஆதித்தன், விக்கியண்ணன், பல்லவரையன்.*

**சூழல்** : *இளவரசன் ஆதித்தனைச் சூழ்ந்து மக்கள் அங்கு அன்போடு ஆரவாரம் செய்கின்றனர்.அவர்தம் அன்பு மழையில் ஆதித்தன் அகம் மிகக் குளிர்ந்து மகிழ்ந்தபடி குதிரையில் சுற்றி வருகிறான்*

**ஆதித்தன்** : *(தனக்குள்)*

*(நேரிசை ஆசிரியப்பா)*

*என்னே எழுச்சி! என்னே மகிழ்ச்சி!*
*அன்பே உருவாய் அமைந்த மக்களை*
*இந்நாள் வரைநான் இருந்ததேன் மறந்தும்?*
*எந்நாள் இதுபோல் இன்னாள் உண்டு?*
*சுற்றிச் சுவைக்கும் சுரும்பெனச்[1] சூழ்ந்து*
*பற்றுடன் தொடரும் பெற்றிக் கியானே*
*செய்ததில் எதுமுன்; சேர்ந்தது மெப்படி?*
*மெய்யினைத் தொட்டும் கொய்மலர் இட்டும்*
*அன்பினைக் காட்டி இன்பினைக் கூட்டும்*
*நன்னர் இவர்க்கு நானென் செய்வேன்?*
*உடனிருந் தொன்றி உரைகொளல் ஒன்றே*
*கடனென அமையும்; களிப்பர், களிப்பேன்.*
*இந்த வாய்ப்பெனக் கியைந்திட அமைத்த*
*வெந்திறல் தலைவர் விக்கி யண்ணன்*
*நன்றிக் குரியர்; நல்லர்; வாழ்க!*
*குன்றில் வீரக் குடியினர் உறையும்*
*இப்பழை யாறை ஏற்ற களனே!*
*காலை முதலாய்க் கடும்பகல் இறுவாய்*
*வேலை முடித்து வியர்த்த வீரர்*
*கண்டதும் என்னைக் களித்தனர்; என்னே!*
*கொண்ட அன்பில் குதித்தனர் முன்னே!*
*இத்துணைப் பற்றுடை இவர்கள் இடையே*
*எத்தனை திங்கள் இருப்பினும் இனிதே.*

*பகலெலாம் இடையறாப் பயிற்சி! பயிற்சி!*
*இகலில் பயிற்சி; யாரும் சோரார்.*
*போற்றுதற் குரிய பொலன்மார் பர்கீழ்*
*ஆற்றிடு பயிற்றுமை அருமை! அருமை!*
*ஆறு திங்களுள் அடைந்த பயிற்சியில்*
*ஏறென யாரும் வீறுகொண் டிருப்பர்!*
*ஒருநாள் கொண்ட உயர்தனிப் பயிற்சியே*
*தருமிகு திறனெனில் தங்கி இவருடன்*
*நாளும் பயிலின் நம்திறன் மேலாம்;*
*ஆளும் படைத்திறன் அமையும் இயல்பாய்!*
*வியந்திடு உள்ளம் நயந்திடு மகிழ்வால்!*
*இயைந்தது எம்மனோர் எழுச்சி என்றே*
*யாரினும் நம்புவன் யானே;*
*நேரும் அக்கை நினைப்பும் நிறைந்தே!*

*( தொலைவில் ஆரவார ஒலி எழுகிறது. அப்போது, விரைந்து வந்த குதிரையில் இருந்த படைத்தலைவர் செங்கண்ணர், அதே விரைவைத் தான் கொண்டுவந்த செய்தியினைத் தெரிவிப்பதிலும் காட்டுகிறார்.)*

**செங்கண்ணர் :**

*(பஃறொடை வெண்பா)*

*சோழ இளவரசே, சுந்தரரே, நீர்வாழ்க!*
*வேழப் பொருப்பனைய விக்கியண்ணர் பாசறைக்கு*
*வந்துள்ளார்; உங்கட்கு வந்திருக்குஞ் சேதியினைத்*
*தந்திடவே வந்தேன்; தலைவரவர் இன்றிரவே*
*மீண்டு தலைநகர்க்கு மேவிடலாம் என்பதனால்,*
*ஈண்டுப் படைமறவர்க் கேதேனும் சொல்விடலாம்.*
*ஆகப் பொலன்மார்ப, ஆணையிட் டியாவரையும்*
*ஏகி இடமொன்றில் இன்னே இருத்திடுக;*
*தீரர்நம் வீரர் திறனை அருந்தலைவர்*
*நேரில் அறிந்திடட்டும் நின்று.*

*(ஆணைகள் பறக்கின்றன. படைத்தலைவர் இருவரும் பக்கம் வர, விக்கியண்ணன் இருந்த இடத்தை ஆதித்தன் வந்தடைந்த போது, அகண்டு பரந்த அப்படைப் பயிற்சிக் களம் வீரரின் அணிவகுப்பால் நிறைந்திருந்தது. அங்குக் குழுமியிருந்த வீரர் அனைவரையும் விக்கியண்ணன் ஒருமுறை நோக்கிப் பின்னரப் பேசுகிறான்.)*

**விக்கியண்ணன் :**

*(கொச்சகக் கலிப்பா)*

*கள்ளிருக்கு மலர்க்கூந்தல் கருவிழியர் அகத்திருக்க,*
*உள்ளியவை முடிப்பமென உரனமைந்த திறனுடையீர்!*
*பள்ளத்திற் புனற்பாயும்; பருவத்தில் பயன்விளையும்;*
*எள்ளிருக்கு நெய்யெனவே இயைந்திடுநும் குறிக்கோளே!*

*கொண்டிடுவீர் உறுதியினைக் குவலயமே எதிர்த்திடினும்*
*கொண்டிட்ட குறிக்கோள்கள் குறையிலவேல், நிறைவுளவேல்,*
*அண்டிடுமோ உமையச்சம்? அடைந்திடுமோ செயலயர்வு?*
*கண்டிடலாம் பெரும்வெற்றி களித்திடவே வருநாளும்!*

*மூவிரண்டு திங்களிங்கு முழுமூச்சாய்க் களப்பயிற்சி*
*தாவிகந்து[2] தரக்கொண்டீர்; தகுதிபல வரப்பெற்றீர்!*
*ஆவியொரு பொருட்டல்ல, அடையதனி அரசாட்சி!*
*மேவிடுக திறனனைத்தும் மேவார்[3]தம் குலைநடுங்க!*

உள்ளல் ஒன்றெனினும் உயர்வாக இருந்திடுக;
எள்ளற் கிடனின்றி எடுத்தாய்ந்து மடுத்திடுக[4];
தள்ளற் கமைந்தவற்றைத் தடுத்துமுதல் நிறுத்தலுடன்
கொள்ளற் குரியவரைக் கொழுகொம்பாய்ப் பற்றிடுக.

கரிகாற் பெருவளத்தர் கண்டிருந்த பெருமையெலாம்
விரிவாய் உரைத்திடலாம்; வீரர்நீர் அறிவீர்முன்!
எரிவாய் விறகாக இகலார்கை இருந்திடுநம்
உரிதாம் திருநாட்டை உயிரீந்தும் பெறல்வேண்டும்.

முன்னர்ப் பலமுறைகள் மோதிட்டோம்; பயனில்லை!
இன்னல் அடைந்திட்டோம்; இனியவையே பட்டறிவாம்!
முன்னம் நடந்தவற்றை முறையாக அசைபோடல்
நன்னர் தமைச்சேர்க்கும்; நயன்தூக்கும் வரலாற்றில்.

எண்ணித் துணிந்தெழுக; எழுந்ததன்பின் எண்ணற்க!
திண்ணம் செயலிருப்பின் தெரிந்துவரும் பெற்றியெலாம்!
கண்ணுங் கருத்துமொன்றின் கடுகாகும் பெரும்பகையும்!
மண்ணும் புகழனைத்தும் மன்பதையும்[5] உனதாகும்!

என்னிங் கிலக்கென்றே எல்லாரும் அறிதலொடு
தன்னின் பங்களிப்புத் தலைமைத்தாம் எனவறிக!
உன்னின் இலக்கெதுவும் ஒவ்வொருவர் பங்களிப்பும்
இன்றி நிறைவேறா; என்னவரே, அறிந்தாள்க.

உமைப்பயந்த திருநாட்டின் உயர்வுதனை உளத்திருத்தி
இமைப்பொழுதும் அயர்வின்றி இயற்றிடுக போர்ப்பயிற்சி!
நமைப்பகைப்போர் எதிர்காணின் நடுங்கியுயிர் அடங்கட்டும்!
இமைப்பின்முன் அவர்தலையிங் கிற்றுத்த ரைவீழட்டும்!

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

அருந்திறல் மறவர் நீவீர்
  அடைந்திடு பயிற்சி யாவும்
வருங்களப் போர்க்கு வாய்த்த
  வாய்ப்பென மனத்துக் கொள்க!
திருந்திடக் கற்க; தேர்ந்த
  தெள்ளிய அறிவு கொள்கை
பொருந்திடல் வேண்டும்; இன்றேல்,
  பொருளிலாச் செய்யு ளேயாம்!

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

போரென்றால் பின்வாங்கும் போக்கா? இந்தப்
  பொன்னாட்டில் பிறந்தார்க்கா? இல்லை, இல்லை!
வீரர்க்கு வீரத்தை விளக்கல் இங்கு
  வெளிச்சத்தில் விளக்கேற்றல்! வீணே; வேண்டா.
யாருக்கும் அஞ்சலிலீர், எதிர்த்து நிற்போர்
  எத்தனைபேர், எத்துணையர் எனினும் நோக்கீர்!
வேரற்ற மரங்களென வீழ்வர் அன்னோர்!
  வேழமெனத் தறுகண்ணர் வெல்வீர் நீவீர்!

படைப்பிரிவின் பெரும்பகுதி பழையாற் றூரில்!
  பதைபதைத்தேன் முதன்முதனான் அறிந்த போது.
குடைக்குரியர் நேரடிக்கீழ்ப் படையி லையேல்
  குளறுபடி நிறைந்திருக்கும்; குறையே நிற்கும்!

விடுத்திட்டேன் அரையரையிங் குண்மை காண;
    வியந்திட்டேன் உம்திறனை உரைக்கக் கேட்டு!
படைத்தலைவர் பொலன்மார்பர் பார்வை முன்னர்ப்
    பயிற்சிபல பெற்றுமிகச் சிறந்து நிற்பீர்!

உங்களுடை எழுச்சிகண் டுளநி றைந்தேன்;
    உள்ளுவன இயலுமென ஊக்கங் கொண்டேன்!
தங்குதடை இனியில்லை, தயக்க மில்லை;
    தடுப்பார்யார் பெருகுவெள்ளம்? தரைதான் மீறும்!
இங்கிருப்பர் இளவரசர் உங்கட் கேற்பாய்;
    இருந்திடட்டும் தொடர்பயிற்சி எந்த நாளும்!
செங்குருதி சிந்தவெழு செறுக ளத்தில்
    சேர்வதெலாம் வெற்றியன்றிச் சேதி வேண்டா.

நல்லோரே, வல்லோரே, நாட்ட மெல்லாம்
    நாட்டுநலன் ஒன்றென்றே நம்பு வோரே!
எல்லாரும் எப்போதும் ஏற்பா டாக
    இருந்திடுக; போர்வருநாள் எதிரே யாகும்.
வெல்வாரும் உளராமோ வீரர் உம்மை?
    வெகுண்டெழுந்தால் இல்லாரே பகைவர் இம்மை!
நில்லாவிவ் வுலகத்து நிலைப்ப தென்ன?
    நிற்பதெல்லாம் புகழொன்றே; நினைக, செல்க.

## காட்சி : 14

**இடம்** : பழையாற்றினின்றும் தஞ்சை செல்லும் பாதை
**காலம்** : முன் இராப் பொழுது.
**உறுப்பினர்** : இக்கியண்ணன், பல்லவரையன்.
**சூழல்** : அரை நிலா கீழ் வானில். அவ்வளவாக வெளிச்சம் இல்லாத காட்டுப் பாதையில் விக்கியண்ணனும் பல்லவரைனும் மெல்லப் பேசியவாறு குதிரைகளில் சென்று கொண்டு இருக்கின்றனர்.

**விக்கியண்ணன் :**

(நேரிசை ஆசிரியப்பா)

அரையரே, என்னுள் அரும்புமோர் ஐயம்!
வரகுணர் படையெதிர் உரனுடை நம்படை
வெற்றி கொள்ளும் பெற்றியும் உண்டோ?

**பல்லவரையன் :**

சற்றும் இல்லை, சரியாய்ச் சொன்னால்,
நற்றுணை யாக மற்றவர் அமையினும்
உற்றிடா வெற்றி; முற்றுற அழியும்.

**விக்கியண்ணன் :**

*எப்படி அத்துணை இறுதியாய் உரைப்பீர்?*

**பல்லவரையன்:**

*ஒப்பிற் கேனும் உண்மை மறைத்துத்*
*தவறாய்க் கூறும் தவற்றை இழையேன்.*
*எவரே யாயினும் எண்ணிய உரைப்பேன்!*
*கொங்கலர் சோலைக் குடமூக் கமரில்*
*கங்கர் பல்லவர் கலந்து நாமும்*
*சேர்ந்து பொருதும் செழியரே வென்றார்!*
*தேர்ந்த தலைவ, தெளிக நிலையே.*

*(சிறிது நேரம் அங்குப் பேச்சிருக்கவில்லை. குதிரைகள் மெல்லவே நடந்து கொண்டிருக்கின்றன. விக்கியண்ணன் மீண்டும் பேசியபோது, அவன் கொண்ட எண்ணம் அவன் குரலில் ஒலிக்கிறது.)*

**விக்கியண்ணன் :**

*வருமமர் விலக்க வாய்ப்பிங் கில்லை!*
*பருவ நிலையின் பண்பால் பாண்டியர்*
*அணியமாய் இருந்தும் அமைதி காப்பர்!*
*துணையென நமக்கோ தோழமை இல்லை.*
*தென்னர் பெரும்படை முன்னிரு திங்களுள்*
*முற்றுறல் உறுதி; ஒற்றர் மொழிகுவர்!*

**பல்லவரையன் :**

*அவருரை சரியே!*

**விக்கியண்ணன் :**

*அதற்கிடை நம்மால்*
*இவணெதும் செய்ய இயல்வன உளவா?*

**பல்லவரையன் :**

*படைவலி மட்டுமே பயனை நல்கா.*
*நடைபெறும் போரில் நமக்குத் துணையாய்ப்*
*பல்லவர் கங்கர் படையுடன் சேரினும்*
*வெல்லற் கில்லை; வென்றிடல் ஆயினும்*
*நல்லற் காகா நம்நிலை பின்னர்!*
*செல்லும் வளங்கள்; சிதையும் படைத்திறன்;*
*எல்லாம் பாழாம்! எளியமுத் தரையரும்*
*நில்லா தெதிர்ப்பார்! நேரிய தாகா.*

**விக்கியண்ணன் :**

*தெரிகிற தெனக்கும்; தேரேன்! உன்னால்*
*உரிய ஒருவழி உரைத்தற் கியலுமா?*

**பல்லவரையன் :**

*இருப்பதோ ஒருவழி; எப்படி யாயினும்*
*வரும்போர் விலக்கலே! வாய்ப்பதற் கிலையே!*

**விக்கியண்ணன் :**

*தென்னர் தலைநகர், தீந்தமிழ் மதுரையில்*
*உன்னை அறிந்தோர் உளரோ பல்லோர்?*

**பல்லவரையன் :** *(வியப்புடன்)*

*இல்லை, ஐயனே; எளியன் யானே!*
*நல்லார், நம்மிள வரசியார் நாட்டம்*
*பட்டதால் கிட்டிய பணியித் தலைமையே!*

*எட்டியே இருப்பதால் இங்கெனை அறிந்தோர்*
*எண்ணின் சிலரே; எனிலம் மதுரை*
*மண்ணில் திண்ணமாய் மாற்றார் அறியார்!*

**விக்கியண்ணன் :**

*வரகுண வர்மர் வழியில் தம்பி*
*ஒருவர் உண்டே?*

**பல்லவரையன் :**

*உண்மை; உண்டு.*
*பட்டத் திளவல்; பராந்தகர் எனும்பெயர்.*
*திட்டம் எதுவோ?*

**விக்கியண்ணன் :**

*தேடுவன் அதையே!*
*ஒருதாய் மக்கள் இருவரும் இல்லை.*
*எருவாய்ப் பதவி ஆசையை எழுப்பின்?*

**பல்லவரையன் :**

*முயற்சி வீணாம்; முடியா தெண்ணம்.*

**விக்கியண்ணன் :**

*இயற்கையே ஆசை எழுவ தியார்க்கும்!*

**பல்லவரையன் :**

*இருக்கலாம்; ஆனால், இதிலவர் விலக்கு.*
*பெருக்கெனப் படர்ந்த பெரும்படைத் தலைமை*
*நாடெலாம் போற்றும் நக்கம் புள்ளர்க்(கு)*
*இணையாய் என்றும் துணையாய் இருப்பவர்,*
*பராவுதற்[1] குரிய பண்பினர்,*
*பராந்தகர் மட்டே; பழந்தமிழ் மட்டே!*

**விக்கியண்ணன் :**

*(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

*பாண்டியர் இளவல் இன்றிப்*
*பயனுறா என்றன் திட்டம்.*
*மாண்புடை சோழர் தம்மின்*
*மரபணு அவருள் உண்டே?*
*பூண்டலை கொண்ட தாயர்*
*பொத்தப்பிச் சோழர் பெண்ணே;*
*ஈண்டவர் என்னைச் சாரின்*
*இயைந்திடும் எண்ணம் யாவும்.*

*அரையரே, இப்போ தின்னே*
*அகல்கநன் மதுரை நோக்கி.*
*உரையெதிர் வேண்டா; துர்க்கை*
*உறுவிழா தஞ்சை நாளில்*
*விரைமலர் தாரர்[2] தம்பி*
*விழைந்தெனை அடைதல் வேண்டும்;*
*வரையறை மொழிதற் கில்லை;*
*வாயுரை ஏற்ற கொள்க!*

**பல்லவரையன் :**

*நல்லது தலைவ, நீங்கள்*
*நாடுவ முடிப்பேன் நன்றே.*
*இல்வரை தொடர்வேன்; பின்னர்,*
*ஏகுவேன் பணித்த வாறே.*

**விக்கியண்ணன் :**

தொல்லையில் வழியில்; முன்னர்ச்
  சொற்படி பிரிந்து செல்க.
வில்விடு கணையின் நீங்கி
  விரைகநீர்; விடுக செய்தி!

( பல்லவரையன் தன் புரவியைத் திருப்பி மதுரை நோக்கி விரைகிறான். அவன் சென்ற திசையையே நோக்கியவாறு சற்று நின்றிருந்த விக்கியண்ணன் பின்னர்த் தஞ்சை நோக்கித் தன் பயணத்தைத் தொடர்கிறான்.)

## காட்சி : 15

**இடம்** : நாங்கூர் வேள் இல்லம்— மாதேவி அறை.

**காலம்** : முன் மாலைப் பொழுது.

**உறுப்பினர் :** விக்கியண்ணன், கடம்பமாதேவி.

**சூழல்** : வெளிச்சம் மிகையாக இல்லாத அறையில் விக்கியண்ணன் சோர்ந்து அசைவற்றுப் படுத்து இருக்கிறான். அருகே கட்டிலில் கடம்ப மாதேவி அமர்ந்திருக்கிறாள்.

**விக்கியண்ணன் :** (தனக்குள்)

(கலி வெண்பா)

எங்கும் இருளிங் கியைந்ததும் எப்படியோ?
வங்கக் கடலிருந்து வானிலெழு செங்கதிரோன்
சுற்றிச் சுழல்வதற்குஞ் சோர்ந்து துறந்தனனோ?
முற்றத் தொளியேற்ற மொய்குழலர் ஏன்மறந்தார்?
நன்று! மிகநன்று! நான்கண் திறக்கலிலேல்,
ஒன்றும் இருளெங்கும்; உண்டாகும் பூசையுளம்!
ஐயோஒ! இஃதென்ன? ஆற்றற் கருதுன்பம்!
மெய்யேன் துவண்டு மெலியும்? வலிகொடுக்கும்?
கைகால் அசைத்தற்கும் கண்ணைத் திறத்தற்கும்
மெய்யாய் முடியலையே! மேனாள் நடந்ததென்ன?
மெல்ல நினைவலைகள் மீள்கின்ற; மீள்கையிலே
கொல்லற் கணைந்த கொடியரவர் யாராம்?
வழியிடை நேர்ந்த வருவநிழற் போல!
பழியுடை நேரார் பதுங்கி இருந்து
தனியன் எனையங்குத் தாக்கினர்; ஆமாம்.
இனிய குரலார் எழுப்பிய ஓசையால்

*ஓடி மறைய உயிரும் பிழைத்தனன்!*
*தேடி உதவிய தேன்மொழியர் யாரவரே?*
*விண்மீனும் கண்ணயர்ந்த வேளை! வெளியிடத்தே,*
*பெண்ணாட்கென் வேலை? பிழையுடையார் தானாமோ?*
*என்ன இழிநினைப்பும்? இல்லை அவரென்றால்*
*இன்னும் உயிரோ டிவணிருத்தல் இல்லையன்றோ?*
*ஒன்னார்வாள் தாக்க உணர்வற்று வீழ்ந்தோனை*
*அன்னாரே மீட்டுதவி அன்புடனே இற்சேர்த்தார்!*
*காலத்தாற் செய்யுதவி ஞாலத்தின் மிக்கென்பார்!*
*நூலொத்தார் செய்த நுவலவரு நன்மைக்(கு)*
*உயிரைக் கொடுத்தும் உறுதுணையாய் என்றும்*
*நயனவர்க்கு நானாற்றல் நன்று.*

*(பெண்ணொருத்தி தன்னை மெல்லத் தூக்கித் தோளில் சாய்த்துக் கொள்வதை விக்கியண்ணன் உணர்கிறான்.)*

**கடம்ப மாதேவி :**

*(பஃறொடை வெண்பா)*

*பழநற வீதே; பருகிடு வீரே.*

*(விக்கியண்ணன் அருந்தி முடிக்கிறான்.)*

**விக்கியண்ணன் :**

*இழுமென் மொழியுடையீர்! யார்நீர்? இசைத்திடுக.*

**கடம்ப மாதேவி :**

*கண்ணைத் திறந்திட்டால் கண்டிடலாம் முன்னெதிரில்!*
*புண்ணுற்ற உம்முடலின் உண்ணிலைமை கூறிடுக.*

**விக்கியண்ணன் :**

*வெல்லம் உயிரில்லை வீரர்க்கு; மெய்யுமதே!*
*கல்லும் உடலுமொன்றே; கத்திமுனை பட்டழியும்!*
*காத்தீர் பகையிருந்து காட்டு வழித்தடத்து!*
*சேர்த்தீர்; பணிசெய்வீர்; சேயிழையீர், யார்நீவீர்?*

**கடம்ப மாதேவி :**

*இத்துணை ஆர்வமேன் என்னை அறிதற்கும்?*

**விக்கியண்ணன் :**

*மெத்த தெரிகுரலே; மேனாள் பழகியதே!*
*கண்ணைத் திறவாமல் காண முயன்றிடுவேன்;*
*கண்டிடின் கூடும் களிப்பு.*

**கடம்ப மாதேவி :**

*(கலி வெண்பா)*

*வேளிர் குலத்தோன்றல் வேல்விழியர் கூட்டத்தில்*
*நாளும் உழன்றிடுவார்; ஞாலம் அறிந்ததுதான்!*

*(விக்கியண்ணன் வியப்பு மேலோங்கக் கண்களைத் திறந்தபடி எழுந்து அமர்ந்து கடம்ப மாதேவியின் கைகளைப் பற்றிக் கொள்கிறான்.)*

**விக்கியண்ணன் :**

*தேவி, தெளிந்தறிந்தேன் தீதில் இமையொப்பக்*
*காவல் இருந்துயிர் காத்ததற்கென் னன்றி!*

**கடம்ப மாதேவி :**

*உடனிலை எப்படி உள்ளது? சொல்க.*

**விக்கியண்ணன் :**

*உடனிலை தானே? உணர்க உணர்ந்திதோ.*

*(விக்கியண்ணன் கடம்ப மாதேவியை இறுகக் கட்டித் தழுவுகிறான். அவள் அவன் அணைப்பினின்றும் வலிந்து முயன்று விடுபடுகிறாள்.)*

**கடம்ப மாதேவி :**

*போதும், விடுக; பொருந்தா விளையாடல்!*
*ஏதுமுயிர்க் கீறாய் இயைந்திருப்பின்! எண்ணீர்நீர்.*

*(கடம்ப மாதேவியின் கண்கள் கலங்கியதை விக்கியண்ணன் கண்டு உருகுகிறான்.)*

**விக்கியண்ணன் :**

*பட்டிடுவான் என்றோ பதைபதைத்தீர்? அஞ்சிட்டீர்?*

**கடம்ப மாதேவி :**

*ஒட்டிடா தச்சம் ஒருநாளும் உள்ளவரை!*
*தட்டுத் தடுமாறுந் தள்ளா டகவையிலும்*
*ஒட்டி உயிர்த்துணையாய் உற்றிருப்பார் என்றுணைவர்!*
*விட்டு விலக்க வினைக்கும் வலியில்லை!*
*கட்டளை இஃதாம்; கணித்தார் கணியரெலாம்!*
*என்றாலும் சற்றேனும் எச்சரிக்கை வேண்டாவா?*
*நன்றாமோ கொண்ட நலிவு?*

**விக்கியண்ணன் :**

(பஃறொடை வெண்பா)

*குற்றம் எனதில்லை; கும்மிருட்டுப் பாதையெலாம்!*
*சுற்றி அடர்புதர்கள், சூழ உயர்மரங்கள்;*
*புற்றர வொப்பரவர் புலப்படார் கண்கட்கு!*
*கற்ற பயிற்சியெதும் கைகொடுக்க வாய்க்கவில்லை.*

**கடம்ப மாதேவி :**

*வீரர்நீர்; ஆனாலும் வேண்டும் விழிப்பென்றும்.*
*ஆருயிர்க் கொன்றென்றால் ஆடாதோ பெண்ணுளமும்?*
*கூட துணையின்றிக் கொள்செல வாகுவதோ?*
*வாடிக் கிடப்பதாய் வந்தவாள் சொற்கேட்டு*
*நொந்து நுடங்கிக்கால் நூலாய் நொசிந்திட்டேன்!*
*அந்த ஒருகணத்தில் ஆயுள் முடிந்ததொப்ப*
*மூச்சு முடங்கிற்று; முற்றும் செயல்போச்சு!*
*பேச்சற்றேன்; ஆனேன் பிணம்!*

**விக்கியண்ணன் :**

*வேண்டா துயரம்; விழிப்போ டினிநடப்பேன்.*
*தூண்டாச் சுடர்விளக்கே, தோண்டா வருமணியே,*
*எந்த இடமிஃ திவண்வந்த தெப்படியோ?*

**கடம்ப மாதேவி :**

*நந்தம் அமைச்சருடை நல்லகம் இஃதாகும்;*
*பாதையிலே மாதேவி பார்த்துள்ளாள் நேற்றிரவு;*
*தீதெதும் நேருமுன்னர்த் தேர்ந்த மருத்துவத்தைத்*
*தந்ததன் பின்னர்த் தருவித்தாள் என்னையிவண்.*
*வந்துமைக் கண்டபினே வந்ததென் னுயிர்மீள!*
*என்ன எழுகின்றீர்? இங்கே இருந்திடுக;*

இன்னல் தொடரா வினி.

**விக்கியண்ணன் :**

இல்லையில்லை; வேண்டுபணி ஏராளம் உண்டுசெய!
தொல்லையினி வாரா, துணையாய்ப் பலருள்ளார்!
காட்டு வழித்தடத்துக் கண்டென்னைக் கொண்டுவந்து
வேட்டுப் பணிசெய்த வேல்விழிமா தேவியர்க்கு
நன்றிக் கடப்பாட்டை நான்நேரில் சாற்றிடுதல்
அன்றி அமையா அகம்.

## காட்சி : 16

**இடம்** : நாங்கூரார் இல்லம்— மாதேவி அறை.
**காலம்** : முன் காலைப் பொழுது.
**உறுப்பினர்** : விக்கியண்ணன், கடம்ப மாதேவி, மாதேவி.
**சூழல்** : மாதேவி முருகன் சிலை முன்னர் அமர்ந்து கண்களை மூடி மனம் உருகப் பாடித் தொழுதவாறு இருக்க, உள் நுழைந்துவிட்ட விக்கியண்ணன், பாடலை அமைதியாகக் கேட்டவாறு காத்து நிற்கிறான்.

**மாதேவி :**

(கொச்சகக் கலிப்பா)

எண்ணியுளத் தறிதலிலா எழிலார்ந்த வனப்பினனே,
கண்ணி[1]நெடுங் கடம்பினுருள் கமழ்நறும்பூ[2] மிலைபவனே,
மண்ணிலொருங் கிருட்கூட்டும் மருண்மாயை அறுப்பவனே,
பண்ணியுனைப் பரவிடுவேன்; பழம்பொருளே, அருள்வாயே.

மாக்கடலின் நிவந்தெழுந்து[3] மருங்கொடுசூர் மாதடித்தோய்[4],
ஏக்குறுமென் னுளத்திலெழு இருமாசை மடியாயோ?
நோக்குதற்கு மரியான்முன் நுவற்பொருளை விரித்தோயே!
போக்கறியாப் புலனலையும்; பொருத்தாயோ உறுநெறியே!

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

சீர்கெழு செந்தூர் வேலா,
  செங்கோட்டுச் செவ்வேள், மூலா!
சூர்மருங் கறுத்த ஐயா,
  சுடரிலை நெடுவேற் கையா,
ஆர்வலர்க் கருளே அன்பே,
  அணியிழை கணவ, இன்பே,
தேர்ந்துனைப் பணிதற் செய்வேன்;
  சேயெனைக் காத்தற் செய்க.

நல்லதே நாடல் வேண்டும்;
நயம்பட நவிலல் வேண்டும்;
அல்லவை இல்லை யாக
ஆர்க்குநான் அருளல் வேண்டும்;
இல்லென யார்க்கும் சொல்லா
இயல்புடை எண்ணம் வேண்டும்;
வெல்லரு வேலா, வேந்தே,
வேண்டுவ வேறும் யாதே?

*(பாடலை முடித்து இறைவனை விழுந்து வணங்கி எழுகிறாள் மாதேவி. பின்னர் நெற்றியில் திரு நீறு அணிந்தபடி திரும்புகிறாள். விக்கியண்ணன் எதிரே நிற்பதைக் கண்டு வியப்பை வெளிப் படுத்துகிறாள்.)*

**மாதேவி :**

(நேரிசை ஆசிரியப்பா)

என்னிஃ தைய! எழுந்தனிர் இங்கே!
இன்னுநீர் ஓய்வில் இன்றுயில்
கொண்டிட அன்றோ, கூடிடுங் குணனே!

**விக்கியண்ணன் :**

(கலி விருத்தம்)

கொல்புலி தங்கா குறுகிக் குகையுள்!
கல்லிணை வற்றிறக்[5] காட்டுக் களிறும்
சில்வலைச் சிலந்திச் சிறையுள் நில்லா?
இல்லையென் தங்காய், என்றுநான் இலையே!

**மாதேவி :**

(நேரிசை ஆசிரியப்பா)

தங்கையா? யானா?

**விக்கியண்ணன் :**

தவறென் அதிலே?
எங்கோ பிறந்தோம்; இங்கோ இயைந்தோம்.
செயிருறு[6] நோக்கர் தீவினை நீக்கி
உயிரினைக் காத்தீர்; உடன்பிறப் பொப்பே.
வேற்றவர் இலைநாம், வேளிர்;
ஊற்றம் மிகுமுயர் ஓரினக் கூறால்!

**மாதேவி :**

அருட்கூர்ந் தைய, அமர்க பைய.
இருட்கண் கொண்ட இருந்துயர் இந்த
ஒருநாட் பொழுதுள் ஒழிந்திடா தமர்க.
வருநாட் கும்பணி வரலா றாகுக!
தங்கை என்றனிர், தாவில்; மகிழ்வே.
இங்கே மூத்தோர் இளையர் யாவரும்
உறவே; உளத்தால் உழுவலர் அவரே.
திறவோர் நீவீர் தெளிந்து தேர்ந்த
கரவா துரைப்பின் கடனாய் முடிப்பேன்.
வரலாம் நன்மைகள் மன்னர் மகற்கெனில்
உயிரையும் ஈவேன்; உறவென்?
செயிரிலா அண்ணலே, செப்புக; அச்சமென்?

**விக்கியண்ணன் :**

*அச்சமா? எனக்கா? அஃதும் என்னால்*
*மெச்சற் குரிய மெல்லியர் இடத்தா?*
*புலியோ அஞ்சும் புல்வாய் கண்டு?*
*நலியும் நெஞ்சம் நல்லவர்க் கூறெனில்!*
*எண்ணமும் பேச்சும் என்னெச் செயலும்*
*புண்ணளி பாங்காய்ப் போமோ? அஞ்சுவன்.*
*அதிலும் பெண்ணெனின், அடடா!*
*எதுவரின் என்ன? ஏற்றுவன்; போற்றுவன்.*

**மாதேவி :**

*புரிகிற தையனே, போதுமும் அக்கறை.*
*எரிதழல் நெருங்கினும் விரிவிழி சுருங்கா*
*வழிவழி வீர வழியினள்!*
*மொழிபவ தீதா? அழுங்குதல் இலையே.*

**விக்கியண்ணன் :**

*(குறள் வெண்பா)*

*காரிருளில் கானகத்துக் காலமிலாக் காலத்து*
*நேரிட்ட தெப்படியோ நீர்.*

**மாதேவி :**

*(இன்னிசை வெண்பா)*

*ஏரகத் தெம்பெருமான் ஏற்ற திருக்கோலச்*
*சீரதனைக் கண்டு திரும்பி வரும்வழியில்*
*ஒன்னார் இகலால் உணர்வற்றுக் கீழ்கிடந்தீர்;*
*இன்னார் எனக்கொணர்ந்தேன் இங்கு.*

**விக்கியண்ணன் :**

*(குறள் வெண்பா)*

*என்னுயிரைக் காத்ததற் கென்னன்றி! முன்னம்நீர்*
*ஏரகம் சென்றதுவும் என்?*

**மாதேவி :**

*(இன்னிசை வெண்பா)*

*நெருநற்கு முன்னாள் நிறைகார்நன் னாளில்*
*முருகற்கு முன்னோன் முதல்வன்முக் கண்ணன்*
*திருவரங் கற்கும் தெரிவரிய தெய்வ*
*அருளவா விச்சென்றேன் ஆங்கு.*

**விக்கியண்ணன் :**

*(பஃறொடை வெண்பா)*

*பழையாற்றுக் கன்றுவந்தார் பாராள் இளவல்!*

**மாதேவி :**

*பிழையேதும் உண்டாமோ? பெண்ணெனக்குச் சொல்லிடுக.*

**விக்கியண்ணன் :**

*துன்னூசி[7] செல்லத் தொடருநுண் ணூலெனவே*

*என்னீர் இளவரசை எங்கும் தொடர்வதுவும்?*
*இன்னல் பலவிருக் கிங்கவர்க் கிந்நிலையில்*
*பின்னற் சடையழகால் பேதலிப்பின் என்னாகும்?*
*ஆற்றற் கருங்கடன்கள் ஆதித்தர் இப்போதே*
*ஏற்றுத் தொடங்கியுள்ளார்; ஏதமுடை பெண்ணெழிலால்*
*ஈர்க்கப் படவதனால் எண்ணம் தடையுறுமேல்*
*நீர்க்குமே கொண்ட நெறி.*

**மாதேவி :**

(நேரிசை ஆசிரியப்பா)

*அக்கா? அக்கா?*

*(விக்கியண்ணன், அவள் அழைப்பைக் கேட்டு அதிர்ச்சி அடைகிறான்.)*

**விக்கியண்ணன் :**

*அழைப்பதும் யாரை?*

**மாதேவி :**

*உளநிறை அன்பினர் இளவர சியாரை.*
*என்னிவ் வச்சம்? ஏந்தல் நீவீர்*
*கன்னியர்க் கஞ்சாத் திண்ணியர் அன்றோ!*

**விக்கியண்ணன் :**

*தேவை யற்றுத் தேவியை அழைத்தீர்;*
*பாவை யுன்செயல் பதற்றம் உடைத்தாம்.*

**மாதேவி :**

*உண்மை, உண்மை; பெண்சேய் எனக்குத்*
*தேவியே அனைத்தும்; ஆவியும் அவரே.*
*இயங்கா புள்ளி எழுத்துயிர் இன்றி!*
*தயங்கா தவரே தாயெனக் காத்தவர்.*
*ஆதித்தர் நானும் அறிந்தநாள் முதலாய்த்*
*தீதின் றிணையத் தேவியே கரணியம்.*
*எங்கட் கென்றொரு இலைதனி எண்ணம்;*
*இங்கெலாம் தேவியார் இட்டதே சட்டம்!*
*அக்கா வருகிறார்; அவரையே கேட்போம்.*

*(கடம்ப மாதேவி அப்போது அங்கே வந்து சேர்கிறார். விக்கியண்ணன் எழுந்து நிற்கிறான்.)*

**கடம்ப மாதேவி :**

*அக்கா என்றேன் அலறி அழைத்தாய்?*

**மாதேவி :**

*ஏரகம் சென்ற திறைவனை நாடியா?*
*தீரரும் இளவலைத் தேடி ஓடியா?*

**கடம்ப மாதேவி :**

*என்ன நடந்த தேனிவ் வினாக்கள்?*

**மாதேவி :**

*என்னையிவ் வண்ணல் ஏளனம் செய்குவர்;*
*நம்மிள வரசை நாடியே ஏரகம்*

*சென்று வந்ததாய் நன்றல செப்புவார்!*

*(மாதேவியை அணைத்துக் கூந்தலை வருடியபடி கடம்ப மாதேவி ஆறுதல் கூறுகிறார்.)*

**கடம்ப மாதேவி :**

*இன்னுங் குழந்தையாய் இருப்பாய், சரியா?*
*என்ன சொலினென்? ஏனிக் கவலை?*
*ஆதித்தர்க் காக அணைந்த தாகவே*
*இருந்தால் என்ன? எழுதுயர் என்ன?*
*உரிமை முற்றும் உடையள் நீயே!*
*எரிசுடர் வருகைக் கெதிர்ப்பே தெண்ணிடு.*

*(விக்கியண்ணன் அதுவரை பேசாமல் இருந்தவன் அப்போதே குறுக்கிடுகிறான்.)*

**விக்கியண்ணன் :**

*பொறுக்க என்னைக் குறுக்கே நானும்*
*இருக்கும் நிலைக்கே; எல்லாம் அரசியல்!*

**கடம்ப மாதேவி :**

*என்ன அரசியல்? யானறி யாததா?*
*மன்னர் அமைச்சர் என்முன் பின்னர்!*

**விக்கியண்ணன் :**

*அறிந்தவர் ஆயின் தெரிந்தும் இவரை*
*ஆதித்தற் கிணையாய் ஆக்க முயலீர்.*
*சூதில் பேச்சில்; சொல்வதைக் கேட்க!*
*வேளிர் குலத்து வேல்விழி சோழ*
*ஆளுநர் அருகில் அரசியாய் அமர*
*விழையும் ஆசை பிழையுடைத் தாகும்.*

*(மாதேவியின் கண்கள் கலங்குகின்றன. தழுதழுத்த குரலில் மெல்லப் பேசுகிறாள்.)*

**மாதேவி :**

*ஐய, நீவீர் தையல் என்னைத்*
*தங்கை என்றதன் தகைமை புரிந்தது.*
*இம்மன் மருகியாய் இன்றிலை என்றும்*
*இம்மியும் முன்னர் எண்ணிய தில்லை.*

**விக்கியண்ணன் :**

*ஆசை நெஞ்சில் ஆதித் தர்மேல்!*
*மாசை மறைப்பீர்; மனம்போல் உரைப்பீர்.*

*(கடம்ப மாதேவி குறுக்கிட்டுப் பேசுகிறார்.)*

**கடம்ப மாதேவி :**

*யாரை விரும்பினால் யாருக் கென்ன?*
*அவரவர் வாழ்க்கை அவரவர் உளப்படி!*
*அரசியற் ககப்படா அணங்கார் காதல்!*
*முரணும் பேச்சு; முயலீர் மீண்டு.*

**மாதேவி :**

*விடுங்கள் என்னை; விடைநான் அளிப்பேன்.*
*கடுகள வேனும் காதல் உணர்வெனை*
*இன்று வரையிலும் ஒன்றிய தில்லை.*
*அன்பெனக் குண்டிங் காதித் தர்மேல்!*
*அன்பு வேறாம், ஆசை வேறாம்;*

பற்று, நட்பு, பத்தி[8], காதல்
உற்று நோக்கின் உள்ளத் தன்பே!
அன்பின் வழிய தாருயிர் ஆகும்!
இன்பின் ஈர்ப்பால் எழுதல் காதல்!
பெயர்கள் ஒன்றே; பிறப்பிடம் அன்பே!
உயர்மலை பெய்யினும் உறுவது கடலே!
இளமை முதலாய் இருவரும் இணைந்து
வளரும் சூழலால் வளர்ந்த தன்பே!
இதுவரை அஃதிவண் இருக்கும் நட்பாய்!
புதிருடை காதல் புகுந்த தில்லை.
அன்னை தந்தை அருமை அக்கை
மன்னர் மற்றுளோர் மனதை அறிவேன்.
எல்லார் நினைப்பும் என்னை இளவல்
இல்லாள் ஆக்கலே; எல்லாம் அறிவேன்.
இருந்தும் இவற்றை எண்ணியள் இல்லை.
விருந்தாய்க் காதல் மேவலாம் ஒருநாள்!
மறுத்தற் கில்லை; மனமொரு குரங்கே.
ஆனால், ஏரகம் அடைந்து மீண்டது
தேனார் தொங்கல் தீங்கறு செவ்வேள்
இறையருள் வேட்டே; இதிலெதும்
மறைபொருள் மற்றும் மனமா சிலையே!

*(மாதேவின் நீளுரையால் விக்கியண்ணன் மலைத்து நிற்கக் கடம்ப மாதேவி அவளைக் கட்டி அணைத்து உச்சியில் முத்தம் இடுகிறார்.)*

**கடம்ப மாதேவி :**

*(குறள் வெண்பா)*

வீரரே, வேறு விளக்கமும் வேண்டுமோ?
ஈர மனத்தள் இவள்!

**விக்கியண்ணன் :**

*(கலி வெண்பா)*

மாதேவி என்தங்கை; மாற்றமிலை என்பேச்சில்!
ஈதேதோ ஒப்பிற் கெடுத்துரைத்த போக்கில்லை!
கூட்டில் அடைந்திரு கொல்புலியைத் தாளகற்றி
மீட்டற் கிளவரசின் மேலானார் யாருள்ளார்?
சோழர்க் குரிமையுள சொந்த நிலப்பகுதி
தாழும் பிறர்கீழே; தாளாண்மை வேண்டாவா?
ஆற்றற் கருங்கடன்கள் ஆதித்தற் கெண்ணிறந்த
ஏற்று நடத்தற் கினியிருக்க, என்தங்காய்!
இன்னியலார் தண்ணுருவால் ஈர்க்கப் படுவாரேல்
பொன்னி வளநாடு போற்றுநிலை பெற்றிடுமோ?
தாழ்வற்றுச் சோழர் தலைநிமிர்தல் ஆகிடுமோ?
பாழ்படுபண் பாடு பழநிலைமை எய்திடுமோ?
இன்னாடும் சோழ இளவரசும் ஏற்றமுறல்
உன்னாவல் என்றானால், உள்ளன்பும் உண்மையெனில்
ஒப்பிடனும் மாதேவி, உன்னையே நீயிழக்க!
செப்பிடுக எண்ணுவ தேர்ந்து.

**மாதேவி :**

*(இன்னிசை வெண்பா)*

ஆதித்தற் காகவன் றன்னை எனைவளர்த்த
மாதர்க் கரசியார், மன்னர் குலவிளக்கு
கண்டுவரு மெண்ணங் கனியுமெனில் காலமெலாம்
உண்டு தனித்திருக்க ஒப்பு.

**விக்கியண்ணன் :**

*(கலி வெண்பா)*

*பெற்றவர் கொஞ்சப் பெயரக் குழந்தைகள்*
*பெற்றிடு பேற்றினைப் பெற்றிடல் வேண்டுநீ!*

**மாதேவி :**

*மற்றென் விழைவதும்? தெற்றெனக் கூறுக.*

**விக்கியண்ணன் :**

*கொற்றங் கொளற்குரி கோமகன் தன்னை*
*மணந்திடு வேட்கை மறந்திடல் வேண்டும்.*

*(மாதேவி விடையளிக்கு முன்னர்க் கடம்ப மாதேவி குறுக்கிடுகிறார்.)*

**கடம்ப மாதேவி :**

*இணர்மலர் அன்னாய்! இருஇரு; வேண்டா.*

**மாதேவி :**

*பொறுத்திடல் வேண்டும்; புதைந்தொரு வேட்கை*
*உறுத்திடல் இல்லை உளத்தெனும் போது*
*மறுத்தல் எதற்காம்? மணிமுடி சூடும்*
*திறத்தர் இடத்துத் தினையள வேனும்*
*இலையெனக் காசை; இனியென்? மொழிக.*

**விக்கியண்ணன் :**

*உலைவில் உளத்தீர், உயர்ந்திட வாழ்கநீர்!*
*கண்டதும் உண்டுகொல் காஞ்சி இளவலை?*
*வண்டுறை தாரார் வடிவழ கெப்படி?*

*(கடம்ப மாதேவி இடையிட்டு விடையளிக்கிறார்.)*

**கடம்ப மாதேவி :**

*பார்த்தவள் இல்லவள்; பார்த்துளன் நான்முனே.*
*ஈர்த்தற் குரியெழிலர், இன்சொலர், நன்னடையர்!*
*பாண்டியர் தம்பி பராந்தகரும் அப்படியே!*
*காண்டகு காட்சியர்! காதற் கினியவர்!*

**விக்கியண்ணன் :**

*எல்லா வகையிலும் ஏற்றம் நிறைந்திரு*
*நல்லார், அறிவினர், நற்சோழர் பெண்ணாய்ப்*
*பிறந்ததும் மக்கள் பெறலரும் பேறே!*
*திறந்துள மற்றுள செய்திகள் யாவையும்*
*சொல்லிடக் கூடுமேல் தொல்லை எனக்கிலை.*
*சொல்லுக யாவும் துணித்து.*

**கடம்ப மாதேவி :**

*(பஃறொடை வெண்பா)*

*சொல்லத் தயக்கமென்? சோழ இளவரசைப்*
*புல்லற் குரியளில்; போற்றற் கினியவராம்*
*பல்லவ பாண்டியரில் செல்வாக்கு மிக்கவர்க்(கு)*
*இல்லவளாய்ச் சேர்க! இதுதானே கோரிக்கை?*

**விக்கியண்ணன் :**

*இத்துணை எளிதாய் எவர்க்கும் மிகத்தெளிவாய்*

ஒத்த உரைத்தீர் உணர்ந்து.

**கடம்ப மாதேவி :**

*(நிலைமண்டில ஆசிரியப்பா)*

நன்று, மிகமிக நன்று; வீரரே,
ஒன்று மட்டும் இன்றும் உணரேன்.
தலைவர் என்றுமை இளைஞர் எவரும்
தலைமேற் கொண்ட நிலையிற் புகழ்வர்!
ஆனால் நீரோ ஆட்சியின் மீட்சி
அணங்கிடம் உளதாய் வணங்கி வேட்பீர்!
என்ன திறமை இருப்பதாய் எண்ணி,
மன்னர் நாட்டின் மாபெரும் பொறுப்பை
நம்பி அளித்தார்? நானினும் அறியேன்!
கொம்பிழி சருகாய்க் கொற்றமின் றானதே!

**விக்கியண்ணன் :**

தேவியர் நினைப்புத் தேவை யற்றது.
மேவிடும் மீட்சி! மேலுறும் ஆட்சி!
முடியுடை மூவரில் முன்னவர் நாமென
முடியும் என்னால் நடத்திக் காட்ட!

**கடம்ப மாதேவி :** *(ஏளனக் குரலில்)*

முடியும் என்றால் மொய்குழல் முன்னர்
அடிபணிந் திறைஞ்சும் அவலம் ஏனோ?
பிதற்றல் வேண்டா; பிழைபுரி கின்றீர்.
சிதலிவள்[9] வாழ்வோ? சிதைதல் நன்றோ?

**விக்கியண்ணன் :**

*(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

பெண்களை நடுவண் வைத்தே
  பெரும்பெரும் ஆட்சி எல்லாம்
மண்ணினில் நிலைத்த துண்டு;
  மறைந்ததும் உண்டு; காண்பீர்.
பெண்களை இயக்கக் கற்றோர்
  பெறுவது வெற்றி மட்டே;
பெண்களால் இயங்கப் பெற்றோர்
  பேதையர், தோல்வி உற்றோர்!

எண்ணிடச் சோழ நாட்டின்
  எதிர்பொழு திருட்டாய்த் தோன்றும்.
விண்ணெழு கதிரை ஒப்ப
  விளங்குவர் வேளிர் பெண்ணார்!
பண்ணமை மொழியார் என்றன்
  பாங்கறிந் தியங்கின், நாளை
மண்ணிடை சோழ நாடு
  மாபெரும் அரசாய் மாறும்.

படிறில[10] பேச்சில்; பாவை,
  பழுதிலா அரச வாழ்வை
அடைவதிங் குறுதி ஆகும்;
  அதற்குநான் துணையும் ஆவேன்.
உடையென மாற்றிக் கொள்ள
  உளத்திடை யாரும் இல்லை.
தடையிலை பிறரை ஏற்கத்
  தழைத்திடும் சோழர் ஆட்சி!

தங்கையாய்க் கொண்ட தாலே,
    தளிரென இவரைக் காப்பேன்.
இங்கிவர் விரும்பா யாரும்
    இன்றுணை ஆக மாட்டார்.
மங்கலம் பொங்கும் வாழ்வில்;
    மனைநலன் தங்கும்; தாழ்வில்!
எங்குலச் செல்வி, ஈடில்
    இன்மணம் ஏற்பார்; வாழ்வார்!

**மாதேவி :**

(குறள் வெண்பா)

மணமென ஒன்றெதற்கு? மாண்பமை சோழர்
இனவுயர் வொன்றே இனிது.

**கடம்ப மாதேவி :**

(கொச்சகக் கலிப்பா)

போதுமம்மா, மாதேவி! போதும் புலம்பியவை!
தீதுவந்து வந்தேறா; தேவை அறிவுடைமை!
யாதிவண் நேரிடினும் யாவுநம் செய்கையினால்!
பேதுறல் வேண்டா, பிரிந்தகல்க; ஓய்வுறுக.

(மாதேவி அங்கிருந்து அகன்று உள்ளறைக்குச் செல்கிறாள். கடம்ப மாதேவி விக்கியண்ணனைப் பார்த்துப் பேசுகிறாள்.)

**கடம்ப மாதேவி :**

(நேரிசை ஆசிரியப்பா)

நன்றல செய்வீர்; நாணமே மிகுக்கும்.
அன்றலர் தாமரை அகவிதழ் அன்ன
மாதேவி மனத்தை மரத்திடச் செய்தீர்.
தீதேதும் இல்லாள், தீய்ந்தாள்; தேய்ந்தாள்.
மகிழ்ச்சி தானே? மாதரார்
இகழ்ச்சி உங்கட் கின்ப மன்றோ!

**விக்கியண்ணன் :**

கண்ணே, தேவி! கருதலென் தவறாய்?
பெண்ணே பெரிதாய் எண்ணும் என்னால்
அகழ்வரைத் தாங்கும் அறுவடை நிலமாம்
புகழ்தரு மெல்லியர் இகழ்வுற இயலுமா?
அரசியல் சூழல்! அதனால்
உரசல்! அஃதே, உறுதவ நிலையே.

**கடம்ப மாதேவி :**

வீரர் நீவீர், வெற்றாள் போல
ஈர மில்லா இழிசெயல் புரிவீர்!
பொறுத்தற் கின்றிப் புழுங்குவன்;
வெறுப்பின் மிகுதி வேதனை தருமே.

**விக்கியண்ணன் :**

(பஃறொடை வெண்பா)

ஒவ்வாச் செயலெனினும் ஓரா தெனையிகழ்தல்
எவ்வா றுயிரே இனிதாகும்? எண்ணிடுக.
ஆற்றுநீர் ஒத்த அகல்மன ஆசையுடன்
நேற்று வரையலைந்தேன்; நேரில் உமதுறவால்,
ஆழ்நீர் நிலையடைந்தேன்; அன்பின் இடைதாழ்ந்தேன்.
தாழ்வில்; மகிழ்வினிமேற் றான்.

**கடம்ப மாதேவி :**

(குறள் வெண்பா)

*நம்பற் குரியரிலை; நன்றிலா சாற்றிடுவீர்.*
*நம்ப ரென"நம்பேன் நான்.*

*(விக்கியண்ணன் கடம்ப மாதேவியைக் கட்டி அணைத்துக் கொள்கிறான். அவன் அணைப்பில் அவளும் ஆழ்ந்து போகிறாள்.)*

**விக்கியண்ணன் :**

*உயிர்க்கும் உயிரான ஒருருவே, ஒன்றி*
*உயிர்த்தறிந்த உண்மை உரை.*

**கடம்ப மாதேவி :**

*முறையிலையென் றாலும் முரடரும் கூட்டால்*
*குறையிலை, இன்பமே; கூடு.*

## காட்சி : 17

**இடம்** : *வண்டார்குழலியின் இல்லம்.*
**காலம்** : *இராப் பொழுது.*
**உறுப்பினர்** : *விக்கியண்ணன், வண்டார்குழலி, செந்தாமரை.*
**சூழல்** : *வண்டார்குழலி தனித்துத் தன் அறைக்குள் அமர்ந்திருக்கிறாள்.*

**வண்டார்குழலி :** *(தனக்குள்)*

(கலி வெண்பா)

*விண்மீன்கள் வான வெளியெங்கும் மின்னிமிகக்*
*கண்ணீர்க்கும் காட்சி களிப்பின் றளிக்கலையே!*
*மெய்தழுவித் தென்றல் மிகுத்த குளிர்ச்சியெலாம்*
*பொய்மையாய் மாறிப் பொசுக்குமே; ஐயையோ!*
*ஊர்க்காவல் வீரர் உறங்கற்கும் சென்றுவிட்டார்.*
*நீர்க்கா நினைவுகளால் நெஞ்சுலர்ந்து வாடிடுவேன்.*
*ஆற்றாள் எனவறிவார்; ஆனாலும் சென்றிட்டார்!*
*நேற்றே வரற்குரியர்; நேரம் மிகக்கழிய,*
*இன்றே திரும்பிடுவார் என்றாற்றி நின்றேனே;*
*நன்றோ அவர்செய்கை? நாட்டமெலாம் தன்பணியில்!*
*தன்னைப் பிரிந்தறியாள் தாங்காள்; உயிர்தரியாள்!*
*என்னை அறிவாரே; ஏதுதடை நேர்ந்ததுவோ?*
*நேரார் எதிரிணைந்து நின்றாலும் என்னவர்க்கு*
*நேரா எதுவும் நிலைத்து.*

*(பணிப்பெண் செந்தாமரை விரைந்து உள்ளே வருகிறாள்.)*

**செந்தாமரை :**

(நிலைமண்டில ஆசிரியப்பா)

*அம்ம, வாழி! அவர்வந் துள்ளார்!*

**வண்டார்குழலி :**

*எங்கே? எங்கே? இருப்ப தெங்கே?*

**செந்தாமரை :**

*உள்ளே தனித்தவும் உள்ளறை யுள்ளே.*

*(வண்டார்குழலி விரைந்து உள்ளறைக்குள் நுழைகிறாள். அங்கே விக்கியண்ணனின் நிலை கண்டு அதிர்ச்சி அடைகிறாள்.)*

**வண்டார்குழலி :**

*என்ன நடந்தது? ஏனிக் கோலம்?*
*முன்னம் மொழிக; மூளும் துயரே.*

*(விக்கியண்ணன் அவளை ஒரு பாங்காய்ப் பார்க்கிறான். அஃது அவட்குப் புதிராக இருக்கிறது.)*

**விக்கியண்ணன் :**

*(திருக்குறள்)*

*அடுத்ததைக் காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்*
*கடுத்ததைக் காட்டும் முகம்.*

**வண்டார்குழலி :**

*(நிலைமண்டில ஆசிரியப்பா)*

*தெரியும் குறளே; தேவையோ இங்கும்?*
*எரியும் உள்ளம்! ஏனிப் புண்கள்?*
*புரியும் படியாய்ப் புதிரெதும் இன்றித்*
*தெரிய உரைக்க; தீதென் நடந்ததும்?*

**விக்கியண்ணன் :**

*நிகழ்ந்த தெதுவென நீயறி யாயா?*

**வண்டார்குழலி :**

*இகழ்ச்சி வேண்டா; இஃதென் வினாவே?*

**விக்கியண்ணன் :**

*உண்மை யாகவா? உள்ளதைச் சொல்க.*

**வண்டார்குழலி :**

*தண்மை இல்லை; தழலும் பேச்சே!*
*தெரிந்தோ, மற்றோ, தீதுள ளிவளென*
*இருந்திடும் நெஞ்சில்; எதிரெது முரைப்பேன்?*
*தொடக்கந் தொட்டுத் தொடரு மையம்*
*இடக்கராய்ப் பேச இன்றுந் தூண்டும்!*
*அன்றுநான் உரைத்த அதையே மீள*
*இன்று முரைப்பேன்; இனியு முரைப்பேன்!*
*ஒன்றி உம்மில் ஒன்றா யுறைபவள்*
*என்று மெதையு மெண்ணுனி அளவும்*
*திரித்து மறைக்குந் தீமையைக் கொள்ளாள்!*
*உரித்திவ் வுயிர்மெய் உங்கட் காகவே!*

**விக்கியண்ணன் :**

*நயம்பட மொழிவாய்! நம்பற் கில்லை?*

*(வண்டார்குழலியின் முகம் வாட்டம் உறுகிறது.)*

*வியந்திட வேண்டா; வெளிப்படை யாக*
*உரைப்பேன்; உண்மை உறைபொருள் சொல்க.*
*விரைந்து நேற்றிரா மீண்டிடு போதில்*
*கறையுடை மனத்தர் கான்வழி இடையே*

*மறையிருட் தன்னில் மறித்தெனைத் தாக்கப்*
*பட்டவை உடல்நீ பார்க்குமிப் புண்களே!*
*விட்டவர் யாராம்? விளங்கல் இலையே!*

**வண்டார்குழலி :**

*நேற்றே நீவீர் நீள்வழி மீள்வதாய்*
*மாற்றார் அறிந்த வழிவகை எப்படி?*

**விக்கியண்ணன் :**

*எவர்க்கும் எங்கும் தவறியும் உரைத்ததில்;*
*அவர்க்குத் தெரிந்ததென்? அஃதே எழுவினா!*

**வண்டார்குழலி :**

*அறிவேன் நானே; அதனால் அன்றோ,*
*வறிதே நேற்றிரா வருகை நோக்கி,*
*உருகிக் கிடந்தேன் உறங்கா(து); அடடா!*
*புரிந்ததிப் போதே புதிரும் பேச்சும்.*
*வரும்பொழு தறிந்த ஒருமகள் நானே!*
*அரும்பிய தையம் அதனால்; சரியா?*

**விக்கியண்ணன் :**

*ஆமாம்; தவறா?*

**வண்டார்குழலி :**

*ஆம்,ஆம்; தவறுதான்.*
*என்னை நீங்கள் இன்னும் தெளியீர்.*
*பரத்தை குலத்தள், பண்பிலள் என்ற*
*உரத்த நினைப்பும் முளத்தே நிலைப்பு!*
*குலத்தள வாகும் குணமெனுங் கொள்கை!*
*இலையெனல் வேண்டா; இயல்பே யார்க்கும்!*
*நம்பற் கென்று நானிஃ துரையேன்;*
*இம்பர்க்[1] கெனக்கினி தியைந்த இணைநீர்!*
*மெய்யின் இயக்கம் உயிரிரு வரையே!*
*தையற் குயிர்நீர்; தாங்கேன் ஐயுறில்.*
*என்வரை மெய்யுயிர் யாவும் நீரே!*
*துன்பம் உமக்கெனில் துடிப்பவள் நானே.*
*நீரில் நிலனாம், நிலவில் இரவாம்*
*நீரில் வாழ்க்கை! நினைக; உண்மை.*
*தீங்குமக் கமையின் தீய்பவள்! தேய்பவள்!*
*தாங்குவள் கொல்லோ? சாவ துறுதியே!*

*(விக்கியண்ணன் வண்டார்குழலியை வாரி அணைத்துக் கொள்கிறான். அகங் குளிர்ந்த அவள் வலிய விடுபட்டுப்போய்ப் பழச்சாற்றை எடுத்து வந்து அவன் இதழ்களிலே சேர்க்கிறாள்.)*

**விக்கியண்ணன் :**

*(நேரிசை ஆசிரியப்பா)*

*கண்ணே, இஃதென்?*

**வண்டார்குழலி :**

*கனிதரு சாறே.*
*வாட்டம் போக்கும்; ஊட்டம் தேக்கும்!*

**விக்கியண்ணன் :**

*தீமொழி மிழற்றும் தேனிதழ் தம்மினும்*
*ஆமிதா லுண்டோ ஐம்புலச் சுவைகள்?*

*செவ்வித ழீரமும் சிறுநகைச் சுழிப்பும்*
*எவ்வகை நோய்க்கு மின்மருந் தலவோ?*
*ஒட்டி யுரசின் உணர்வெறி பற்றும்!*
*கட்டி முத்தின் களிவெறி மிகுக்கும்!*
*பழச்சா றெதற்குப் பழம்நீ இருக்க!*
*முழுச்சுவை மாந்தி[2] முழுக வா,வா.*

**வண்டார்குழலி :**

*ஆற்று நீரிலை, அகலவோ? அருகவோ?*
*ஊற்று நீர்நான்! ஒழியேன்; அமைதி!*
*அருந்துக இதைமுதல்; அருந்தின்,*
*விருந்து முண்டு விரும்பிய வாறே.*

*(பழச்சாற்றை வண்டார்குழலி ஊட்ட, விக்கியண்ணன் பருகுகிறான். அப்போது, அறைக்கதவு ஓசையோடு திறந்து கொள்ள, வண்டார்குழலி விரைந்து எழுந்து நிற்கிறாள். அறைக் கதவு அருகே வீரர் மூவர் வழியை அடைத்தவாறு நிற்கின்றனர். வண்டார்குழலி சினத்தை வெளிப்படுத்துகிறாள்.)*

**வண்டார்குழலி :**

*(நிலைமண்டில ஆசிரியப்பா)*

*வரம்பிலாச் செய்கை! வந்ததேன் இங்கும்?*

**வீரர் தலைவன் :**

*அரசரின் ஆணை.*

**வண்டார்குழலி :**

*அதனாற் பெண்ணின்*
*தனியறை தன்னுள் தட்டுதல் இன்றிக்*
*கொள்ளைய ரொப்ப நள்ளிராப் போதில்*
*நுழைந்தீர் போலும்? நுவல்க செய்தி.*
*விழைந்தவை யாவை? விளக்குக விரைந்தே.*

**வீரர் தலைவன் :**

*பிழைதான் இழைத்தோம்; பேதைமை பொறுக்க.*
*விழைவோம் பகைகொள; வேந்தர் ஆணை!*

**வண்டார்குழலி :**

*என்ன ஆணை? முன்னெடுத் துரைக்க.*

**வீரர் தலைவன் :**

*இல்லை, அம்மா; சொல்லற் கில்லை.*
*மன்னற் கெதிரிவர்; நன்னர் இல்லை!*

**வண்டார்குழலி :**

*அதன்படி தானோ புதர்மறை விருந்து*
*கொன்றிட இவரை நின்றனிர் போலும்?*

*(பின்னிருந்த வீரரில் ஒருவன் முன் வந்து பேசுகிறான்.)*

**வீரன் :**

*இத்தனை பேச்சும் எதற்கிங் கிவரிடம்?*
*பித்தரோ நாமும்? பெண்ணே, வழிவிடு.*

*(வீரன் உருவிய வாளொடு அடி எடுத்து வைக்க, வீரர் தலைவன் விரைந்து குறுக்கிட்டுத் தடுக்கிறான்.)*

**வீரர் தலைவன் :**

வேண்டா; வீரனே, வேண்டா; வேண்டா;
கூண்டோ டும்பர் கொள்வழி வேண்டா.
செல்க வெளியே சேர்ந்தே இருவரும்;
ஒல்லு நெறியறிந் துரைப்பன் பின்னே.

*(வீரர் இருவரும் வெளியே செல்ல, வீரர் தலைவன் பணிவோடு தன் பேச்சைத் தொடர்கிறான்.)*

அம்ம, பொறுத்தருள்; நம்மிறை கேட்பின்
எம்மொழி இயம்ப? செம்மொழி உரைக்க.

**வண்டார்குழலி :**

இறையிடம் எதையும் மறைத்திடல் வேண்டா.
உறையுள் நிகழ்ந்த உரைத்திடு நிரலாய்.
வண்டார் குழலி வாள்வல் வீரரைக்
கொண்டாள் உயிராய்க் குறையிலாள் இனியெனத்
தெளிய உரைத்திடு; தீதிலை அதனால்.
துளியள வாகினும் துயர மிவர்க்கு
நேரினு மென்னுயிர் நிற்கா தென்பதை
யாரினு மரசர்க் கெடுத்து மொழிக.

**வீரர் தலைவன் :**

நன்று; தாயே, நான்விரைந் தகல்வேன்.

*(வெளியேறத் திரும்பியவனை வண்டார்குழலியின் பேச்சு தடுத்து நிறுத்தியது.)*

**வண்டார்குழலி :**

ஒன்றுண் டின்னும்; ஒழியா துரைக்க.
வண்டார் குழலி வாழ்வில் இனிமேல்
தொண்டு வாழ்நெறி தொடரா தென்க;
அரசிய லலுவ லற்ற தறைக.
கரணியங் கேட்பின், காதல் என்க.

*(வீரர் தலைவன் வெளியேறுகிறான். விக்கியண்ணன் வண்டார் குழலியை வைத்த விழி அசையாது பார்த்தபடி அமர்ந்திருக்கிறான். அவள் மெல்ல நடந்து வந்து அவனருகில் அமர்கிறாள்.)*

**வண்டார்குழலி :**

என்ன சிந்தனை? யாரவர் என்றா?

**விக்கியண்ணன் :**

உன்னைப் பற்றியே உள்ளதென் சிந்தனை.
வல்லத் தரையர் வாட்படை வீரரும்
இல்லத் தெங்ஙன மெளிதில் நுழைந்தனர்?
உன்னுரை ஏற்றுட னொழிந்ததும் எப்படி?
மன்ன ரரையரா? மயக்குறும் சிந்தனை!
விடையென்? விடுக்க.

**வண்டார்குழலி :**

வேண்டுவன்; வேண்டா.

கடந்த வாழ்க்கை கழிந்த தாக!
உங்கட் குரியளாய், ஒளிவிலா மனத்தளாய்த்
தங்கற் கமைந்தேன்; தாங்குக தளிராய்!
பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல; அதனால், தழுவுவன் உம்நிழல்!
மறந்தும் நடந்த மறைபொரு ளுரையேன்!
இறந்த வவைதா மினியெனைத் தொடரா.

துருவி வினவின் துயரே தொடரும்.
பெரும, என்சொல் பிழையெனில் பொறுக்க.

(விக்கியண்ணன் குழலியை அருகிழுத்து அணைத்துக் கொள்கிறான்.)

**விக்கியண்ணன் :**

புதுமைப் பெண்நீ; போற்றுவன், அன்பே.
எதையும் உன்னிடம் என்றும் கேளேன்.
தேடா தணைந்த தேனே, திருவே,
நாடாய் அணைக்க; நளிர்வளி நடுக்குமென்!

## காட்சி : 18

**இடம்** : இளவரசி கடம்ப மாதேவியின் மாளிகை .
**காலம்** : இராப் பொழுது.
**உறுப்பினர் :** கடம்ப மாதேவி, பல்லவரையன்.
**சூழல்** : கடம்ப மாதேவி அமர்ந்திருக்க, அவரெதிர் பல்லவரையன் பணிந்து நிற்கிறான்.

**பல்லவரையன் :**

(கலி வெண்பா)

வாழ்க, இளவரசி! வாழ்க, வணக்கங்கள்!
தாழ்வகற்ற வந்த தமிழரசி வாழ்க!

**கடம்ப மாதேவி :**

வருக, அரையரே! வாழ்க, வணக்கம்.
அருமை உமைக்காணல்! அத்துணை வேலையா?

**பல்லவரையன் :**

உண்மைதான் தாயே, ஒழிவிலா வேலைகள்!
கண்ணுறங்கற் கில்லை; களப்பணி அப்படி.

**கடம்ப மாதேவி :**

நல்ல தரையரே; நால்வரும் போலிவண்
வல்ல ரிருப்பின் வளம்பெறும் நாடே!
ஒழியாப் பணிச்சுமை உங்கட்கு மட்டோ?

**பல்லவரையன் :**

உழுவார் அனையரே ஒவ்வொரு வீரரும்!

**கடம்ப மாதேவி :**

நம்பற் கியலா நகைதரு மும்முரை!

(பல்லவரையன், அவள் பேச்சால் அதிர்ச்சி அடைகிறான்.)

**பல்லவரையன் :**

*அம்ம, பொறுக்க; அறியேன், பிழையெனை?*

**கடம்ப மாதேவி :**

*சேலை முடிப்பில் சிறையுளார் அண்ணலார்!*
*வேலை மிகையெனல் விந்தை அலவா?*
*கழிந்தது திங்கள் கணிகையில் தங்கி!*
*எழுந்தனர் இன்றும் இலையென் பொழுது*
*மிகுபணி என்பீர்; மிகமிக நன்று!*
*தகவில்; தலைவர்க்குத் தாழ்வு!*

**பல்லவரையன் :**

*(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)*

*உடனல னின்மை நோக்கி*
*ஒய்வவண் வேண்டி யுள்ளார்;*
*கடனெதும் தள்ளார், காணும்*
*கருத்தெலாம் செயலே ஆகும்!*

**கடம்ப மாதேவி :**

*கொடுவெனக் கொடுப்பள் கொண்ட*
*குளிர்மனை உறையுள் ளாமா?*
*அடுதொழில் வல்லார்க் கென்ற*
*அரண்மனை ஆகா தாமா?*

**பல்லவரையன் :**

*துணையிலர், தனியர்; கொண்ட*
*துயரளி நோய்க்கு மாற்றாய்ப்*
*புணையென அமைந்த தாலே*
*பொருந்திட்டார்; வேறும் இல்லை.*

**கடம்ப மாதேவி :**

*பணிசெயப் பெண்கள், பன்னோய்*
*பகுத்தழி மருந்தில் வல்லோர்*
*அணியென இருக்க இங்கே*
*அணங்கவள் இணைப்பு மேலோ?*

**பல்லவரையன் :**

*எனக்கவர் தலைவர்! யானோ,*
*இட்டிடு பணிகள் செய்வோன்.*
*தனக்கினி செயலைச் செய்வார்;*
*தடுத்ததைச் சுட்டல் ஆமோ?*

**கடம்ப மாதேவி :**

*உனக்கவர் மேலார்; உள்ள*
*உறுத்தலை உரைத்தல் செய்யீர்.*
*எனக்கவர் யாரோ? என்னால்*
*எண்ணிய சொல்ல லாமே!*

**பல்லவரையன் :**

*(கலி வெண்பா)*

*உங்கட் கிலாவுரிமை ஒன்றிலையென் றிட்டாலும்*
*எங்க ளிளவரசிக் கேற்றதிச் செய்கையில்லை.*
*சோழர் குலமுதலாய்ச் சுற்றியுள மக்களெலாம்*
*வாழப் பிறந்தவரே! வாழ்ந்திடனும் வாழ்த்திடவே.*

**கடம்ப மாதேவி :**

கள்ளமிலை பேச்சில்; கருதற் குரியவையே.
உள்ள முறுத்திடு மூராள்வார் செய்கையினால்!
நாடகத்தா ளில்லிருந்து நாட்டாண்மை செய்வதுவும்
கூடியவண் நீராணை கொள்வதுவும் கொல்லுமெனை!
தட்டியவை கேட்கத் தகுதியில்லை மற்றவர்க்கு!
விட்டிடில் மிஞ்சுவது வேதனையே; வெட்கிடுவேன்!
வீரரும் அண்ணல் விரைந்தென்னைக் கண்டிடனும்!
நீருடன் சென்றிடுக; நேரிலதைக் கூறிடுக.

**பல்லவரையன் :**

இன்னே உரைத்திடுவேன்; இட்டபணி முற்றிடுவேன்;
என்றாலும்,

**கடம்ப மாதேவி :**

என்தயக்கம்? ஏற்காரோ உம்தலைவர்?

**பல்லவரையன் :**

கச்சி இளவரசர் காணற் கெழிலுடையர்
உச்சிப் பொழுதளவில் ஊர்வலமாய் வந்திடுவார்.

**கடம்ப மாதேவி :**

ஆமாம்; அதற்கென்ன?

**பல்லவரையன் :**

அன்னவரைக் காணவெதிர்
போமா றெவர்க்கும் பொதுவிலோ ராணை!
அணியமாய் அண்ண லனைவரோ டுள்ளார்;
பணியிடை வந்தவர் பார்ப்ப தருமையே!

**கடம்ப மாதேவி :**

பல்ல வரையரே, பாராள் அரசரின்
செல்ல மகளிவள்! செல்லுமென் னாணை!

**பல்லவரையன் :**

அறிவேன், அறிவேன்; அதனால் விரைவேன்!
குறையேன் எதையும்; குறியாய் உரைப்பேன்.

**கடம்ப மாதேவி :**

விரைவென் அகல? விருப்பம் அவர்மேல்!
அரையரே, நன்றி! அரசிளம் பெண்ணினும்
இங்கிடைப் பின்னர் இயைந்தவர் மேலவர்?
திங்களின் மின்னல் தெறிப்ப தியற்கையே!

**பல்லவரையன் :**

வேண்டா, இளவரசி! வேதனை வேண்டாவே.
தூண்டா மணிவிளக்கு, தூயர், தொழற்குரிய
அன்னைநீர்! நானோ அடிமை மகவன்றோ?
மன்னரும் சொற்றாண்டார்; மாறுவனோ கீழிவனும்?
குற்றம் புரிவானோ குற்றேவல் செய்திடுவான்?
உற்ற துளதாமேல் நற்றாய் பொறுத்திடுக.

**கடம்ப மாதேவி :**

*ஒப்பிற் குரைக்கின்றீர்!*

**பல்லவரையன் :**

*உண்மை இளவரசி!*
*தப்பி மொழியும் தவற்றைநான் செய்வேனா?*

**கடம்ப மாதேவி :**

*அப்படி என்றால் அடிக்கடி வந்தெதிர்*
*செப்புதற் செய்யாத் திரிபென் நெடுக?*
*அரசில் நிகழும் அனைத்தும் எனக்குத்*
*தெரியப் படுத்தல் நெறியாம்; அறிவை?*

*(பல்லவரையன் கூனிக் குறுகி நெளிகிறான்.)*

**பல்லவரையன் :**

*அறிகுவன் அம்மா.*

**கடம்ப மாதேவி :**

*அறிந்தும் தெரிந்தும்*
*வறிதிவண் நின்றீர்; வரன்முறை நீத்தீர்.*

**பல்லவரையன் :**

*பொறுத்திடல் வேண்டும்; பொறுப்பின் மிகையால்*
*வெறுத்தற் குரியனாய் வீழ்ந்தேன் மனத்தடம்!*

**கடம்ப மாதேவி :**

*நல்ல தரையரே, நாளிது முன்வரை*
*சொல்க நிகழ்ந்த; தொடர்புளின் சூழ்வோம்.*

*(பல்லவரையன் தயங்கி நிற்கிறான்.)*

*தடுக்குதோ உம்மைத் தலைவரின் ஆணை?*
*இடுக்கண் எதற்காம்? இனிநீர் செலலாம்.*

**பல்லவரையன் :**

*விழைவ வெனக்கு விளங்கிடா; கூறின்*
*மொழிவன் தொடக்கம் முதலாய் விரிவொடு.*

**கடம்ப மாதேவி :**

*பாண்டியர் தம்பி பராந்தகர் தன்னைநீர்*
*காண்டற் கமைந்த கருமம் குறித்துச்*
*சொலலாம் அன்றோ சுவைபட ஏற்றி?*
*இலவதில் ஏதும் இடும்பை; உரைக்க.*

*(பல்லவரையன் அவர் சொல் கேட்டு மிக்க அதிர்ச்சி அடைகிறான்.)*

**பல்லவரையன் :** *(தனக்குள்)*

*இளவரசி எப்படி இஃதிங் கறிந்தார்?*
*உளவறிந் தொற்றர் உரைத்தனர் கொல்லோ?*

**கடம்ப மாதேவி**

*மதுரைச் செலவு மறைபொருள்; யார்க்கும்*
*அதுதெரி யாதே; அறிந்தது மெப்படி?*
*எண்ணிக் குழம்பற்க; எல்லாரு மென்னவரே!*
*கண்மணி அன்னார் கருதார் மறைக்க!*

அரைய ரொருவரே ஆனா ரெதிராய்!

(பல்லவரையன் கடம்ப மாதேவி முன்னர் மண்டியிட்டு வணங்கிப் பேசுகிறான்.)

**பல்லவரையன் :**

உரைமுறை இல்லை; உறுபகை ஆவேனோ?
இன்றிலை; என்றுமே என்னிறை நீங்களே!
நன்றிலா ஒன்றினைப் பொன்றினுநான் ஆற்றேன்.
இறையள வேனும் குறையுள னில்லை.
இறைமகட் கின்னல் எழுந்திட லெண்ணியே
கூறா திருந்தனம்; கூற்றெதிர் கூவினும்
மாறா தெதிராய் மனம்.

**கடம்ப மாதேவி :**

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

ஏற்றேன், ஏற்றேன்; எழுக; மொழிக.
ஏதோ எண்ணி இழித்துப் பழித்தேன்.
வேற்போர் வல்லீர், வேண்டார் இல்லீர்.
விளைந்த யாவும் விளக்கி மொழிக.

**பல்லவரையன் :**

மாற்றார் போற்றும் மதுரை இளவல்
வருதற் கியைந்தார் விருந்தாய்த் தஞ்சை.
ஏற்றா ரழைப்பை; எனினு மெளிதில்
இசைந்தா ரில்லை! இன்ன லுற்றேன்.

(வேறு)

எப்படியும் எதுமொழிந்து மிளவற் றன்னை
இங்கழைத்து வரல்வேண்டும்; இஃதே ஆணை!
ஒப்பிடுவார் எனவெண்ணி உங்கட் குள்ள
உயர்பண்பு நலனனைத்து முணர்த்தி நின்றேன்!
அப்படியும் பராந்தகர்நம் அழைப்பை ஏற்க
அணியமில்லை; அதனாற்றான் அம்மை நீவீர்
செப்பியதாய்ச் சிலசொன்னேன்; சிரித்தார்; பின்னர்ச்
சேர்வனென விடையிறுத்தார்; திரும்பி வந்தேன்.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

பாண்டிய இளவ லொப்பார்
பார்த்ததில் ஆள்வார் தம்முள்!
வேண்டிய கல்வி கேள்வி
விரும்பிடு பண்பு மிக்கார்!
ஈண்டிய பொருட்க ளெல்லாம்
இங்கவர் மக்கட் கென்பார்!
தூண்டினும் மாறார்; அண்ணன்
தோளிணைத் துணையாய் நிற்பார்.

இளவரசிக் கேற்றார், ஒப்பார்
இன்றுவரை கண்டே னில்லை.
உளரெவரே உயர்ந்தார் உம்மில்?
ஓரளவிற் கிவரே உள்ளார்!
தளிரிதழ்ப்பூந் தாரே நீரே!
தனியொருவர்! எதிரும் யாரே?
களியளிதேன் காமர் பூவும்
காலடிநேர்! அவரும் நில்லார்.

(பல்லவரையன் பேசி முடித்து அமைதி காக்கக் கடம்ப மாதேவி எண்ணியபடி நிற்கிறார்.)

**கடம்ப மாதேவி :** *(தனக்குள்)*

*(நேரிசை ஆசிரியப்பா)*

*ஆடல் மகளின் கூடத் திருந்தவர்*
*ஆட்சி நடத்தும் காட்சி; சீ!சீ!*
*அவரை விரும்பி அகத்தை இழந்தது*
*தவறாய் முடிந்தது; தகுவழி காணேன்.*
*உறவிற் கொருத்தி! உயர்விற் கொருத்தி!*
*திறனில் மாந்தர் தெரிசெயல்! ஆனால்,*
*தன்னை வேட்பாள் தன்னைப் பிறற்குப்*
*பிணையாய்ச் சேர்க்கும் முனைப்பும் சரியா?*
*முரணாய்ச் செயல்கள்! மொழிப மந்திரம்!*
*புரியாப் புதிராய்ப் போயின போக்கும்!*

*(எண்ணத்தினின்றும் விடுபட்டுத் திரும்பிய கடம்ப மாதேவி, பல்லவரையன் பக்கம் திரும்பிப் பேசுகிறார்.)*

*அரையரே, செல்க; அவரிவண்*
*விரைவினில் சேர்ந்திட வேண்டும்; செய்கவே.*

## காட்சி : 19

**இடம்** : *வண்டார்குழலியின் இல்லம்.*

**காலம்** : *காலைப் பொழுது.*

**உறுப்பினர் :** *விக்கியண்ணன், வண்டார்குழலி, பல்லவரையன்.*

**சூழல்** : *விக்கியண்ணன் அணியமாய் இருக்க, அவன் முன்னர்ப் பல்லவரையன் வந்து பணிந்து நிற்கிறான்.*

**விக்கியண்ணன் :**

*(நேரிசை ஆசிரியப்பா)*

*அரையரே, இஃதென்? ஆனதே நேரம்!*
*விரைவில் மீள்கென விடுத்திருந் தேனே?*

**பல்லவரையன் :**

*தவறிலை சற்றும்; தலைவர் பொறுக்க.*
*இவணிப் பொழுதில் இயைந்ததும் அரிதே!*

**விக்கியண்ணன் :**

*என்ன நடந்ததும்? எடுத்து மொழிக.*

**பல்லவரையன் :**

*மன்னர் மகளார் என்னை அழைத்ததாய்ச்*
*சொன்ன தாலே சூழ்ந்தேன் முன்னர்.*
*கன்னல் கசக்குமா? கசந்தது வேம்பாய்!*

*அலையிடை துரும்பாய் அனலிடை மெழுகாய்*
*உலைதலும் குலைதலும் ஒருங்கென் நிலைதான்!*
*சென்றவர் முன்னர் நின்றதன் பின்னரே*
*இனத்தை உணத்திடு சினத்திறன் உணர்ந்தேன்.*
*இளவரசிக் கைய, அளவில் சினமே*
*உளதும் மேலே! உடன்வரச் சொன்னார்.*
*அனைத்தும் அறிந்துளார்; அறியரு நாம்செய்*
*வினைத்திறன் அனைத்தும் விரிவாய் விளக்கினார்!*
*கொப்பும் அறியாக் குலையேர் மறைசெயல்*
*எப்படி அறிந்தார்? செப்படி வித்தைகொல்?*
*தப்புதல் இல்லை; தலைவர்*
*இப்பொழு தேகிக் காண்ப தினிதே.*

**விக்கியண்ணன் :**

*பிழையெதும் நேரா; பிறகு பார்ப்போம்.*
*விழைவ எல்லாம் மொழிப்படி உளவா?*

**பல்லவரையன் :**

*உளவெலாம் உளப்படி; ஒழிவில்! முன்னம்*
*இளவரசி யாரை இன்னே காண்க.*

**வண்டார்குழலி :**

*அவருரை கேட்க; அரசிளங் குமரி*
*எவரவர் எனினும் தவற்றினை ஏற்கார்!*
*மன்னரை மீறலாம்; மதிப்புடை மகளார்*
*சொன்னவை மீற உன்னினும் துயரே!*

*(இடையில் குறுககிட்டுப் பேசிய வண்டார்குழலியை விக்கியண்ணன் வியந்து நோக்குகிறான்.)*

**விக்கியண்ணன் :**

*உனக்கும் அச்சமா? உண்மை தானா?*

**வண்டார் குழலி :**

*எனக்கு மட்டிலா? இத்திரு நாட்டில்*
*இளவரசிக் கஞ்சார் இருக்க இயலுமா?*
*களமவர் கண்டதில்; கரணியம் அவரே!*

**விக்கியண்ணன் :**

*நல்ல தரையரே, நாம்புறப் படுவோம்.*
*செல்லும் வழியிடை செய்வன சொல்வேன்.*
*ஐயா றுடன்நாம் அடைதல் வேண்டும்.*
*மையேர் குழலி மாதேவி மாலை*
*வருதற் குள்ளார்; மல்லை இளவல்*
*அருநற் குணத்தர் அபரா சிதரும்*
*அதற்குள் சேரின் ஆகுநாம் நினைப்ப.*
*எதற்கும் அணியமாய் இருப்பது நல்லது.*
*வண்டார் குழலி! வருகிறேன்;*
*செல்வினை முடித்துச் சேர்வேன் இரவே.*

*(விக்கியண்ணனும் பல்லவரையனும் அங்கிருந்து வெளியேற, வண்டார்குழலி உள்ளறை சென்று கட்டிலில் படுத்து ஓய்வு கொள்கிறாள். காலம் மெல்ல நகர்கிறது. ஓசை கேட்டுக் கண்களைத் திறந்தவள், அங்கே விக்கியண்ணனைக் கண்டு விரைந்து எழுகிறாள்.)*

**வண்டார்குழலி :**

(நிலைமண்டில ஆசிரியப்பா)

*என்ன நீங்களா? இதற்குள் ளாகவா?*
*என்னை முன்னரே எழுப்பி இருக்கலாம்.*

**விக்கியண்ணன் :**

*இல்லை, இல்லை; இப்போதே வந்தேன்.*

*(இருவரும் உள்ளறை விட்டு வெளியே வருகின்றனர்.)*

**வண்டார்குழலி :**

*சொல்லி இருந்தால் சுவையுறு உணவைச்*
*சமைத்திங் கமைவாய் அமைத்திருந் திருப்பேன்.*
*சற்றுப் பொறுக்க; தாமரை! தாமரை!*

*(அவள் குரல் எங்கும் ஒலித்தது. செந்தாமரை வரவும் இல்லை; எதிர் குரல் கொடுக்கவும் இல்லை.)*

**விக்கியண்ணன் :**

*எற்றுநீ அழைப்பதும்? இனுமவள் திரும்பலில்.*

**வண்டார்குழலி :**

*திரும்பல் இல்லையா? சென்றனள் எங்கே?*

**விக்கியண்ணன் :**

*விரும்பிய பணிக்கு விடுத்தவள் நீயே?*

**வண்டார்குழலி :**

*விரும்பிய பணியா? விடுத்தனா? யானா?*
*இருப்பாள் இல்லில்; எங்கும் சென்றிராள்.*

**விக்கியண்ணன் :**

*உண்மையோ உரைப்பதும்?*

**வண்டார்குழலி :**

*உண்மை, உண்மை!*
*இப்போ தன்று; முப்போதும்[1] வாழ்வில்*
*உண்மை ஒழியப் புன்மை புகலேன்.*

**விக்கியண்ணன் :**

*பொறுபொறு! சற்றுள் புலனாம் யாவும்.*

**வண்டார்குழலி :**

*வெறுமொழி வேண்டா; வேதனை பெருகும்.*

*(அப்போது விரைந்து உள்ளே ஓடி வந்த செந்தாமரை, வண்டார்குழலியின் கால்களைக் கட்டிப் பிடித்துக் கொள்கிறாள். அதிர்ச்சி அடைந்த வண்டார்குழலி விக்கியண்ணனை ஏறிட்டு நோக்குகிறாள். அப்போது பல்லவரையன் அங்கு வந்து சேர்கிறான்.)*

**செந்தாமரை :**

*அம்மா, காக்க! அம்மா, காக்க!*
*உம்மால் மட்டுமே உய்த்தல் ஆகும்.*

**வண்டார்குழலி :**

*காக்கவா? எதற்கு? நோக்குக எழுந்து.*
*போக்கறு செயலென் புரிந்தனை நீயும்?*

**விக்கியண்ணன் :** *(பல்லவரையனைப் பார்த்து)*

*அறைக, அரையரே! அறைக.*

**பல்லவரையன் :**

*தலைவர்*
*சொல்லிய வாறே எல்லாம் நடந்தன.*
*திருவை யாறு செல்வதாய்ச் சொல்லி*
*இருவரும் சென்றோம்; இடையிற் பிரிந்து*
*மறுகின் ஒருபுறம் மறைந்தொளிந் திருந்தேன்.*
*சிறிது நேரமே சென்ற திவரோ*
*வில்விடு அம்பாய்ச் சொல்லடு பாங்காய்*
*இல்லிருந் தேக யானுந் தொடர்ந்தேன்.*
*கொல்லர் வீதிக் குறுகிய சந்தில்*
*செல்லக் கண்டேன் சிறிய வீட்டுள்.*
*வீரர் அணைய மெதுவே நானும்*
*சேரக் கேட்டேன் சேல்விழி சிலர்க்குநம்*
*பயணம் பற்றி நயம்பட உரைப்பதை!*
*ஆகார் அவரை நோகா தடக்கிச்*
*சேர்த்தேன் சிறையுள்; சேர்ந்தேன் இவருடன்.*

*(வண்டார்குழலி பல்லவரையன் சொற் கேட்டு அதிர்ச்சி கொள்கிறாள்.)*

**வண்டார்குழலி :**

*சொல்பவை உண்மையா? சொல்செந் தாமரை.*

**செந்தாமரை :**

*உண்மை உரைத்தவை; உறுதவ றெனதே!*
*என்னைக் காக்கும் அன்னை நீரே.*

**வண்டார்குழலி :**

*பாசறைப் பயணம் பற்றிப் பகைவர்*
*முன்னர் அறிந்ததும் உன்செயற் றானா?*

**செந்தாமரை :**

*பொறுத்தல் வேண்டும்; போற்றா புரிந்தேன்.*

**வண்டார்குழலி :**

*பொறுத்தலா? சீ!சீ! பொல்லாங் கிழைத்தாய்!*
*வெறுத்தற் குரியை! வேண்டார் தம்மை*
*அன்றிரா உள்ளறை அனுப்பிய கள்ளி!*
*உன்னால் அன்றோ என்னுயிர் என்னை*
*ஐயுற் றாய்ந்து வெய்துயர்[2] கொண்டது!*

*(வண்டார்குழலி செந்தாமரையைத் தள்ளிவிட்டு அப்பால் நகர்கிறாள். செந்தாமரை விக்கியண்ணன் கால்களைப் பற்றிக் கதறுகிறாள்.)*

**செந்தாமரை :**

*அறியாள் செய்த தரும்பிழை! அறிவேன்.*
*காக்க; அன்னை காவல, காக்க .*

*(வண்டார்குழலி குறுக்கிடுகிறாள்.)*

**வண்டார்குழலி :**

*ஒவ்வா செய்தனள்; ஒறுத்தற் குரியள்!*
*எவ்வா றிவளால் எனக்கெதிர் இயன்றது?*

*இவட்குச் சிறிதும் இரக்கம் வேண்டா.*
*தவற்றைச் செய்தால் தண்டனை உறுதி!*

*(வண்டார்குழலி விரைந்து அங்கிருந்து சினத்தோடு உள்ளறை செல்கிறாள்.)*

**பல்லவரையன் :**

*இரங்கற் குரியள்! ஏதம் இல்லாள்!*

*(பல்லவரையன் வாயினின்று சொற்கள் தாமே வெளி வருகின்றன. அவன் கண்கள் செந்தாமரையின் மஞ்சள் முகத்திலே பதிந்திருக்கின்றன. அவன் பார்வையை ஆய்ந்த விக்கியண்ணன், பல்லவரையன் உள்ளத்தைத் தெள்ளென அறிந்து கொள்கிறான்.)*

**விக்கியண்ணன் :**

*தாமரை, எழுந்திரு; தவறினி வேண்டா.*
*ஆமிது பொறுத்தோம்; அடைக அமைதி.*
*பல்ல வரையர் பரிந்துரை ஏற்றே*
*செல்ல விடுகிறேன்; தெரிந்தினி நடந்திடு.*
*வண்டார் குழலி கொண்டார் மிகுசினம்!*
*அண்டி அணைக; அடையவர் அன்பே!*

*(விக்கியண்ணனும் பல்லவரையனும் அங்கிருந்து ஒன்றாய் வெளியேறச் செந்தாமரையின் பார்வை பல்லவரையன் மீதே பதிந்திருக்கிறது.)*

## காட்சி : 20

**இடம** : *தஞ்சை — திருவையாற்றுச் சாலை .*
**காலம்** : *மாலைப் பொழுது.*
**உறுப்பினர்** : *விக்கியண்ணன், பல்லவரையன்,*
**சூழல்** : *விக்கியண்ணனும் பல்லவரையனும் திருவையாறு நோக்கிக் குதிரைகளில் சென்று கொண்டிருக்கின்றனர்.*

**விக்கியண்ணன் :**

*(நேரிசை ஆசிரியப்பா)*

*அரசிளங் குமரி அவரோ டிங்கா?*
*அரையரே, நீவீர் அறைந்ததும் சரியா?*

**பல்லவரையன் :**

*முற்றும் சரியே! ஒற்றர் உரைத்தார்.*

**விக்கியண்ணன் :**

*நற்றிறம் உடைய நம்மிள வரசியால்*
*ஏற்றிரு எண்ணம் மாற்றுறல் திண்ணம்!*

இளவர சியாரால் இடையூ றுறுதி!
உளரவர் உடனெனின் உளமெவர் வேட்கும்?

**பல்லவரையன் :**

தலைவர் எண்ணத் தடம்நான் உணர்வேன்.
இலையிங் கவர்போல் எழிலார்; இயல்பாய்
யாரும் அவர்க்கிங் கீடிலை; எனினும்
தேருங் காலை தேவையில் அச்சம்!
இளவரசி யாரெதிர் எவர்வந் துறினும்
உளமதி லெழுவ தொருதாழ் உணர்வே!
தம்மின் உயர்வாய்த் தாம்நினை பெண்களை
ஆண்கள் விரும்பார்; அஃதே உண்ணிலை!
பல்லவ இளவல் பார்வை இயல்பாய்ச்
செல்லும் நாங்கூர்ச் செல்ல பெண்பால்!

**விக்கியண்ணன் :**

நன்றி, அரையரே! நல்லன உரைத்தீர்.
கன்றெனக் கறங்கும்[1] கயல்விழிக் கருமை,
கள்ளமில் குழந்தை களிமுகத் தோற்றம்,
கள்ளுமிழ் பனியிதழ், கவின்மிகு தடந்தோள்,
காவியம் வல்லார் கற்பனை உருவம்!
ஓவியம் ஒப்பார்; உயர்வில் மிக்கார்!
மாதேவி அழகில் மல்லையர் தப்பார்.
யாதோர் ஐயமும் இம்மியும் வேண்டா;
எண்ணியாங் கியைவ துறுதி!
வண்ணம் கொண்ட வடிவுறும் இனிதே.

**பல்லவரையன் :**

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

ஆதித்தர் விரும்பும் பெண்ணை
அபராசி தர்க்காய் ஆக்கிப்
பேதுறச் செய்து நெஞ்சில்
பிணக்கினைத் தோற்று விக்க
ஏதுள ஏற்ற செய்வோம்;
எனிலதில் எனக்கோர் ஐயம்!
மாதவர் மாற்றத் தாலே
வருபயன் நாட்டிற் கென்ன?

**விக்கியண்ணன் :**

பெண்ணினை இழத்த லாலே
பெருகிடும் சினமே! ஊக்கி,
மண்ணுகர் பல்லர் தென்னர்
மாற்றலர்க் கெதிராய்ப் போக்க
எண்ணரு திறமை யாவும்
இளவரசுக் களிதாய் மேவும்!
பெண்ணலார் வேட்கை நீங்கும்;
பேரர சமையும்! ஓங்கும்.

பிணக்கவர் நெஞ்சில் நீங்கா;
பிறழ்ந்திடா, பிணைந்தே நிற்கும்!
மணக்கமா தேவி யாரை,
வழிவழி மல்லை மன்னர்
இணக்கமாய் நமது பக்கம்
என்றுமே இருப்பார்; மாறார்.

கணக்கிவை! தவறா; கூடின்,
காணலாம் வேண்டார் வீட்சி!

இடம்பொருள் கருவி காலம்
எடுவினை எண்ணிச் செய்வோம்.
தடம்விடல் தென்றற் கில்லை!
தாளுளர்[2] செயலும் அவ்வே[3]!
உடன்படார் இல்லை யாக
உறுவினை மறைவாய்க் கொள்வோம்!
கடன்தெரிந் தூக்கி யாளின்
கடுகிடும் காற்றின் வெற்றி!

செய்வன திருந்தச் செய்வோம்;
செய்முனம் பொருந்த ஆய்வோம்.
செய்வினை நன்றா? தீதா?
தெரிந்துறின், நன்றாம்; பொன்றா[4]!
மையுறு மனத்தர் மாட்சி
மழைமுகில், மாறும் காட்சி!
செய்தகு வினைக்கண் தூங்கார்
சிறந்திரு வெற்றி நீங்கார்!

**பல்லவரையன் :**

திறனறிந் துரைத்தீர்; யாவும்
தெளிந்தநீர் ஓடை யாகும்.
அறனெறி சிலவே சொன்னீர்;
ஆயினும் பெருகும் நன்னீர்!
குறணெறி வாழ்க்கை யாகக்
கொண்டுளீர்; வளர்க! வாழ்க!
பிறழிலாத் தலைவ, நின்றன்
பேச்சிணை வேறும் உண்டோ?

நல்லவை நினைப்ப மானால்
நடப்பவை நல்ல வாகும்.
எல்லெழ[5] இருட்டுப் போகும்!
எதிரிலை, இன்னல் ஏகும்.
வல்லமை வாய்ப்புச் சேரின்
வரலாறு படைத்தல் ஏலும்!
தொல்புகழ் சோழர் மீட்சி
தொலைவிலில்; எதிரே காட்சி!

**விக்கியண்ணன் :**

தமிழ்மறை குறளே ஆகும்;
தாழ்வுறா வாழ்க்கை, கொண்டால்!
அமிழ்ததாம்; ஆனால் நானோ,
அதன்வழி அணைந்தேன் இல்லை.
கமழ்மணப் பெண்ணார், தேறல்
கைவிடேன்; கலப்பேன் நாளும்!
உமிழ்திரை உளமே; ஆயின்,
பிறன்மனை உன்னேன் என்றும்!

என்குறை அறிவேன் யானே;
எதிர்வரும் இறுதி தானே!
மன்பெறு சோழ ராட்சி
மலர்தலே முதன்மை ஆகும்.

பின்னவை பார்ப்போம்; இன்னே
 பிரிந்துநீ விரைந்து செல்க.
சொன்னவை எண்ணம் போலச்
 சூழனும்; செய்க தக்க!

(பல்லவரையன் விரைந்து அங்கிருந்து பிரிந்து செல்ல, விக்கியண்ணன் மெல்ல எண்ணியபடி தன் பயணத்தைத் தொடர்கிறான்.)

## காட்சி : 21

**இடம்** : திருவையாற்றுப் பகுதி — காவிரிக்கரைச் சாலை.
**காலம்** : மாலைப் பொழுது.
**உறுப்பினர்** : கடம்ப மாதேவி, விக்கியண்ணன், பல்லவ இளவரசன் அபராசிதன், பல்லவரையன், மாதேவி,
**சூழல்** : விக்கியண்ணனும் அபராசிதனும் விரைந்து தேரில் சென்றுகொண்டு இருக்கின்றனர்.

**அபராசிதன் :**

(பஃறொடை வெண்பா)

கொள்ளற் கினிய குளிர்தரு காட்சிகள்!
உள்ளமட் டோ? என்றன் உயிரும் உறைந்திடும்.
சோழ வளநாட்டுச் சோற்று மிகுதியைத்
தாழ வளர்ந்தலை தையலார் கூந்தல்
சுருளினை ஒத்தசை சொற்பயிர்[1] காட்டும்!
இருளைப் பகலிடை ஏற்று மரங்கள்!
கரையுறை சாலைக் கவின்மிகு சோலை!
நுரைபுரள் காவிரி! நோக்கரு காட்சிகள்!
இம்பர் இவையா? இயலுமா? எண்ணிடின்
உம்பர் உலகிலை ஒப்பு.

**விக்கியண்ணன் :**

(இன்னிசை வெண்பா)

இதற்கே வியப்பா? இனியரிச் சோழ
மதர்த்தெழு மார்பர், மருங்கில் இடையர்,
எழிலே உருவாய் இயைந்த மகளிர்
அழகால் எழுமே அதிர்வு.

**அபராசிதன் :**

(குறள் வெண்பா)

அதிர்வா? எனக்கா? அடுக்கா தியற்கைக்
கெதிர்காணேன் எங்கும் எழில்.

**விக்கியண்ணன் :**

*(இன்னிசை வெண்பா)*

இயற்கைப் படைப்பே எழிலிளம் பெண்ணார்!
இயல்பில் பிரிபிலை; ஈர்ப்பில் திரிபுள!
ஆசில் அரச அணங்கார் அழகறின்
பேச முயன்றிடீர் பின்.

**அபராசிதன் :**

*(நிலைமண்டில ஆசிரியப்பா)*

வீரரே, உம்முரை விளங்கல் இல்லை.
சேரநன் னாட்டைச் சேர்ந்தவர் நீரே!
உடலின் அமைப்பில், உருவப் பொலிவில்,
திடனில், திரட்சித் தெளிவில், நிறனில்
சேர நாட்டுயிர் சிலையார் தமக்கு
யாரும் எதிரில்; எவரும் உரைப்பர்!
நீரோ, சோழர் நேரிழை தம்மைப்
பாராட் டிடுவீர்! பாரேன் சீரே!

**விக்கியண்ணன் :**

*(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

நேற்றுவரை அப்படித்தான் நினைத்தி ருந்தேன்;
நேர்மாறாய் மாறியதென் நினைப்பும் இன்றோ!
காற்றுளியும்[2] மலைமகளிர்க் கொவ்வார் மற்றோர்;
கலைவல்லார் தமக்கெனவே கண்டு தேர்ந்து
நாற்றிங்கள் நோற்றிருந்து படைத்த தென்ன
நலனனைத்தும் நிலைத்தவெழில் நல்லார் அன்னார்!
கூற்றெதிர்வந் தழைத்திடினும் குலைதல் கூடா
குன்றிணையார் ஒன்றியிணை கூட்டம் கூடின்!

எண்ணியெண்ணி இறுமாந்த துண்டு; சோழர்
இன்னாட்டில் என்னடிகள் அண்டா முன்பு!
தண்ணிலவை ஒத்தமுகம், தளிரி தழ்கள்,
தளதளக்கும் பளிங்குருவம், தந்தம் மேனி!
வெண்ணெயினும் வழவழப்பு; வெற்பு[3] மார்பு!
வெண்முல்லை ஒண்பற்கள்; வெல்வாட் கண்கள்!
விண்ணுலவு மழைக்கூந்தல்! வீழும் நாளும்
மிகுமகிழ்ச்சி தருமாட்சி, மேலாம் காட்சி!

*(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

சேரநன் னாட்டுப் பெண்ணார்
செவ்விளங் கனிகள் அன்னார்!
ஓரமும் மற்றோர் ஒவ்வார்;
உறுதியாய் இருந்தேன் முன்னாள்!
பாரிதில் பருவந் தன்னில்
பருத்திணை திரட்சி காணில்
யாரிவண் துறவை ஏற்பார்?
துறந்தவர் துறப்பர் இன்னே!

**அபராசிதன் :**

*(குறள் வெண்பா)*

நன்று மொழிந்தவெலாம் நல்லெழிலார் மெய்யழகு
தின்றிடும் உள்ளத் தெளிவு.

**விக்கியண்ணன் :**

(கொச்சகக் கலிப்பா)

ஏற்றிமிக வுரைத்தென்னாம் எம்மகளார் எழிலுருவை?
தோற்றற்கு முரியவரே சோழர்குலத் தோகையர்முன்!
காற்றுளியு நுழைவரிய கனியிணைகள் பெருஞ்சுமையை
ஆற்றியிருந் தசைந்தாடும் அழகிடைக்கார் ஆற்றுவரே?

மஞ்சள்நிறத் தெழிலுருவர் மலைநாட்டு மடப்பிடியர்!
மிஞ்சுவினை மணப்போரில் மேலவரே, மிடுக்கவரே.
மஞ்சுதவழ் மழைக்கூந்தர் மணிமிடற்று மருண்மானார்
செஞ்சொற்சுவை யமுதமொழிச் செவ்விநனிச் சிறந்தோரே!

வஞ்சிக்கொடி யிடையமைப்பின் வடிவொன்றே ஆடவரைத்
துஞ்சவிடல் சிறிதுமின்றித் துடிதுடிக்கப் படுத்திவிடும்!
கொஞ்சுகுழற் குரலர்நற் கொள்ளிடம்போல் உள்ளிடத்தர்!
அஞ்சவணை யிரவின்பம் ஆரெடுத்துக் கூறிடலே!

**அபராசிதன் :**

(குறள் வெண்பா)

உற்றறிந்த சொல்லுவையோ? ஒன்றி உணர்ந்தவையோ?
பற்றிடுமே பெண்ணலார் பற்று!

**விக்கியண்ணன் :**

(கொச்சகக் கலிப்பா)

கண்டதுண்டு, கேட்டதுண்டு, கலந்துயிர்த்திங் குண்டதுண்டு;
விண்டுரைத்தற் கியலலில்லா விழுமியநற் கூட்டமுண்டு;
பண்டறியாப் பேரின்பப் பயனிவரால் பெறலெளிது;
வண்டுறையும் மலர்ச்சோலை வடிவெழிலார் வனப்பினிதே!

உயர்வாழை தொடைக்குவமை; ஒசியிடைக்குக் கொடியுவமை;
கயற்கண்ணே; கரும்பினடிச் சுவைசாறே கனியிதழ்கள்;
மயற்றருபேர் மார்பகங்கள் மலைமுகடே; மலர்முகமே;
இயற்கையெலாம் அவருருவே! எழிலுக்கும் எழிலவரே!

பொன்னி வளநாட்டுப் பொழில்நிலவர் புறவழகை
உன்ன உறக்கமிரா; உணவுணுவும் உள்ளிறங்கா!
கன்னற் கனிமொழியர் கருத்துநமில் பொருந்திடுமேல்
இன்னல் எதுநெருங்கா; எழுச்சியொன்றே! புகழ்ச்சியிலை!

*(அப்பொழுது சற்றுத் தொலைவில் யானையின் திடீர் பிளிறலும் அதைத் தொடர்ந்து அங்குக் கூச்சலும் குழப்பமும் எழுகின்றன.)*

**அபராசிதன் :**

(நிலைமண்டில ஆசிரியப்பா)

அதோ!அதோ! அங்கே! அருகே விரைக.

**விக்கியண்ணன் :**

இதோ!இதோ! விரைவேன்! என்ன நடப்பதும்?

**அபராசிதன் :**

மதங்கொண் டியானை மருட்டிடும் போலும்?
அதன்மேற் பெண்கள்! அருகே விரைக.

*(விக்கியண்ணன் தேரை விரைந்து யானையின் அருகே செலுத்துகிறான். யானை மீதிருந்த மாதேவி அச்சத்தால் அலர, கடம்ப மாதேவி அமைதி காக்கிறார். தேர் அருகில் நெருங்கியதைக் கண்டதும் பல்லவரையன் பேசுகிறான்.)*

**பல்லவரையன் :**

*அம்ம, இழிக; அத்தேர் அடைக.*

*(மாதேவி மெல்ல யானையினின்றும் நழுவி இறங்கத் தேரிலிருந்த அபராசிதன் தாங்கி தேரில் இருத்திக் கொள்கிறான்.)*

**பல்லவரையன் :**

*தேவி, நீங்களும் தேர்க்குச் செல்க.*

**கடம்ப மாதேவி :**

*போதும், அரையரே! போதும் பொய்மை!*
*சூதரும் தலைவர் சூழ்ச்சி அறிவேன்!*
*நிறுத்தும் யானையை; நேர்மையில் செயலில்!*
*பொறுத்தேன் இதுவரை; போதும் நிறுத்துக.*

*(பல்லவரையன் யானையை அடக்குபவன் போல் வெகு முயன்று யானையை நிறுத்துகிறான். விக்கியண்ணன் தேரினை நிறுத்திவிட்டு விரைந்து இறங்கி ஓடி வருகிறான்.)*

**விக்கியண்ணன் :**

*அரையரே, ஆனதென்?*

**பல்லவரையன் :** *(தயங்கியபடி)*

*அடங்கா தியானை*
*விரைய வெகுண்டு, விளைந்தது குழப்பமே!*

**விக்கியண்ணன் :**

*நல்ல வேளை! பல்லவ இளவல்*
*அருகில் இருந்திட வருந்துயர் அகன்றது.*

**கடம்ப மாதேவி :**

*வா,வா; மாதேவி, வருக இறங்கி.*
*போவோம், வாவா; பொழுதும் ஆனது!*

**மாதேவி :**

*யானை மீதா? யானா? ஊகூம்!*

*(மாதேவி அச்சத்தை வெளிப்படுத்த அபராசிதன் இடையே பேசுகிறான்.)*

**அபராசிதன் :**

*அலமரு அழகார் அஞ்சுவர்; அதனால்,*
*நலமே இருவரும் நற்றேர் அணைதல்.*

**கடம்ப மாதேவி :**

*நன்றி, ஐயா! நன்றி! எனக்கிங்*
*கென்றும் யானை ஏற்றமே பிடிக்கும்.*

**அபராசிதன் :**

*அப்படி யாயின், அஞ்சிடு இப்பெண்*
*ஒப்பிடல் வேண்டும் உடன்வரத் தேரில்!*

**விக்கியண்ணன் :**

*ஆமிள வரசி, அதுவே சரியாம்.*
*நாமினித் தொடர்வோம்.*

*(கடம்ப மாதேவி ஏதோ சொல்ல வாய் திறக்க, அதற்கு முன்னர் விக்கியண்ணன் விரைந்து தொடர்ந்து பேசுகிறான்.)*

**விக்கியண்ணன் :**

நல்ல திளவலே,
தேரை நீங்களே செலுத்திச் செல்க.
சாரை வாலாய்ச் சார்வோம் தொடர்ந்து.

*(தேர் மாதேவியை உட்கொண்டு செல்கிறது. கடம்ப மாதேவி பல்லவரையனைப் பார்த்துப் பேசுகிறார்.)*

**கடம்ப மாதேவி :**

வேண்டா நீவீர்! மீண்டும் யானை
மதங்கொளும் உம்மால்! அதனால் இறங்குக.
பல்ல வரையரே, பரியில் வருக.
வல்லரும் தலைவர் வல்லர் எதிலும்!
யானைகள் அல்ல, எவற்றை நடத்தவும்
ஆனவர்! அதனால் அச்சமில், செல்கவே.

*(பல்லவரையன் இறங்கிக் கொள்ள, விக்கியண்ணன் யானை மீது ஏறிக் கொள்கிறான். பல்லவரையன் வெறிதே நிற்க, யானை விரைகிறது.)*

## காட்சி : 22

**இடம்** : தஞ்சை அரண்மனைப் பூங்கா.
**காலம்** : முன்னிராப் பொழுது.
**உறுப்பினர் :** பல்லவ இளவரசன் அபராசிதன், மாதேவி.
**சூழல்** : பூங்காவில் அபராசிதனும் மாதேவியும் தனித்து அமர்ந்து உரையாடிக் கொண்டு இருக்கின்றனர்.

**அபராசிதன் :**

*(நிலைமண்டில ஆசிரியப்பா)*

பெண்ணே, என்னெதிர் பேசாய்; ஏனோ?

*(மாதேவி விடையளிக்காது அமர்ந்திருக்கிறாள். அவள் கவனம் சுற்றும் அங்கு மணமூட்டி மகிழ்வளித்துக் கொண்டிருந்த மலர்க் கூட்டத்திலேயே பதிந்திருக்கிறது.)*

**அபராசிதன் :**

ஊமையா? செவிடா? ஆமாம், அதுதான்!

*(மாதேவி மெல்லத் திரும்பிச் சிரிக்கிறாள்.)*

சிரிக்க வாவது தெரிந்துளை; மகிழ்ச்சி!
அரும்புப் பற்கள்! அழகமை இதழ்கள்!

*(மாதேவி முகத்தைத் திருப்பிக் கொள்கிறாள்.)*

ஏனிச் சினமே? எதற்கு வாட்டம்?
நானெதும் தவறாய் நவின்றனன் கொல்லோ?

**மாதேவி :**

*விரும்பிய எண்ணம் விளைவுறல் வேண்டிக்*
*கரும்பாய்ப் பேசக் கற்றவர் ஆண்கள்!*

**அபராசிதன் :**

*யாரே உரைத்த திம்மொழி? இழிமொழி!*

**மாதேவி :**

*ஊரே போற்றும் உயரிள வரசியார்*
*உரைமொழி என்றுமே மறைமொழி ஆகும்.*

**அபராசிதன் :**

*பொதுமொழி நன்று; புகழ்மொழி அன்று!*
*பொல்லார் இடையும் நல்லார் உண்டு.*
*நல்லார் சொல்லால் கொல்லல் நன்றா?*

**மாதேவி :**

*இல்லை, இல்லை; என்னைப் பொறுக்க!*
*பல்லவ இளவல், பாராள் மன்மகன்*
*எளியள் என்னோ டிருந்து பேசலும்*
*வெளியர் அறியின் வெறுப்பர்; வேண்டா.*

**அபராசிதன் :** *(அவள் கையைப் பற்றிக் கொண்டு)*

*கண்ணே, கரும்பே, களிதரு சாறே,*
*பெண்ணே, அரும்பே, பெறற்கரு பேறே,*
*களிறிரு உன்னைக் கண்டநாள் முதலாய்*
*வளியலை வாழை இலையென உலைவேன்.*
*திறந்தகண் மூடினும் தெரிவை தெரிவை.*
*இறந்தேன் உறக்கம்; இரப்பேன் இரக்கம்.!*

**மாதேவி :**

*ஆடவர் வேட்ட அடைதற் காக*
*ஊடகம் எதையும் உதவியாய்க் கொள்வர்.*
*உண்மை எனக்கும் உங்களால் புரிந்தது.*
*பெண்மை என்றால் பேதைமை தானா?*

**அபராசிதன் :**

*மானே, மயிலே, மாமரக் குயிலே!*
*நானோ உன்னை நலிவாய்க் கொள்வேன்?*

**மாதேவி :**

*மண்ணாள் மரபின் மைந்தர் நீங்கள்;*
*பெண்ணான் எளியள்; பிழையிடை வேண்டா.*
*அருட்கூர்ந் துளத்தெழு ஆசையை அறுங்கள்.*
*பொருட்பெண் டிலைநான்; பொற்பமை கற்பினள்!*

**அபராசிதன் :**

*கொற்றவர் மகன்தான்; குணமிலன் இல்லை.*
*மற்றவர் என்னை மதியார் ஆயினும்*
*உற்றவள் நீயே உயிராய், உணர்வாய்.*
*பற்றினைப் பற்றாய்ப் பற்றினன் பற்றுளன்!*
*மண்ணும் பொன்னும் மனத்திரு பெண்முன்*
*விண்ணிழி மீனாய் மின்னி மறைவ.*
*உன்றன் உறவே உயர்ந்த நறவே.*
*பொன்ற நேரினும் பொறேனுன் பிரிவே*

*(அபராசிதன் மாதேவியைத் தொட்டு ஆசையுடன் கட்டி அணைத்திட, அவள் அதைத் தவிர்த்திட முயல்கிறாள்.)*

**மாதேவி :**

*வேண்டா, ஐயா! வேண்டா; விடுக .*

**அபராசிதன் :**

*தீண்டா மலர்நீ; தேனீ நீங்குமோ?*

**மாதேவி :**

*அணைப்பீர் இப்போ தாசை மீதுற!*
*பிணைப்பின் பின்னர்ப் பிறக்கும் ஞானம்.*
*ஏற்றம் தாழ்வு தோற்றங் காட்டும்.*
*ஏற்றுவன் உம்மை; எண்ணுக முன்னர்.*

*(அபராசிதன் மாதேவியை விட்டு அகல்கிறான்,)*

**அபராசிதன் :**

*என்வரை நீயே எனக்கிவ ணெல்லாம்.*
*மன்னரென் தந்தை மறுக்கார் என்சொல்.*
*அகவை முதிர்ந்தவர்; அதனால் ஆட்சி*
*தகுமுறை நடத்திடு தனியன் யானே*
*இட்டதே சட்டம்; எதிர்த்தெவர் நிற்பார்?*
*முட்டற நம்மணம் முடியும் கவலேல்!*

**மாதேவி :**

*இனிய உரைப்பீர் ஏற்றற் குரிய;*
*எனினும் ஏற்பரோ எளியள் என்னை?*
*ஏற்பர் எளியளை என்ற ஆசையில்*
*ஏற்பாய் இசையின், இனித்தகம் மகிழின்,*
*என்னின் இழிந்தார் இருத்தல் ஆமோ?*
*உன்னில் நம்முள் உறவா? ஊகூம்!*
*ஆசை, ஆர்வம் அகத்தைக் கெடுக்கும்!*
*ஓசை இசையா? ஒன்றா; உணர்க.*

**அபராசிதன் :**

*ஐய மடையாய் வரலா றறியின்!*
*வைய மேற்றும் வாள்வல் நந்தி*
*கள்ளூ றின்பக் கலம்பக நாயகன்*
*தெள்ளா றெறிந்த தீரரென் பாட்டனைப்*
*பெற்றவர் அரசப் பிறப்பினர் இல்லை.*
*கற்றிடின் இன்மனக் காதலை மறுத்திடாய்.*
*எக்குடிப் பிறப்பினும் ஏற்றம் என்பது*
*தக்கன செய்திடு தகுதியால் பிறப்பது!*

**மாதேவி :**

*பேசக் கற்றுளீர்!*

**அபராசிதன் :**

*பிழையதில் உண்டா?*
*வீசும் தென்றல்; வேண்டா பயிற்சி.*
*ஆதவற் கலரும் அம்மரை[1]; அதுபோல்,*
*காதல் அணையக் கவிதை இணையும்!*

*எட்டி இருப்பினும் எட்டு மணம்நீ.*
*மட்டின்[2] இனியை! ஒட்டின் என்னாம்?*

*(மாதேவியைத் தொட்டு இழுத்து அபராசிதன் மீண்டும் அணைத்துக் கொள்கிறான்.)*

**மாதேவி :**

*மெல்ல, மெல்ல! நல்ல தில்லை.*
*சொல்லச் சொல்லத் தொல்லை உங்களால்!*

*(மாதேவியின் பேச்சிலிருந்த எதிர்ப்பு அவள் செயலில் இல்லை என்பதை அபராசிதன் உணர்ந்து மகிழ்கிறான்.)*

**அபராசிதன் :**

*புரிந்தது, புரிந்தது; புன்மை புரிந்தது.*
*தெரிந்தும் எவர்தான் எரிதழல் விழுவார்?*
*தொட்டிடத் துடித்தாய்; தொடர்ந்தெனைத் தடுத்தாய்;*
*எட்டிய திப்பொழு தெனக்கதன் கரணியம்.*

**மாதேவி :**

*புரிய வில்லை; புதிரேன் பேச்சில்?*
*தெரிய உரைப்பின் தெளிவு பிறக்கும்.*

**அபராசிதன் :**

*முடியுடை மூவர் உடனம ருரிமை*
*வேளிர் குலத்து வேல்விழி உமக்கு*
*மற்றோர் மரபில் மணங்கொளல் இழிபே.*
*அற்றேல் எனைமுன் அகன்றிட எண்ணிராய்.*

**மாதேவி :**

*காஞ்சிக் காவலர் கரணியம் தவறு.*
*தீஞ்சுவை தேன்பால் திகட்டுதல் இல்லை.*
*தென்னர் குலத்துத் தேன்மொழி யாரை*
*மன்னரும் தந்தை மணந்துளார்; அறிவேன்.*
*ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும்*
*கூடும் கூட்டமே நாடுநம் பாட்டும்!*

**அபராசிதன் :**

*அழகாய் மொழிந்தாய் அகவாழ் வியலை!*
*ஒழியேன் விட்டுனை உயிருறை நாளும்.*
*பழகப் பழகப் பால்புளித் திடலாம்;*
*பழகுநம் கூட்டால் பல்கும் இன்பமே.*

*(மாதேவியும் அபராசினும் அங்கு ஒருவரை ஒருவர் இறுகத் தழுவி இன்புறுகின்றனர்.)*

## காட்சி : 23

**இடம்** : இளவரசி கடம்ப மாதேவியின் தனியறை.
**காலம்** : முன்னிராப் பொழுது.
**உறுப்பினர்** : விக்கியண்ணன், கடம்ப மாதேவி.
**சூழல்** : கடம்ப மாதேவி கட்டிலில் அமர்ந்தபடி, நின்று கொண்டிருக்கும் விக்கியண்ணனிடம் பேசிக்கொண்டு இருக்கிறார்.

**கடம்ப மாதேவி :**

(நேரிசை வெண்பா— நந்திக் கலம்பகம்)

“ஈட்டு புகழ்நந்தி பாண,நீ எங்கையர்தம்
வீட்டிருந்து பாட விடிவளவும் — காட்டிலழும்
பேயென்றாள் அன்னை; பிறர்நரியென் றார்;தோழி
நாயென்றாள்; நீயென்றேன் நான்!”

(பஃறொடை வெண்பா)

வேளிர் குலத்துதித்த வீரப் பெருந்தகையே,
கேளிர் இதைமுன்னர்க் கேட்டதுண்டோ? சொல்லிடுக.

**விக்கியண்ணன் :**

தேவி, எனையெதற்குத் தேவையின்றித் தாழ்த்துகின்றீர்?
ஆவி உடல்பொருள்கள் அத்தனையும் ஆனவர்நீர்!
ஆண்டுகள் முப்பஃதே ஆனவிப் பாடலினை
ஈண்டுரைத் தென்னையேன் ஏளனம் செய்திடுவீர்?
நாடறிந்த நல்லவராம் நந்தியை ஏற்றியுரை
காடவரால் கண்ட கலம்பக நன்னூலில்
பாணனை இல்லாள் பழித்திடுந் தீம்பாடல்!
காணற் கரிய கவின்!

**கடம்ப மாதேவி :**

(கலி வெண்பா)

இதுதான் தெரியுமோ? இன்னுமுள வாமோ?
பொதுவாய் எவரும் புகல்வதே கூறியதும்.

**விக்கியண்ணன் :**

வந்தவர் ஆட்சி வடமொழி சார்ந்தது;
செந்தமிழ்க் கெந்தச் சிறப்பையும் சேர்த்ததில்.
பாரதம் தேவர் படைத்திட்டார் வெண்பாவில்;
ஆரிய மூலம், அதனால் அழிந்துவரும்.
ஓங்க வடமொழி, ஏங்குந் தமிழ்மொழி!
தாங்கற் கெழுந்த தனியொரு நூலென
நந்திக் கலம்பகம் வந்ததாய் நம்பினும்
சொந்த நலன்கொண்டு சூழ்ந்ததாய்ச் சொல்லலுண்டு!

**கடம்ப மாதேவி :**

எல்லாம் அறிந்திரு வல்லார் உமையரு
சொல்லால் வழுத்திடச் சூழ்வேன்; அறிந்திலேன்.

**விக்கியண்ணன் :**

காதற் பரத்தை கலந்தகம் மீண்டிடு
தீதிற் குரியனின் தேவியர் கொண்டிடும்

*ஊடல் அகற்றிடப் பாடிடு பாணனைச்*
*சாடி இகழ்ந்துரை பாடலைச் சாக்காய்*
*இழித்திட என்னை வழிவகை கண்டீர்.*
*பழித்திடல் மெல்லியர் பண்பு.*

**கடம்ப மாதேவி :**

*பழித்தல் எனக்குரி பண்பிலை, ஐய!*
*இழித்துமைப் பேச எனக்கே துரிமை?*

**விக்கியண்ணன் :**

*உரிமை அனைத்தும் உடையர்! உயிரர்!*
*பிரிவரு மேலர்; பிரித்தென் வருத்தல்?*

**கடம்ப மாதேவி :**

*வருத்துதற் கென்றே பொருந்தினீர் வாழ்வில்!*
*திருந்தற் கியலாத் தெளிந்தமை பண்பினர்;*
*உள்ளொன் றிருக்க உதட்டொன் றுரைத்திடு*
*கள்ள உளத்தர்; கசடுடை செய்கையர்;*
*பஞ்சணைக் கென்றொருத்தி பக்கத்தில் காத்திருக்கக்*
*கொஞ்சிடுவீர் மற்றொருத்தி! குற்றம் இழைத்திடுவீர்!*

*(விக்கியண்ணன் வெளிச்செல்லத் திரும்புகிறான்.)*

**கடம்ப மாதேவி :**

*இல்லை, இருந்திடுக; இன்னும் சொலற்குண்டு.*

**விக்கியண்ணன் :**

*மல்லை இளவரசர் மாதேவி காத்திருப்பர்;*
*நல்லார் அவர்தனிமை நல்லதற் கில்லையன்றோ?*

**கடம்ப மாதேவி :**

*எல்லாமும் ஏற்பாடே; ஏன்பின் னிடையூறே?*
*யானறிவேன் அத்தனையும் இந்நாட் டரசியலில்!*
*யானை மதமறிவேன்; ஏற்பாடாய் அப்பொழுது*
*மல்லை இளவரசர் மாதேவி தேரிணைந்து*
*செல்லநீர் செய்த சிறப்பில் செயலறிவேன்.*
*வீர, தகுவதிதோ? வெட்கம் மிகுமுளத்தே.*
*யாரும் அறியவரின் ஏளனமாம் உம்தலைமை!*
*பாணர் வயிற்றுக்காய்ப் பண்ணுதொழில்! எண்ணினுளம்*
*நாணும்! பிறக்கும் நகை.*

**விக்கியண்ணன் :**

*(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

*புரிதலில்; அன்பே, என்னைப்*
*பொதுவினில் தூற்று கின்றீர்.*
*உரியரென் தங்கை என்றேன்;*
*உண்மையே! மாற்றம் ஆற்றேன்.*
*அரசிளங் குமரர், காஞ்சி*
*ஆளுமைக் கடுத்தர், நல்லர்.*
*கரவிலா அமைச்சர் பெண்ணார்*
*களிப்பரங் கரசி யாயின்.*

**கடம்ப மாதேவி :**

*பாண்டியர் தம்பி, மன்னர்*
*பதவிக்கிங் குரிமை இல்லார்!*
*தூண்டினில் மீனாய் உங்கள்*
*தூதினை ஏற்று வந்தார்!*

*ஈண்டவர் எனைம ணக்க*
*இயைந்தன யாவும் செய்வீர்;*
*வேண்டவர் உறவால் என்ன*
*விளைபயன்? விளக்கல் வேண்டும்.*

*(விக்கியண்ணன் உடனே விடையளிக்க வில்லை. குனிந்து கடம்ப மாதேவியின் கால்களைப் பற்றிக் கொள்கிறான்.)*

**கடம்ப மாதேவி :**

*(கலி வெண்பா)*

*இழிசெயல் ஏனோ? இயல்பில்; எழுக.*

**விக்கியண்ணன் :** *(கால்களைத் தழுவியபடியே)*

*அழகாய் அளவாய் அமைந்த அடிகள்!*
*விரைமலர் மென்மை! விழுமழைத் தண்மை!*
*தரையுறல் நன்றிலை; தாங்குவன் மார்பே.*

**கடம்ப மாதேவி :**

*அடிகள் விடுக, அழகிலை; ஐய,*
*கொடியள் இவளெனக் கூறுவர் காணின்.*
*தலைவர் எனவுமைத் தாங்குவர் வீரர்!*
*உலைவுறும் உம்புகழ்! உள்ளுக; எள்ளுவர்!*

**விக்கியண்ணன் :**

*பூவடிகள் தம்மின் புகழும் பொருட்டாமோ?*

**கடம்ப மாதேவி :**

*ஏவிய கேள்விக்கிங் கேற்றதோர் மாற்றமில்லை;*
*செய்தவை கேட்டதற்குச் செப்புவழு வாயிற்று!*

**விக்கியண்ணன் :**

*செய்கையில் கேட்டிடு செய்திகள் உள்ள.*

**கடம்ப மாதேவி :**

*உளறுதல் வேண்டா; ஒழிக, எழுக.*

**விக்கியண்ணன் :**

*உளறலில்லை; நானிங் குரைத்திட்ட உண்மைகளே!*
*தண்ணென்ற தென்றல் தவழ்ந்துவரும் சாளரத்தால்;*
*பண்ணிசைக்கும் வண்டு, படர்ந்தணையும் பூநாற்றம்;*
*பானிலவு நீள்வானில்; பஞ்சணை மஞ்சமிதில்*
*நானருகே உற்றணைய நாணத்தால் நீயுதைப்பாய்!*
*நோகும் அடிகளென்று நோகாமல் கால்பற்றி*
*ஏகும் வலியென் றிதழிரண்டால் ஒற்றிடுவேன்!*

*(நாணமும் மகிழ்ச்சியும் மிகக் கடம்ப மாதேவி அவன் முடியை ஆசையோடு தடவி விடுகிறார்.)*

**கடம்ப மாதேவி :**

*போதும், விடுங்காலை பொல்லார்நீர் நானறிவேன்.*
*ஈதும் இறையாமா? ஏய்த்தற் றொழிலுமதே!*

**விக்கியண்ணன் :**

*எத்தனையோ ஆசைகள் என்னுள் நிறைந்துள்ள;*
*அத்தனையும் எண்ணியெண்ணி அன்றாடம் நோற்றிருப்பேன்.*
*கட்டில் உடலணைத் தொட்டிக் கலப்பதற்கும்*
*கட்டில் உணர்விழந்து மட்டில் களிப்பதற்கும்*
*நாளும் நினைந்தேங்கும் நானோ உனைப்பிரிவேன்?*
*வாளொடு வேல்கையில் வாழுமுயிர் உள்ளவரை*
*என்னவரே நீராம்; எவரெதிர்த்து நின்றிடுவார்?*
*உன்னுவனோ மற்ற? உணர்.*

*(கடம்ப மாதேவி அவன் பேச்சைக் கேட்டு உள்ளுள் களிப்படைகிறாள். இருந்தும் வெளியே முரணாகப் பேசுகிறாள்.)*

**கடம்ப மாதேவி :**

*(குறள் வெண்பா)*

*என்னுயிரே என்றிங் கினிய இயம்பிடினும்*
*தன்னலரே நீராம் தகும்.*

*(விக்கியண்ணன் குழப்பம் நிறைந்தவனாய் நிமிர்ந்து கடம்ப மாதேவி முகத்தைப் பார்க்கிறான்.)*

**விக்கியண்ணன் :**

*தன்னலனா? நானா? தகாதிரு தாட்படிந்தும்*
*இன்னற் படுத்துவ தென்?*

**கடம்ப மாதேவி :**

*(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

*இரவினுக் கொருத்தி வேண்டும்;*
*இயைந்தனள் குழலி ஈண்டும்!*
*உரனளி அரச வாழ்வில்*
*உயர்வினுக் கியானும் ஆனேன்!*
*முரணெதும் பேச்சில் உண்டா?*
*மொழிந்திடும் புன்மை கண்டால்.*
*அரசிளம் பெண்ணாய் இன்றேல்*
*அடைந்திட எண்ணீர் அன்றோ?*

*மண்ணுடை இளைஞர் தம்மை*
*மறுத்தவள் கொள்கை என்றே!*
*திண்ணியள் நெஞ்சம் அன்பால்*
*திரிந்தது; சேர்ந்தேன் உம்பால்!*
*பெண்ணிவள் மன்னர் பெண்ணாம்*
*பேறிலள் என்றால் என்னாம்?*
*உண்மையை ஒளித்தல் இன்றி*
*உளந்திறந் துரைக்க ஒன்றி.*

**விக்கியண்ணன் :**

*எனக்கென உள்ளம் என்றோ*
*இருந்தது; காணேன் இன்றோ!*
*எனக்கெலாம் நீரே என்பேன்;*
*எனிலுளம் தொட்டுச் சொல்வேன்.*

*(கடம்ப மாதேவியின் மார்பில் விக்கியண்ணன் தன் கையை கொண்டு வைக்க முயலக் கடம்ப மாதேவி திடுக்கிட்டுப் பின் வாங்குகிறாள்.)*

**கடம்ப மாதேவி :**

*மௌனக்கெடல் எதற்கு? பெண்ணார்*
*மேனியும் பொழுது போக்கு!*
*நினைப்பெலாம் கோட்டம்! நேர்மை*
*நெறியிலீர், செய்கை வாட்டும்.*

**விக்கியண்ணன் :**

(கலி வெண்பா)

*வஞ்சனை நெஞ்சிலில்லை; வஞ்சியைக் கொஞ்சுதற்கு*
*வஞ்சனை நஞ்செதற்கு? பஞ்சணை மஞ்சமுண்டு!*

**கடம்ப மாதேவி :**

*எல்லாம் இருக்கட்டும்; எல்லாரும் வாழ்த்தொலிக்க,*
*வல்லார் எனைமணப்பின் வந்தடையும் வேட்பனைத்தும்.*
*ஆசைக் கவளொருத்தி அங்கிருப்பாள்; ஆகாதா?*

**விக்கியண்ணன் :** *(வருத்தத்துடன்)*

*பேசற் கவள்தானா? பேதையவள்! வேதனைதான்!*
*கேட்டீர்முன் கேள்வியொன்று; கேட்டிடுக என்விடையை.*
*காட்டிலுமைக் கண்ட கணப்பொழுதில் காதலுற்றேன்!*
*நாட்டிற் கிளவரசி! நானறியேன் அப்பொழுது!*
*கோட்டிற்[1] பொறியுருவாய்க் கொண்டிட்டேன் என்னுயிராய்!*

**கடம்ப மாதேவி :**

*காணுமணங் கியாரும் கணப்பொழுதில் உங்கருத்தில்*
*மாணு[2] நிலையறிவேன்; மாறு முளமறிவேன்.*
*என்னை மணத்தற் கிசைந்ததுவும் எப்பொழுதாம்?*
*மன்னர் மகளென்று பின்னர் அறிந்தன்றோ?*

**விக்கியண்ணன் :**

*தேவி, எனைநம்பத் தேவையிலை என்றாலும்*
*கோவில் சிலையொப்பக் கொண்டிடுக கூறுவன!*
*பெண்ணார் அழகென்னைப் பித்தாக்கும், உள்ளதுவே!*
*கண்ணாம் உமைக்கண்டேன்; கண்ட துயர்வொன்றே!*
*உண்டல் இயற்கையென உற்றிருந்தேன்; குற்றந்தான்!*
*கண்டதில் காதல்முன் காரிகையர் யார்மாட்டும்;*
*வாழ்க்கைத் துணையென்ற வள்ளுவர் வாய்ச்சொல்லின்*
*போக்குப் புரிந்ததுன் போற்றுமரு கூட்டால்.*

*(கடம்ப மாதேவியின் கண்களில் அவர் கொண்ட களிப்பால் ஈரம் படர்கின்றது.)*

**கடம்ப மாதேவி :**

*இளவரசி யில்லாதோர் ஏழைநான் என்றால்?*

**விக்கியண்ணன் :**

*எளியரென் றில்லை; இழிகுலத்தார் என்றாலும்*
*கொள்வேன் உயிர்த்துணையாய்க் கோணா உளநினைப்பும்!*
*தள்ளற் கருவன்பில் தாழ்வேற்றம் தாமுண்டோ?*

**கடம்ப மாதேவி :**

*காலம் வரும்விரைவில்; காண்போம் உறுபொருளை!*
*ஞாலம் அறியும் நலன்.*

# காட்சி : 24

**இடம்** : தஞ்சை மாநகர ஆடலரங்கம்.
**காலம்** : முன்னிராப் பொழுது.
**உறுப்பினர் :** விக்கியண்ணன், கடம்ப மாதேவி, மாதேவி, ஆதித்தன், அபராசிதன், பராந்தகன்.

**சூழல்** : ஆடலரங்கில் நடனவல்லி பாடற்கேற்ப ஆடிக் கொண்டிருக்கிறாள் மேல்மாடக் காணறையில் அமர்ந்தபடி கடம்ப மாதேவி கண்டுகளித்துக் கொண்டிருக்கிறாள்.

*(எடுப்பு)*

*நீயின்றி நானில்லை, கண்ணா! — எனை*
*நீட்டித்து நீங்கலோ? ஒண்ணா!*
*தாயின்றிச் சேயில்லை, மன்னா! — உன்*
*சார்பில்லை என்றாலோ இன்னா!* (நீயின்றி)

*(தொடுப்பு)*

*கோயிற் சிலையென்று கொண்டாய் — என்றன்*
*கோவை இதழொற்றி உண்டாய்.*
*வாயின் சுவையமுதம் என்றாய் — உடல்*
*வாரி அணைந்திட்டாய் ஒன்றாய்.* (நீயின்றி)

*(கண்ணிகள்)*

*கண்ணென்றாய், மணியென்றாய், நாணேன் — இன்று*
*களிறுண்ட கரும்பாகிப் போனேன்.*
*பண்ணென்றாய், பனியென்றாய் நன்றாய்! — என்னைப்*
*பழியொன்று சுமைதந்தாய், சென்றாய்!* (நீயின்றி)
*நிலவன்றோ வானுக் கழகு? — பெண்*
*நிலம்பார்த்தல் நாணுக் கழகு!*
*நலனொன்றா நம்முட் பிரிவு! — அணை*
*நடுவூடு தென்றல் இழிவு!* (நீயின்றி)

*(தனித்தமர்ந்து இசை நாட்டியத்தைப் பார்த்துக் கொண்டிருந்த கடம்ப மாதேவியை நாடி ஆதித்தன் அருகில் வருகிறான்.)*

**ஆதித்தன் :**

*(கலி வெண்பா)*

*அக்கையே, ஏனுடன் ஆரு மிவணிலை?*
*தக்கதுணை மாதேவி பக்கமிலர்; எங்கேயோ?*

*(கடம்ப மாதேவி விடையளிக்காமல் திரும்பிப் பார்க்க, ஆதித்தனும் அத்திசை நோக்கிப் பார்க்கிறான். அவன் கண்ட காட்சி அவனுக்கு அதிர்ச்சியை அளிக்கிறது.)*

**ஆதித்தன் :** *(தனக்குள்)*

*காலை மலரின் கவின்மிகு காட்சியைச்*
*சேலை உருவில், சிரிப்பினில் காண்கிறேன்!*
*மாதேவி இவ்வண் மகிழ்ந்து திளைத்திட*

*யாதே கரணியம்? இப்படி என்றும்*
*சிரித்தவள் இல்லை சிவந்திடக் கன்னம்!*
*எரித்திடு தீயாய் இடர்தரு சூழல்!*
*பராந்தகர் பேசு பனிமொழிப் பாங்கில்*
*இராலென யாரும் சுருண்டிடல் ஏற்பே!*
*அழுக்கா றகத்தில் அபரா சிதனுக்(கு)*
*எழக்கால் வகுத்த திதுதான் கரணியம்!*
*என்னவள் மாதேவி! எண்ணி இருந்ததும்*
*இன்றிலை என்ற இழிநிலைக் கிங்கிவர்*
*கூட்டால் விளைந்த குழப்பம்! ஒழிந்திட,*
*வாட்டான் தகுந்த வழி.*

*(ஆதித்தன் கடம்ப மாதேவியைப் பார்த்துப் பேசுகிறான்.)*

**ஆதித்தன் :**

*என்ன நடப்பதுவும்? இங்கெனக்குக் கூறிடுக.*

**கடம்ப மாதேவி :**

*என்னை எதுங்கேளாய்; ஏற்றமிகு உன்றலைவர்*
*பாண்டியர் தம்பி பராந்தகர் பின்றொடர*
*ஈண்டு வருகின்றார்; எல்லாம் அவருரைப்பார்.*

*(விக்கியண்ணனும் பராந்தகரும் அங்கே வந்து சேர்கின்றனர்.)*

**பராந்தகர் :**

*வாழ்க, இளவரசி! வாழ்க; வணக்கங்கள்!*

**கடம்ப மாதேவி :**

*வாழ்க; வருக! பராந்தகரே, வந்தமர்க.*
*நேரிலுமைப் பார்த்து நெடுங்காலம் ஆயிற்றே!*

**பராந்தகர் :**

*ஈரிரண் டாண்டுகள்! இன்றுமுள என்னினைவில்.*
*தேவி அருட்கிடைக்கத் தேவைமுன் நல்வினைகள்!*

*(கடம்ப மாதேவி கலகலவெனச் சிரிக்கிறார். விக்கியண்ணன், அது கண்டு திகைக்கிறான்)*

**கடம்ப மாதேவி :**

*யாவும் அறிந்தவர்நீர்; ஏனிற்பீர்? இங்கமர்க.*

*(பக்கத்து இருக்கையில் பராந்தகன் அமர்கிறான்.)*

**கடம்ப மாதேவி :**

*மாற்றஞ் சிறிதுமில்லை; மாறாமல் இன்றுமுளீர்!*
*தோற்றம் பழகுமுறை சொல்லாடல் அப்படியே!*

*(மற்ற பக்கத்தில் அமர்ந்திருந்த ஆதித்தனைத் திரும்பிப் பார்த்துக் கடம்ப மாதேவி தன் பேச்சைத் தொடர்கிறார்.)*

**கடம்ப மாதேவி :**

*ஆதித்தா, தம்பி! அருந்தலைவர் நேரிலுள்ளார்;*
*சேதியெதோ கேட்டாயே? செப்பிடுவார் தேர்ந்தவரே!*

**விக்கியண்ணன் :**

*சொல்க, இளவரசே; சொல்வேன் தெரிந்தவற்றை.*

*(ஆதித்தன் ஏதும் பேசாமல் அமைதி காக்கின்றான்.)*

**கடம்ப மாதேவி :**

*சொல்லத் தயங்குகிறார்; சொல்லிடுவேன் நானெடுத்து.*
*வீர, விழுத்தலைவ, மேன்மாடம் நோக்கிடுக.*
*யாரவரே?*

**விக்கியண்ணன் :**

*மல்லை இளவரசர், மாதேவி.*

**கடம்ப மாதேவி :**

*என்ன உறவவர்க்குள்?*

**விக்கியண்ணன் :** *(குழம்பியவனாய்)*

*என்னுறவா? கேட்பதென்ன?*

**கடம்ப மாதேவி :**

*என்ன புரியலையா? ஏன்பொய் உரைத்திடுவீர்?*
*தன்னேர் இலாத்தலைவர், தங்கம் எனநம்பும்*
*என்னேர் உடன்பிறப்பிற் கேற்றுநலன் நன்றுமிக!*

**விக்கியண்ணன் :**

*கூறுபொருள் காணேன்; குழம்பு நிலையானேன்.*

**கடம்ப மாதேவி :**

*மாறு மனமுடையீர், மாற்றார் உணர்வுணரீர்!*
*ஆதித்தர்க் கான அமைச்சர் மகளார்க்காம்*
*சூது புரிந்து தொடர்பைத் துணித்திட்டீர்.*
*எண்ணம் இளவரசர்க் கிஃதென் றறிந்திருந்தும்*
*கண்ணவளைப் பல்லவர்க்குக் காணிக்கை ஆக்கிட்டீர்.*
*ஊன்றி உயர்காதல் ஊனம் உறுமானால்*
*நான்றும்[1] துயரன்றோ? நல்லதுவோ? சொல்லிடுக.*
*ஒன்றும் தெரியாதா? ஒவ்வா புரிந்தீரே!*
*நன்றி மறந்திட்டீர், நன்று.*

**விக்கியண்ணன் :**

*தேவை இருந்ததனால் தேர்ந்தே புரிந்திட்டேன்.*

**கடம்ப மாதேவி :**

*நாவினிக்கக் கூறுகின்றீர், நாணவில்லை செய்தமைக்கு!*

**விக்கியண்ணன் :**

*நன்றி மறத்தற்கும் நாணம் துறத்தற்கும்*
*பொன்ற இடர்வரினும் போற்றுபவன் நானில்லை.*
*மாதேவி எண்ணி மகிழ்ந்திடுவார்; நானறிவேன்.*
*ஏதீதும் ஒப்புக் கியற்று மொழியில்லை.*
*எண்ணம் செயல்பேச் சியாவும் இளவரசர்*
*உண்ணிலைமேம் பாட்டிற் குதவ அமைந்தவையே.*
*பெண்ணாசை வாழ்நெறியைப் பேதப் படுத்திவிடும்!*
*உண்மை மறவர்க்கிங் குண்ணோக் கிருந்திடனும்!*
*ஏராளம் உள்ள இளவரசர் ஆற்றுதற்கு!*
*தேரா தவர்நடவார்; தேர்ந்த அறிவுடையார்!*
*ஐம்புல ஆசைகள் அண்டா அவருள்ளம்.*
*செம்புலம் அன்னார்; திரிபிலாச் செய்கையர்!*
*பெண்ணே பெரிதாய்ப் பிறழ நினைந்திடாத்*
*திண்ணிய நெஞ்சர்! திறன்சேர் விறலினர்!*
*தூசென ஆசையைத் தூற்றிட இல்லரேல்*
*காசினி போற்றுங் கடன்தமை ஆற்றார்!*
*அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்*
*இழுக்கா இயல்பினர்; யார்க்கும் இனியவரே!*
*ஆயிரம் பெண்களை ஆசையில் கொள்ளலாம்;*
*ஆயின் அவரே அனைத்தெனல் ஆகா.*

**கடம்ப மாதேவி :**

பராந்தகப் பாண்டியரே, பார்த்துமகிழ்ந் தீரா?
இராவிவர் இன்சொற் கிணை.

**பராந்தகன் :**

(திருக்குறள்)

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

**கடம்ப மாதேவி :**

(கொச்சகக் கலிப்பா)

நன்றாக அறிந்திருந்தும் நகையுடைய புரிந்திடுவார்
குன்றாகும் தலைவரெனக் கொண்டாடும் இளவரசர்க்
கொன்றாத உரைத்திடுவார்; ஒருவவற்றைப்[2] புகுத்திடுவார்.
நன்றாற்றல் இலையெனினும் நலிவாற்றாத் திறனன்றே.

**விக்கியண்ணன் :**

பெண்களே அனைத்துமெனல் பேதைமை! பிறிதுமில்லை.
உண்ணிடற் குணவொப்பார் உடற்பசிக்கிங் குதவெழிலார்!
நண்ணிடா உளக்கவலை; நலிவணையா செயற்றிறனில்!
எண்ணிடார் இடர்ப்படுவர்; இயல்பனவும் இயலலின்றே.

**கடம்ப மாதேவி :**

வீரர் உமக்கொக்கும்; வெற்றாள்நீர்! கவலையில்லை!
ஈர உளமன்றோ என்னாட்டு மக்களிடர்
தீரப் பணியாற்றுத் திறமையினைத் தோற்றுவிக்கும்.
ஓரின் இளவரசர்க் கொவ்வுவவோ உம்முரையே.

(ஆதித்தன் அங்கிருந்து செல்வதற்கு ஏற்ப அணியமாய் எழுந்து நிற்கிறான்.)

**ஆதித்தன் :**

(குறள் வெண்பா)

சென்றுவரு கின்றேன்; செவிமடுத்த அத்தனையும்
நின்ற மனத்து நிலைத்து.

(ஆதித்தன் அங்கிருந்து விரைந்து புறப்பட்டுச் செல்ல, விக்கியண்ணனும் தொடர்ந்து செல்லத் திரும்புகிறான். கடம்ப மாதேவியின் பேச்சு அவனைத் தடுத்து நிறுத்துகிறது.)

**கடம்ப மாதேவி :**

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

வீரரே, விருப்பம் போல்நீர்
விழைவன செய்க; வாழ்க.
யாரதைத் தடுத்தற் கேலும்?
எண்ணிய வண்ணம் செய்க.
ஈரனென் தம்பி பண்பில்
இமயமாய் ஓங்கல் வேண்டும்.
தீரர்நீர் சொல்ப வற்றால்
தீவினை சேரும்; வேண்டா.

ஒருவற்கிங் கொருத்தி என்ற
உயர்தனி வழக்கை எங்கள்
திருநலங் கிள்ளி சொல்லைத்
தேர்ந்தவர் மீறல் இல்லை.
கருதுவன் தம்பி உம்மைக்
கடவுளாய்; அதனால் நீவீர்

வெருவுவ நீக்கி நல்ல
விளைவன ஊக்கல் வேண்டும்.

நல்லதும் எண்ணம் போல
நாங்கூரார் பெண்ணை வேட்கும்
மல்லையர் மகனார் கொள்க;
மறந்திட இளவல் செய்வேன்.
நல்லனென் தம்பி, முன்னோன்
நலங்கிள்ளி பின்னோன் என்னச்
சொல்லிட ஒருத்தி யோடே
சூழனும், விலக்கல் வேண்டா.

## காட்சி : 25

**இடம்** : தஞ்சை அரண்மனை விருந்தினர் கூடம்.

**காலம்** : இராப் பொழுது.

**உறுப்பினர்** : சோழ மன்னர் விசயாலயர், ஆதித்தன், மாதேவி, விக்கியண்ணன், அபராசிதன், பல்லவரையன், நாங்கூர் வேள்.

**சூழல்** : பல்லவ இளவரசன் அபராசிதனுக்கு விடை அளிப்பு விழா விருந்து முடிந்து, சிறப்பு விருந்தினர் மட்டும் அமர்ந்து உரையாடிக் கொண்டிருகின்றனர். பல்லவரையன் நேரே அப்போது உள்ளே நுழைந்து விக்கியண்ணனிடம் ஏதோ கூற, இருவரும் விசயாலயரை நெருங்கிப் பேசுகின்றனர்.

**விசயாலயர் :**

(நிலைமண்டில ஆசிரிப்பா)

என்ன ஓலையா? தென்னர் இருந்தா?

**விக்கியண்ணன் :**

சடைய வர்மர் வரகுணப் பாண்டியர்
அளித்ததாய்ச் சொல்லி ஆங்கொரு தூதர்
வெளித்தளம் உள்ளார், வேண்டித் திருமுன்!

**விசயாலயர் :** (பல்லவரையனைப் பார்த்து)

அடுத்தவர் கொணர்க; விடுத்த தறிவோம்!

(பல்லவரையன் விரைந்து ஏகித் தூதுவனை உள்ளே அழைத்து வருகிறான். தூதுவன் மன்னரைப் பணிந்து வணங்கி ஓலையை அளிக்க, அதைப் பல்லவரையன் மூலம் பெற்றுப் படித்த விசயாலயர் ஓலையை விக்கியண்ணனிடம் நீட்டுகிறார்.)

**விசயாலயர் :**

படித்துப் பாரும்.

(படித்த விக்கியண்ணன் ஏதும் சொல்லாமல் நிற்கிறான்)

**விசயாலயர் :**

விடுத்தகு விடையென்?

**விக்கியண்ணன் :**

மன்னர் எண்ணம் முன்னர்த் தெரியின்
ஏற்ப அதற்கு மேற்கொளல் எளிது.

**விசயாலயர் :** *(பல்லவரையனைப் பார்த்துப்)*

பல்ல வரையா, நல்லரித் தூதர்
ஓய்விவண் கொள்ள வாய்ப்பன செய்க.

*(தூதுவன் மன்னரைப் பணிந்து வணங்கி விடைபெற்றுப் பல்லவரையனைத் தொடர்கிறான்.)*

**விசயாலயர் :**

நாங்கூர் நண்பரே, நல்லதே செய்தி.
பாங்கார் உம்மகட் கீங்கியார் மேலார்!
பாண்டியர் தம்பி பராந்தகர்க் காக
வேண்டிப் பெண்ணை விடுத்துளர் ஓலையை.
மகிழ்ச்சி தானே? மகிழ்வன் நானே.

*(அனைவர் பார்வையும் மாதேவியின் மீதே பதிந்தன. ஓலைச் செய்தியை அறிந்து அதிர்ச்சி அடைந்தவர் அங்குப் பலராவர்.)*

**ஆதித்தன் :**

தந்தையே, நானும் அந்த ஓலையைப்
படித்தல் கூடுமா?

**விசயாலயர் :** *(அமைதியாக)*

தடையிலை; படி!படி!
இளவர சுனக்கிங் குளவெவ் வுரிமையும்!

*(விக்கியண்ணன் ஓலையை நீட்ட, ஆதித்தன் பெற்றுப் படிக்கிறான். விசயாலயர் தன் பேச்சைத் தொடர்கிறார்.)*

**விசயாலயர் :**

முதன்மை அமைச்சரே, முடிச்சும் அவிழ்ந்தது!
இதன்வழிப் பாண்டியர் இகலினி இற்றிடும்.

**கடம்ப மாதேவி :**

தந்தையே, சொலலென்? சிந்தை குழம்பும்.

**விசயாலயர் :**

விந்தை! உனக்கு விளக்கவும் வேண்டுமா?
வண்டு முகரா வாசம் உண்டா?
உண்டுநீ அறியா உலகியல்? மகளே,
பாண்டியர் நம்மிடை நீண்டுள பகைமை
தீர்ந்திட உறவே தீர்வாம்! தெரிந்தும்
அவருடன் மணங்கொளத் தவிர்த்தனை நீயே.
வழிவே றின்றி எழுபோர்க் காக
அழிவே எனினும் ஆவன செய்வோம்.
தென்னர் ஓலை இந்நிலை தன்னில்
முன்னீர்[1] அலைவாய் மூழ்கி மாழ்கும்[2]
மெலியர்க் கணைந்த மிதவை ஆகும்!
நலிவில்! நண்பரே, நவில்கவும் நாட்டமே.

**நாங்கூர் வேள் :**

*சரியென் றரசர் தெரிந்துரை பின்னர்*
*உடன்படல் ஒன்றே கடனாம் எனக்கே.*
*பாண்டியர் உறவு வேண்டிய படைக்கும்!*

**கடம்ப மாதேவி :**

*மாமா, இஃதென் மடமிகு பேச்சும்?*

**நாங்கூர் வேள் :**

*ஆமாம், மடமையே; அதனால் என்ன?*
*இந்த நாட்டிள வரசியாய் இருந்தும்*
*அழிவினைத் தவிர்க்கும் வழியறிந் திருந்தும்*
*முன்வரல் இல்லை; முரண்மிகக் கொண்டீர்.*
*என்மகள், தாய்நாட் டிழிவினைத் தகர்க்கத்*
*தன்னுயிர் தரவும் தயங்காள்! உறுதி!*

*(ஆதித்தன் அப்போது குறுக்கிட்டுப் பேசுகிறான்.)*

**ஆதித்தன் :**

*சற்றுப் பொறுங்கள்; சண்டை எதற்காம்?*
*வேண்டி உறவைப் பாண்டியர் ஓலையை*
*விடுத்த தாக எடுத்தேன் கொள்வீர்?*
*ஓலையி லுள்ள ஒவ்வொரு சொல்லும்*
*வேலைப் புண்ணிடை விடுத்த தொக்கும்!*
*தனக்கெதிர் யாரும் தரணியில் இலையெனும்*
*இனத்திமிர் ஓலையில் இருக்கு மெங்கும்!*
*மணப்பின் பேறென மறுப்பின் போரெனச்*
*செருக்கின் நெருக்கம் இருக்கும் நெடுக்கும்!*
*எருக்கெனக் கிள்ள எண்ணினர்; எழுதினர்!*
*நாடுவ துறவிலை; நாட்டம் போரே!*
*தேடுவர் கரணியம், தேர்ந்தனர் மணத்தை!*
*கோழையர் என்றவர் சோழரைக் கொண்டனர்;*
*குட்டக் குட்டநாம் குனிபவர் இலையே!*

**விக்கியண்ணன் :**

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

*உணர்வினை முன்னி றுத்தின்*
*ஓர்வறி[3] வூன மாகும்.*
*இணர்[4]நெருப் பெரிக்கும் போதும்*
*இருப்பதே குறிக்கோள் ஆகும்.*
*துணர்[5]மலர் பெண்ணார் நெஞ்சில்*
*தொங்கலாய் இருப்ப தாலே*
*குணங்குறை ஒப்புக் காணார்;*
*கொதியுலை நிலையைக் கொண்டார்.*

**ஆதித்தன் :**

*தவறெனில் பொறுத்தல் வேண்டும்;*
*தலைவர்சொல் மீறேன் என்றும்!*
*கவலளி காதல் நெஞ்சில்*
*கடமைகள் மட்டே உண்டாம்.*
*எவரினி அமைச்சர் பெண்ணை*
*ஏற்பினும் இணக்கம், மானம்*
*கவருறு நோக்கில் கூட்டைக்*
*கருதிடின் கொள்ளேன்; கொல்வேன்!*

*அன்பினுக் கடிமை, ஆமாம்;*
*அடக்கிட அடங்கல் ஆகோம்?*
*உன்னுவ அமையின் ஏற்போம்;*
*உரிமையை இழப்போம் இல்லை.*
*தென்னவர் படைச்செ ருக்கைத்*
*தெரிந்திடச் செய்யும் ஓலை!*
*என்பிலாப் புழுவோ நாமும்?*
*இழிவினைப் பொறுத்தல் ஆமோ?*

*சோறுடை சோழ நாட்டார்*
*சோற்றடை பிண்டம் இல்லை!*
*வீறுடன் எழுவர் போர்க்கும்;*
*வேறொரு புறம்பி றக்கும்!*
*சீறிடு சிங்கம் முன்னர்ச்*
*சிறுநரிக் கூட்டம் நில்லா!*
*மாறிடும் உயர்வு தாழ்வு;*
*மானமே சோழர் வாழ்வு!*

*(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

*போரென்று பூச்சாண்டி காட்டு கின்றார்!*
*புறப்பாட்டிற் குரியர்நாம்; போற்றார் காணார்!*
*சீரொன்று மாதேவி சேர்க்கை வேண்டின்*
*செய்முறைகள் தெரியாதா? செருக்கே ஓலை!*
*யாரென்று நமைக்கொண்டார்? இரஞ்சின் ஈயும்*
*ஏற்றுநலங் கிள்ளிவழி! இனிதான் காண்பர்.*
*வீரந்தான் உடன்பிறப்பு; வெல்வாள் வில்வேல்*
*விளைகளமே நம்குலந்தான்! வேண்டா வீழ்ச்சி.*

*(அனைவரும் அங்கு ஆதித்தனையே வியந்து பார்த்தபடி அமர்ந்து இருக்கக். கடம்ப மாதேவியின் கண்கள் உணர்ச்சியால் கலங்குகின்றன. யாரும் அறியா வண்ணம் கண்களைத் துடைத்துக் கொள்கிறார்.)*

**விசயாலயர் :**

*(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

*உளமிகக் குளிர்ந்த தின்றே,*
*ஆதித்தா, உன்றன் பேச்சால்!*
*அளவிடற் கலகு மின்றி*
*அக்கையே மகிழ்வார்; காண்க.*
*இளவர சுன்னா லன்னார்*
*எண்ணுவ எல்லாங் கூடும்.*
*வளமுறு மாட்சி நின்று;*
*வடுவறு பேச்சே சான்று!*

**விக்கியண்ணன் :**

*பாண்டியர் ஓலைக் கொத்த*
*பதிலினை அனுப்பல் வேண்டும்;*
*ஆண்டவர் கூறில் நன்றாம்!*
*அறிந்தவர் அனைத்தும் அன்றோ?*

**விசயாலயர் :**

*வேண்டிய தில்லை; நாளை*
*வேந்தராம் இளவல் சொல்வார்!*
*தூண்டிட ஒளிசி றக்கும்;*
*தொழிலிலும் வழிபி றக்கும்.*

**ஆதித்தன் :**

*பெண்ணிலை என்றால் போரே!*
*பேசிய தோலைச் செய்தி.*
*கண்ணிருந் தாவ தென்ன?*
*காண்தகு காட்சி இன்றேல்!*
*மண்ணினும் புகழே மாண்பு!*
*மானமே உயிராம்! ஆக*
*அண்டிடா அச்சம்; தேடி*
*அமர்வரின் அணியம்! சொல்க.*

**விக்கியண்ணன் :**

*அகவையின் எழுச்சி கூற்றாய்*
*ஆர்த்தெழும் நீரின் ஊற்றாய்!*
*இகலெனின் படைந லத்தை,*
*இயைந்துடன் உதவு வோரைப்*
*பகலிடம் பயன்கள் ஒன்னார்*
*படைத்திறன் அனைத்தும் தேர்ந்து*
*மிகுமெனின் மேவின் வெற்றி*
*விழைந்திடும்! வெறும்பேச் சாகா.*

**ஆதித்தன் :**

*(கலி வெண்பா)*

*வினைவலியும் தன்வலியும் மாற்றார் வலியும்*
*துணைவலியும் தூக்கிச் செயலென்ற தொன்மறையைச்*
*சொல்லிக் கொடுத்துள்ளீர், தூங்கையிலும் நான்மறவேன்.*
*மல்லுக்கு நிற்பேனா? மாற்றுமனங் கொள்வேனா?*
*பாண்டியர் பேராற்றல் பாரறியும்; நானறிவேன்!*
*ஆண்டுக் குடமூக் கமைந்த அமர்க்களத்தில்*
*மல்லையர் பக்கம் மகதரும் கங்கரும்*
*சொல்லிடக் கூசும், துணையென நாமும்*
*இருந்துமென்ன? எய்தியது தோல்வியே! எல்லாம்*
*தெரிந்தும் இறங்கிடல் தேவையிப் போதே.*
*உயிரின் சிறந்த துயர்மானம்! கேடும்*
*இயைய உயிரோ டிருப்பதோ? இல்லையில்லை!*
*மாற்றார் அடிபணிந்து மண்ணாள் பெருமையினும்*
*ஆற்றா திறந்துபடல் ஆன்ற புகழ்விளைக்கும்!*
*தோற்றல் இறுதி; தொடரும் புகழுறுதி!*
*மாற்று வழியில்லை; மானம் பெரிதுயிர்க்கு!*
*வீரம் மடிவதில்லை; வீங்குபுகழ் வீழ்வதில்லை!*
*தீரம் நிலைக்கும் திகழ்ந்து.*

*(எல்லாரும் கைதட்டி மகிழ்கின்றனர்,)*

**விசயாலயர் :**

*(கொச்சகக் கலிப்பா)*

*கூற்றுவனே கொளவரினும் குலமானம் உயிர்தானாம்!*
*மாற்றலர்தம் அடிவருடி மண்ணாளல் மரபுமில்லை.*
*ஆற்றுநெறி வகைப்படுத்தி அறிவித்தார் இளவரசர்.*
*ஏற்றிடுவேன், எழுதோலை இருக்கட்டும் அதற்கியைந்தே.*

## காட்சி : 26

**இடம்** : *அரண்மனைப் பூங்கா.*
**காலம்** : *முன்னிராப் பொழுது.*
**உறுப்பினர்** : *மாதேவி, அபராசிதன்.*
**சூழல்** : *பூங்காத் தனி மண்டபத்தில் எண்ணத்தில் ஆழ்ந்தவளாய் மாதேவி அமர்ந்திருக்க, அபராசிதன் அவளைத் தேடி அப்போது அங்கு வந்து சேர்கிறான்.*

**அபராசிதன் :**

*(கலி வெண்பா)*

*கண்ணே !*

*(அழைப்பைக் கேட்டு மாதேவி திரும்புகிறாள்.)*

**அபராசிதன் :**

*விழிகளில் கண்ணீர் ! விளைந்ததென்ன ?*

*(மாதேவி விடையளிக்காது அமைதி காக்கிறாள்.)*

**அபராசிதன் :**

*பெண்ணே, பெரும்பேறே, பேசாயோ ? என்தயக்கம் ?*
*அச்சம் முகக்குறிப்பில் ! ஆகா தழகிற்கே !*

**மாதேவி :**

*அச்சம் எனைப்பற்றும் அன்பர் உமைப்பற்றற்(கு)*
*ஆகாது போயிடுமோ ? ஐயம் உளத்தழுத்தும் !*
*வேகாமல் வெந்திடுவேன்; நோகாமல் நொந்திடுவேன்.*
*பக்கத் துணையாகப் பல்லவர்நீர் என்னணைப்பில்*
*ஒக்க இருந்திடலேல் ஒன்றா துயிருடம்பில் !*

*(அபராசிதன் அணைப்பில் மாதேவி மனம் இழக்கிறாள்.)*

**அபராசிதன் :**

*என்னுயிரே, உன்னிதழூ றின்சுவைக்கிவ் வையகத்தில்*
*என்னபொருள் சற்றேனும் ஈடாகும் ? சொல்லிடுக.*

**மாதேவி :**

*தேவர் அமுதம் ?*

**அபராசிதன் :**

*தெரியாப் பொருளதுவே.*

**மாதேவி :**

*நாவிற் கினிதேனோ ?*

**அபராசிதன் :**

நாடின் திகட்டிவிடும்!.
*எச்சில் கலந்தததது; இந்நாள் பழையதது!*

**மாதேவி :**

*நச்சு மதுவமையும்?*

**அபராசிதன் :**

மெச்சற் கிலையதுவும்!
*மீதுறத் தான்மயக்கம் மேவும் அருந்தெவர்க்கும்;*
*தீதில் இதழிரண்டோ தித்திப்ப சிந்தனைக்கும்!*
*உண்ண இனிப்பவவை! உன்னிதழ்கள் அத்துடனா?*
*எண்ண இனித்திடுவ; எங்கெங்கோ போக்கிடுவ!*

**மாதேவி :**

*கண்டேன் எதைநானே? கற்றுத் தெளிந்தவர்நீர்!*
*உண்டோர் இணையாயின் உண்மை உரைத்திடுக.*

**அபராசிதன் :**

*கற்றுத் தெளிந்தவனா? காலும் அறியான்யான்!*
*உற்றவோர் ஆசிரியை உன்னிடமே கற்றிடனும்!*
*ஈடுபொருள் கண்டிருந்தால் எப்போதே கூறிருப்பேன்;*
*ஈடெதும் யான்காணேன்; எல்லாமே நீயானாய்!*
*கட்டிவைத்த பெட்டகமாம் காதற் கணிபெண்கள்!*
*ஒட்டியுயிர் கொண்டிடினும் உண்மைநிலை கண்டார்யார்?*
*இல்லா இறையிங் கிருப்பதாய்க் கட்டுரைப்பார்;*
*சொல்லா லிசைத்திடுவார், சுவைபடச் சொல்லிடுவார்:*
*‘கண்டவர் விண்டதில்லை; விண்டவர் கண்டதில்லை!’*
*தொண்டுளத் தூய்மையளே, தொன்னெறி வாய்மையளே!*
*எச்சிலித மூறுமெட் பூக்க[1] ளிதழ்தடவும்!*
*மெச்சு தலைதாழும்! மென்னகை மின்னலிடும்!*
*ஓர விழிபார்க்கும்! சேரு முடன்நாணம்!*
*ஆர வணைத்தற் கணியமிங் கானவளே,*
*போகும் பொழுதின்னே; போனால் வருவதுவோ?*
*வேகுமுளம் காமம் விழைந்து.*

**மாதேவி :**

*மல்லையர்கோன் பெற்றெடுத்த மாவீர, இப்பொழுது*
*ஒல்லை விடிந்துவிடும்; ஊர்திரும்பப் போய்ப்படுங்கள்.*

*(அபராசிதன் அணைப்பினின்று வலிந்து விடுபட்டுத் தள்ளி மாதேவி நிற்கிறாள்.)*

**அபராசிதன் :**

*ஏனென்னை நீங்கி இருக்க முயன்றிடுவாய்?*
*வானில் ஒருநிலவாய் வாய்த்தவளே, வாட்டமென்ன?*
*நீங்கா இரவாக நீடிக்கக் கூடாதா?*
*தாங்கேன்; உனைப்பிரியேன்; தண்டமிழே நீவருக.*
*மெய்தனித்துச் சொல்லாகா, மின்னிடையே நீயணைக.*
*நாளைப் பிரிவு நலிவு தருமியல்பே;*
*வேளை வரும்விரைவில், வேந்துதுணை யாவாய்.*
*இளவரசாய் மட்டுமே யானிருப்பின் உன்னைக்*
*குளமகலா ஆம்பலாய்க் கூடி உடனுறைவேன்!*
*ஆட்சி அதிகாரம் அத்தனையும் என்பொறுப்பில்;*
*நீட்சி இயலாது, நேரில்நான் சென்றிடனும்.*
*இப்போதே திங்களொன் றிங்குக் கழிந்ததுவே!*
*தப்புவிளை முன்னர்த் தலைநகர்நான் சேர்ந்திடனும்!*
*உன்னையுடன் கொண்டேக உள்ளம் விழைந்திடினும்*
*குன்றும் செயலன்றோ? கூறு.*

**மாதேவி :**

*பெண்ணிலையேல் போரென்றார்! பேதை எதைச்சொல்வேன்?*
*மண்ணை மதிப்பவள்நான்; மாற்றாரை ஏற்பேனோ?*

**அபராசிதன்**

*வேண்டாத் துயரெதற்கு? வேறொருவர் தூங்கையிலும்*
*தீண்டார் கனவினிலும்; தேவை யிலையச்சம்.*

**மாதேவி :**

*அச்சம் எனையஞ்சும்; அன்ப, அறிந்திடுக.*
*மெச்சு தமிழச்சி மேனியினை மற்றொருவர்*
*எச்சிற் படுத்தற் கியைந்திடுமோ? இல்லையில்லை!*
*கச்சமை குன்றிடையர் காதலரைச் சேர்வதல்லால்*
*குன்றுசெயல் கொள்ளார் குவலயமே[1] கூடிடினும்!*
*ஐவர்க் கொருத்தி! அவளிங்குப் பத்தினியாம்!*
*கைவந்த தாரியர்க்கே! காண்பாரிங் கியாரே?*
*பராந்தகரில் லையப் பரந்தாமன் ஆக!*
*இரான்காண் உளத்தடத் தெண்ணின் இறப்புறுதி!*
*உள்ளத்தால் ஒன்றி உயிரோ டுயிர்கலந்தோம்;*
*கள்ளம் எனைச்சேரா! காதலரே காண்கநெறி.*

**அபராசிதன் :**

*என்னதவம் செய்தேனோ என்னுயிராய் நீயமைய?*
*தென்னரிலை, மேலும் திறல்சேரர் சேரட்டும்!*
*பெண்கேட் டெதிர்க்கட்டும்; பேராற்றல் காட்டட்டும்!*
*விண்ணோர்க் கவரை விருந்தாக்கி ஊட்டிடுவேன்!*
*எங்கட் படையோ டெமக்குறவோர் கூட்டிணையத்*
*திங்கள் இரண்டுள் திரண்டுகளம் சேர்ந்திடுவேன்!*
*காட்டிற் கவர்செல்லக் கட்டிலிணை நாமாவோம்!*
*நீட்டிப்பின் நீற்கும் நெருப்பு!*

**மாதேவி :**

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

*உரையிவை உண்மை தாமா?*
*உவந்திட உரைப்ப வாமா?*

**அபராசிதன் :**

*விரைவினில் அறிவாய், விக்கி*
*அண்ணலே விளக்கிச் சொல்வார்.*
*வரைவுடன் நடக்கும்; மானே,*
*வந்தணை, சுவைக்கும் தேனே!*
*கரையுடை காதல் வெள்ளம்*
*கடக்கலில்; மூழ்கல் இன்பம்!*

## காட்சி : 27

**இடம்** : விக்கியண்ணன் மாளிகை.

**காலம்** : முன்யாமம்.

**உறுப்பினர்** : விக்கியண்ணன், காவற்றலைவர் கடிய நெடுவேட்டுவன்.

**சூழல்** : மாளிகை முன் கூடத்தில் விக்கியண்ணன் இங்கும் அங்கும் நடந்தபடி அமைதியிழந்து இருக்க, கடிய நெடுவேட்டுவன் பக்கத்தில் அமைதியாக நிற்கிறான்.

**விக்கியண்ணன் :**

(கலி வெண்பா)

காவற் றலைவ, கடியநெடு வேட்டுவ!
ஆவல் அடங்கலிலை, ஆரேனும் போர்க்களத்துச்
செய்தியுடன் வந்துளரா? சென்றறிந்து வந்திடுக.

**கடிய நெடுவேட்டுவன் :**

எய்தின் நொடிப்பொழுதில் இங்கடையும் செய்தியெதும்!
தக்கபடி கட்டளைகள் தந்துள்ளேன் காவலர்க்கு.
மிக்க அறிவுடையர்! மின்னலெனச் சேர்த்திடுவர்!

**விக்கியண்ணன் :**

என்ன நடப்பவையே? எல்லாம் தலைகீழ்தாம்!
இன்னுமிரு திங்கட் கிருக்காது போரென்றார்;
இன்றோ படையோ டிடவையிலே பாண்டியர்!
நன்றாகா என்றிடினும் நாம்தனித்துப் போரிடனும்!
ஒல்லை துணையருடன் ஒன்றிடுவேன் என்றுசென்ற
பல்லவர் என்னானார்? பார்த்துவரச் சென்ற
அரையர் திரும்பலில்லை; ஆளுமில்லை! கண்முன்
திரையிட்ட தொப்பத் திகைத்திடுவேன்; தேரேன்.

**கடிய நெடுவேட்டுவன் :**

தலைவர் தடுமாற்றம் தக்கதில்லை; இப்போ
துலைவுறற்[1] கேதுமிங் குற்றதாய்ச் செய்தியில்லை.
ஈரிரண்டு நாட்கள் இடையிலுள நம்படைகள்
நேரெதிராய்ப் பாண்டியரைப் போரிலெதிர் கொள்ளற்கு!
நாளைக்குள் என்ன நடக்குமென யாரறிவார்?
வேளை வரும்போகும்! வீரம் தரும்புகழே.

**விக்கியண்ணன் :**

எல்லாம் சரிதாம், இருந்துமென் திட்டங்கள்
நல்லாறு செல்லா; நலிந்து மெலிந்தனவே!

பாண்டியர் தம்பி பராந்தகர் நம்பக்கம்
வேண்டி முயன்றும் விழைந்தபயன் கிட்டலில்லை.
சூழ்ச்சிக் கிணங்கவில்லை, சோழரத்தம் சேர்ந்திருந்தும்;
ஆட்சியடை ஆசை அணுவும் அவர்க்கில்லை!
பெண்ணாசை, மண்ணாசை பின்னுக்குத் தள்ளவில்லை!
அண்ணாவே எல்லாம்! அவர்படைக்குத் தான்தலைவன்!
பல்லவரோ மாதேவி பார்வைக் கடிபணிந்தார்;
சொல்லிப் படையோடு சூழ்வதாய்ச் சூளுரைத்தும்
வந்தாரில் இன்றும்; வரலாறு கண்டுவரச்
சென்ற அரையரும் செய்தி அனுப்பலில்லை!
பல்லவரும் கங்கரும் பக்கம் துணையிருந்தும்
வெல்லற் கரிய வியன்மதுரைப் பாண்டியரைப்
தன்னந் தனியராய்த் தாங்குவரோ நம்மவரும்?
மின்னல் இழையொப்ப மெல்லியதாய் ஓரெண்ணம்
நெஞ்சுள் நெருடும்; நிழலுருவம் பெற்றுவரும்;
அஞ்சலெனக் கூட்டும் அரண்!

(அப்போது ஒற்றன் ஒருவன் வந்து வணங்கிச் சொல்கிறான்.)

**ஒற்றன் :**

ஐய, தலைவ! அடியேன் வணக்கங்கள்.
வையைப் படைமுழுதும் வந்தெதிர் நிற்ப!
அணிவகுத் தஞ்சா வருந்திறல் வீரர்
அணியமாய் உள்ளர் அமர்வேட் டிடவையில்!
எந்தப் பொழுதும் எழும்போர் எனுநிலை!
இந்த நிலையங் கிருக்கும் பொழுதிடை
செங்கண்ணர் அங்கிருந்து சென்றுள்ளார் வேறெங்கோ!
இங்கிஃ திருக்க எதிரணி முன்னராம்
பாண்டியர் தம்பி பராந்தகர் சற்றுமுன்
தூண்டிற் கயிற்றுத் துடிப்பின் விரைவொடு
சென்றார் புரவியில்! செய்திகள் இவ்வளவே.

**விக்கியண்ணன் :**

ஒற்றரே, நன்றி! உரைத்தீர் மிகத்தெளிவாய்!.
இற்றே புறப்பட் டிடவை அடைந்தும்
கடமை தொடர்ந்திடுக; காலைப் பொழுதில்
உடனங் கிருப்பேன்; உரை.

(ஒற்றன் வணங்கி வெளியேற, விக்கியண்ணன் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்குகிறான்.)

**விக்கியண்ணன் :**

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

காண்டகு வழியைக் காணேன்;
　　கலங்குவேன், குழம்பிப் போனேன்.
பாண்டியர் தம்பி எங்கே
　　பாசறை விட்டுப் போனார்?
மூண்டெழும் கணத்தில் போரே!
　　முன்னிருந் தாற்றுங் கண்ணர்
யாண்டவண் நீங்கிச் சென்றார்?
　　எனக்கெதும் புரிய வில்லை.

**கடிய நெடுவேட்டுவன் :**

விடைகளைத் தேடி நாடி
　　வேதனைப் படுதல் வேண்டா.
திடுமென முன்னர்ச் சேர்ந்த
　　செய்தியே விடையாம், தேர்க.

**விக்கியண்ணன் :**

*விடுகதை எதற்கு? நீவிர்*
*விரைந்துடன் விளங்கச் சொல்க.*
*அடுகளம் நீங்கி அன்னார்*
*அகன்றதும் எங்கே? ஏனோ?*

**கடிய நெடுவேட்டுவன் :**

*நாழிகை இரண்டு முன்னர்*
*நமதரண் தோட்டத் துள்ளே*
*வேழமாம் இருவர் வீரர்*
*விரைந்துடன் மறைந்தார்; கண்ட*
*ஊழியர் வந்தார், சொன்னார்;*
*ஒருவர்செங் கண்ணர் ஒப்பார்.*
*சூழிருள்; அதனால் அன்னார்*
*யாரெனச் சொல்லற் கில்லார்.*

**விக்கியண்ணன் :**

*செங்கணர் ஒருவர்; மற்றுச்*
*சேர்ந்துடன் வந்தார் யாரே?*

**கடிய நெடுவேட்டுவன் :**

*இங்கவர் பராந்த கர்தான்!*

**விக்கியண்ணன் :**

*இருக்கும், இருக்கும்; ஆனால்,*
*அங்கமர் தொடங்கற் கெல்லாம்*
*அணியமாய் அணியாய் நிற்க,*
*இங்கிவர்க் கென்ன வேலை?*
*இருவர்க்குள் இயைபும் என்ன?*

**கடிய நெடுவேட்டுவன் :**

*இன்னமுந் தோட்டத் துள்ளே*
*இருவரும் இருப்பர்; உண்மை*
*உன்னிடின், ஒன்றாய்க் கூடல்*
*ஒருவரைச் சந்தித் தற்கே!*

**விக்கியண்ணன் :**

*என்னது சொல்லு கின்றீர்?*
*எண்ணுவ விரைந்து சொல்க.*

**கடிய நெடுவேட்டுவன் :**

*மன்மகள் தன்னைப் பார்க்க*
*வந்தவர் இருத்தல் கூடும்!*

**விக்கியண்ணன் :**

*படையெடு பராந்த கர்தான்*
*பார்ப்பதேன் தேவி யாரை?*
*படையொடு நிற்கா திங்குப்*
*படர்ந்ததேன் செங்கண் ணர்தான்?*
*விடையெதும் தேடிக் காணேன்;*
*வேட்டுவ, விடுத்தல் ஆமோ?*
*தடைவிடை நோக்கா தெண்ணம்*
*தட்டுவ சொல்க, காண்பம்.*

**கடிய நெடுவேட்டுவன் :**

படைக்கெலாம் தலைமை பூண்டார்
பழிபயன் கடனை நீங்கி
நடக்கிறார் என்றால், நாடின்
நம்மரு தேவிக் காக!
இடக்கராய்[2] மன்னர் முன்னர்
இயங்குவார், தேவி கண்ணால்
விடுத்திடு குறிப்பு மீறார்;
விரைந்தவண் முடிப்பார் ஓடி!

*(விக்கியண்ணன் அமைதியாக அங்குச் சில வினாடிகள் ஆய்ந்தபடி நின்றிருக்கிறான்.)*

**விக்கியண்ணன் :**

தேவியார் தன்னைப் பார்த்துத்
தெளிந்துநான் விரைந்து மீள்வேன்.
நீவிரிங் கிருந்து மேலும்
நிகழ்வன குறித்து வையும்.
ஏவுக அரையர் மீளின்;
எனையுடன் பார்த்தல் வேண்டும்.
காவிரி நாட்டின் ஆட்சி
காஞ்சியோ டிணைந்த தாச்சு!

*(விக்கியண்ணன் விரைந்து வெளியேறுகிறான்.)*

## காட்சி : 28

**இடம்** : அரண்மனைப் பூங்கா.
**காலம்** : யாமம்.
**உறுப்பினர் :** விக்கியண்ணன், கடம்ப மாதேவி.
**சூழல்** : அரண்மனைப் பூங்காவில் விக்கியண்ணன் அங்கும் இங்கும் ஆய்ந்து நோக்கியபடி மெல்ல நடந்து செல்கிறான்.

**விக்கியண்ணன் :** *(தனக்குள்)*

(நேரிசை ஆசிரியப்பா)

உரனுடை சோழர் அரண்மனைக் காவில்
திரனுடன் நுழைந்துளர் முரணுடை யாளர்!
எங்குச் சென்றனர்? இங்கவர் தேடிக்
கால்கள் வலிப்ப; கண்கள் சலிப்ப!
வேல்கள் தாங்கி வீரர் சுற்றிக்
காவல் இருப்பர்; காணேன் அவரை!
அங்கே! அங்கே! அப்புதர் அசையும்!
மங்கல் ஒளியில் மாந்தன் உருவம்!
ஒருரு வஃதே; ஒளிந்துட் புகுந்த

*ஈருரு வல்லோ? இனியென் செயலாம்.*
*மறைந்தனன் அதற்குள்; விரைந்து*
*சிறையிடக் கூடுமேல் சிறக்கும் செயலே!*

*(விக்கியண்ணன் அங்கு விரைந்து நடக்கிறான். இடையே திடீரென்று யாரோ மோதத் திகைத்து நிற்கிறான். மோதியவர் ஒரு பெண்ணென்பதை அவனால் உணர முடிகிறது.)*

**விக்கியண்ணன் :**

*யாரவர்?*

**கடம்ப மாதேவி :**

*யானே!*

**விக்கியண்ணன் :**

*இளவரசி யாரா?*
*ஓரம் நகர்க; ஒன்னார் அங்கே*
*தப்பிச் செல்வர்; தடுத்தல் வேண்டும்.*

*(விக்கியண்ணன் குறுவாளைக் கையில் கொள்ள, அவன் கையை வளைக்கை பிடிக்கிறது.)*

**கடம்ப மாதேவி :**

*அப்படி யாரும் இப்பொழில் தன்னில்*
*இல்லை ஐயா; எதற்கிவண் வந்தீர்?*

*(விக்கியண்ணன் மார்பில் கடம்ப மாதேவி சாய்கிறாள்.)*

**விக்கியண்ணன் :**

*இல்லை, இல்லை; எனைவிட் டகல்க.*
*மாற்றான் அங்கே மதிலினைத் தாண்டுமுன்*
*கூற்றாய் அவனுயிர் கொள்வேன்; நகர்க.*

*(கடம்ப மாதேவி விக்கியண்ணனை இறுகக் கட்டித் தழுவிக் கொள்கிறாள்.)*

**கடம்ப மாதேவி :**

*வேண்டா வீரரே; விடுக போக!*
*தீண்டார் இலையவர்; சேர்ந்தார் எனையே.*

*(அந்த உருவம் அப்போது மதிலைத் தாண்டி மறைகிறது.)*

**விக்கியண்ணன் :**

*தேவி, உம்செயல் திகைப்பைத் சேர்த்திடும்!*
*தாவி மறைந்து தப்பினன் எதிரி.*

**கடம்ப மாதேவி :**

*எதிரி இல்லை, என்றுணை ஆளே.*

*(கடம்ப மாதேவி அவனை நீங்கி அப்பால் நகர்கிறார்.)*

**விக்கியண்ணன் :**

*புதிரும் போக்கு! பொறுப்பில் செயலே!*
*தாண்டி மதிலைத் தாவி மறைவரை*
*தீண்டி அணைத்துத் திரையாய் மறைத்தீர்!*
*அகன்றவன் சென்றதும் அகற்றினிர் அணைப்பை!*
*அகநகு செய்கை! மிகமிக நன்று!*
*"தீண்டார் இல்லை; சேர்ந்தவர் எனையே!"*
*வேண்டான் இவனென வெளிப்பட உரைத்தீர்!*

**கடம்ப மாதேவி :**

*சீச்சீ! இஃதென் சிறப்பில் பேச்சு?*
*வீச்சரி வாளின் வினையும் பேச்சில்!*

**விக்கியண்ணன் :**

*ஒருத்திக் கொருவன் உயிரே நீரென*
*வருத்தம் போக்கி வாழ்நோக் களித்தீர்!*
*இன்றோ வேறோர் இளவற் காக*
*ஒன்றா தொழுகி உதறுவீர் என்னை!*

**கடம்ப மாதேவி :**

*தெரியா தெதையும் தெறித்தல் ஆகா!*
*உரியா ளென்று மும்மக்கே! உணர்க.*

**விக்கியண்ணன் :**

*நம்பேன், நம்பேன்; நாடகம்! நம்பேன்.*
*கொம்போ கனிக்குக் கொள்ளும் உரிமை?*
*பாண்டிய ரிளவல் பராந்தக ரிருக்க*
*ஆண்டி எதற்கிவன்? ஆமாம்; சரிதான்!*
*குற்றம் இல்லை கொற்றவர் மகட்கு!*
*பற்றினைப் பற்றின் பற்றுவ மற்றவை!*

**கடம்ப மாதேவி :**

*நஞ்சும் பேச்சே, நல்லதில்!*
*வஞ்சியேன், என்றுமென் வாழ்வும் நீரே!*

**விக்கியண்ணன் :**

*(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

*வஞ்சித்த தென்னை இல்லை;*
*வாழ்த்திடு சொந்த நாட்டை!*
*அஞ்சிடு போர்க்க ளத்தில்*
*அணியம்நம் வீரர் ஆங்கு!*
*கொஞ்சியே பகைவன் மாட்டுக்*
*குலவுவீர் காவில் ஈங்கு!*
*வெஞ்சிறைப் படுத்த வந்தேன்;*
*விலக்கினீர் இடையில் புக்கு!*

**கடம்ப மாதேவி :**

*சினமெனும் சேர்ந்தார் கொல்லி*
*சீண்டிடும் உம்மைக் கிள்ளி!*
*இனவுணர் வில்லாள் யானோ?*
*இழிசெயற் குரியள் தானோ?*
*கனவிலும் நாட்டை அன்றிக்*
*கண்டிடேன் உமையும் சேர்த்தே!*
*மனமொரு குரங்கு, சொல்வார்;*
*மலையெனும் நிலையள்; மாறாள்.*

*பெண்ணிலேல் போரே என்று*
*பேசிய ஓலை தன்னை*
*அண்ணல்நீர் அனுப்பி வைத்தீர்;*
*அறியாளென் றெண்ணல் ஆகா.*
*கண்ணிலை; உயிராய், ஊனாய்க்*
*காணுந்தாய் நாட்டுப் பற்றை*
*எண்ணுதற் காற்றல் இல்லா*
*ஏதிலர் உணரல் இல்லை!*

**விக்கியண்ணன் :**

(குறள் வெண்பா)

*ஆய்ந்தறி ஒட்பம் அமைந்திலன் என்றோநீர்*
*காய்ந்தனிர்! நானோ கழிவு?*

**கடம்ப மாதேவி :**

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

*கழிவெனக் கூறேன்; ஆனால்,*
*கருத்திலார் காணற் கென்பேன்.*
*விழுமிய சோழர் மாட்சி*
*மீண்டிடத் தென்னர் ஆட்சி*
*ஒழியனும் என்று ழைப்பீர்,*
*ஒருப்படேன்; தமிழ கத்தைக்*
*கழிபெரும் இடரின் காக்கக்*
*கருதுவேன்; கண்டீர் இல்லை.*

(கலி வெண்பா)

*கற்றோன்றி மண்தோன்றாக் காலத்து முன்னான*
*நற்றமிழைப் பண்பாட்டை நாட்டை நமதினத்தை*
*வேண்டார் பிடிவிடுத்து மீட்டிடவே நான்முயல்வேன்.*
*ஈண்டார் பகைவரென எண்ணிநீர் பார்த்ததுண்டா?*
*பாண்டியர் நம்பகையா? பண்பாட்டிற் கூறவரா?*
*பாண்டிய நாடன்றோ பண்டைத் தமிழுடைத்து!*
*ஆண்டாண்டாய்ச் சங்கம் அமைத்தவரார்? அன்னவரே!*
*காண்டீர் இலையவைநீர்; காண்பீர் பகையவராய்!*
*நல்ல தமிழ்மொழியை நம்மினத்தைப் பண்பாட்டைப்*
*பல்லவரே உள்ளே பகைமறைத்துத் தீய்த்திடுவர்.*
*யாரிந்த பல்லவர்? எண்ணிமுன மாய்ந்ததுண்டா?*
*சேரர் குலத்தவரா? செந்தமிழர் பின்னவரா?*
*தென்குமரி வேங்கடத் தீந்தமிழ் நாட்டகத்து*
*மன்னர் மரபினரா? மண்ணிற் குரியவரா?*
*எங்கிருந்தோ வந்தரிய இவ்வரசை ஏற்றிருந்தும்*
*தங்கிடத்திற் கேற்பத் தகுநிலையைத் தாங்கினரா?*
*தம்மைத் தமிழராய்த் தாம்மாற்றிக் கொண்டனரா?*
*மும்மைத் தமிழ்மொழியை முன்னேற்றச் செய்தனரா?*
*கண்டார் வடமொழிக்குக் கல்லூரி ஈரிடத்தில்!*
*உண்டா தமிழ்மொழிக் கொன்றேனும் ஓரிடத்தும்?*
*வந்தார் வடவரெல்லாம்; வாழும் வளம்பெற்றார்!*
*நொந்தார் திருநாட்டார் நூலோர்தம் பொய்புரட்டால்!*
*சொந்தம் உடையார் சுரண்டிடப் பட்டிடுவார்;*
*வந்தார் கொழுப்பார், வளம்பெருக வாழ்ந்திடுவார்!*
*இந்தநிலை யாரால்? இனப்பகைவ ராலன்றோ?*
*வெந்துளம் நொந்திடுவேன்; வெஞ்சினத்தில் துஞ்சலிலேன்!*
*முச்சங்கம் கொண்டுதமிழ் முன்னேற இந்நாளும்*
*மெச்சப் பணியாற்றும் மேன்மையர் பாண்டியரே!*
*நச்சி வடமொழிக்கு நாளந்தா போலிங்கும்*
*கச்சியில் பாகூரில் கல்லூரி கண்டரிவர்!*
*சொல்லிடக் கூடும் சுவைதமிழ்நூற் கள்சில*
*பல்லவர் முன்பு படைத்திடப் பட்டதாக!*
*பாரதவெண் பாவைப் பெருந்தேவர் பாடிட்டார்;*
*யாரதைத் தொட்டார்? இனமானங் காத்திட்டார்!*
*நந்திக் கலம்பகம் நற்பாட்டுக் கூட்டேயாம்!*

*சொந்தம் உடையானைச் சூழ்ச்சியால் கொல்லற்கு*
*வந்தநூ லென்ற வழிக்கதையும் உண்டன்றோ?*
*கந்தல் உடையாமோ? கற்சில் மலையாமோ?*
*புண்ணேர் தெரியின்மேற் பூச்சிடலாம், ஆற்றிடலாம்;*
*உண்ணோய் அனையரிவர்; உள்ளிருந்தே கொன்றிடுவர்!*
*மாற்றார் அவரெனற்கு மற்றுமொன்றைக் காட்டிடுவேன்.*
*வேற்றார் அவர்துணைக்கு வெம்போரில் யார்வந்தார்?*
*கங்கர் மகதர் இராட்டிரக் கூடரென்று*
*இங்கவர்க் காளாய் எழுந்தோர் வடவரன்றோ?*
*மூவேந்தர் ஆண்டிருந்த மூத்த தமிழினத்தைப்*
*போவோர் வருவரெலாம் புண்ணாக்க நாம்துணையா?*
*தென்னர் துணையோடு தேவையிலாப் புற்பூண்டை*
*மண்ணின் றகற்ற வழிவகைகள் எண்ணுவள்நான்.*
*ஆயிரம் சிக்கல்கள் ஆயினும் நம்மிடை*
*போயொரு வேற்றான் பொருபடை நாடின்*
*பெரும்பயன் இங்குப் பெறுவன் அவனே!*
*உரிமை இழந்திங் குயர்வா? அருமையே!*
*நாளை கிடைத்திடு நற்பலா வேண்டாவிவ்*
*வேளை கிடைகளா மேலென வேட்பீர்.*
*நிலைத்த தமிழாட்சி நீடித்தற் கேற்ற*
*நலத்தை நினைத்துநான் நாடி உழன்றிடுவேன்!*
*குற்றமிஃ தாமா? குறையா? இரண்டகமா?*
*புற்றரவு பல்லவர்! போற்றிப்பால் ஊற்றிடினும்*
*நஞ்சன்றி நல்லபொருள் நாமடையக் கூடுவதோ?*
*நெஞ்சறியும் நீள நினைந்திட்டால்! நீரறிவீர்.*
*வஞ்சித்தாள் வஞ்சியென வஞ்சிட்ட வஞ்சியரே,*
*கஞ்சிக் கலயமில்லை கண்டவர்வந் துண்டுசெல்ல!*
*நற்பண்பிற் கூற்றாவாள் நல்ல தமிழச்சி!*
*கற்பிற் கணியென்றும் கண்கண்ட தெய்வமென்றும்*
*சேரர் சிலையமைத்த சேல்விழியார் எம்மூரார்!*
*தீரம் இழப்பேனா? தேடுவனோ மற்றவரை?*
*வாருமென் னுள்ளறைக்கு; வந்தணையின் உள்ளையம்*
*தீரும் அனைத்தும் தெரிந்து.*

*(கடம்ப மாதேவி முன் நடக்க, விக்கியண்ணன் பின் தொடர்கிறான். அங்குக் காவல் மிக்கு இருப்பதைக் காண விக்கியண்ணன் திகைக்கிறான்.)*

**விக்கியண்ணன் :**

*(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

*சிறையினைக் காப்ப தொக்கச்*
*சிறந்ததேன் காவல் எங்கும்?*

**கடம்ப மாதேவி :**

*அறையினுள் நுழைக; யாவும்*
*அடைந்திடும் உம்மைத் தாமே.*

*(காவல் வீரர் கதவினைத் திறந்து நிற்க, விக்கியண்ணன் உள்ளே நுழைகிறான். அடுத்த வினாடி, வீரர் பலர் உருவிய வாளோடும் வேலோடும் அவனைச் சுற்றிச் சூழ்கின்றனர். விக்கியண்ணன் செயலற்றுத் திகைத்துப் பார்க்கச் செங்கண்ணர் சற்றுத் தள்ளி நிற்கிறார்.)*

**கடம்ப மாதேவி :**

*சிறையறை இஃது மக்கே!*
*தேவையே சிறப்புக் காவல்.*

அறையுறை என்றன் பார்வை
  அகன்றிடா திருத்தல் ஆவல்.

(விக்கியண்ணன் செயல் மறந்து நிற்கக் கடம்ப மாதேவி கலகலவென்று சிரிக்கிறாள்.)

## காட்சி : 29

**இடம்** : இளவரசி கடம்ப மாதேவியின் தனியறை.

**காலம்** : விடியற் பொழுது.

**உறுப்பினர்** : கடம்ப மாதேவி, விக்கியண்ணன், சேந்தன் கீரன், கடிய நெடுவேட்டுவன், பல்லவரையன்,பணிப்பெண்.

**சூழல்** : கடம்ப மாதேவி தன் தனி அறையில் கட்டிலில் துயின்றிருக்க, அவளை அணைத்தபடி அங்குப் படுத்திருந்த விக்கியண்ணன் கண் விழித்துக் கொள்கிறான்.

**விக்கியண்ணன்** :(தனக்குள்)

(கலி வெண்பா)

யான்பெற்ற பேற்றை எவர்பெற்றார் இவ்வுலகில்?
தான்தேடி வாயதனில் தேன்வந் தினித்ததென
வாயூ றுயிர்சாற்றை வந்தணைத் தூட்டியதென்!
தோயாது தோய்ந்துடலில் தோற்றுவித்த ஏற்றமுமென்!
ஆழிசுழித் தார்க்கும் அலைத்திரளின் நீட்சியனை
வாழி இவள்காமம்! வானின் மிகையாகும்!
முற்றா இளந்தெங்கால் மோதி அளியுறவால்
வற்றா வளர்காதல் வாய்மைத் திறனுணர்ந்தேன்.
மாதேதோ வஞ்சம் மனத்தகத்துக் கொண்டளென
ஏதேதோ எண்ணி இடருற் றிழித்துரைத்தேன்.
எல்லாம் தவறென்றாள்; எண்ணற் கிலானென்றாள்;
சொல்லால் மொழிந்தவற்றைச் சொல்லி யுளமகிழ்வேன்!
“வஞ்சனை நெஞ்சிடத்து வாணுனியுங் கொண்டதில்லை;
அஞ்சனந்தோய் கண்கள் அருளன்றிக் கண்டதில்லை!
வேளைக் கொருத்தியெனல் வேளிர் உமைப்போன்ற
காளையர்க் கொத்துவரும்; கன்னியர்க்கஃ தாகா!
அறந்தூங் ககத்தினளை அண்டாதீ எண்ணம்!
புறம்வே றகம்வேறு! புல்லுவனோ உம்மையன்றி?
மூவெட் டகவை! முதன்முதலாய் என்னகத்துத்
தாவெது மில்லாத் தனித்தமர்ந்த ஆண்மகன்நீர்!
யாவும் எனக்கான என்னவரை ஏய்த்தல்யான்
தாவி மலையிழிந்து சாவற் கிணையாகும்!
வெட்கம் இலளென்று வீரர்நீர் எண்ணிடினும்
உட்குதல் இல்லை; உடைநெகிழக் கூடிடுவேன்.
கட்டில் விளையாட்டில் கைதேர்ந்தீர்; என்றாலும்

விட்டில் எனவென்னை விட்டகலீர்; கட்டிடுவேன்.
எஞ்சலில் அன்பகத் தீடில் இணையுறவு
நெஞ்சிற் நிலைத்திடனும் நேரில் இவட்குமென்று!
இன்றிரவு மட்டுமன் றிவ்வுயிர் உள்ளளவும்
ஒன்றி மகிழ்ந்திடனும் ஓயா துறைந்திடனும்.
கள்ள மிலைபேச்சில்; காதலரே, கண்டிடுக.
உள்ளமுன் கொண்டீர்; உடலை உடன்கொள்வீர்!
எண்ணெய்நீர் இல்லை, எரிதழலில் நீர்த்துளியாய்ப்
பெண்ணில்நீர் ஆழ்ந்திடுக; பேரின்பம் ஈருயிர்க்கே!"
பேச்சுப்பின் உண்டா? பிறந்தது மஞ்சத்தில்
மூச்சு முழக்கன்றோ! முட்டு முனகலன்றோ!
தேக்கம் சிதைந்துடைய சீறிச்செல் நீத்தமெனச்
சாய்க்கும் இவளாசை சால்பாம்நல் நாணத்தை!
ஆடையெலாம் முற்றகல ஆசையனல் விட்டெரிய
வாடையிடை போகலின்றி வஞ்சியிவள் கொஞ்சியதை,
ஒப்ப உரைத்தற் குயர்தமிழில் சொல்லிலையேல்
அப்பப்பா! சொல்ல அறிந்தமொழி வேறுண்டோ?
கூடி மகிழ்ந்ததன்பின் கொண்டவின்பம் இஃதென்று
தேடி யுரைக்கும் தெளிந்தறிவு பெற்றவர்யார்?
யாண்டும் அகத்துணர்வாம் இன்பமிஃ தானதனால்
ஈண்டகம் என்றார்; இலக்கணத்தைக் கற்பித்தார்!
தூங்கும் எழிற்கோலம் தொல்லைப் படுத்துமின்னும்.
வாங்கி விடுமூச்சால் தூங்கு முலையிரண்டும்
தீங்கு விளைவிப்ப; தேவை பெருக்கிடுவ!
ஏங்கும் உளமேலும், என்?

*(விக்கியண்ணன் கடம்ப மாதேவியின் அழகிய தோளைத் தொட்டு அசைத்து எழுப்புகிறான்.)*

**விக்கியண்ணன் :**

(நிலைமண்டில ஆசிரியப்பா)

தேவி! தேவி! திறக்க கண்களை.
கூவிடும் குயில்கள்; கூப்பிடும் புட்கள்!

**கடம்ப மாதேவி:**

அதற்குள் ளாகவா? அடுக்கா தன்பரே!
பதற்றம் எதற்கு? படுங்கள் பக்கம்!

*(விக்கியண்ணனைப் பற்றி இழுத்துப் பக்கத்தில் படுக்க வைத்துப் பின்னிப் பிணைந்து கொள்கிறாள். அப்பொழுது அறைக்கதவு தட்டப்படும் ஒலி எழுகிறது.)*

**கடம்ப மாதேவி :**

என்ன? என்ன?

**பணிப்பெண் :**

இங்கே நம்படை
முன்னவர் வந்துளர்; மன்னர் ஆணையாம்.

*(கடம்ப மாதேவி விரைந்து எழுந்து கொள்கிறாள்.)*

**கடம்ப மாதேவி :**

சரி,சரி! அவரை இருக்கச் சாற்றிடு;
வருவேன் விரைந்து.

*(விக்கியண்ணன் அணைப்பினின்று விடுபட்டுக் கடம்ப மாதேவி விரைந்து எழுந்தமர்கிறார்.)*

**கடம்ப மாதேவி :**

வழிவிட் டெழுங்கள்.
கடன்களை முடித்துக் காண்போம் அவரை.
உடனீர் ஆடின் உவகை கூடுமே!

(இருவரும் விரைந்து குளித்து முடித்து அணியம் ஆகின்றனர். கடம்ப மாதேவி சென்று அறைக்கதவைத் திறக்கிறார். பணிப் பெண்ணோடு கடிய நெடுவேட்டுவன், பல்லவரையன், சேந்தன் கீரன் வெளியே நிற்கின்றனர். கடம்ப மாதேவியைக் கண்டதும் குனிந்து தலை தாழ்த்தி வணங்குகின்றனர்.)

**படைத்தலைவர் :**

(நேரிசை ஆசிரியப்பா)

வணக்கம்; வணக்கம்; வாழ்க தேவியர்!

**கடம்ப மாதேவி :**

வணக்கம் தலைவரே! வருக அறைக்குள்.

(படைத்தலைவர் மூவரும் பணிவுடன் நுழைகின்றனர். அங்கே அறை நடுவண் இருக்கையிலே அமர்ந்திருந்த விக்கியண்ணன், அவரைப் பார்த்து மெல்லச் சிரிக்கிறான்.)

**விக்கியண்ணன் :**

அடுபோர்க் கணியமாய் இடவையில் நம்போர்
படைஞர் இருக்கப் பஞ்சணை தஞ்சமாய்த்
தலைவர் இருக்கும் தகைமை கண்டோ
உலைவீர் நீவிர்? உளத்துள் சிரிப்பீர்?

**பல்லவரையன் :**

இல்லை, தலைவ; எல்லாம் அறிவோம்.
அரசிளங் குமரியார் உரனுடை காவலில்
அறைக்குள் ளாகச் சிறையுள் உறைவீர்!

**விக்கியண்ணன் :**

யாவும் அறிந்தே தேவியைப் பார்க்க
மேவினீர் போலும்? தாவிலை; தொடர்க.

**பல்லவரையன் :**

நடந்தவை உரைத்தினி நடப்பவை குறித்துச்
சூழ்ந்திட உங்களைச் சூழ்ந்தனம் ஒன்றாய்.

**விக்கியண்ணன் :**

சிறையுறை என்றன் அறிவுரைக் கென்ன
சிறப்பிரும்? அறிவீர்; தெரியும் எனக்கும்!.

**கடிய நெடுவேட்டுவன் :**

தலைவரிப் பொழுது தளையுள் இல்லை.
நிலைமை தலைகீழ்! நிற்குமும் ஆணை.

(விக்கியண்ணனும் கடம்ப மாதேவியும் வியந்து பார்க்கின்றனர்.)

**விக்கியண்ணன் :**

அரையரே, வேட்டுவர் அறைந்தது சரியா?

**பல்லவரையன் :**

அறைந்தது சரியே; அறைசிறை அகன்றது!
அரண்மனைக் காவல் திறன்மிகு வேட்டுவர்
கட்டுப் பாட்டுள் முட்டின் றுள்ளது.
விடியற் பொழுதே அடைந்தேன் தஞ்சை.

*அரசிளங் குமரியார் அரண்மனை நாடி*
*இரவே சென்றவர் திரும்பலில் நீங்கள்!*
*தெரிந்து செய்தி செம்பியர் உரைப்படி*
*இருந்த காவலைத் திருந்துற அமைத்தோம்.*
*போர்க்கள நிகழ்வை நேர்பட மொழிய*
*ஒற்றர் தலைவரும் உற்றனர் இங்கே.*

**சேந்தன் கீரன் :**

*அதிர்ச்சி அளிப்ப அமர்முனை நிகழ்வுகள்!*
*எதற்கு நம்படை இரவோ டிரவாய்*
*இடவை நீங்கி இடம்பெயர்ந் திக்கரை*
*படைவீ டமைத்துப் பதுங்கல் வேண்டும்?*
*ஆதித்தர்க் கப்படி ஆணை வந்ததாம்!*
*சேதி சரியா? தெரிதற் கில்லை.*
*தென்னர் இளவல் செங்கணர் சூழ*
*என்னிவண் தஞ்சை எழுந்தனர்? மீண்டனர்?*
*இரண்டிற் குமிடையில் இருக்குமோ தொடர்பு?*
*மிரண்டுளோம்; தலைவ, வேண்டுமும் மாணை.*

*(கடம்ப மாதேவி சினத்துடன் குறுக்கிட்டுப் பேசுகிறார்.)*

**கடம்ப மாதேவி :**

*இடவை இருந்து படையைப் பின்னுறப்*
*பணித்தவள் யானே; பயனனி உண்டே.*
*பராந்தகர் செங்கணர் பார்க்கவே என்னை*
*இராவிங் கியைந்தனர்; யாரும் அறிந்ததே!*

**சேந்தன் கீரன் :**

*முற்றுநம் திட்டம் முரணாய் முடிந்தது;*
*இரவோ டிரவாய் உரனுடை நம்படை*
*இடவை நீங்கி நடந்த பொழுதே,*
*நடப்பவை எவையும் நல்லதற் கில்லை;*
*நடப்பதை நேரில் நவில்வோம் என்ற*
*ஆவலில் வந்தேன்; ஆவ தறைக.*

**விக்கியண்ணன் :**

*பல்ல வரையரே! சொல்க சென்ற.*

**பல்லவரையன் :**

*பல்லவர் கங்கர் படைபுறப் பட்டதும்*
*பருந்தேல் வழியில் பயணப் பட்டு*
*விரைந்தேன் திரும்பி விழைந்த வாறே.*
*ஈரேழ் நாட்கள் எல்லையுள் அவர்படை*
*நேராய்ப் போர்நிகழ் நிலைக்கண் சேர்ந்திடும்.*

**விக்கியண்ணன் :**

*சேந்தரே! நம்படை சேர்ந்ததும் எவ்விடம்?*

**சேந்தன் கீரன் :**

*தேர்ந்திடின் காவிரித் தென்கரை சார்ந்திரு*
*மண்ணி யாற்றை மடுத்து இருக்கலாம்.*
*ஒற்றிய ஓரின், உண்ணிலை தேரின்,*
*வெற்றி மதிற்சுவர் வீற்றிரு பூசையாம்!*

**விக்கியண்ணன் :**

*உண்மை; இனியெடு ஒவ்வோர் அடியும்*
*எண்ணிப் பன்முறை இருந்திடல் நன்று.*
*காவற் றலைவ! காவல் எப்படி?*

**கடிய நெடுவேட்டுவன் :**

*கோட்டை முற்றும் கோட்டமில் காவலில்;*
*கள்வரும் வெளிவரக் கொள்வர் அச்சம்!*
*இம்மனை சிறையென இருக்கும்;*
*எம்மான் குலக்கொடி எழாரிங் கிருந்தே!*

*(கடம்ப மாதேவி காவற்றலைவன் பேச்சைக் கேட்டுச் சினம் உறுகிறார்.)*

**கடம்ப மாதேவி :**

*(குறள் வெண்பா)*

*கழறிய நன்றிலை, காவற் றலைவ!*
*விழுமுந் தலைவெட்டுப் பட்டு.*

**கடிய நெடுவேட்டுவன் :**

*(நேரிசை ஆசிரியப்பா)*

*பொறுத்திடல் வேண்டும்; புரியேன் பிழையும்.*
*அறத்தொடு நிற்கும் அடிமை அடியேன்!*
*இளவரசி இட்டவை இல்லைமற் றெண்ணுவ*
*உளப்பட யாவும் உற்றிட உழைப்பவன்!*

**பல்லவரையன் :**

*செம்பியர் குலத்துச் செல்வி நீங்கள்;*
*இம்பர் எங்கட் கினியர்; இகலிலர்!*
*உங்கட் கெதிர்ப்பா? ஒவ்வா!.*
*இங்கெம் உயிர்கள் இருப்பதும் உமக்கே!*

*(விக்கியண்ணன் குறுக்கிட்டுப் பேசுகிறான்.)*

**விக்கியண்ணன் :**

*விடுத்த பணிபுரி வீரர் இவரே!*
*கடுத்தல் வேண்டா; கடன்தெரி உண்மையர்!*
*காவற் றலைவ! கவனம் தேவை.*
*கட்டுக் காவல் மட்டின் றினிமேல்*
*அரண்மனை எங்கும் நிரல்பட வேண்டும்.*
*மன்னர் மகளார் எண்ணம் போல*
*எங்கும் செலலாம்; எவரையும் பார்க்கலாம்!*
*எனினும் காவல் இனிமிக அமைத்திடும்.*
*சேந்தன் கீர! வேந்தர்க் குதவு*
*நாங்கூர் வேளிர் நாற்படை எங்கே?*

**சேந்தன் கீரன் :**

*பந்தணை நல்லூர்ப் பக்கம் உள்ளதாய்*
*வந்தது செய்தி.*

*(விக்கியண்ணன் பல வினாடிகள் அங்கு எண்ணியபடி அமைதியாக இருக்கிறான்.)*

**விக்கியண்ணன் :**

*வழியிலை வேறும்!*
*ஒற்றறி தலைவ! ஓலை தருவேன்;*
*கொற்றவர் மகற்குக் கொண்டுசேர்த் திடுக.*

*செங்கணர்க் கிவ்விடச் செய்திகள் சொல்க.*
*கங்கர் பல்லவர் காவிரி கடந்து*
*செழியர் படையெதிர் எழுநிலை வரைக்கும்*
*இருப்பிடம் அகலா திருக்க நம்படை.*
*திருப்புறம் பயமே சிறந்த போரிடம்!*
*விருப்புரு மேடு; விரிந்த பரப்பு!*
*பல்லவர், கங்கர் பாண்டியர் தம்மை*
*மேற்பால் அணுகக் கீழ்ப்பால் நாங்கூர்*
*நாற்படை தாக்க, நாமோ தெற்கில்!*
*வடக்கில் கொள்ளிடம்; வழியிலை தப்ப!*
*இடக்கென இருங்குடி இடம்பெயர் தற்கு*
*வேண்டிய செய்க; வேண்டா சுணக்கம்.*
*மூண்டிடு இப்போர் முடிவாய் அமையும்!*

**கடம்ப மாதேவி :**

*வேளிரே! என்னொரு வேண்டுகோள்!*
*கேளுமோ உம்செவி? கெஞ்சுவன்; கேளுமே!*

*(கடம்ப மாதேவியின் மெலிந்த குரல் கேட்டு அங்குத் திடுக்கிட்டு அனைவரும் அவளைத் திரும்பிப் பார்க்கின்றனர்.)*

**விக்கியண்ணன் :**

*(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

*வேண்டுதல் எதற்காம்? தேவி*
*விழைவன விளைத்தற் குள்ளோம்.*
*ஈண்டுரை சொற்கள் ஆணை!*
*இயைப்பதெம் கடனாம்; சொல்க.*

**கடம்ப மாதேவி :**

*பாண்டிய ரோடு நம்மோர்*
*படையெதிர் மோதல் ஆகா!*
*மாண்டிடல் உறுதி மாறாய்*
*மடுத்துநம் படைஞர் மோதில்!*

**விக்கியண்ணன் :**

*கோமகட் கழகா? கேட்கக்*
*கூசிடும்; குழப்பம் மிஞ்சும்!*

**கடம்ப மாதேவி :**

*யாமவர்க் குறுதி முன்னம்*
*இசைந்தனம் இவ்வா றாக.*
*ஆமதைக் காத்தல் வேண்டும்;*
*அகலுமென் உயிரும் மீறில்!*

**விக்கியண்ணன் :**

*தோமுடை உறுதி தன்னை*
*இசைத்திடச் சூழ்ந்தார் யாரே?*

**கடம்ப மாதேவி :**

*யாரெனக் குரைத்தல் வேண்டும்?*
*இங்கிள வரசி யானே!*
*ஆரணி மன்னர் கூட*
*அறியாரென் ஆணை மீறி!*
*வீரநீர் வேற்றார் போல*
*வெகுண்டெனைச் சிறையுள் வைப்பீர்!*

*சீரிழந் தினியும் வாழச்*
*சிறியளோ? சீச்சீ! இல்லை.*

*(கடம்ப மாதேவியின் கண்கள் கண்ணீர்க் குளமாகின்றன. குறிப்பறிந்து படைத் தலைவர் மூவரும் உடன் வெளியேற, விக்கியண்ணன் கடம்ப மாதேவியை நெருங்கிக் கண்ணீரைத் துடைக்கிறான்.)*

**கடம்ப மாதேவி :**

*(பஃறொடை வெண்பா)*

*போதுமும் அக்கறை; போம்போம் அறைவெளி!*
*சூதினர்; பொய்மையர்; சொற்பிறழ் சூழ்ச்சியர்!*

**விக்கியண்ணன் :**

*ஏதுமென் குற்றமிங் கிம்மியும் இல்லையில்லை!*
*தீதெதும் இன்றுவரை தீயோர்க்கும் செய்ததில்லை!*
*நாட்டு நலனன்றி நாடேன் நலிவெதையும்!*
*வேட்டுமைச் சேர்ந்தோன் விழைவேனோ வேதனையை?*
*உன்னின் உயர்வே துளமகிழ நாடுய்ய*
*என்செய்தல் வேண்டும் இனி?*

**கடம்ப மாதேவி :**

*(குறள் வெண்பா)*

*கூறின் முடிப்பீரா? குற்றமெனக் கொள்வீரா?*
*ஊறின்று; கொண்ட உரை.*

**விக்கியண்ணன் :**

*(இன்னிசை வெண்பா)*

*எண்ணிப்பின் னாவதென்ன ஏற்றோமுன் எண்ணியெனில்?*
*பெண்ணிற் பெரும்பேறே! பேச்சும் பிறழ்வேனோ?*
*உள்ளத் துறைபவற்றை ஓதும் ஒளிக்காமல்*
*கொள்ளற் குரிய குறித்து.*

**கடம்ப மாதேவி :**

*(கொச்சகக் கலிப்பா)*

*தென்னர்தம் படையோடு தெரிந்தமைந்த நம்படைஞர்*
*என்னவிவண் நடந்தாலும் எதிர்த்திடுதல் இனிவேண்டா.*
*முன்னரொரு நெறியெண்ணி மொழிந்திட்ட உறுதியதாம்;*
*அன்புடையீர்! எனக்கிழுக்கா? அதிலுமக்கும் பகிர்வுண்டே!*

**விக்கியண்ணன் :**

*முதன்முதலாய் அறையிதனில் மொழிந்திட்ட மறந்தனவா?*
*எதிர்ப்பவராம் செழியருமற் றிணையவராம் பல்லவரும்*
*அதிர்ந்தடங்கித் தொழுதேற்ற ஆதித்தர் தலைமையிலே*
*உதித்திடனும் உமதாட்சி! உரைத்தீரே; மறந்தீரே?*

**கடம்ப மாதேவி :**

*(பஃறொடை வெண்பா)*

*நானா? மறந்தேனா? நன்றில்லை; நம்பிடுக.*
*ஊனாய், உயிராய் உறையுமஃ தென்னுளத்தே!*
*தேனார் கமழ்தொங்கல் தென்னரினும் பல்லவரே*
*ஆனார் கொடும்பகையாய்; ஆகா தவராட்சி!*
*வாணாள் முடிவிற்குள் வந்தேறிப் பல்லவரைக்*
*காணா தகற்றிக் களங்கத்தைப் போக்கிடனும்!*
*சோணாட் டுயர்வினினும் சோழர்தம் மீட்சியினும்*
*பேணார் இவர்வீட்சி பேருவகைப் பெற்றிதரும்!*

*ஏனா? கரணியத்தை இன்னொரு நாளுரைப்பேன்;*
*கூனாகா கொண்ட குறி.*

**விக்கியண்ணன் :**

*(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

*அறுதியாய் எதையுங் காணேன்;*
*அறுந்தலை பட்டம் ஆனேன்!*
*உறுதிநீர் அளித்த தாலே,*
*உறுவழி ஒன்றும் தேறேன்!*
*பெறலரு வாய்ப்புப் பெற்றும்*
*பேதுறும்; பிறழும் எண்ணம்.*
*திறனிருந் தென்ன வாழ்வில்?*
*சிறந்தன தேரோம் என்றால்!*

*(விக்கியண்ணன் கைகளைத் தட்டி ஒலி எழுப்புகிறான். படைத் தலைவர் மூவரும் விரைந்து உள் நுழைந்து பணிவோடு நிற்கின்றனர்.)*

**விக்கியண்ணன் :**

*(கலி வெண்பா)*

*கீரரே! இன்னே கிளம்புக; நம்படைஞர்*
*தூரமே நிற்கட்டும்! சோர்வின் றிருக்கட்டும்!*
*பல்ல வரைய! பணியுமக் கொன்றுரைப்பேன்;*
*சொல்லின் அதனின் சுமைபெரிதும் வேறில்லை.*
*கொள்ளிடத்து நீர்வரத்தை முற்றாய்க் குறைத்திடுக;*
*உள்ளநீர் கல்லணைக்குள் உள்ளாகக் காத்திடுக!*

**பல்லவரையன் :**

*கொள்ளிடத்து நீரைக் குறைப்ப தருமையன்றோ?*
*வெள்ளமென நீர்பரவும்; வேண்டுமணை மேலொன்றே!*

**விக்கியண்ணன் :**

*என்னநீர் செய்வீரோ? யானெதையுங் கேட்பேனில்!*
*மன்னர் கருவூலம் மக்கள்மற் றெல்லாமே*
*உன்றன்கீழ் ஆளுமையில்; ஓயா துழற்றிடுக.*

**பல்லவரையன் :**

*என்ன பயனிதனால் ஏற்படும்? யான்காணேன்.*

**விக்கியண்ணன் :**

*வாழ்வில் நடப்பவெலாம் வாய்ப்பதில்லை தாமாக;*
*சூழ்நிலையை ஏற்பநாம் தோற்றுவிப்பின் வெற்றிவரும்.*
*ஏனெதற் கெப்படி? எல்லாமே இன்னொருநாள்*
*யானுரைத்தல் இல்லா தியாவருநீர் கண்டிடுவீர்;*
*எண்ணி உரைத்திட்டேன்; எல்லாம் இயைபவையே!*
*திண்ணமாம் நம்வெற்றித் தேன்.*

## காட்சி : 30

**இடம்** : திருப்புறம்பியம் — பாசறைக் கூடாரம்.
**காலம்** : இரவு — முன் யாமம்.
**உறுப்பினர்** : விக்கியண்ணன், சேந்தன் கீரன்.
**சூழல்** : விக்கியண்ணன் தனக்கென அமைந்த கூடாரத்தில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தபடி கவலையோடு இருக்கிறான். உள்ளே நுழைந்த ஒற்றர் தலைவன் சேந்தன் கீரன் வணங்கிப் பேசுகிறான்.

**சேந்தன் கீரன் :**

(தாழிசை)

*இல்லையில்லை! இதுபோற்போர் கண்ட தில்லை!*
*இற்றதுநம் எண்ணமெல்லாம்; எல்லாம் தொல்லை!*
*ஒல்லையொரு வழியிதற்குக் கொள்வோம்; இல்லை,*
*ஒழிந்தழியும் சோணாடு; மீட்சி இல்லை!*

*ஒன்றிரண்டோ? இருநூறோ? உரைத்தற் கில்லை!*
*உன்னர்க்கும் உயிரொடுங்கும்; உணர்வும் தூங்கும்!*
*பொன்றினர்பல் லாயிரமாம் போரில் ஈங்கும்!*
*புண்பட்டுச் செயலிழந்தார் கணக்கோ, ஓங்கும்!*

*காலிழந்தார், கையிழந்தார், கண்ணிழந்தார்*
*கதறுநிலை காணக் கூசும்!*
*வேலிருந்தும் வாளிருந்தும் வினையியலார்*
*வெந்திடுவார்; விழிகள் பேசும்!*

*எங்கு முடைநாற்றம், எரியும் பிணநாற்றம்!*
*எல்லாம் இடமுற்றும்!*
*தங்கு தடையின்றித் தவழ்வ கழுகொன்றி!*
*தணிந்த பசிபொன்றி!*

*நாய்நரிசூழ் கழுகோடு பிறவி லையேல்*
*நாறுடலக் களமே என்றும்!*
*நடுக்கின்றி உடற்கவ்விச் சென்ற தாலே*
*நடக்கும்போர் தொடர்ந்தே இன்றும்.*
*ஓய்விலராய்ப் பணியாளர் உழன்று மென்ன?*
*ஊனமுற்ற வீரர்க் கேற்ற*
*உதவிதமைச் செய்தற்கே நேர மில்லை;*
*உயிரற்ற உடற்கும் ஆமோ?*

*இங்கங் கெனாதபடி எங்கு மலைந்ததனால்*
*ஏய்ந்த இளமானே.*
*திங்கள் முகமலர்கள் தேடித் தந்துணையைத்*
*தீய்ந்த; சருகான!*

இடிபடு பனைகள் ஒப்ப
  இற்றன தேர்கள் தாமும்!
தடிபடப் பரியோ டியானை
  சரிந்தன; வரைகள் மானும்!

இயைந்தது வெற்றி என்றே
  இனித்தவர் யாரும் இல்லை!
கயந்[1]தனில் வீழெ றும்பாய்க்
  கரையினை விழையார் இல்லை!

**விக்கியண்ணன்**

(கொச்சகக் கலிப்பா)

போதும் பரணியைய; போகாத ஊர்க்கவைதாம்
ஓதும் வழியெனலாம்! ஒற்றி அறிந்தவற்றை
ஏதும் விடுதலின்றி இங்கு விடுத்திடுக;
தீது முனநிற்கும், தேர்ந்தறியேன் செய்வினையே.

**சேந்தன் கீரன் :**

(தாழிசை)

வெற்றியார் பக்க மென்று
  விளங்கிடா நிலைமை இன்றாம்;
முற்றிய திருவார் சொற்றாம்[2]
  முடிவிரு நாட்குள் உற்றாம்.

நாலைந்து நாட்போரில் நம்மோர் இல்லை;
  நாங்கூரார் படைப்பிரிவோ நம்பற் கில்லை!
காலோங்கிச் சுழன்றடித்த காவே ஒப்பக்
  காலனடு களமாய்ப்போர்க் களமே ஆச்சு!

மண்ணிப்பேர் ஆற்றினிலே வெள்ளம் பாயும்,
  மறுகரையில் நம்மறவர்; பெறுவார் ஒய்வும்!
எண்ணற்கும் பல்லவரின் றெழுந்து விட்டார்;
  யாருக்கிப் போரென்பார்; எதற்காம்? என்பார்!

**விக்கியண்ணன் :**

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

சேந்தரே, உரைத்த வெல்லாம்
  தெரிந்ததே; மீள வேண்டா.
கூந்தரைப் பற்றாய்க் கொண்டு
  கொதிமலைக் குழியுற் செல்வோம்!
வேந்தர்தம் தொழிலைக் கொண்டால்,
  வேதனை; வேறும் உண்டா?
வாய்ந்திடின் வழியைக் காண்போம்;
  வருந்தியென்? வாய்த்த சொல்க.

**சேந்தன் கீரன் :**

நம்படை முற்றும் நாளை
  நடந்திடின் பெறலாம் வெற்றி.
நம்பிடற் கரிதே; ஆயின்,
  நல்லதோ ஒதுங்கி நிற்றல்?
எம்முடி வெனினு மாக;
  இழப்பிவண் பல்ல வர்க்கே!
தம்மரு பாட்டன் சாவு
  தகர்த்திடும் இளவல் நெஞ்சை!

இறந்தவர் கணக்கை எண்ணி
இடிந்தனர்! இதனின் மேலாய்
உறுந்துணை கங்க மன்னர்
உறவினில் பாட்டன்! இந்நாள்
இறந்ததைப் பொறுத்தல் ஆற்றார்;
இல்லினிப் போராம் என்றார்.
திறன்மிகு கச்சி யாண்டான்
திட்டமோ, திரும்பல் தானாம்!

விடியலில் படைகள் யாவும்
விரைந்திடும் தம்மூர் நோக்கி!
தடையெதும் உரைப்பார் இல்லை;
தகுவதே, வல்லார் சொல்வார்!
நடைமுறை உகப்பாய் இல்லை;
நம்படை உதவிக் கில்லை.
படுவதோ பயனு மின்றி?
பார்க்கலாம் பின்னர் என்பார்.

**விக்கியண்ணன் :**

*(நேரிசை ஆசிரியப்பா)*

வெற்றி அல்லது வீரச் சாவிங்
கொற்றை மாந்தற் குற்ற விதியது.
வருவது தோல்வி, வழியிலை; அறிந்தும்
பொருவது மடமை; பொருந்தாப் போர்நெறி!
தலைமை நானே தாங்கி இயற்றினும்
நிலைமை இஃதெனின் நிகழ்த்தேன் தொடர்ந்து.
பயன்தராப் போரைப் பல்லவர் தொடரல்
புயன்முன் அறுவடை புரியும் போக்கே!
பின்னுற லிந்நிலை பிழையிலை;
நன்னிலை இன்னொரு நாட்பெற லாகுமே.

**சேந்தன் கீரன் :**

*(குறள் வெண்பா)*

பல்லவர் பின்னுறின் தொல்லை நமக்கலோ?
நல்லதோ போரின் நடப்பு?

**விக்கியண்ணன் :**

*(நேரிசை ஆசிரியப்பா)*

இந்தப் போரால் எந்த இழப்பும்
நமக்கிலை, நம்புக; நடக்கும் நன்மையே!
பல்லவர் பின்னுறின் பாண்டியர் வென்றதாய்ச்
சொல்லுவர்; எனினும் சோழ மகளார்
பாண்டிய ரோடு பண்ணிய உடன்பா
டீண்டு நமக்கும் ஈட்டம் சேர்க்கும்.
எனினும் போரிவண் இறுதல் இன்றி
இனியும் தொடரல் இனிதாம் நமக்காம்!

**சேந்தன் கீரன் :**
எப்படி இயலும்? என்னதில் உட்பயன்?

**விக்கியண்ணன் :**

செப்புவன் விரிவாய்; சேந்த, அறிக.
கடுத்திவர் போரை நடத்திடின் தொடர்ந்து,
படைத்திறன் குறைய அடுதிறன் அழியும்!
வெற்றி பெறினும் பெற்றி நில்லா!
மிகுபடை சேர்த்திட வெகுநாள் ஆகும்!
இழப்பிலா நம்படை இடைப்படு நாளில்
அழிப்ப தவரை அருமை ஆகா!
பல்லவர் பாண்டியர் படைகளைத் தனித்து
வெல்லற் கெளிதே; விளையும் வெற்றி!
நம்மிள வரசியார் தம்முள் ஏக்குறு
பைந்தமிழ் நிலவும் பதினெண் நாடும்
ஒருகுடை நீழல் பொருந்தும் வருநாள்!

**சேந்தன் கீரன் :**

இயலுமா? தலைவ, எழுமுன் ஐயமே!

**விக்கியண்ணன் :**

முயலின் எதுவும் முடியா ததில்லை.
ஒன்றே, அஃதும் உடனே செய்யின்
ஒன்றுநம் நினைப்பும்; பொன்றுவ தில்லை.
என்னிவண் நிகழினும் பின்னுறல் இன்றிப்
பல்லவர் போரிடை நில்லுறல் வேண்டும்.

**சேந்தன் கீரன் :**

எப்படி இயலும்? ஏற்பார் எவரே?
செப்படி வித்தை செய்யினும் அரிதே!
எல்[3]லெழ நாழிகை ஈரிரண் டளவில்
பல்லவர் பெரும்படை கொள்ளிடம் சேரும்.

**விக்கியண்ணன் :**

வெறிதிரை ஒப்ப வெள்ளநீர் கொள்ளிட
நிறைகரை ஓட நிற்பர் பல்லவர்!
பொறியிற் பட்ட புள்ளின் நிலைமை
உறினவர் செய்தற் குறுவது மென்ன?
திரும்பற் கின்றித் திகைப்பர்! திரும்ப,
விரும்பார் எனினும் விளைப்பர் போரே!
வாழ்வா? சாவா? வழியிலை வேறும்!
ஆழ்வார் முற்றாய்; அடைவது வெற்றி.

**சேந்தன் கீரன் :**

உள்ளுவ சரிதாம், ஒப்புவன்; எப்படிக்
கொள்ளிடந் தன்னில் வெள்ளங் கூடும்?

**விக்கியண்ணன் :**

ஆற்றின் குறுக்கே அணையொன் றெழுப்பிக்
காத்து வருவர் கல்லணை சார்ந்து.
பல்ல வரையர் பணியஃ தென்று
சொல்ல வேண்டுமோ? சூழ்ந்தவை தெரியுமே.

**சேந்தன் கீரன் :**

அறிவேன்; ஆம்,ஆம்; அமைத்திரு அணையைத்

*திறந்திடக் கொள்ளிடம் நிறைந்திடும்; ஆயின்?*

**விக்கியண்ணன் :**

*ஆயின்[4] என்ன? அதிலெதும் குறையா?*
*ஆயின்[5] அதற்கும் தீர்வினைக் காணலாம்.*

**சேந்தன் கீரன் :**

*முன்னிராப் பொழுது முடிவதன் முன்னர்*
*இன்னும் நாழிகை இருப்பன சிலவே.*
*இங்கிருந் தின்னே இடையில் இம்மியும்*
*தங்குதல் இன்றியும் தடையில வாகியும்*
*விரைபரி செலுத்தினும் விழைவ தரிதே!*
*எல்லெழு பொழுதாம் கல்லணை அணைய.*
*அங்கணை திறக்க ஆர்த்தெழு தண்ணீர்*
*இங்கணை நேரம் எத்தனை ஆகுமோ?*
*திட்டம் மிகமிகச் சிறந்ததே; இருந்தென்?*
*சட்டி இடுபொருள் சமையல் ஆமோ?*

*(விக்கியண்ணன் மெல்லச் சிரிக்கிறான்.)*

**விக்கியண்ணன் :**

*நன்று, நன்று; நல்லதும் வினாக்கள்!*
*என்றிள வரசியார் எண்ணிய உரைத்தரோ,*
*அன்று முதலாய் அகலா தகத்துள்*
*ஒன்றிய திட்டம்! ஒன்றுமோ குற்றம்?*
*பல்லவர் உள்ளப் பாங்கினை உணர்ந்த*
*எல்லையில் ஓலை ஒல்லையில் விடுத்தேன்!*
*இடையிடை வீரர் எதிர்பார்த் தணியமாய்த்*
*தொடர்ந்து நின்றனர்; தொல்லை நிகழ்ந்திரா!*
*கொள்ளிட வாறு கொள்ளா வாறு*
*வெள்ளநீர் பெருக்கென விரைந்திப் பொழுது*
*வந்துகொண் டிருக்கும்; வழியும் பிறக்கும்.*

**சேந்தன் கீரன் :**

*அருமை! உங்கள் ஆளுமை அருமை!*
*வருவதை முன்னறி திறநனி அருமை!*
*யாருமுன் எண்ணா இச்செயல் நாளைப்*
*போரின் போக்கை வேறாய்ப் போக்கும்.*

**விக்கியண்ணன் :**

*முன்னெதிர் பாரா முனைப்பும் செயலும்*
*என்றும் போரில் இயைத்திடும் வெற்றியை.*
*சேந்தன் கீர, செய்தக கேட்க.*
*வெஞ்சினத் தோடு தஞ்சை நகரை*
*வல்லத் தரையர் வளைத்துளர்; எனவே,*
*அணையைத் திறந்திரு அரையர் உடனுறை*
*துணையர் சூழ அரண்மனைக் குடனே*
*ஏகிடச் செய்தி ஏவுக;*
*ஆகிடும் விழைவ அந்திப் போதுளே!*

*(சேந்தன் கீரன் பணிந்து வெளியேற, விக்கியண்ணன் படுக்கையில் சாய்கிறான்.)*

# காட்சி : 31

**இடம்** : திருப்புறம்பயம் — பாசறைக் கூடாரம்.

**காலம்** : பின்னிராப் பொழுது.

**உறுப்பினர்** : விக்கியண்ணன், இளவரசன் அபராசிதன், படைத்தலைவன் கச்சியாண்டான்.

**சூழல்** : உறக்கம் கலைந்து எழுந்த விக்கியண்ணன், அங்கே அறையில் எதிரே அமர்ந்திருந்த அபராசிதனையும் கச்சியாண்டானையும் கண்டு திடுக்கிட்டவன் போல் வியப்பை வெளிப்படுத்துகிறான்.

**விக்கியண்ணன் :**

(குறள் வெண்பா)

பல்லவர் ஏறென் படுக்கை அறையிலா?
அல்ல நடந்ததென்? அறை.

**அபராசிதன் :**

(கட்டளைக் கலி விருத்தம்)

எல்லாம் பழுதே ; எதைநான் உரைப்பதும்?
இல்லான் எனவிங் கிருந்திடு மென்னிலை!
பொல்லார் படையொடு போரிட் டிறப்பதே
எல்லார்க்கு முற்ற இயல்பென வானதே.

(விக்கியண்ணன் கச்சியாண்டானைப் பார்த்துப் பேசுகிறான்.)

**விக்கியண்ணன் :**

(நேரிசை ஆசிரியப்பா)

கச்சி யாண்ட, கவலற் கமைந்த
நச்சுச் செயலென் நடந்ததும்?
கூறின், அதற்கெதிர் ஆறொன் றாய்வமே.

(கச்சியாண்டான் பேசுமுன் அபராசிதனே பேசுகிறான்.)

**அபராசிதன் :**

(கொச்சகக் கலிப்பா)

கொள்ளிடத்துப் பெருவெள்ளம் கொழித்தலைத்து வழிந்தோடும்!
வெள்ளமினி வடிந்ததன்பின் வெளியேறல் வெகுநாளாம்.
எள்ளற்கிங் கியைந்திட்ட திடர்நிலையே; எதுசெய்வோம்?
கொள்வதுவும் போரொன்றே; கொலைக்களமாம் எம்மவர்க்கே!

**விக்கியண்ணன் :**

*மண்ணிப்பேர் ஆற்றின்மேல் மரப்பாலம் அமைத்திடுவர்;*
*எண்ணியிரு பொழுதகத்தே இயைந்திடுமெம் மரும்படையும்!*
*கண்ணிலொரு தூசுவிழக் கலங்குங்கண்; உளங்கலங்கா?*
*திண்ணமிவண் பெறுவெற்றி, திகைப்பெதற்கு? சேர்ந்தழிப்போம்!*

**அபராசிதன் :**

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

*கொள்ளிடம் கொள்ளா வெள்ளம்*
*கொள்ளாதோ மண்ணி யாற்றை?*
*வெள்ளிடை; அமைத்த யாவும்*
*வெள்ளங்கொண் டடித்து மேவும்.*
*உள்ளிட உள்ளஞ் சோரும்;*
*உடனுயிர் உலர்ந்து போகும்.*
*தள்ளரு வினைகள் தாமும்*
*தவிர்வவோ? தடுப்போம் இல்லை.*

**கச்சியாண்டான் :**

*அஞ்சிட வேண்டா; பெற்ற*
*அரும்பெரும் வாய்ப்பே! ஆமாம்.*
*வெஞ்சின வீரர் நம்மோர்*
*விளைவினை அறிந்தே உள்ளார்!*
*எஞ்சுதல் இன்றி இன்றுள்*
*இகலினை முடித்தல் இன்றேல்,*
*துஞ்சுவம்[1] என்பர்; காண்க.*
*தோற்பது தோல்வி யாகும்.*

*இறந்திடத் துணிந்தார்க் கென்றும்*
*இமிழ்[2]கடல் உமிழ்தற் காகும்!*
*துறந்தவர்க் குறவும் மண்ணும்*
*தூசலோ! உயிரும் அவ்வே!*
*திறந்தனைக் காட்டி இன்றுள்*
*தெரிபகை முடித்து வைப்பார்;*
*கறந்தபால் அன்னார்க் கொன்னார்!*
*களப்பலி ஆவார்! ஆனால்?*

**விக்கியண்ணன் :**

*வெல்லமில் உயிரும்; பின்றா[3]*
*வீரமே உயிராம்; வெற்றி*
*இல்லையிங் கிறப்பே வெற்றி!*
*ஏற்றிட இயையும் பெற்றி!*
*செல்லரு இடமுங் கூடும்*
*செய்கையே உறுதி யானால்.*
*நல்லொரு தலைவ, கச்சி!*
*நாடுப விளம்பல் வேண்டும்.*

**கச்சியாண்டான் :**

*பாட்டனை இழந்த தாலே*
*பல்லவ இளவல் சோர்ந்தார்.*

*மீட்டரு இழப்பே, ஏற்பார்;*
*வேதனை எனினும் உள்ளுள்!*
*காட்டொரு தலைமை இன்றிக்*
*கங்கர்தம் படைஞர் உள்ளார்;*
*மீட்டவர் மேன்மை நாட்ட,*
*மேம்படு தலைமை வேண்டும்.*

*செருவிடை கங்க மன்னர்*
*செத்ததால் திகைத்த வீரர்*
*பொருவளி பட்ட புள்ளாய்ப்*
*போயினர்; போம்வாய் காணார்!*
*அருவலி மிக்கார் அன்னார்;*
*ஆற்றுதற் காளன் இல்லார்!*
*விரலினர் தலைமை ஏற்பின்*
*விண்ணையும் நூறிச் சேர்ப்பர்.*

*அண்ணலே, ஆற்ற லாள!*
*அறிந்தவர் உரைத்த வெல்லாம்*
*கண்ணெதிர் கண்டேன்; உம்முன்*
*காலனும் எதிர்த்து நில்லான்!*
*விண்ணதிர் முழக்கங் கேட்டேன்;*
*வேண்டலர் வீழக் கண்டேன்!*
*திண்ணநம் வெற்றி; ஐயா,*
*தீரர்நீர் தலைமை ஏற்பின்!*

**விக்கியண்ணன் :**

*நல்லொரு அரிய வாய்ப்பை*
*நல்கினீர்; நன்றி, நன்றி!*
*சொல்லரும் சோழ வீரர்*
*சூழ்ந்திடா நிலைமை யூடே,*
*இல்லையிங் கிதுபோல் வாய்ப்பும்?*
*இயக்குவன் படையை ஒன்றி!*
*தொல்லையென் றுரைக்கப் போமோ?*
*சுவையமு தளித்தீர்; நன்றி.*

## காட்சி : 32

**இடம்** : திருப்புறம்பயம் — கச்சியாண்டானின் பாசறைக் கூடாரம்.
**காலம்** : பின்மாலைப் பொழுது.
**உறுப்பினர்** : விக்கியண்ணன், படைத்தலைவன் கச்சியாண்டான்.
**சூழல்** : படுக்கையில் கச்சியாண்டான் படுத்துக் கிடக்கிறான். விக்கியண்ணன் அவன் அருகே அமர்ந்திருக்கிறான்.

**விக்கியண்ணன் :**

(தாழிசை)

உடன்றெழு மிகுவலி உருமென[1]
உடற்றிறன் உளத்திறன் சிறக்கவே,
படர்ந்திரு களமுழு தடைத்தனை;
பகையினை ஒருபொழு தழித்தனை!

இடம்பொருள் உளவெலாம் இறையவன்
இருப்பதாய்ப் புரட்டுநர் இயம்புவர்;
தொடர்ந்துருள் கடற்றிரை[2] படர்ந்தபோல்
சுழன்றமர் இடமுழு துடற்றினை[3]!

விழிவழி யியைந்திடு மிடமெலாம்
விழுந்திடும் படைபடு பிணங்களாம்!
பழியுரை விரைவினும் மிகுவதாய்ப்
படர்ந்தன கிழிந்திட நிணங்[4]களாம்!

கரிபுகு கரும்பெனக் களமுறக்
கடும்பகை முடித்தனை களிமிக!
எரிதழல் படுவிழல் அவர்படை!
இனியெழல் அவரிலை; வெளிப்படை!

இற்றுவீழ் தலைகள் தம்மால்
இடறின புரவிக் கால்கள்;
வெற்றுரை யன்று வீர,
விளைந்தது வெற்றி உம்மால்!

பாண்டியர் படையில் செத்தார்
பகுதிக்கும் மிகுதி யாகும்!
மீண்டவர் தம்முள் பல்லோர்
மீண்டுறார்; விழுப்புண் கொண்டார்!

நாய்நரி விலங்கு கூடும்;
நவையறு தசையைத் தேடும்.
நோய்நொடி இல்லார் ஊன்றாம்
நுவலரு சுவைத்தாம்; தேன்றாம்!

குற்றுயிர் ஊச லாடக்
குலைந்திடார்; கொதித்தார், பொன்றார்!
நற்றவம் செய்தோர் அன்னார்!
நனிபுகழ் எய்தி நின்றார்!

**கச்சியாண்டான் :**

(கொச்சகக் கலிப்பா)

வெற்றிக்குக் கரணியமெம் வீரர்தம் விழிப்புணர்வே.
பற்றிற்று பற்றுயிர்மேல்; பகையவர்க்குப் பனிமூட்டம்!
உற்றபெரும் வெற்றியிதே; உவகையுளே! இருந்துமென்ன?
குற்றுயிரோ டுலைந்திடுவேன்; கொடுமையிதே! கண்டிடுக.

எல்லாருங் களிகொளற்கிங் கியைந்ததிருப் பெரும்பயப்போர்
ஒல்லாத தெதுவுலகில் ஊக்கமெதிர் அறிகவெனச்
சொல்லாமற் சொல்லிவைக்கும்; தொடர்ந்துவரு வரலாறாம்!
கொல்லாமற் கொல்லுமொன்றைக் கூறிடற்கும் கூடிடுமோ?

(தாழிசை)

நெஞ்சினுள் நெடுநாள் உள்ள
நெருடலை வேண்டும் சொல்ல.
அஞ்சமுன் அறிந்தேன் இல்லை;
அதிர்ந்திடும் நெஞ்சம் மெல்ல!

பஞ்சினும் மெலியர், மல்லை
பணிந்திடும் இளைய பிள்ளை!
வெஞ்சினர் தம்மின் மீட்டு
வீரரே, காத்தல் வேண்டும்.

**விக்கியண்ணன் :**

கூடுமா குகையிற் கூடிக்
குழிமுயல் புலியைக் கோறல்?
ஈடிலாப் போரில் வெற்றி
ஈட்டிய இளவற் கூறா?

**கச்சியாண்டான் :**

அறிந்திடின் அச்சம் பற்றும்;
அணைந்துடன் செய்வீர் முற்றும்.
பிறந்துளார் சோழ நாட்டில்!
பிழைத்திடார்; இளவல் விட்டில்!

பல்லவர் குலமா? வேரின்
பற்றற வழிப்பேன் நேரின்!
சொல்லிய வாறு சூழ்வார்;
சூழ்ச்சியின் வல்லார்! சோரார்.

போரினால் இளைத்தோம்; ஆடிப்
பொருவளிப் பொரிமா ஆனோம்!
நீரலால் மற்ற யாரே
நேயராய் உதவு வாரே?

**விக்கியண்ணன் :**

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

நாயினும் நன்றி மிக்கார்
நாங்களே; நம்பத் தக்கார்!
ஏயெனும் சொல்லாய்க் கொள்க;
எண்ணுவ விளங்கச் சொல்க.

*ஆரவர் சோழர் கச்சி*
*அழிவினை விழைந்தார் நச்சி?*
*தாரவர் விசயர், நல்லார்!*
*தவறியும் நன்றி கொல்லார்!*

**கச்சியாண்டான் :**

(கலி வெண்பா)

*பொன்னி வளநாடு போற்றுந் தமிழ்ச்செல்வி!*
*மன்னர் மகளிரென மாற்றலரும் ஏற்றுக்*
*கடம்பமா தேவியரே கல்லென்வெம் நெஞ்சர்!*
*மடம்[5]நனி மிக்குடையர்; மாறாத் திறமிகுந்தர்!*
*எவ்வழியும் பல்லவரை இல்லாமற் செய்திடற்*
*கவ்விய[6] நெஞ்சத் தடாத வகுத்திருப்பார்.*
*மல்லை இளவரசர் மற்றும் படைமறவர்*
*தொல்லைத் திறனிழந்து சோர்ந்த நிலையுள்ளார்.*
*தொல்லை எதுவுமின்றிச் சொந்தத் திருநாட்டை*
*ஒல்லை அடைதற்கிங் கும்முதவி வேண்டிடுவேன்.*
*பாட்டன்முன் செய்தவற்றில் பங்குண்டோ பேரனுக்கும்?*
*வேட்டைப் பொருளாய் விளங்கிடுவார் மன்மகனார்!*
*நல்லரப ராசிதரே! நண்ப, நலிவின்றிச்*
*செல்வதற் கேற்றவழி செய்.*

**விக்கியண்ணன் :**

(இன்னிசைச் சிந்தியல் வெண்பா)

*என்முன் இயைந்ததுவும்? ஏனெம் இளவரசி*
*இன்னும் இகல்முடிக்க எண்ணுவதும்? ஏலுமெனில்*
*முன்னம் மொழிக முயன்று.*

**கச்சியாண்டான் :**

(கொச்சகக் கலிப்பா)

*நீண்ட நெடுங்கதையே! நேரம் எனக்கில்லை.*
*தோண்டத் தெரியுமவர் தொண்டை மரபாகும்!*
*வேண்டுவ தும்மொழி; வேறில்லை வாழ்விலினி.*
*ஈண்டென் உயிரேக இன்னும் நொடியளவே!*

**விக்கியண்ணன் :**

*எய்தற்கும் இயலரிய இரும்புகழ்க்கு வழியமைத்தோய்,*
*நையற்க; இளவரசர் நாங்கூர்வேள் மகள்மணந்து*
*வையத்தார் வாழ்த்திசைக்க வழிநடப்பார் படையுடனே.*
*செய்ந்நன்றி மறப்பேனோ? செய்விப்பேன் விழைந்தவையே!*

**கச்சியாண்டான் :**

(தாழிசை)

*நல்ல உரைத்தவையே; நன்றி, மிகுநன்றி.*
*நானு மினிநோவேன்; நல்ல படிசாவேன்.*
*வெல்லற் கருமைத்தோ வீரர்க் கிருமைத்தாம்[7]?*
*வேண்டல் புகழொன்றே; வீணேன் உடலிங்கே?*

## காட்சி : 33

**இடம்** : தஞ்சை அரண்மனை — மன்னர் தனி அறை.

**காலம்** : காலைப் பொழுது.

**உறுப்பினர்** : விசயாலய சோழர், அரசி, ஆதித்தன், அபராசிதன், விக்கியண்ணன், நாங்கூர் வேள், பல்லவரையன், மாதேவி, மற்றும் சிலர்.

**சூழல்** : மன்னர் அமர்ந்திருக்க மற்றவர் நின்றபடி உள்ளனர். இணையாக எதிர் நின்று இருந்த அபராசிதன் மாதேவியை இன்முகத்தோடு நோக்கி விசயாலயர் பேசுகிறார்.

**விசயாலயர் :**

(கலி வெண்பா)

வாழ்கநீ மாதேவி, வையத்து வாழ்வாங்கு!
வாழ்க வளம்பெய்து வான்மழையாய் நீசிறந்து!
இந்நாட் டரியணைக் கேற்ற வணிகலனாய்
இந்நாளுங் கொண்டிருந்த எம்நினைப்பைப் பொய்த்துவிட்டாய்!
என்மகள் தன்னுயிராய், யாரினும் மேலாக
உன்னலத்தைப் பேணி உயர்த்தி யுவந்திட்டார்;
கொண்ட அவராசை கொள்ளைபோம்! தாங்குவரோ?
கண்ட கனவுகளா? கட்டடக் கால்களலோ!
எங்குநீ வாழ்ந்தாலும் என்றுமெம் நாட்டவரே;
தங்கு தடையின்றித் தாயகம் வந்திடுக!
இல்லை இவரொப்பார் எங்குமியற் பண்பிலெனப்
பல்லவ நாட்டவரும் பாராட்ட வாழ்ந்திடுக!

(தன் பார்வையை அபராசிதற்காய்த் திருப்பிப் பேச்சைத் தொடர்கிறார்.)

பல்லவரே, எங்குலப் பண்பாட்டின் நேருருவைச்
சொல்லவரு வைப்பைச் சுமந்துநீர் செல்கின்றீர்;
கண்ணின் மணியன்னார்; காணின் கவியொண்ணார்;
எண்ணில் சுழியிணையார்[1]; எண்ணில் இவரினியார்!
நல்லார் இவர்துணையால் நல்ல நடப்பவென்றும்.
எல்லாம் இவரென்றே என்றுநீர் ஏற்றிடுக.
ஒன்றி யுளமிசைந் துற்றிவரால் பற்றுமுமைப்
பொன்றும் பொழுதும் புகழ்.

**அபராசிதன் :**

(குறள் வெண்பா)

நன்றி அரசே, நடப்போம் உளப்படியே!
சென்று வருவோம் சிறந்து.

(அபராசிதன் மாதேவியின் கையைப் பற்றி அழைத்துக் கொண்டு திரும்புகிறான். திரும்பியவன், அப்படியே நிற்கிறான். அவன் கண்கள் குத்திட்டு நின்ற திசையில், அங்கிருந்த அனைவர் கண்களும் திரும்புகின்றன. அங்கே வாயிலை அடைத்தபடி உருவிய வாளுடன் ஆதித்தன் நிற்கக் கண்டு அனைவரும் அதிர்கின்றனர். ஆனால், விக்கியண்ணன் முன்னடி எடுத்து வைத்துப் பேசுகிறான்.)

**விக்கியண்ணன் :**

(கலி வெண்பா)

*விடுக வழியை விலகி இவர்க்கு.*

**ஆதித்தன் :**

*படிறு[2]ள கூற்றிடை; பாராள் இளவல்யான்!*

**விக்கியண்ணன் :**

*உண்மை; அறிவேன், ஒதுங்கி அமைந்திடுக.*

**ஆதித்தன் :**

*புண்ணிற் கெரியூட்டிப் போக்கல் நெறியில்லை!*
*ஆணை இடுகின்றீர், ஆகாது; குற்றமன்றோ?*
*தூணை அசைத்தற்குத் தூசால் இயன்றிடுமோ?*

**விக்கியண்ணன் :**

*எப்போதும் போல இளவரசர் என்பேச்சைத்*
*தப்பா ரெனக்கொண்டேன்; தா[3]வுண்டா? சாற்றிடுக.*
*சோழர் நலங்கிள்ளி தொன்மரபின் தோன்றலென்றும்*
*தாழல் உளத்தளவுந் தாங்கலுள வாமோ?*

**ஆதித்தன் :**

*பிறனில் விழைந்தலை பேதையில்லா தித்தன்!*
*உறவில் உயிரனையர், ஒன்றாய் உடனுறைவர்!*
*சொந்தம் எனக்கவரே; சூதாய்ப் பிறர்வவ்வத்*
*தந்தம் எனவளிக்கத் தாளாளன் நானாமோ?*

**விக்கியண்ணன் :**

*ஆசறக் கற்றறிந் தான்றமையப் பெற்றிடினும்*
*காசறு[4] பெண்ணெழிலார் காமமுமை விட்டிடலை!*
*கூட வளர்ந்தவர்தான்; கொஞ்சிவிளை யாடியரே!*
*நாடல் உமையன்றே; நட்டவரே, எண்ணிடுக.*
*தண்ணீர் பிறதரளம்[5] அந்நீர்க் கணியாமோ?*
*மண்ணாழ் விளைமணிகள், மற்றவர்க்கே; கண்டிடுக.*

**ஆதித்தன் :**

*எல்லாம் நானறிவேன்; யாரெடுத்துக் கூறிடினும்*
*நில்லாது; மாதேவி நீங்கார் எனைநீங்கி!*

**விக்கியண்ணன் :**

*காஞ்சி படைத்தலைவர் கச்சியாண் டார்களத்துச்*
*சாஞ்சமயம் யான்சார்ந்து தந்தமொழி பொய்த்திடலோ?*
*நாங்கூரார் பெண்ணோடு நற்படைஞர் சூழ்ந்துவரத்*
*தீங்கின்றித் தன்னாடு சேரவப ராசிதற்*
*குற்றவெலாம் செய்ய உறுதி யளித்துள்ளேன்!*
*வெற்று மொழியன்று; வெற்றிக் களிநன்று!*
*சொன்னமொழி காக்குந் துணிவுமிலை என்றானால்,*
*என்னிங்கு வாழ்வாம் எனக்கு?*

*(மாதேவி மெல்ல அசைந்து நடந்து விக்கியண்ணன் முன் வந்து பேசுகிறாள்.)*

**மாதேவி :**

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

*அண்ணலே, ஐய, வீர!*
*அமைதிநீர் சற்றுக் கொள்க.*
*எண்ணுவ யாவும் முன்னே*

இறைத்திடல் ஏனோ? வீணே!
கண்ணென என்னைக் கொண்டார்
கருத்தினில் தீய அண்டா.
பெண்ணெனக் கியைந்த பேற்றால்
பேதுறார் ; பிணித்தல் செய்வார்.

அத்தனாய்[6] அன்பின் ஆழம்
ஆதித்தர் உறவில் தாழும்.
பத்திமை வாணாள் செய்தும்
பார்த்திரா இறையின் மேலார்!
எத்தனை பிறவி யானிங்
கெடுப்பினும் இணையில் தோழர்!
மெத்தவென் நலத்தில் நாட்டம்
மிகுந்தவர் ; வாழ்த்தச் செய்வார்.

*(மாதேவி பணிந்து ஆதித்தனை வணங்குகிறாள். அவள் கண்கள் கண்ணீரால் நனைகின்றன.)*

**ஆதித்தன் :**

கண்ணிற் கினியாய், மாதேவி,
கண்ணீர் எதற்காம்? கலங்காதே.
பெண்ணிற் கணிநீ, பெரும்பேறு!
பிறவாத் திருவின் மறுகூறு!
எண்ணங் கொண்ட இனியவரை
ஏற்க, செல்க இணையவராய்!
உண்ணல் லுணர்வுள் பல்லவரை
ஒழியா துறைந்து மகிழ்ந்திடுக!

*(அபராசிதனை நோக்கி ஆதித்தன் தொடர்கிறான்.)*

கச்சி மெச்சு மிளவரசே,
களத்து வெற்றி கண்டவரே,
இச்சை கொண்டார் என்னுறவார்;
எனவே இசைந்தோம் உம்முறவாய்!
மிச்சம் சொச்சம் இல்லாமல்,
மேலாம் பேற்றைக் கொண்டிடுக!
கச்சி மாதர் மெச்சிடவே
காண்க அறமாம் இல்லறத்தை!

*(அங்கிருந்த அனைவரும் ஆதித்தனை வியந்து பார்க்க, அபராசிதன் அவனை நன்றிப் பெருக்கோடு ஏறிட்டுப் பார்க்கிறான். அப்பொழுது, அங்கு ஒற்றர் தலைவன் சேந்தன் கீரன் விரைந்து அறைக்குள்ளே வந்து அரசரை நெருங்குகிறான்.)*

**சேந்தன் கீரன் :**

(நேரிசை ஆசிரியப்பா)

அரசே! அரசே! அடைந்தது பேரிடர்!

**விசயாலயர் :**

அமைதி; வீர, அமைதி! ஆனதென்?

**சேந்தன் கீரன் :**

இத்தரை ஏற்றுநம் இளவர சியாரை
முத்தரையர் கொண்டுதம் மூதூர் போயினர்!

*(எல்லாரும் அதிர்ந்து பேச்சற்று இருக்கின்றனர்; எல்லாம் வினாடி அளவே. ஆதித்தன் கை தன் வாளை அடைகிறது; வாய் ஆணைகளை உதிர்க்கிறது.)*

**ஆதித்தன் :**

*பல்ல வரையரே! நல்லரே, விரைக!*
*வல்ல நம்படை ஒல்லை எழட்டும்!*
*வல்லமே முற்றும் இல்லெனச் சொல்லிட,*
*முத்தரையர் மரபை வித்தற அழிப்போம்!*
*எண்ணினர் நம்மை இளப்பமாய்; அதனால்,*
*பெண்ணிற் கணியைப் பிடித்தனர்; பிழைத்தனர்!*
*ஒருவர் ஒழியா துள்ளார் அனைவரும்*
*அருக அழிப்போம்; அணைக விரைந்தே!*

**விசயாலயர் :**

*பொறுமை; மகனே, பொறுமை காக்க.*
*விளக்குக கீரரே, விளங்கிட விரிவாய்.*

**சேந்தன் கீரன் :**

*வல்லத் தரையர் வழிசெல் படையுடன்*
*செல்லுநம் ஒற்றர் தேவியை அவரிடை*
*இருந்ததைக் கண்டிடி இழிந்தென வழுங்கினர்!*
*விரைந்த ஒற்றர் உரைத்தார் விளைந்த.*
*நொய்தின்[7] தேவியர் உய்மனை எய்தி*
*செய்தி தெளிந்துடன் சேர்ந்தேன் இங்கே.*
*வண்டார் குழலியைக் கண்டிடச் சென்ற*
*இளவர சியாரை இன்னார்[8] கடத்தினர்!*

**விக்கியண்ணன் :**

*காவற் றலைவர் கடிநெடு வேட்டுவர்*
*மேவிய தெங்கே? மேனாள் அவர்க்கு*
*வண்டார் குழலி வாழ்ந்திரு மனையைக்*
*கண்கா ணித்திடக் கட்டளை உண்டே?*

**சேந்தன் கீரன் :**

*முற்றுகை விடுத்து முத்தரை யரகலச்*
*சற்றுக் கவனம் சரிந்தது, தலைவ!*
*இக்கணம் கிளம்பின் இளவரசி யாரைச்*
*சிக்கல் இன்றிச் சிறைமீட் டிடலாம்.*

**விசயாலயர் :**

*ஈண்டினும் போரா? என்மகள் குறித்தா?*
*வேண்டா, வேண்டா; விடுக முயற்சி.*

*(விசயாலயர் பேச்சால் அனைவரும் அதிர்ச்சி அடைகின்றனர்.)*

**ஆதித்தன் :**

*தந்தையே, இஃதென் தகவில் பேச்சும்?*
*இந்த நாட்டோர் இன்னுயிர் தன்னைக்*
*கொண்டொரு கொடியன் கூட்டினன் குலப்பழி!*
*கண்டினும் பொறுப்பதா? கவலா திருப்பதா?*

**விசயாலயர் :**

*கவலல் எதற்காம்? கடம்ப மாதேவி*
*தவலில்[9] சோழத் தண்புனல் நாட்டிற்*
*குரியர் இல்லை; உரியர் என்றால்*

ஒருவர் நீயே! ஒருதனி மகனே!
அதிரல் வேண்டா; ஆமாம், உண்மை!
இதுவரை மகளென இருந்தவர் மகளிலை!
கடம்பமா தேவியைக் கடத்தினர்; அதற்காய்
உடன்படேன் உடற்ற உடனொரு போரை!
ஒருதனி மகட்காய் உயிர்பல போவதா?
கருதுக வாழ்வின் கருப்பொருள்; தெரியும்.

**ஆதித்தன் :**

தந்தையே, என்னரு தமக்கையர்
சொந்தம் இல்லையா? சொல்க விளங்கவே.

**விசயாலயர் :**

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

முப்பதிற்கு முன்னிங்கு முடிந்த வற்றை
மொழிந்திடுவேன், கேட்டிடுக முற்று மாக.
அப்பொழுது நம்மவர்க்கும் பல்ல வர்க்கும்
அடுத்திருந்த துறவில்லை; அமரே ஆகும்.
செப்பவரு திறனோடும் சீர்மை யோடும்
சிறந்தரசு நந்திவர்மர் செய்து வந்தார்!
ஒப்பிடுவர் அவர்சிறப்பை ஒன்னார் கூட;
உவந்துறைவர் மக்களெலாம் உறுத்தல் இன்றி!

விதிமுறையில் உரியரில்லை ஆட்சிக் கன்னார்;
வென்றுகொண்டார் உரிமையுடை தம்பி மாரை!
கதம்பர்குலத் தலைமணியாம், தந்தி வர்மர்
கட்டிலரு கமருரிமை பெற்ற நல்லார்
மதர்ப்பு[10]மிகு அக்களநிம் மடியார் பெற்ற
மக்களவர் இளையரென ஆன தாலே,
எதிர்ப்படக்கி ஆட்சிதனை ஏற்றார் நந்தி;
எரிமலைபோல் குமைந்திருந்தார் இளையோர் அஞ்சி!

பதவிதரு அதிகாரம் படைத்து விட்டால்,
பரமனுமென் செயக்கூடும்? பணிதல் வேண்டும்!
உதவிக்குத் துணையமையாத் தம்பி நால்வர்
ஓடிட்டார் நாடுவிட்டு நந்தி ஓட்ட!
எதுசெய்து தமக்குரிய இனிய நாட்டை
எய்துவது? சூழ்ந்திட்டார்; இறுதி காணார்!
மதுரஞ்சேர் தமிழ்ப்பாட்டில் அறத்தைச் சேர்ப்பின்
மடுத்திடலாம் கருத்தென்றார்; மாற்றம் ஏற்றார்.

காடவரந் நால்வரிலே கடைசி பிள்ளை;
கற்றறிந்த தமிழ்ப்புலவர்; காதற் கிள்ளை!
பாடவலர் தன்னண்ணன் படுதற் காகப்
பாடியதாய்க் கலம்பத்தைப் பரவ விட்டார்!
ஏடதனால் இறந்திட்டார் நந்தி என்பார்,
யானுண்மை எதுமறியேன்; இறந்தார் நந்தி!
ஓடிணையாப் புளியானார் காடர் பின்னாள்!
ஒடிந்தவுளப் பற்றிலராய் இங்குச் சேர்ந்தார்.

இந்நாட்டில் வாழ்போழ்தில் இயைந்த காதல்
இன்னுறவால் நம்முறவுப் பெண்ணா ளோடு
முந்நீர்க்குள் மூழ்கித்தேர் முத்தை யொத்த
முழுநிலவாம் எழில்மகவை மகிழப் பெற்றார்!

தந்தாயின் பெயர்விளங்கத் தன்ம கட்குத்
தக்கபெயர் கதம்பமா தேவி என்றார்!
செந்தேனின் மிக்கசுவை செவ்வி சேயார்
சேர்ந்தார்பின் சிறப்பெல்லாம் சேர்ந்த அல்லோ!

மன்னன்றான்! ஆயினுமென்? மக்கள் இல்லை!
மரபாட்சி தொடரப்பின் மகனும் இல்லை!
இன்னற்றான், என்செய்தும் நன்மை இல்லை;
எரிநெருப்பில் விழுதிவலை[11] முயற்சி எல்லாம்.
என்துன்பம் தணிப்பதற்கென் றந்த வேளை
இயைந்தவெழில் நன்மருந்தே உன்றன் அக்கை.
நன்றுந்த ஒன்றிட்டார்; நாங்கள் பெற்ற
நன்மகவே என்றுவந்து வளர்த்தோம்; வாழ்ந்தோம்.

பெற்றவர்க்கும் அளிக்கலிலாப் பிணைப்1பை, அன்பைப்
பிள்ளையிலா எங்கட்குப் பிறந்து தந்தார்!
சற்றுமெமைப் பிரியவுளந் தாங்கார்; எங்கும்
சரிசமமாய் உடனணைவார்; தனித்து நீங்கார்!
உற்றவரும் எம்மகட்டான் என்றே உள்ள
ஒருநொடியும் எம்மருங்கைப் பிரிந்தார் இல்லை!
நற்றவமாய்ப் பெற்றவரு திருவைப் பேற்றை
நான்மகளாய்க் குலமரபாய் நலமாய்க் கொண்டேன்.

கற்றுவல காடவர்தன் மகட்கு வேண்டு
கல்வியெலாம் கற்பித்தார் கசடு நீக்கி.
மற்றொழிலும் விற்றொழிலும் மற்றும் எல்லா
மன்னர்குல மரபினர்க்கு மடுத்த யாவும்
கற்றவர்தான் கதம்பமா தேவி யாரே;
காவலர்க்கு வேண்டுதிறன் கண்டார் அன்றே!
பற்றிலனாய் இருந்தவெனைப் படைபெ ருக்கிப்
பண்டைநிலை மீட்டற்குப் பணித்தார்; என்னே!

மகளெனவே அவரெனக்கும் அமைந்த பின்னர்
மகனொருவன் பிறப்பனெனக் கணக்கர் சொன்னார்!
அகமகிழ அப்படியே ஆனான் பிள்ளை;
அறுபதினை நெருங்கையிலே பிறந்தான்; ஆகா!
நகுபுலன்கள் பற்றகற்றிக் காட வர்தான்
நடந்திட்டார்; சென்றதெங்கோ? நண்ணார் பின்னர்!
இகமுழுதும் தேடிடினும் ஈடும் இல்லார்
இளவரசி எனவாட்சி ஓச்சி வந்தார்!

காடவரன் றிட்டபெயர் காலப் போக்கில்
கடம்பமா தேவியென மருவிற் றிங்கே!
ஆடவர்க்கும் அமையவரு ஆட்சி ஆற்றல்!
அவரிட்ட உட்பட்டார்; நானும் பட்டேன்!
காடடையிவ் வகவைவரை கண்ட போர்கள்
கணக்கற்ற; கரணியமோ அவரின் தூண்டல்!
கூடிவரும், சோழர்குலப் பெருமை மீளும்;
குலைத்திடவோ படைநடத்தி ஒருத்திக் காக?

இளவரசி அவரில்லை; எதற்குப் பின்னர்
இந்நாட்டை இன்னலிடை ஆழ்த்த வேண்டும்?
உளமயங்கல் சரியில்லை; ஆதித் தா,உன்
ஒருவற்கே சொந்தங்காண் சோழ நாடே!
உளதிலது தேரினலால் உயர்வு கிட்டா;
உண்மைநிலைத் தன்மையறி! மைந்தா, ஏதோ,

அளவறிந்து பேசுமியல் அண்ணல் விக்கி
அணுகுகிறார் அறைவதற்கும்; அதைமுன் கேட்போம்.

**விக்கியண்ணன் :**

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

பொறுத்திட வேண்டும்; மன்னா,
போகிறேன்; பொறுத்தற் கில்லேன்.
சிறுத்திரு கோழி கூட
சிலிர்த்திடும் குஞ்சைத் தொட்டால்!
ஒறுத்திடற் குரிய மன்னர்
உறவினைச் சூழ்வார்; சீறார்!
அறுத்திடுந் துயரம் நெஞ்சை;
அணங்கவர் அவலம் யாதோ?

அவையினைக் கூட்டி, ஆன்றோர்
அறிவுரை கேட்டுப் பின்னர்,
நவை[12]யிலை ஆகில், தக்க
நடத்தலாம் மன்னர் மெல்ல!
தவறிலை; ஆனால், நானோ
தற்குறி இல்லை தங்க!
எவரெனைத் தடுத்தும் நில்லேன்;
எனக்கவர் மீட்சி மூச்சு!

அரசிளங் குமரி இல்லை!
அஃதொரு பொருட்டோ? இல்லை.
உரனுடை நெஞ்சர், என்றன்
உள்ளுறை அன்பர், வாழ்விற்
கரணென ஆனார்; அன்னார்
அல்லலில்! அமைதி ஆமோ?
பரலுறு பாதை பாரேன்;
பனிமொழி மீட்பேன்; வாரேன்!

(விக்கியண்ணன் பணிந்து வணங்கி அங்கிருந்து விரைந்து வெளியேறுகிறான். அவன் செயலால் சற்று நேரம் அங்கு அமைதி நிலவுகிறது.)

**ஆதித்தன் :**

எந்தையே, உங்கள் போக்கில்
ஏற்றமில்; இழிவே நோக்கில்!
தந்தைதாய் மேலாய் என்னைத்
தாங்கியர் தமக்கை யாரே!
சொந்தமில்; அதனால் என்ன?
சொத்தெனக் கவரே எல்லாம்!
எந்திறம் வளர்ந்த தியாரால்?
யானினி இருத்தல் ஆற்றேன்.

**விசயாலயர் :**

(கலி வெண்பா)

போய்வா; மகனே, புறப்படு வீரரொடு!
போய்நம் மரபின் புகழின் ஒளியைக்
கவர்ந்த கயவர் கலங்கிக் கதறத்
தவிர்தல் இலாதெவரும் தாக்கித் தடித்திடு!
அன்பிலன் நானிலனுன் அக்கையர் தன்னிடம் ;
உன்னிலும் ஏனென் உயிரினும் மேலவர்!
எல்லாம் எனக்கவர் இந்த உலகிடை!

*நில்லா உலகில் நிலைத்ததென் பேரெனில்*
*யாரால் இயைந்ததும்? என்னரு பெண்ணினால்!*
*ஏரார்[13] கரிகாலர் இன்னாட்சி மீண்டமையக்*
*கண்ட அவராசை காணற்கென் வாணாளில்*
*கொண்டபோர் எத்தனையோ! கொண்ட விழுப்புண்கள்*
*தொண்ணூறும் ஆறும் ; தொழும்புலவர் பாடிடுவர்!*
*புண்ணூறு காணற்குள் பொத்திட்டார் மூப்பென்றே!*
*ஈன்றவர் காடவரே; என்றாலும் என்மகட்டான்!*
*ஆன்றவர்க் கூறங் கணுவள வாகிடினும்*
*முத்தரையர் காலற முற்றும் அழித்தொழிக்க!*
*இத்தனை என்றிலா தத்தனை வீரரும்*
*செல்க விரைந்துடன் செல்வியை மீட்டிட!*
*கொல்க எவரெனினும்; கூடா கழிவிரக்கம்!*
*மன்னனென் ஆணை; மலைத்தல் எதற்கிவண்?*
*முன்பின் முரணாய் மொழிகுவன் என்றுநீர்*
*எண்ணுப, காண்பேன்; இயல்பே, விளக்குவன்.*
*கண்ணவர் விக்கிதன் காதலில் வீழ்ந்தார்!*
*பழமரம் நாடு பறவையைப் போன்று*
*விழுமிய தேடிடு வேட்கை உளமுடை*
*விக்கியண்ணர் வெல்லரு வீரரே; அன்னருன்*
*அக்கையர் மேல்கொள் அளப்பரு காதலும்*
*உண்மையா? இல்லை, உடைமைப் பொருளதா?*
*மண்மகள் என்பதால் தன்னலங் கொண்டதா?*
*செல்லிடை ஆரக்கொள் சிற்றுணா என்பதா?*
*இல்லை, அவருள் இயல்பாய் இயைந்ததா?*
*உண்மை உணரற் குரைத்தனன் முன்னவர்!*
*போய்நம் மரபின் புகழருள் ஊற்றினைத்*
*தூய்மனச் செல்வியைச் சோழர் கொழுந்தினைச்*
*சூதினர் ஊறெதும் சூழுமுன் காத்திவண்*
*கோதற மீள்கநீ கொண்டு.*

## காட்சி : 34

**இடம்** : *தஞ்சையில் இருந்து வல்லம் செல்லுங் காட்டுப் பாதை.*
**காலம்** : *நண்பகற் பொழுது.*
**உறுப்பினர்** : *விக்கியண்ணன், கடம்ப மாதேவி, செந்தாமரை, வீரர் சிலர்.*
**சூழல்** : *விக்கியண்ணன் காட்டு வழியில் தன் குதிரையில் விரைந்து கொண்டிருக்கிறான்.*

**விக்கியண்ணன் :** *(தனக்குள்)*

*(நேரிசை ஆசிரியப்பா)*

*வல்லம் செல்லும் வழியில் எத்தனை*
*கல்லும் முள்ளும்; கரடும் முருடும்!*

இன்ன லவர்க்கெது மியைந்திரா திதற்குள்;
என்னுயி ரிருந்திடா திடரெதும் நிகழ்ந்திரின்!
மன்னவர் மாற்ற மென்னிவ ணுற்றதும்?
உயிராய் மகளை யுயர்வாய்க் கொண்டவர்,
அயலா ரொப்ப வறைந்தது மென்னை?
பெற்ற பெண்ணிலை, முற்றுஞ் சரிதான்;
வளர்த்த வன்பு முலர்ந்த தெப்படி?
அன்பிற் கில்லை யடைக்குந் தாழெனல்,
வன்புரை யன்றே; வாய்மை யன்றோ?
ஏன்பின் னரச ரிருந்த வுறவோர்
ஊன்சிறு வாட்டமு முற்றா ரில்லை?
அரசிளங் குமரி! அறிவுக் கரசி!
உருகினர் முன்னாள்; ஒதுங்கின ரிந்நாள்!
எனக்கவை கூடா; என்னுயி ரவரே!
நினைக்க நினைக்க நெஞ்சு மஞ்சும்.
எவரவ ரெனினென்? அவருயிர்; உடல்நான்!
தவலறு[1] அன்பினர்; தமிழெனு மின்பினர்!
பிரியற் கொப்பேன் பிறவிபல் லிருப்பினும்.
எரியுள் வீழினு மெண்ணம் தாழேன்.
என்னஃ தோசை? எதிரே புழுதி!
மின்னெனப் பரிகள்; விரைபவர் யாவர்?
முன்வரு இருவர் மொய்குழல் மடவார்!
பின்தொடர் வீரர்? பிழையில்; காவலர்.
யாரவர்? ஏனிவ் விரைவு?
பாரதிர் பயணம்! பார்ப்போம் நின்றே.

*(விக்கியண்ணன் பாதையின் குறுக்கே வழி மறித்து நிற்க, விரைந்து ஓடி வந்த குதிரைகள் நிற்கின்றன. முன்னர் நின்ற குதிரையில் இருந்தவரைக் கண்ட விக்கியண்ணன் விரைந்து தன் குதிரையினின்றும் குதித்து அருகே ஓடுகிறான்.)*

**விக்கியண்ணன் :**

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

நீங்களா? தேவி, வாழ்ந்தேன்!
நீர்பெறு பயிராய் மீண்டேன்.
ஏங்குறச் சென்ற தெங்கோ?
ஏதிலர்[2] இழைத்த தென்னோ?
தாங்கினன் உயிரை, மேலாம்
தளிர்முகம் காணற் கென்றே!
ஈங்கினி இறப்பின் அன்றி,
இமைநொடி அளபும் நீங்கேன்.

கன்றினைப் பிரியு மாக்கள்[3];
கனிதமைப் பிரியு மாக்கள்[4]!
தன்றுணை பிரியா தன்றில்!
சாற்றுவர்; கண்டோம் இல்லை.
இன்றிலை, என்று மூச்சாய்
இயங்குவன்; பிரியேன், நீங்கேன்.
பொன்றிடு நாளும் உன்றன்
பூவுடல் பிரியேன், தாங்கேன்.

*(கடம்ப மாதேவியைத் தாங்கி விக்கியண்ணன் கீழே இறக்கி விடுகிறான். அருகிருந்த செந்தாமரையும் வீரரும் விரைந்து கீழிறங்கி நிற்கின்றனர்.)*

**விக்கியண்ணன் :**

*(கொச்சகக் கலிப்பா)*

*கொண்டகன்றார் முத்தரையர் கோவேந்தர் குலக்கொடியை!*
*கொண்டுவந்த செய்திசெவி அண்டுமுனம் நிலையிழந்தேன்!*
*வண்டுவிழி மண்டுதுயர் கண்டுமிக நொந்ததுளம்;*
*கண்டிருந்தும் உயிர்த்திருந்த துண்டுயிர்த்த களிப்பதனால்!*

*(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

*மன்மகள் இல்லை என்றார்;*
*மகிழ்ச்சியே; வருந்தேன் சற்றும்.*
*துன்னிலை[5] இனிமேல் இல்லை;*
*தொடர்வதிங் கின்பம் மட்டே!*
*இன்றுணை என்றும் நீவீர்;*
*இடையெழும் இன்னல் ஏது?*
*சென்றுநாம் சேர நாட்டில்*
*செவ்விதின் வாழ்வோம் சேர்ந்து.*

*ஒழிந்தன கவலை நம்மை;*
*ஒன்றினோம், பிரியோம் இம்மை!*
*அழுந்தினோம் அன்பில் ஒன்றி;*
*அணைந்திடா இன்பம் அன்றி!*
*கழிந்தவை கழிந்த வாக;*
*கனவிலும் கருதேன் ஏக!*
*பழந்தினும் பறவை யாகப்*
*பறந்திடேன்; உறைவேன் ஆகம்!*

*திரும்பினாய் ஊறும் இன்றி;*
*தீயவர்க் கென்றன் நன்றி.*
*இரும்பெனும் வன்ம னத்தர்*
*எப்படி விட்டார் உன்னை?*
*பொரும்புலிக் கூட்டம் அன்னார்;*
*போக்கறு புல்வாய்[6] நீதான்!*
*வரும்பொருள் அறியாப் பொல்லார்*
*விடுத்ததென்? வாய்த்த சொல்வாய்.*

**கடம்ப மாதேவி :**

*(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

*எல்லாரும் நல்லாரே, இனியர் ஆமே;*
*யாருமிவண் பிறப்பினிலே தீயர் ஆமோ?*
*நல்லார்யார்? பொல்லார்யார்? நாடின் யாவும்*
*நம்மனத்துப் படிநிலையின் நடப்பே ஆகும்.*
*வல்லாரும் போற்றுமுயர் முத்த ரையர்*
*வழிதவறிப் பிழைபுரியார்; வாய்மை மீறார்.*
*நல்லாறென் றொருசாரார் நம்பிக் கொண்ட*
*நடத்தையதால் கடத்தலுற்றேன்; வேறும் இல்லை.*

*உள்ளநிலை தெரிந்தவுடன் ஓடி வந்தார்;*
*உற்றதுயர் பொறுத்தருள நாடி நின்றார்.*
*கள்ளமிலா நன்மாந்தர், கருமங் காட்டும்;*
*கனிவுதரும் இன்பேச்சு, களிப்புக் கூட்டும்.*

வள்ளலவர், உடன்துணையாய் வருவ தற்கும்
வலிந்திட்டார்; வற்புறுத்தி நிறுத்தி மீண்டேன்.
துள்ளுமிள நல்லவுளக் குழலி அன்பின்
துணையதனால் விடுபட்டேன்; தூயள் அன்னாள்.

தந்தைபெண் உறவவருள், தழைத்த தன்பு;
தடுத்தவட்சொல் உரைத்தரில்லை, தகைசால் பண்பு.
எந்தையினும் பேரன்பர், என்னே காட்சி!
இவளவரின் முறைமகளில்; இருந்தும் ஆட்சி!
விந்தையவள் உம்மடியில் வீழ்ந்த தன்மை;
விளங்காத காதலது, மேலாம்; உண்மை.
சிந்தைமிகத் தடுமாறும்; சேய வட்குத்
தெரிந்துமிடை நானெதற்குப் பிரிந்தால் என்ன?

**விக்கியண்ணன் :**

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

இல்லை, இல்லை; இன்னுயிர்நீர்
இல்லை என்றால் யானுமில்லை!
தொல்லை செய்த வற்றையெல்லாம்
தோண்டி எடுத்தேன் துயரளிப்பீர்?
நல்லார்க் கழகு நன்றலாத
நடந்த வன்றே மறப்பதுவாம்.
வில்லோ அம்பை விடுப்பதுவும்?
வினையின் ஊக்கம்; வேறுமென்ன?

எண்ணம் போற்றான் வாழ்வென்பார்;
எண்ணா திந்நாள் இருந்திட்டேன்.
உண்ணும் உணவிற் சுவைதேடல்
ஒப்பப் பெண்ணார் உடலுலைந்தேன்!
நண்ணல்[7] இனியில் எப்போதும்;
நம்பும், அகலேன் ஒருபோதும்.
பண்ணின் இனியாய், பனிமலரே;
பழகேன் பிறர்பால்; பார்ப்பாயே.

**கடம்ப மாதேவி :**

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

மலர்விட்டு மலர்தேரும் வண்டுந் தான்தன்
வழக்கத்தை மறந்திடுமோ? மாறீர் நீரும்.
அலர்மொட்டு நலமூட்டுக் குழலி அன்பும்
அழுக்கிலையே வழித்தகற்ற; அடுக்கா தைய.
சிலர்மட்டும் உளமுற்றும் சேர்வர்; நன்றா?
செய்தவறும் அவரென்ன? தீது நீங்கல்!
அலர்சுற்றும், நிலனெட்டும்; ஐயா, உம்மால்
அணங்கவளும் உணங்குவதோ? அறமோ? சொல்க.

**விக்கியண்ணன் :**

இளமையெழு பொறிபுலனால் எண்ணங் கெட்டேன்;
இருதலைக்கொள் ளிபடூஉம் எறும்பும் ஆனேன்!
வளமைதரு கல்வியெலாம் வாய்த்தும் விட்டேன்;
வஞ்சியர்பால் ஆசையினால் முற்றும் பட்டேன்.
குளமருக இடம்பெயரும் குருகும்[8] ஒப்பக்
கொடியிடையர் நலம்பருகி விடுத்தேன் பின்னர்.
கருதிடுக உண்மையெலாம்; காதற் பெண்ணார்
கனவினிலும் இனிநண்ணார்; காண்க பின்னாள்.

குலமகளே, குறையிலளே, கொண்ட வண்டார்
குழலியவள்! ஒப்பிடுவன்; கொடியன் நானே!
புலனடக்கம் ஒருசிறிதும் போற்றா என்றன்
பொறியில்வீழ் மரை[9]யானாள்; புலம்பல் செய்யாள்.
இலவவட்கும் செலவழியும் என்னை நீங்கில்;
இளவரசி அறிவீரே, என்நான் சொல்லல்?
நலமுழுதும் நிறைந்திடவே நமது வாழ்வில்
நவை[10]யில்லா மொழியறைக; நானும் நீங்கேன்.

(பணிப்பெண் செந்தாமரை குறுக்கிட்டுப் பேசுகிறாள்.)

**செந்தாமரை :**

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

தாயினும் அன்பு டையீர்,
தடுத்திடை பேசல் தப்பே.
நாயினுங் கீழோள் சொல்லை
நம்புக; தாயர் சொன்னார்:
மேயிடும் சோழ வீரர்
மிகுபடை நிறுத்தல் வேண்டும்.
சேயவர் தந்தை வல்லம்
சிதைவுறாச் செய்கை செய்க.

**விக்கியண்ணன் :**

கவலுதல் ஒழிக பெண்ணே,
கடுத்தவர் எவரும் இல்லை.
தவலறு விசயர், தேவி
தந்தையில்; வருத்தங் கொள்ளார்!
அவருரை யானே கேட்டேன்;
அனுப்பிடார் படையை மீட்க!
கவருளர் போரை எண்ணிக்
கலங்கலென்? யாரும் அண்டார்!

**செந்தாமரை :**

ஐயனே, பொறுத்தல் வேண்டும்;
அரசரை அறியீர் ஈண்டு!
மெய்மையே உரைத்த தேனும்
மெய்யுயிர் எல்லாம் தேவி!
பொய்யுரை புகன்ற தும்முன்;
பொருளதில் இருத்தல் கூடும்.
எய்[11]விரை வொப்ப இன்னே
எழுந்திடும் படைகள்; நில்லா!

**கடம்ப மாதேவி :**

(கொச்சகக் கலிப்பா)

பெற்றாரில், உண்மை; பிழையதனால் வந்திடுமோ?
உற்றார், உறவினர், ஒன்றிணைந்த தன்றுணைவி
மற்றார் உறவினினும் மன்னர்க்கு நானுயிரே!
பற்றாற் பெறுந்தாயின் பன்மடங்கு விஞ்சியரே!

செற்றார்[12] சிறுமையினைச் செய்ய நினைத்தரெனச்
சொற்றான் செவிபடுமுன் சூழ்வர் படையுடனே.
உற்றீர் உயர்காதல்; உண்மையதா? புன்மையதா?
முற்றோர்ந் தறிதற்கே முன்மொழிந்த பொய்யுரையே!

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

முழுதுமை நம்பற் கேற்ப
மொய்ம்பு[13]டன் வந்தீர் காக்க.
பழுதிலார் நீவீர்! அங்குப்
பார்த்தவர் அறிந்தி ருப்பார்.
விழுமிய காதல் வேட்கை
வெறியிலை, நெறியே; நீளும்.
பழிபடப் படையிந் நேரம்
படர்ந்திடும்; விரைந்து செல்வோம்.

**செந்தாமரை :**

புழுதியைப் பறக்க விட்டுப்
பொருபடை வருவ, சீறி!
எழுதிரை தொடர்வ ஒப்ப
இரும்படை சேய்மை[14] காண்க.
வழிபடு கடவுள் அன்னாய்,
வருபடை தடுத்தல் வேண்டும்;
அழிவுறும் வல்லம், வேண்டா;
அன்னைசொல் காக்க! நிற்க!

**கடம்ப மாதேவி :**

தாமரைப் பெயரைக் கொண்ட
தளிர்கொடி, அஞ்சல் வேண்டா.
கோமகட் குரிய கொள்கைக்
குணத்தினள் குழலி நெஞ்சத்
தோமிலா[15] எண்ணங் கூடும்;
துயருரார்; இன்பங் கொள்வார்!
ஆமிவை நடப்ப; நீபோய்
அறைந்திடிங் குரைத்த வற்றை.

**செந்தாமரை :**

அரசிளங் குமரி, அம்ம,
அருள்மொழிக் கடிமை நன்றி!
இருளிடை மின்னல் வீச்சே,
இனித்திடும் உங்கள் பேச்சே.
வருபொருள் கண்டேன்; என்றாய்
வாழ்வினில் வளப்பம் தானே!
மருளிலை என்னுள், செல்வேன்;
மகிழ்ச்சியே; வளர்க, வாழ்க!

(செந்தாமரை வீரர் உடன் தொடர அங்கிருந்து திரும்பி விரைந்து செல்கிறாள். அவர் மறையும்வரை அங்குக் காத்திருந்த விக்கியண்ணன் கடம்ப மாதேவியை ஆசையுடன் நெருங்குகிறான்.)

**விக்கியண்ணன் :**

(கலிவிருத்தம்)

அன்பே, அமுதே, அருந்தேன் விருந்தே,
இன்பே, எழிலே, இயல்சேர் பொழிலே,
என்னைப் பொருளென ஏற்ற திருவே,
உன்னை யலாதெனக் குய்வு முளதோ?

இருளில் ஒளியே, எரியிற் சுடரே,
மருளில் அறிவே, மலரில் மணமே,
உருவில் கரைந்தே உணர்வில் நிறைந்துன்
அருளில் உருகி அமைந்திடு வேனே!

(கொச்சகக் கலிப்பா)

*கோளிலா வாழ்க்கை, குறைபல; கண்டிருந்தும்
ஆளனாய்க் கொண்டாயுன் அன்பிற் களவுமுண்டோ?
தாளிணை நெஞ்சத்துத் தாங்கினேன்; நீங்கலின்றி
நாளெலாம் ஒன்றியுன் நட்புற ஏங்கலுண்டோ?*

*யானென தென்றுசொல ஏது மிலையிருக்கும்
ஊனொடு முற்றவுயிர் ஒன்றுமிங் குன்னிடத்தே!
பானிலவுத் தண்ணொளிக்குப் பாட மெடுபாவாய்,
கானுலவு தென்றல் கடக்குமிடை! நன்றாமோ?*

*காலங் கடந்துடற் கட்டுத் தளர்ந்திடினும்
ஆலம் விழுதாய் அடிதாங்கி நின்றிருப்பேன்!
கோல உடற்றழுவிக் கூடுங் களவின்பம்
ஞாலம் அடைதலின் நன்றாற்ற வல்லதுவே!*

*கூடிக் களித்ததற்பின் கொண்டதித் தன்மையெனக்
கூடும் எடுத்துரைக்க? கூடா தறிவமன்றோ?
ஆடிக் கடலாழ்ந் தடையமுதும் தீர்ந்துவிடும்;
தேடி யுடலகழ்ந்து சேர்இன்பம் தேய்ந்திடுமோ?*

*கட்டில் உடலாழக் கண்ணே களிகூடும்!
ஒட்டி உறவாட ஒன்றும் உயர்காதல்!
தட்டில் கனிபல; தாங்கா உடற்பசி!
எட்டி இருக்க ஏதிலனோ? ஏற்காயோ?*

**கடம்ப மாதேவி :**

*உங்கட்கிங் கொருபொழுதும் உண்ணினைப்புப் பிறவிலையா?
பொங்கியெழு பொருகடலாய்ப் புறப்பட்ட படைவருது!
தங்குதடை இடைக்காணேன்; தடுத்திடலும் வேண்டாவா?
மங்கையுளக் கிடக்கையினை மதித்திடல்செய் கடனாகும்.*

*கரிகாலர் பெருவளத்தர் கவின்மிகுசீர் சோணாட்டை
உருவாக்க இதுநாளும் ஓயாமல் உழைத்திருந்தேன்;
கருவாகிக் காயாகிக் கனிந்துவரு சூழலுமால்
உருவாகி உளதுண்மை; உரமளிக்கும் உமதண்மை!*

*பேரரசு சாய்ச்சோழர் பேர்பெறற் கேயிப் பிறப்புமென
யாரு மெனைநெருங் காவெரி தீயாய் இருந்திளைத்தேன்.
நீரனை நீர்மை நிறைந்த நெறியாளர் நேயரும்மால்
ஈர மியைய எழுகாதல் என்னில் இனித்திடுமே.*

*அன்பும் அறனும் அகத்தமைந் தாளுமெனில்,
வன்பிலை; வாட்டம் வருதலிலை — முன்னுடையாள்
தன்னொடு யானுந் தழுவுநல் இல்லறத்தால்
இன்பமே என்றும் இனி.*

**விக்கியண்ணன் :**

(கட்டளைக் களித்துறை)

*கண்ணே, கனியே, கரும்பின் களிசாறே, கட்டமுதே,
மண்ணேர் மணியே, மலரினி மட்டே, மகிழணியே,
எண்ணேன் பிறமக ளார்இன் னலத்தை இயைந்திடினும்!
உண்ணாள் முழுதும் ஒழியேன் உனைநீங்கி ஒண்டமிழே!*

# வெளிவாயில்

**இடம்** : விக்கியண்ணன் வாழ் இல்லம்.
**காலம்** : நண்பகற் பொழுது.
**உறுப்பினர்** : விக்கியண்ணன், வண்டார்குழலி, மழலையர் இருவர்.
**சூழல்** : மழலையர் விளையாடிக் கொண்டிருக்க, உள்ளே வந்த விக்கியண்ணன் அவரைத் தூக்கி அணைத்துக் கொஞ்சுகிறான்.

**விக்கியண்ணன் :**

*(பஃறொடை வெண்பா)*

*கண்ணார் மணிகாள்! கனிகாள்! கவின்மிகு*
*பெண்ணா ரளித்த பெறற்கரு சேய்காள்!*
*இருவீர் தனித்திங் கிருப்பீர்; எதற்காம்?*
*ஒருவா து[1]டனுறை உம்மிரு தாயர்*
*விடுத்துமை நீங்கி யடுத்தது மெங்கே?*
*எடுத்து மொழிக வினிது.*

*(வண்டார்குழலி, பொற்கிண்ணத்தில் பெய்த அடிசிலோடு அப்பொழுது அங்கே சேர்கிறாள்.)*

**வண்டார்குழலி :**

*(இன்னிசை வெண்பா)*

*மகிழ்வளி மக்கள் மழலை மொழியில்*
*அகமிக வாழ்வ தருமை! அருமை!*
*இருந்திடு சூழ லியல்பிற் கியைப*
*உருநிற மாற்றம் உயர்வு.*

**விக்கியண்ணன் :**

*(குறள் வெண்பா)*

*பெற்ற குழந்தையர் பேசு மொழிதனிற்*
*பற்றுறார் யாரே? பகர்.*

**வண்டார்குழலி :**

*(நேரிசை ஆசிரியப்பா)*

*எல்லெழு முன்ன ரெழுந்து செல்முன்*
*சொல்லிய தென்ன? சூதும் பேச்சும்!*
*திருநெய்த் தானத் தேவர்க் கக்கை*
*திருவிளக் கெரிக்கும் விருப்பிற் கேற்ப*
*ஆடுகள் நூறின் றளித்தற் பொருட்டுக்*
*கூடுவம் சேர்ந்து கோயிற் கென்றீர்!*
*அணியமாய் இருந்தோம்; ஆயின்,*
*எணிநீர் பார்த்ததில்; இயல்பே! இனிதே!*

*(விக்கியண்ணன் முகம் அவன் கொண்ட அதிர்ச்சியை வெளிப் படுத்துகிறது.)*

***விக்கியண்ணன் :***

*(பஃறொடை வெண்பா)*

*அடடா! தவறே! அடாதென் செயலே!*
*கெடுப்பா ரிலாதுங் கெடுத லிதுவே!*
*பொறுமை யுருநீ; பொருபுயல் தேவி!*
*சிறுகுறை சேரினும் சீறுவர்; செய்தலென்?*
*போற்றிப் புகழினும் புன்செயல் போற்றலில்;*
*ஆற்றற்கா மாறு அறை.*

***(முற்றும்)***